தமிழ்ப் பாவியல்

பேராசிரியர்
டாக்டர் ரா. சீனிவாசன்
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.

அணியகம்
சென்னை-30

முதற்பதிப்பு: டிசம்பர் 1974
உரிமை, ஆசிரியர்க்கு.

விலை ரூ. 10-00

கிடைக்குமிடம் :

அணியகம்
22, செல்லம்மாள் தெரு, சென்னை–30.

பாரி நிலையம்
54, பிராட்வே, சென்னை-1.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
1/140, பிராட்வே, சென்னை-1.

பிற நூல்கள்

மொழியியல்	...	10 - 00
மொழி ஒப்பியலும் வரலாறும்	...	10 - 00
சங்க இலக்கியத்தில் உவமைகள்	...	15 - 00
தொல்காப்பியமும் நன்னூலும்	...	10 - 00
இலக்கியத்திறனில் ஒரு பார்வை (அந்தோனி சான் M.A)	...	6 - 00

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை–600014

முன்னுரை

தமிழ் இலக்கண நூல்கள் தமிழ்ப்பாவியலை உணர்த்துகின்றன. இதில் யாப்பு, பொருள், அணி மூன்றும் பேசப்படுகின்றன. யாப்பருங்கலம், தண்டியலங்காரம், தொல்காப்பியம் இதற்கு முந் நூல்களாகும். எம். ஏ. தேர்வுக்கும், வித்துவான் தேர்வுக்கும் படிக்கும் மாணவர்களின் தேவைக் கேற்ப எழுதப்பட்ட நூலாயினும் பொதுவாகத் தமிழ்ப் பாவியலை அறிய விரும்புவார் பயிலத்தக்க வகையில் சுருக்கமாகத் தெளிவுபட இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மெய்ப்பாட் டியலுக்கும் உவம இயலுக்கும் பேராசிரியர் உரையும் ஏனைய பொருளதிகாரம் முழுமைக்கும் இளம்பூரணர் உரையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ரா. சீனிவாசன்

உள்ளுறை

1.	தமிழ்ப் பாவியல்	...	5
2.	எண்வகை மெய்ப்பாடுகள்	...	8
3.	அகப்பொருள் மெய்ப்பாடுகள்	...	22
4.	அணியியல்	...	33
5.	உள்ளுறையும் இறைச்சியும்	...	75
6.	பொதுவணி இயல்	...	84
7.	யாப்பியல்	...	87
8.	அகத்திணையியல்	...	123
9.	புறத்திணையியல்	...	143
10.	களவியல்	...	163
11.	கற்பியல்	...	185
12.	பொருளியல்	...	209
13.	மரபியல்	...	231

1. தமிழ்ப் பாவியல்

பா பண்ணுக்கு இயைந்தது. மனிதன் எதைச் செய்தாலும் அதில் அழகு தோற்றுவிப்பது அவன் இயற்கை. எங்கெங்கே அழகு தோன்றுகிறதோ அங்கெல்லாம் கலை அமைகிறது. அழகு என்பது ஓசையாலும் கருத்தாலும் அமைவது. கலை என்பது கற்பனையோடு இயங்குவது· உணர்வில் சிறப்பது; உயர்ந்த கருத்துகளை உணர்த்துவது; சுவை பெற்று விளங்குவது; மொழித்துணையாக ஓசை இனிமையும், யாப்பு அமைதியும், அணி நலனும் சிறந்து உணர்வுபடக் கவிஞர்கள் இயற்றுவதே **கவிதை** எனப்படும். இதனைச் **செய்யுள்** என்றே குறிப்பிட்டு வந்தனர்.

> **'பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல் போற்பல**
> **சொல்லால் பொருட்கிட னாக உணர்வினின்**
> **வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்'**
>
> —நன்னூல் சூ. 268

தமிழ்ப் பாவியல் தனக்கு என ஒரு தனியியலைக் கொண்டு விளங்குவது; யாப்பமைதியும் அணி நலனும் பொருட் சிறப்பும் ஏனைய மரபுகளும் காலத்துக்கு ஏற்ப மாறி வருவன. தொல்காப்பியமும் யாப்பு நூல்களும் அணி நூல்களும் தமிழ்ப் பாவியல் மரபுகளை எடுத்துக்கூறுகின்றன. அவை உலக இலக்கியங்கட்கும் உரிய ஒரு சில பொது மரபுகளாகவும் இயங்கலால் பிற்கால இலக்கியங்களுக்கும் அவை வழிகாட்டியாக விளங்குகின்றன. எனவே, பழந் தமிழ்ப் பாவியல் தமிழ் இலக்கியத்தின் பொதுவியல்பையும், அக்காலச் சிறப்பியல்பையும் உணர்த்துவன எனலாம்.

தமிழ்ப் பாவியலை யாப்பு, அணி, சுவை, பொருள் என்ற நான்கு இயல்களில் ஆராய்ந்து வந்துள்ளனர். இவற்றை யாப்பியல், அணியியல், மெய்ப்பாட்டியல், பொருளியல் என நான்கு இலக்கணமாகக் கூறுவர். தொல் காப்பியம் மொழியியலை ஆராய்வதோடு கவியியலையும் ஆராய்கிறது. தொல்காப்பியர் காலத்தில் பொருள் இலக் கணம் ஒன்றிலேயே யாப்பும் அணியும் கூறப்பட்டன. பிற்காலத்திலே அவை யாப்பு, அணி, பொருள் என மூன்று வகையாக இயங்கின. மொழி இலக்கணம் எழுத்தும் சொல்லுமாக இயங்கியது.

கவிதைக்கு வடிவம் பொருள் அடிப்படை என்பர். சொல்லும் பொருளால் மட்டும் கவிதை சிறப்பது இல்லை. அதன் வடிவத்தாலும் அது சிறப்புநிலை அடைகிறது. வடிவம் என்பது சொல்லும் திறன்பற்றி யமைவது. கருத்தும் உணர்வும் அடிப்படை. அவற்றை அழகுபட எடுத்துக் காட்டுவன யாப்பும் அணியுமே. அணி என்பது சுவைபற்றிப் பிறப்பது.

இவற்றையெல்லாம் தமிழ் இலக்கண நூல்கள் நன்கு வெளிப்படுத்தியுள்ளன. மேல் நாட்டில் இலக்கியத்திறன் என்ற ஒரு கலையை வளர்த்துள்ளமையைப் போலத் தமிழ் நாட்டாரும் இதனை இலக்கணம் என்ற பெயர் கொடுத்துத் தமிழ்ப் பாவியலை வெளிப்படுத்தியுள்ளனர்.

செய்யுள் யாப்பு என்பது காலந்தோறும் மாறுபடுவது. புதிய புதிய வடிவங்கள் பெறுவது இயற்கை. பழங்காலத்தில் போற்றப்பட்ட செய்யுள் வடிவங்களைத் தொல்காப்பியச் செய்யுளியலும், பிற்காலத்தில் தோன்றிய யாப்பருங்கலம், காரிகை, அவிநயம், மயேச்சுரம் முதலிய நூல்களும் உணர்த் தும். பாக்களின் இலக்கணங்களையே இந்நூல்கள் உணர்த் தியுள்ளன. பாவினங்கள் பெருகிப் புதியபுதிய வடிவங்கள் பெற்றுள்ளன. ஆசிரியம், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களே அடிப்படை; அவற்றின்

இனமான தாழிசை துறை விருத்தங்கள் சுட்டிக் காட்டப் பட்டுள்ளனவே அன்றி விரிவாக ஆராயப் பெறவில்லை.

இவற்றின் இலக்கணங்களை எல்லாம் யாப்பு நூல்கள் சுட்டிக் காட்டுகின்றன. செய்யுளின் உறுப்புகளும் வகைகளும் ஓசையமைதிகளும் அதன் உணர்வுகளும் ஓசை நயங்களும் இந்நூல்கள் தெளிவுபடுத்துகின்றன.

தனிப்பட்ட மனிதனின் இன்ப துன்பங்கள் காதல் வாழ்க்கையைச் சுற்றி எழுவன. கவிதைப் பொருளும் இக் காதல் வாழ்வையே சுற்றி நின்றது. இதனை அகப்பொருள் என்றனர். அதனைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலம்பற்றியும், ஒழுக்கம் பற்றியும் பாகுபடுத்திக் கண்டனர். முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்னும் மூவகைப் பொருள் பெற்று இவை விளங்கின. புறவாழ்வில் ஏற்படும் வீரமும், கொடை பற்றி நிகழும் புகழும், நிலையாமை பற்றிய உணர்வும், நிகழ்ச்சிகளும், புறவாழ்வில் மதிக்கத்தக்க வரலாற்று நிகழ்ச்சிகளும், வாழ்வு நெறிகளும், உண்மைகளும், இயல்புகளும், புறப் பொருளில் சித்திரிக்கப் பெற்றன. இவை பிற்காலக்காவிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

நாட்டு வரலாற்றுக்கும் இவ் அகப்பாடல்களும் புறப் பாடல்களும் துணை செய்தன. இவற்றைப்-பொருளதிகாரம் என்னும் தலைப்பில் ஆராய்ந்து பாகுபடுத்தி விளககிக் காட்டியுள்ளார் தொல்காப்பியர்.

யாப்பு, அணி, பொருள் என்னும் மூவகை இயல்களை ஆராய்வதே பாவியல் எனக் கூறலாம். தமிழ்ப் பாவியலை அ.ரியத் தமிழ் இலக்கண நூல்களும், உரையாசிரியர் விளக்கங்களும், இலககியப் புலவர்களின் படைப்புகளும் உதவி செய்கின்றன. தமிழ்ப் பாவியல் இம்மூன்று பாகுபாடுகளைக் கொண்டு விளங்குவதாகும்.

2. எண்வகை மெய்ப்பாடுகள்

நாடகமே உணர்ச்சியின் சித்திரங்கள் எனலாம். நாடகத்தில் கதையைவிட அது உணர்த்தும் கருத்தைவிட தீட்டும் உணர்வுகளே சிறப்பிடம் பெறுகின்றன. கதை வெறும் கருவியே தவிர முடிவு அல்ல; கருத்து அதன் பயனாக இருக்கலாம்; ஆனாலும் உணர்வுகளே அதன் இயக்கம் எனலாம்.

இந்த உண்மை இயற்றமிழுக்கும் ஓரளவு ஏற்கும் எனலாம். அதனால்தான் தொல்காப்பியர் நாடக இலக்கியத்திற்குக் கூறப்படும் மெய்ப்பாடுகளை இயற்றமிழுக்கும் ஏற்றிக் கூறுகின்றார். நாடகத்தில் விரிவாக ஆராயப்படும் மெய்ப்பாடுகள் இயற்றமிழில் தொகுத்துக் காட்டப்படுகின்றன.

மெய்ப்பாடு என்பது யாது? பொருள் புலப்பாடு என்பது பொருளாகும். உள்ளத்து நிகழும் பொருளை உணர்வு வழியாக வெளிப்படுத்துவது என்பதே இதன் அடிப்படை. உணர்வு தோன்றுவதற்கு நான்கு அடிப்படைகள் தேவைப்படுகின்றன.- பொருளும், அதனை உணர்ந்த சுவையுணர்வும், அவற்றை நுகரும் மனிதனின் உள்ளத்து நிகழ்ச்சியும், அதனால் விளையும் விளைவும் என நான்கு தேவைப்படுகின்றன.

மெய்ப்பாட்டியலுக்கு உரை வகுத்த 'பேராசிரியர்' இவற்றைக் கீழ்வருமாறு விளக்குவர்.

''சுவைக்கப்படும் பொருளும், அதனை நுகர்ந்த பொறி உணர்வும், அது மனத்துள்பட்ட வழி உள்ளத்து நிகழும்

குறிப்பும், குறிப்புகள் பிறந்த உள்ளத்தால் கண்ணீர் அரும்பலும் மெய்ம்மயிர் சிலிர்த்தலும் முதலாக உடம்பின்கண் வரும் மெய்ப்பாடு ஆகிய சத்துவங்களும் என நான்காக்கி, அவற்றை எட்டோடு உறழ முப்பத்திரண்டு என்பர்.

பொருளும் பொறிஉணர்வும் ஒன்றுக்கியும், குறிப்பும் சத்துவமும் ஒன்றுக்கியும் அமைக்க, அவை பதினுறு ஆகின்றன. அனைத்தையும் ஒன்றுக்க அவை எட்டாகின்றன. அவை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன.[1]

இவை நாடகமகளிரின் ஆடல்பாடல்களில் முப்பத்திரண்டாக வகுத்து உணரப்பட்டன. அவற்றை நாடக நூலாசிரியர் பதினுருகவும், இயற்றமிழாசிரியர் எட்டாகவும் வகுப்பர் என்பர். முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும் முதலாயினேர், நாடகமகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் காமநுகரும் இன்பவிளையாட்டினுள் தோன்றிய முப்பத்திரண்டு பொருளும், பதினுறுக அடங்கும் நாடக நூலாசிரியர்க்கு. எனவே கூத்தியலுள் நான்குவகை நிலைக்களனில் எண்சுவையாக இயங்கும் முப்பத்திரண்டு வகைப்படும் செய்திகளை நாடக நூலாசிரியர் பதினுறுகவும், இயற்றமிழ் நூலார் எட்டாகவும் கொள்வர் என்பது தெரிகிறது.

நாடக மகளிர் ஆடல் பாடல்களுள் முப்பத்திரண்டு வகையாக ஆராயப்படுகின்றன; நாடகநூலாசிரியர் பதினுறுக அடக்குவர்; இயற்றமிழாசிரியர் எட்டாகப் பிரித்துக் கூறுவர். இதனையே தொல்காப்பியர்

''பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான்கு என்ப'' எனவும்,
''நாலிரண்டாகும் பாலுமார் உண்டே'' —சூ. 249, 250

எனவும் கூறுவர்.

---

1. ''நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப'' —தொல். சூ. 251

1. நகைச் சுவை

'நகல் வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்' —குறள்

சிரிக்கத் தெரியாதவர்களுக்கு உலகம் இருளாகத்தான் தோன்றும்; பகலும் இருளாகத்தான்தெரியும் என்பர்.' இடுக்கண் வருங்கால் நகுக' என்பர். துன்பத்தைத் துடைத்து எழுச்சி கொள்ளச் செய்வது நகை. நகைச் சுவை நாடகத்தில் மிகுதியும் வேண்டப்படுவது ஒன்று ஆகும். நகை எப்படிப் பிறக்கிறது?

எள்ளல் பற்றியது

தான் பிறரை எள்ளி நகுதலும் பிறரால் எள்ளப்பட்டவழித் தான் நகுதலும் என்பர். இதனை அங்கதம் (Satire) என்றும் கூறுவர். எள்ளுவது பிறரைத் திருத்தவே எனக் கொள்ளலாம். குறைகாணுமிடத்தேயே இவ் எள்ளல் அமைகிறது.

'எள்ளி நகினும் வரூஉம் (கலி.61) என்ற தொடர் கலித்தொகையில் இடம் பெறுகிறது.

இளமை பற்றியது

குழந்தை ஏன் சிரிக்கிறது? இளமை இதற்குக் காரணம். இளமை என்பது தன் இளமையால் பிறரை நகுதலும் பிறர் இளமை கண்டு தான் நகுதலும் என்பர்.

'நாவொடு நவிலா நகைபடு கிளவி' —சிலப். ஊர்-139

எனச் சிலப்பதிகாரம் உணர்த்தும்.

பேதைமை பற்றியது

பேதைமை என்பது அறிவின்மை.

**'நகையா கின்றே தோழி
மம்மர் நெஞ்சினன் தொழுதுநின் றதுவே'** —அகம்-56

என்பது பேதைமைப் பொருளாக வந்தது என்பர்,

மடமை பற்றியது

மடமை என்பது பெரும்பான்மையும் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை.

'நாம்நகை யுடையம் நெஞ்சே நம்மொடு
தான்வரு மென்ப தடமென் தோளி' —*அகம்.* 121

தலைவியின் அறியாமை பற்றித் தலைவனுக்கு நகை பிறந்தது.

எனவே நகை என்பது எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்ற இந் நான்கு பொருள் பற்றிப் பிறக்கும் என்பர்.[1]

2. அழுகைச் சுவை

கண்ணகியின் கண்ணீர் மதுரை நகரைச் சுட்டு எரித்தது. இளங்கோவடிகளின் உள்ளத்தைத் தூண்டி ஒரு காவியத்தை எழுதச் செய்தது. இது காவியத்தின் உயிர் நாடி எனலாம். சீதையின் அழுகை இராமாயணக் கதைக்கு அடிப்படையாகும்.

இளிவு பற்றியது

இளிவு என்பது பிறரால் இகழப்பட்டு எளியனாதல். தலைவன் ஒருவன் ஒருத்தியைக் காதலிக்கிறான். தான் உற்ற நோயை வாய்விட்டுக் கூற இயலவில்லை. அவன் பிறர் இகழத்தக்க எளிமையை அடைகிறான். தலைவி அவன் நிலையை உணர்கிறாள்; தன் தோழியிடம் கூறுகிறாள்:

'கயமலர் உண் கண்ணாய் காணாய் ஒருவன்; தான் உற்ற நோய் உரைக் கல்லான் பெயரும் பன்னாளும்' *என்று கூறி அவன் இளிவரல் நிலையை எடுத்துக் கூறுகிறாள். அதனால்*

---

1. "*எள்ளல் இளமை பேதைமை மடனென்று*
உள்ளப் பட்ட நகைநான் கென்ப" —*தொல். சூ.*252

அவளும் தனிமை பொறுக்காமல் துன்பம் அடைகிருள். தன் அவல நிலையைப் பின்வருமாறு கூறுகிருள்.

'சேயேன்மன் யானும் துயர் உழப்பேன்' —கலி. 37

என்று கூறி, அவனிடம் தோன்றிய இளிவரல் காரணமாக அவல உணர்வைப் பெறுகிருள். இஃது இளிவரல் பற்றிப் பிறந்த அழுகைச் சுவை என்பர்.

இழவு பற்றியது

இழவு என்பது இனிய உறவினரையும் இன்பம் பயக்கும் நுகர்ச்சி முதலியனவற்றையும் இழத்தல் என்பர்.

கணவனை இழந்தாள். அவனுக்கு பலிக் கொடை கொடுத்தற்குத் தரையைச் சாணம் கொண்டு மெழுகுகின்ருள். அதற்குக் கண்ணீரே உடன் சேர்கிறது. கண்ணில் வெளிப்படும் நீரைக்கொண்டு சாணத்தை மெழுகு கின்ருள் என்று பேசப்படுகிறது.

'மெழுகும் ஆப்பிகண் கலுழ் நீராளே' —புறம்-225

அசைவு பற்றியது

பண்டை நிலைகெட்டு வேறு ஒருவாறு ஆகி வருந்துதல் என்பர்.

வயது ஆகிவிட்டது; மூப்பு ஒருவனைப் பின்பற்றியது; கடந்த நாட்களை எண்ணி வருந்துகிருன்.

முன் மயிலனைய அழகியரைச் சொல் வலையால் மயக்கி ஞன். இப்பொழுது அந்நிலை மாறிவிட்டது என்று பண்டை நிலை கெட்டமைக்கு வருந்துகின்ருன்.

'இல்வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன் முன்னே' —புறம்.252

வறுமை பற்றியது

போகம் துய்க்கப் பெருத பற்றுள்ளம் என்பர்.

பெருஞ்சித்திரனர் என்னும் புலவர் தம் வறுமையைச் சித்திரித்துப் பாடுகிறார். குமணனிடம் தன் குடும்பத்தின் வறுமை நிலையை அழகிய சித்திரமாகத் தீட்டித் தருகிறார்.

தாயின் முலை பால் இல்லாமல் வற்றிவிட்டது. குழந்தை சுவைத்துப் பால் பெருததால் தாய்முகம் நோக்கி வாய் விட்டு அழுகிறது; தாய் வாய்விட்டுக் கூறவில்லை. கண்களில் நீர் நிறைந்து தளும்புகிறது. அவள் பேசாமல் அறிவிக்கும் செய்தி புலவரின் உள்ளத்தைத் தொடுகிறது. அவள் துன்பத்தை நினைத்துக்குமணனை அடைந்ததாகப் பாடுகிறார்.

'இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொறு அழூஉந்தன் மகத்துமுகன் நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண் என்
மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண' —புறம்.164

என்கிறார் புலவர்.

எனவே, அழுகை என்பது இளிவு, இழவு, அசைவு, வறுமை இந்நான்கு பொருள் பற்றிப் பிறக்கும் என்பர்.[1]

இச் சுவை தன்கண் தோன்றிய அவலம் பற்றியும், பிறன்கண் தோன்றிய அவலம் பற்றியும் பிறக்கும் என்பர். உரையாசிரியர். இவ்வாறே ஏனைய சுவைகட்கும் விளக்கம் தருவர்.

3. இளிவரல் சுவை

இளிவரல் என்பது இழிபு; எளிய நிலையை அடைதல் என்பதாம்.

மூப்புப் பற்றியது

இளமைக் காலத்துச் செய்தன செய்யமாட்டாமை இளிவருதலைத் தரும். கல்லா இளமையில் குளித்து

---

1. "இளிவே இழவே அசைவே வறுமை என
விளிவில் கொள்கை அழுகை நான்கே" தொல்.சூ.—253

வர்
மணற்கொண்ட வலிமை மறைந்துவிட்டது. கரையில் மருள இளையவர் வியக்கத் திடுமெனப் பாய்ந்து ஆழநீட- மணற்கொண்ட இளமை மறைந்துவிட்டது. இருமல் இடை ஒரு சில சொற்கள் வெளிவருகின்றன. மிடுக்கு ஒழிந்த நடுக்கு ஏற்பட்டுவிட்டது. பெருமூப்பு வந்துவிட்டது. தண்டூன்றி நடக்கும் முதுமைக்காலம் இளிவரலை உண்டாக்கிவிட்டது. அதனை இப் புறப்பாடற் பகுதி காட்டுகிறது.

> 'தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று
> இருமிடை மிடைந்த சில சொல்
> பெருமூ தாளரே மாகிய எமக்கே' —புறம். 243

பிணி பற்றியது

நோய் மென்மையை உண்டாக்கி விடுகிறது. பிரிவும் ஒருவகை நோயே. பிரிந்த தலைவி ஒருத்தி பேசுகிருள். "வாடைக் காற்றே! நீ இமயத்தையும் அசைத்துவிடுவாய். நான் துணைவன் இன்றித் தனித்து இருக்கிறேன்; பெண், பிரிவால் வருந்துகிறேன். என்னை அழிப்பது உனக்குத் தகாது" என்று கூறுகிருள்.

> 'இமயமும் துளக்கும் பண்பினை
> துணையிலர் அளியர் பெண்டிர் இஃது எவனோ' —குறு. 158

வருத்தம் பற்றியது

வருத்தமெனினும் முயற்சியெனினும் ஒன்றேயாம்.

> 'ஒன்று இரப்பான்போல் இளிவந்தும் சொல்லும்' —கலி. 47

என்பது வருத்தம் பற்றிய இளிவரல் என்பர். அவனுடைய முயற்சிபற்றித் தலைவிக்கு வருத்தம் பிறந்தது.

மென்மை பற்றியது

தான் மெலிந்துள்ளமைபற்றிப் பிறரைச் சார்ந்து வழிமொழியலன்; பிறர் மெலியர் எனத் தன் புகழைப் பேசான்

என்னும் பகுதி மென்மைபற்றி இளிவரல் பிறக்கும் என்பதைக் காட்டுகிறது. தன் மென்மை பற்றியோ பிறர் மென்மை பற்றியோ இளிவரல் தோன்றும் என்பது சுட்டப்படுகிறது.

'வலியர் என வழி மொழியலன்
மெலியர் என மீக் கூறலன்' —புறம். 239

மூப்பு, பிணி, வருத்தம், மென்மை இவை நான்கும் பற்றி இளிவரல் பிறக்கும் என்பர்.[1]

4. மருட்கைச் சுவை

இதனை வியப்பு எனவும் அற்புதம் எனவும் கூறுவர்.

புதுமை பற்றியது

புதுமை வியப்பைத் தருகிறது. மந்தியாகிய அவை மருண்டு நோக்குகிறது. மூங்கில் வளர்ந்துள்ள மலைப்பக்கத்தில் மயில் ஆடுகிறது. இது விழாக்களத்தில் விறலியாடுவதைப்போலக் காட்சி அளிக்கிறது. பண்டு ஒருகாலும் கண்டறியாதபடி ஆடிற்று மயில் என்றமையின் புதுமையாயிற்று.

'மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத் தியலி யாடுமயில்
விழவுக்கள விறலியின் தோன்றும் நாடன்' —அகம். 82

பெருமை பற்றியது

நாடனொடு நட்புப் பெருமை சான்றது என்று கூறப்படுகிறது.

'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே' —குறுந். 2

---

1. "மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே," —தொல்.சூ254

சிறுமை பற்றியது

பெண்ணொருத்தியின் இடையைக் கண்டு அதன் சிறுமை கண்டு வியப்பு அடைகிறான்.

'கடையிற் சிவந்த கருநெடுங்கட் பேதை
இடையிற் சிறியது ஒன்று இல்'

ஆக்கம் பற்றியது

மிகச்சிறிய ஆலம் விதை; அது பெரிய மரமாகி நிழல் பயந்து புதிய படைப்பாக நின்று நன்மை செய்கிறது. இவ்வாக்கம் பற்றியும் மருட்கை தோன்றும்.

'உறக்கும் துணையதோர் ஆலம்வித்து ஈண்டி
இறப்ப நிழற்பயந் தா அங்கு' —நாலடி. 28

புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் இவைபற்றி மருட்கை தோன்றும் என்பர்.[1]

5. அச்சச் சுவை

அக்காலத்துச் சூழ்நிலைகளையொட்டி இந் நான்குவகை அச்சங்கள் கூறப்பட்டன. தெய்வம், விலங்கு, கள்வர், தம் அரசர் இவை நான்குபற்றி அச்சம் பிறக்கும்.

அணங்கு பற்றியது

பேய், பூதம், தெய்வம், இடி, மின்னல் முதலியனபற்றி அச்சம் பிறந்தது என்பர்.

விலங்கு பற்றியது

யானை, புலி, பாம்பு முதலியன பற்றி அச்சம் பிறந்தது.

கீழ்வரும் பாடல் அணங்கு விலங்கு ஆகிய இரண்டிற்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

---

1. "புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே." —தொல். சூ. 255

'யானை தாக்கினும் அரவு மேற்செலினும்
நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினும்
சூன்மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை' -பெரும்பாண். 134-6

யானை தன் எதிரே செல்லினும், பாம்பு தன்மேல் செல்லினும், நீல நிறத்தையுடைய மேகத்திடத்தே வலிய உருமேறு இடிப்பினும், சூல்கொண்ட மகள் அவற்றிற்கு அஞ்சி மீளா மறத்தைப் பூண்ட வாழ்க்கை எனச் சிறப்பிக்கப்படுகிறது. எனவே பொதுவாக இவற்றிற்கு அஞ்சுவர் என்பது தெரிகிறது.

கள்வர் பற்றியது

கள்வர் என்பார் தீத்தொழில் புரிவார். "நீங்கு; நீ எம் கூந்தலைக் கொள்ளாதே; நின்னைப் பார்ப்பதற்கே அஞ்சுகிறேன்" என்று தலைவி ஒருத்தி கூறுகிறாள். அவனைக் கள்வர் பாற் சார்த்திக் கூறினமையின் கள்வர் அஞ்சத் தக்கவர் என்பது பெறப்படுகிறது.

'ஒரூஉ நீயெங் கூந்தல் கொள்ளல் யாம் நின்னை
வெரூஉதும் காணுங் கடை' —*கலி.* 87

இறை பற்றியது

தலைமை பெற்றுள்ள தந்தை, ஆசிரியர், அரசர் முதலாயினர் இறை எனக் குறிக்கப் பெற்றுள்ளனர்.

கடுமான் தேர்க் கோதையைக் கால்வண்ண மல்லாமல் மேல்வண்ணம் கண்டறிந்திலர் சிற்றரசர்கள். கழுத்துக்கு மேல் நிமிர்ந்து பார்த்தால் வாழ்வு இழப்போம் என்னும் கருத்தில் கைகூப்பிப் பழகிவிட்டார்கள். எனவே, இறை பொருளாக அவர்கட்கு அச்சம் பிறந்தது எனத் தெரிகிறது.

'எருத்துமேல் நோக்குறின் வாழலேம் என்னும்
கருத்திற்கை கூப்பிப் பழகி—எருத்திறைஞ்சிக்
கால்வண்ண மல்லாற் கடுமான்தேர்க் கோதையை
மேல்வண்ணம் கண்டறியா வேந்து' —*இ. வி. பக்.* 124

அணங்கு, விலங்கு, கள்வர், தம்இறை என்னும் நான்கும் பற்றி அச்சம் வரும் என்பர்.[1]

6. பெருமிதச் சுவை

இதனை வீரச்சுவை என்றும் கூறுவர். பெருமை கொள்ளுவதற்குக் காரணமான நிகழ்ச்சிகள் தோன்றுமாயின் அதனைப் பெருமிதம் என்பர்.

கல்வி பற்றியது

தவ முதலாகிய விச்சை என்பர்.

'வல்லார்முன் சொல்வல்லேன்'

என்பது கல்வி பற்றிய பெருமிதம்.

தறுகண் பற்றியது

அஞ்சத்தக்கன கண்ட இடத்து அஞ்சாமை.

'அடன்மாமேல் ஆற்றுவேன் என்னை மடன்மா
மன்றம் படர்வித்தவள்' —கலி. 141

இசைமை பற்றியது

இன்பமும் பொருளும் மிகுதியாகக் கிடைத்தாலும் பழியொடு வருவன செய்யாமை. இதுவே புகழ் எனப்படும்.

'கழியக் காதலர் ஆயினும் சான்றோர்
பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்' —அகம். 312

கொடை பற்றியது

உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப் பொருளும் கொடுத்தல்.

புறவின் துன்பத்திற்காகத் தன் உடலையே அறுத்துக் கொடுத்தவன் சிபிச்சக்கரவர்த்தி.

---

[1] "அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே" —தொல்.சூ 256

'தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க
வரையா ஈகை உரவோன் மருக' —புறம். 43

கல்வி, தறுகண், இசைமை, கொடை இவைபற்றிப் பெருமிதம் பிறக்கும் என்பர்.[1]

7. வெகுளிச் சுவை

சினம் ஆகிய மெய்ப்பாடு வெகுளிச் சுவை எனப் பட்டது. இது வெறுப்புப் பற்றியே அமைகிறது.

உறுப்பறை பற்றியது

கைகால் கண் முதலியன குறைத்தல் பற்றி வந்தது. புலியை யானை தாக்கியது.

'முறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலிசெற்று'
—கலி. 52

குடிகோள் பற்றியது

தன் மகன் மறக் குடிக்குக் கேடு சூழ்ந்தான் என்று சினம் கொண்டாள் புறநானூற்று வீரத்தாய். குடிக்குக் கேடு சூழ்ந்ததால் வெகுளி பிறந்தது.

'நின்மகன் படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டவென்
முலையறுத் திடுவென் யான்எனச் சினைஇ' —புறம். 278

அலை பற்றியது

அலைத்து வருத்துமிடத்துச் சினம் எழுதல் இயல்பு. புலியால் அலைக்கப்பட்ட யானை சினம் கொண்டு போர் செய்கிறது.

---

1. *"கல்வி, தறுகண், இசைமை, கொடை யெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே."*—தொல் சூ.257.

'வரிவயம் பொருத வயக்களிறு போல
இன்னும் மாருது சினனே.' —புறம். 100

கொலை பற்றியது

கொலை பொருளாக வெகுளிச் சுவை பிறக்கிறது. சிறு சொல் சொல்லிப் புகழைக் கொன்று உரைக்கும் மாற்ருர் மீது சினங்கொண்டு தாக்க முற்படுகிருன்.

'உறுதுப்பு அஞ்சாது உடல்சினஞ் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை.' —புறம். 72

உறுப்பறை, குடிகோள், அலை, கொலை இவை நான்கும் பற்றி வெகுளிச் சுவை பிறக்கும் என்பர்.[1]

8. உவகைச் சுவை

மகிழ்ச்சியாகிய மெய்ப்பாடு; இதுவே 'உவகை' என்றும் கூறப்படும். நகை வேறு; உவகை வேறு. இன்ப நிகழ்ச்சிகளால் உவகை பிறக்கும்.

செல்வம் பற்றியது

செல்வம் என்பது நுகர்ச்சி; வளமையாலாகும் மனமகிழ்ச்சி எனக் கூறப்படுகிறது. அதனுல் இது செல்வம் பொருளாகப் பிறந்த உவகையாகிறது.

'உரனுடை உள்ளத்தை செய்பொருள் முற்றிய
வளமையான் ஆகும் பொருள் இது என்பாய்' —கலி. 12

புலன் பற்றியது

அறிவு பொருளாக உவகை பிறக்கிறது. கல்வியினுல் அறிவு இன்பம் உண்டாகிறது.

'இகலிலர் எஃகுடையர் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயின் காண்பாம்' —நாலடி. 137

---

1. "உறுப்பறை குடிகோள் அலை கொலை என்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே" —தொல்.சூ. 258.

என்பதில் கல்வியால் இன்பம் உண்டாகிறது என்பது தெரிகிறது.

'பெண்டிர் நலம் வவ்வித் தண்சாரல் தாதுண்ணும்
வண்டின் துறப்பான் மலை' —கலி. 740

வண்டின் துறப்பான் என்னும் இவ் உவமை நயம் இன்பச் சுவை தருகிறது.

புணர்வு பற்றியது

''தொடிக்கண் வடுக்கொள முயங்கினள்
வடிப்புறு நரம்பில் தீவிய மொழிந்தே'' —அகம். 142

என்பது புணர்ச்சி பற்றிய உவகை.

விளையாட்டுப் பற்றியது

'துயிலின்றி யான் நீந்தத் தொழுநைஅம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறைந்தமைகு வான்மன்னே'
—கலி. 30

என்பது நீர்விளையாட்டு ஆடி இன்பம் துய்க்கின்றான் என்று கூறப்பட்டமையின், விளையாட்டுப்பற்றி உவகை பிறக்கும் என்பர்.

ஏனைய பொது மெய்ப்பாடுகள்

இவ் வெண்வகை மெய்ப்பாடுகளேயன்றி ஏனைய மெய்ப்பாடுகளும் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இடம் பெறுகின்றன. இவை அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவானவை. அவை பின்வருமாறு :

உடைமை, இன்புறல், நடுவுநிலை, அருளல், தன்மை, அடக்கம், வரைதல், அன்பு, கைம்மிகல், நலிதல், சூழ்ச்சி, வாழ்த்தல், நாணுதல், துஞ்சல், அரற்று, கனவு, முனிதல், நினைதல், வெருவுதல், மடிமை, கருதல், ஆராய்ச்சி, விரைவு, உயிர்ப்பு, கையாறு, இடுக்கண், பொச்சாப்பு, பொறாமை, வியர்த்தல், ஐயம், மிகை, நடுக்கு முதலியவையாம்.[1]

1. தொல்-சூ 260

3. அகப்பொருள் மெய்ப்பாடுகள்

தமிழ் இலக்கியம் அகத்துறைப் பாடல்கள் மிக்குப் பெற்று விளங்குகிறது. இம் மெய்ப்பாடுகளுள் ஒரு சில அவற்றுள் காட்டப்படுகின்றன.

புணர்வுக்குமுன் தோன்றும் மெய்ப்பாடுகள்

ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்படுங்கால் நிகழும் உள்ள நெகிழ்ச்சி முதலிற் கூறப்படுகிறது. இவற்றுள் பெரும் பான்மை பெண்ணுக்கே உரியவை ஆகும்.

புகுமுகம் புரிதல்

ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டவழித் தன்னை அவன் நோக்குதற்கண் விரும்பும் உள்ள நெகிழ்ச்சி.

'யானநோக்குங் காலை நிலநோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.' —குறள். 1094

பொறி நுதல் வியர்த்தல்

தலைமகள் தலைமகனை நோக்கியவழி உட்கும் நாணும் ஒருங்கு வந்தடைதலின் வியர்பொறித்த நுதலள் ஆதல்.

'பெரும்புழுக் குற்றநின் பிறைநுதற் பொறிவியர்
உறுவளி ஆற்றச் சிறுவரை திறவென' —அகம். 18

அவள் நாணிக் கண்புதைக்கின்றாள். மெல்ல அவள் முகத்திரையை விலக்கத் தலைவன் இவ்வாறு கூறுகிறான். புழுக்கத்தினால் உன் நெற்றியில் வியர்வை தோன்றுகிறது. மிக்க காற்று வீசி ஆற்ற மூடிமறைக்கும் ஆடையைத் திற எனத் தலைவன் கூறுகின்றான்.

நகுநயம் மறைத்தல்

'முகைமொக்குள் உள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்குள் உள்ளது ஒன்று உண்டு' —*குறள்*

அவள் தன் உள்ளத்து மகிழ்வால் தோன்றும் சிரிப்பை அடக்கிக் கொள்கிருள்.

சிதைவு பிறர்க்கின்மை

அங்ஙனம் நகுநயம் மறைத்த வழியும் உள்ளம் சிதைந்து நிறைஅழியுமாதலின்அச்சிதைவு புறத்தார்க்குப் புலனுகாமல் நெஞ்சினை நிறுத்தல்.

'அகமலி உவகைய ளாகி முகன்இகுத்து
ஒய்யென இறைஞ்சி யோளே' —*அகம்.* 86.

தன் உள்ளச் சிதைவு பிறர்க்குப் புலனுகாமல் தன் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள் என்பதால், தலைவன் அவள் மனநிலையைத் தெரிந்து கொண்டான் என்பதாம்.

மெய்யுற்றவழி நிகழ்ந்த உள்ள நெகிழ்ச்சி

மனச் சிதைவை அறிந்த தலைவன் பின்னர் நெருங்கி அவள் மேனியைத் தீண்ட அவள் உள்ள நெகிழ்ச்சிகள் இவை என்பதாம். இவற்றுக்குத் தலைமகன் ஏதுவாவதல்லது அவனுக்கு இவை நிகழா என்பதாம்.

கூழை விரித்தல்

மெய்யும் மெய்யும் தீண்டிய வழி மெல்லியல் மகளிர்க்கு வரும் வேறுபாடு. உள்ள நெகிழ்ச்சியால் தலைவியின் கூந்தல் நெகிழ்வு பெறுகிறது. **'ஓதி முந்துற நெகிழ'** *என்பது கூழை விரித்தலாம்.*

காதொன்று களைதல்

செவியில் பெய்து வைக்கப் பெற்ற காதணிகள் நெகிழ்ந்து கழல்கின்றன என்பதாம். காதின்கண் தோன்றும் மெய்ப்பாடு அதன் அணிக்கு ஏற்றிக் கூறப்பட்டது.

''காதொன்று நெகிழ'' என்பது காதொன்று கழதல்.

ஊழணி தைவரல்

வளைகளை முன்கைமேல் இறுகச் செறித்தலும் விரற் செறியினைத் திருத்தலும் முதலாயின.

''**நிழலவிர் மணிப்பூண் நெஞ்சொடு கழல**'' என்பது ஊழணி தைவரல்.

உடைபெயர்த்து உடுத்தல்

உடுத்த உடையினைப் பலகாலும் அழித்து உடுத்தல்.

'**துகிலும் பன்முறை நெடிது நிமிர்ந்தனவே**' என்பது உடைபெயர்த் துடுத்தலாம்.

இந்நான்கும் வந்த செய்யுள் பின்வருமாறு :

'விண்ணுயர் விறல்வரைக் கவாஅன் ஒருவன்
கண்ணில் நோக்கியது அல்லது தண்ணென
உரைத்தலும் இல்லை மாதோ அவனே
வரைப்பாற் கடவுளும் அல்லன் அதற்கே
ஓதி முந்துறக் காதொன்று நெகிழ
நிழலவிர் மணிப்பூண் நெஞ்சொடு கழலத்
துகிலும் பன்முறை நெடிதுநிமிர்ந் தனவே
நீயறி குவையதன் முதலே
யாதோ தோழியது கூறுமாறு எமக்கே.' —இ. வி. பக். 532

தழுவ விழைதல்

நெஞ்சு நெகிழக் கூழையும் காதணியும் கைவளையும் நெகிழ்கின்றன. உடைபெயர்த்து உடுக்கின்றாள். அதற்கு மேலும் அவள் விருப்பினை அடக்கிக்கொள்ள இயலவில்லை. தன் விழைவைத் தடுத்து நிறுத்த முயன்று தோல்வியே உறுகிறாள்.

அல்குல் தைவரல்

உடைபெயர்த்து உடுத்தல் என்பதால் அவள் உடை பெரிதும் நெகிழத் தொடங்கியது என்பது பெறப்படுகிறது.

அதனைப் பாதுகாக்கக் கைகள் தாமே எழுகின்றன. அவ்வற்றம் மறைக்கும் கையினை அல்குல் தைவரல் என்றார்.

'கலங்கி உள்ளத்து உகுநள் போல'

என்பது அல்குல் தைவரலை உணர்த்திற்று.

அணிந்தவை திருத்தல்

கடி சூத்திரம் முதலாயின திருத்துதல் என்பர்,

'அல்குலின் நெகிழ்நூற் கலிங்கம்'

என்பது அணிந்தவை திருத்தல்.

இல் வலியுறுத்தல்

புணர்ச்சியை வேண்டாதாள் போல்வதோர் வன்மை படைத்துக்கொண்டு செய்தல். அல்குல் தைவரலும் அணிந்தவை திருத்தலும் தன் வலியின்மை காட்ட வலி தோற்றிக்கொண்டு செல்வது இல்வலியுறுத்தல் என்பதாம்.

'மெலிந்தில ளாகி வலிந்து பொய்த்து ஒடுங்கவும்'

என்பது இல்வலியுறுத்தலாம்.

இருகையும் எடுத்தல்

அங்ஙனம் படைத்துக்கொண்ட வலியானும் தடுக்கப் படாது நிறையழிதலிற் கைகள் தாமே முயங்கல் விருப்பத்தால் எழுவன போல்வதோர் குறிப்பு.

'யாமெடுத்து அணைத்தொறும் தாமியைந்து எழுதல்'

என்பது இருகையும் எடுத்தல்.

இவை நான்கும் அமைந்த செய்யுள் பின்வருமாறு :

ஓதியும் நுதலும் நீவி யான்தன்
மாதர் மென்முலை வருடலிற் கலங்கி
உள்ளத்து உகுநள் போல அல்குலின்
ஞெகிழ்நூற் கலிங்கமொடு புகுமிடன் அறியாது

மெலிந்தில ளாகி வலிந்து பொய்த்து ஒடுங்கவும்
யாமெடுத் தணைத்தொறும் தாமியைந்து எழுதலின்
இம்மை யுலகத் தன்றியும் நம்மை
நீளரி நெடுங்கண் பேதையொடு
கேளறிந் தனகொல் இவள் வேய்மென் தோளே'

—இ. வி. பக். 532

இப் பன்னிரண்டு மெய்ப்பாடுகளும் புணர்வுக்கு முன் நிகழ்பவையாம்.

புணர்வுக்குப்பின் தோன்றும் மெய்ப்பாடுகள்

பாராட்டெடுத்தல்

புணர்ச்சி நிகழ்ந்த பின்னர்த் தலைமகனை இயற்பட நினையும் குறிப்பாம். இது பாராட்டென்னது எடுத்தல் என்றதனால் அதனை உள்ளமெடுத்தல் மேற்கொள்க. இது தலைமகனுக்கும் ஏற்கும்.

மடந்தப உரைத்தல்

விளையாடும் பருவத்து நிகழ்ந்த அறிமடம் நீங்கக் காமப் பொருட்கண்ணே சிறிது அறிவு தோன்றுதல் என்பதாம். உரைத்தல் என்றதால் அக்காலத்துப் பாங்கிக்குச் சில கூற்றுமொழி கூறவும் பெறும் என்பது கொள்க.

ஈரமில் கூற்றம் ஏற்று அலர் நாணல்

தமரால் உளவாகும் கடுஞ்சொல்லை ஏற்றுக்கொண்டு புறத்தார்க்கு இது புலனாகுமோ என்று நாணுதல்.

கொடுப்பவை கோடல்

தலைமகனால் கொடுக்கப்பட்ட தழையும் கோதையும் தாரும் கண்ணியும் தோள் மாலையும் முதலாயின கொண்டு அக் கையுறைப் பொருள்களைப் பாராட்டுதல்.

புணர்ச்சிக்குப்பின் பாராட்டுள்ளம் பிறக்கிறது. அதனால் அப் பாராட்டுரை பிறர் கேட்கும் அளவுக்குச் செல்கிறது. அது பரவித் தமர் கடுஞ்சொல் சொல்ல, அது பரவி

விடுமோ என்று அஞ்சுகிருள் தலைவன் மேற்சென்ற உள்ளத்தாள் ஆதலின், அவன் கொடுப்பவற்றை மனமுவந்து ஏற்றுக் கொள்ளுகிருள். இவை ஒன்றன்பின் ஒன்ருக நிகழும் நிகழ்ச்சிகளாம்.

'ஒருநாள் வந்து பலநாள் வருத்தும்
நின்னே போலுமநின் தழையே; என்வயின்
நிற்பா ராட்டியும் சொற்கொளல் இன்றியும்
யாய்எதிர் கழறலின் பேரலர் நாணியும்
மயல்கூர் மாதர்க்குத் துயர்மருந் தாயினும்
நோய்செய் தன்ருல் தானே
நீ தொடக் கரிதலின் ஓரிடத் தானே'

இது கையுறை மறுத்தது. இதனுள், "நிற்பாராட்டி" என்பது பாராட்டெடுத்தல், "சொற்கொளல் இன்றி" என்பது மடந்தப உரைத்தல், "யாய் எதிர் கழறலின் பேரலர் நாணி" என்பது ஈரமில் கூற்றம் ஏற்று அலர் நாணல், "துயர் மருந்தாயினும்" என்பது கொடுப்பவை கோடல்.

தெரிந்துடம் படுதல்

தோழிக்குத் தன் களவு ஒழுக்கத்தை அறிவுறுத்தல்; அவள் செவிலித்தாயர் முதலியர்க்கு அறிவிப்பாள்.

திளைப்புவினை மறுத்தல்

தலைவனேடு திளைத்து மகிழ்வதை அச்சமும் நாணும் மடனும் காரணமாக மறுத்தல்.

கரந்திடத்து ஒழிதல்

இற்செறிக்கப்பட்டு அவன் முன் வெளிப்படாது ஒழுகுதல்.

கண்டவழி உவத்தல்

அங்ஙனம் கரந்தொழுகுங்காலத்து அவனை ஒரு ஞான்று கண்டவழிக் கழியுவகை கொள்ளுதல்.

'அறியாய் கொல்லோ நீயே தெறுவர
நோக்குதொறும் பனிக்கும் நெஞ்சமோ டிவளே
யாய்க்குஅறிவுறுலின் நின்னெதிர் நாணி
மனைவயிற் பிரியலள் மன்னே அதற்கே
நினைவிலள் இவளென உரைத்தி
புனைதார் மார்ப காண்டியோ அதுவே'

இது தோழி வரைவு கடாவியது. "யாய்க்கு அறிவுறுலின்' என்பது தெரிந்து உடம்படுதல்; 'நின்னெதிர் நாணி' என்பது திளைப்புவினை மறுத்தல். 'மனைவயிற் பிரியலள்' என்பது கரந்திடத் தொழிதல்; "புனைதார் மார்ப காண்டியோ அதுவே" என்பது கண்டவழி உவத்தல்.

புறஞ்செயச் சிதைத்தல்

பூவும் சாந்தும் பூணும் துகிலும் முதலாயின கொண்டு புறத்தே கோலஞ்செய்ய அகத்தே சிதைவு உண்டாதல்.

புலம்பித் தோன்றல்

தனிமையால் துன்புறுதல்.

கலங்கி மொழிதல்

உள்ளக் கருத்தை வாய்தவறிப் பேசி வெளிப்படுத்தல்.

கையற உரைத்தல்

கலங்காது சொல்லுங்காற் செயலறவு தோன்றச் சொல்லுதல். இவை நான்கும் வந்த செய்யுள்:

'இவளே, அணியினும் பூசினும் பிணியுழந் தசைஇப்
பல்கிளை நாப்பண் இல்கிளை போல
மொழிவகை அறியாள் பொழிகணீர் துடைத்து
யானே கையற அலமரும்
கூறுய் பெருமநின் தேறும் ஆறே' —இ வி. பக். 233

இதனுள் 'அணியினும் பூசினும் பிணியுழந் தசைஇ' என்பது புறஞ்செயச் சிதைத்தல்; 'பல்கிளை நாப்பண்

இல்கிளை போல' என்பது புலம்பித் தோன்றல்; 'மொழிவகை அறியாள்' என்பது கலங்கிமொழிதல்;''யானே கையற அலமரும்'' என்பது கையற உரைத்தல்.

இவை அனைத்தும் காம ஒழுக்கத்தில் தோன்றும் மெய்ப் பாடுகள் என்பர்.[1]

மேற்கூறிய இருபத்து நான்கும் ஆற்ருமை வந்தவிடத்து இன்மையும் உரித்து என்பர்.[2]

கலக்கநிலை மெய்ப்பாடுகள்

களவுக்காலத்து இடையறவு ஏற்பட்டு விடுவதால் தலைவி கலக்கம் அடைகிருள். அக் கலக்கநிலையில் நிகழும் மெய்ப்பாடுகள் பின்வருமாறு:

(1) இன்பத்தை வெறுத்தல், (2) துன்பத்தில் புலம்புதல், (3) எதிர்பெய்து பரிதல் (உருவ வெளிப்பாடு கண்டு வருந்துதல்), **(4) ஏத மாய்தல்** (கூட்டத்திற்கு வரும் இடையூறுகளை ஆராய்தல், **(5) பசியட நிற்றல்** (பசியட வருந்தல்; உணவு மறுத்தல்), **(6) பசலை பாய்தல், (7) உண்டியிற் குறைதல், (8) உடம்பு நனி சுருங்கல், (9) கண் துயில் மறுத்தல், (10) கனவொடு மயங்கல் (11) பொய்யாக்கோடல்** (மெய்யையும் பொய் யாகக் கொள்ளுதல்), **(12) மெய்யே என்றல்** (பொய்யை மெய்யாகக் கருதுதல், **(13) ஐயம் செய்தல்** (பிரிந்து விடுவானே என்று ஐயுறுதல்), **(14) அவன் தமர் உவத்தல்** (அவன் சுற்றத் தாரைக் கண்டு மகிழ்தல்), **(15) அறனளித்து உரைத்தல்** (நற்சகுனங்களைப் போற்றுதல்), **(16) ஆங்கு நெஞ்சழிதல்** (நெஞ்சம் அழிந்து கலங்குதல்), **(17) எம்மெய்யாயினும் ஒப்புமை கோடல்** (தலைமகனேடு ஒப்புமை காணுதல்), **(18) ஒப்புவழி உவத்தல்** (ஒப்புப் பொருளைக் கண்டவிடத்து மகிழ்தல்), **(19) உறுபெயர் கேட்டல்** (தலைமகனின் மிக்க புகழைக் கேட்டல்), **(20) கலக்கம்** (கலங்கிப் பிதற்றுதல்). —தொல். சூ. 270

---

1. தொல் சூ. 297
2. தொல் சூ. 298

வரைவுக்கு ஏதுவாக அமையும் மெய்ப்பாடுகள்

களவு நீங்கி வரைந்து கற்பு நெறியில் நிற்கிறுள் தலைவி. திருமணம் தேவை என்ற நியதிக்கு இம் மெய்ப்பாடுகள் காரணமாகின்றன.

1. முட்டு வயிற் கழறல்: கூட்டத்துக்கு முட்டுப்பாடு ஏற்படுமிடத்துக் கழறி உரைத்தல்.

2. முனிவு மெய்ந்நிறுத்தல்: தலைமகள் உள்ளத்து வெறுப்பு வெளிப்பட நிற்கும் நிலை.

3. அச்சத்தின் அகறல்: தலைமகன்கண் வரும் ஏதம் அஞ்சி அவனை நீங்கும் குறிப்பு.

4. அவன் புணர்வு மறுத்தல்: இரவுக்குறியும் பகற்குறியும் விலக்குதற்கு எழுந்த உள்ள நெகிழ்ச்சி.

5. தூது முனிவின்மை: புள்ளும் மேகமும் போல்வன கண்டு சொல்லுமின் அவர்க்கு என்று தூது இரந்து பன்முறையானும் சொல்லுதல்.

6. துஞ்சிச் சேர்தல்: மனையகத்துப் பொய்த்துயிலோடு மடிந்து வைகுதல்.

7. காதல் கைம்மிகல்

காமம் கையிகந்தவழி நிகழும் உள்ள நிகழ்ச்சி.

8. கட்டுரை இன்மை

உரை மறுத்து இருத்தல்.[1]

கற்பு ஒழுக்கின்கண் நிகழும் மெய்ப்பாடுகள்

1. தெய்வம் அஞ்சல்: தலைவன் வழிபடும் தெய்வத்திற்குத் தானும் அஞ்சுதல்.

2. புரையறம் தெளிதல்: தனக்கொத்த இல்லறம் இன்னது என்று தலைமகள் மனத்துப்படுதல்.

---

1. தொல். சூ. 271

3. **இல்லது காய்தல்:** *களவின்கண் போலாது தலைமகற்கு இல்லாததனை உண்டாக்கிக் கொண்டு காய்தல்.*

4. **உள்ளது உவர்த்தல்:** *தலைமகனுல் பெற்ற தலையளி உள்ளதேயாயினும் அதனை உண்மையென்றே தெளியாது அருவருத்து நிற்கும் உள்ள நிகழ்ச்சி.*

5. **புணர்ந்துழி யுண்மை:** *புணர்ச்சிக் காலத்துச் செய்வன சென்ற உள்ள நிகழ்ச்சி. ஒளிவு இல்லாமல் பேசுதல் என்பதாம்*

'குளிரும் பருவத்தே யாயினும் தென்றல்
வளியெறியின் மெய்யிற்கு இனிதாம்—ஒளியிழாய்
ஊடி யிருப்பினும் ஊரன் நறுமேனி
கூடல் இனிதாம் எனக்கு'

6. **பொழுது மறுப்பு ஆக்கம்:** *களவுக் காலத்துப் பொழுது வரைந்து பட்ட இடர்ப்பாட்டின் நீங்கிய மனமகிழ்ச்சி.*

7. **அருள் மிக உடைமை:** *களவுக் காலத்துப் போலத் துன்பம் மிகுதல் இன்றி அருள் மிகத்தோன்றிய நெஞ்சினள் ஆதல்.*

'நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்
என்றும் என்தோள் பிரிபு அறியலரே' —*நற்.* 1

8. **அன்பு தொக நிற்றல்:** *களவுக் காலத்து விரிந்த அன்பெல்லாம் இல்லறத்தின்மேல் பெருகிய விருப்பினுல் ஒருங்கு தொக நிற்றல்.*

9. பிரிவாற்ருமை: *பிரிவு ஆற்றுதல் தேவை இல்லாமை; வாய்விட்டுச் சொல்லிவிடலாம் என்பதாம்.*

10. **மறைந்தவை உரைத்தல்:** *களவுக் காலத்து நிகழ்ந்தனவற்றைக் கற்புக்காலத்துக் கூறுதல்.*

11. **புறஞ்சொல் மாணுக்கிளவி :**

தலைமகனுக்கு வரும் பழியைக் காத்தல்.

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்' —*குறள்*

ஒற்றுமைப் பண்புகள்

தலைவனும் தலைவியும் கருத்து ஒருமித்துக் காதல் வாழ்க்கை நடத்த உணர்வாலும் அறிவாலும் உருவாலும் ஒன்றுபட்டவராக விளங்க வேண்டும் என்பர். பிறப்பு, ஒழுக்கம், ஆண்மை, வயது, உரு, அன்பு, நிறை, அருள், அறிவு, செல்வம் எனப் பத்து வகையிலும் ஒற்றுமை நிலவ வேண்டும். ஏறுமாறாயினும் உள்ளம் வேறுபடும் என்பதாம்.[1]

"பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர் வோடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

—தொல். சூ. 273.

ஒற்றுமையைச் சிதைக்கும் பண்புகள்

நிம்புரி (பொறாமை தோன்றும் குறிப்பு), கொடுமை, வியப்பு, புறமொழி, வன்சொல், பொச்சாப்பு (நெகிழ்வு), மடிமை, குடிப்பெருமை பேசல், இன்புறல் (தான் மட்டும் இன்புறுவது போன்ற தாழ்வு உணர்ச்சி), ஏழைமை (அறிவின்மை), மறப்பு, ஒப்புமை (ஒப்பிட்டுப் பாராட்டுதல்) ஆகிய இவை தலைவனிடத்து நிகழாமல் இருக்கவேண்டும் என்பர்.

"நிம்புரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொற் பொச்சாப்பு மடிமையொடு குடிமை
இன்புறல் ஏழைமை மறப்போடு ஒப்புமை
என்றிவை இன்மை என்மனார் புலவர்" —தொல். சூ. 274.

நுட்ப உணர்வு தேவை

கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணரும் அறிவுடையார்க்கே மெய்ப்பாடுகளின் நுட்பத்தை அறிய இயலும். மெய்ப்பாடு பிறந்த வழி பற்றி முகம் வேறுபடுதலும், உரை வேறுபடுதலும் உடைமையின் அவை கண்ணானும் செவியானும் உணரும் ஆற்றல் ஒரு சிலருக்கே அமையும் என்பதாம். —தொல். சூ. 271.

4. அணியியல்

தொல்காப்பியர் அணிகளுள் உவமை அணி ஒன்றனையே குறிப்பிடுவர். தண்டியலங்காரம் ஏனைய அணிகளைக் குறிப்பிடும். தண்டியலங்காரம் வடமொழி அலங்காரத்தை ஒட்டியும், அவர் காலத்து எழுந்த காவிய நியதிகளை ஒட்டியும் அமைந்த தனி நூலாகும். எனினும், அதுவும் தொல்காப்பியத்தையே அடியொற்றிச்செல்கிறது.

1. உவமை அணி

உவமை என்பது பொருளைத் தக்க ஒப்புமை கொண்டு உணர்த்துவதாகும். தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்தில் உவமை இயல் என்னும் பகுதியில் உவமையின் இலக்கணத்தைத் தெளிவுபடுத்துகின்றார். அவர் கருத்தின்படி உவமை என்பது பொருளின் தன்மையைப் புலப்படுத்துவது என்பதாகும். வினை, பயன், மெய், உரு ஆகிய பொருளின் தன்மைகளை உவமைகள் சிறப்பிக்கின்றன.

''வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்'' — தொல். சூ. 272.

என்று தொல்காப்பியர் உவமையை வகைப்படுத்திக் காட்டுகின்றார்.

வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கினைப் பண்பு, தொழில், பயன் என மூன்றாக அடக்கிக் காட்டுவர் தண்டி,

"பண்பும் தொழிலும் பயனும் என்று இவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்ந்து
ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை" —தண்டி. சூ. 31.

என விளக்கம் தருவர். ஒப்புமை அறிதற்குக் காரணமாய் நிற்கும் பொருளை உவமை என்றும், உவமிக்கப்படும் பொருளைப் பொருள் என்றும் கூறுவர். இவற்றைத் தண்டி உரையாசிரியர் உவமானம் எனவும், உவமேயம் எனவும் குறிப்பிடுவர்.

'புலிபோலப் பாய்ந்தான்' என்பது வினை,
'மாரியன்ன வண்கை' என்பது பயன்,
'துடிபோலும் இடை' என்பது வடிவு,
'தளிர்போலும் மேனி' என்பது நிறம்.

வடிவையும் நிறத்தையும் பண்பு என்னும் பொதுச் சொல்லால் தண்டியாசிரியர் குறிப்பிடுவர். ஒன்றுக்கு மேற்பட்ட தன்மைகளும் உவமையில் இடம் பெறும் என்பர்.

"விரவியும் வருஉம் மரபின என்ப" —தொல் சூ. 272.

உவமை என்பது கவிஞனின் அனுபவப் பொருளாகும்; பொருள் என்பது அவன் காணும் புதிய பொருளாகும். அவன் ஏற்கெனவே கண்டுவைத்த பொருளைப் புதிதாகக் காணும் பொருளோடு பொருத்திவைத்து அப் பொருளின் உயர்வு தாழ்வுகளை அளந்து அறிவிக்கின்றான் என்று கூறலாம். பொதுவாகப் பொருளின் சிறப்பை வற்புறுத்தவே உவமை அமைக்கப்படுகிறது. அதன் உயர்வைக் காட்ட அதனினும் உயர்ந்த பொருளையே வரையறையாக அமைக்க வேண்டியுள்ளது. எனவே, உவமை பொருளைவிட உயர்ந்ததாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக்கருத்தை ஆசிரியர் தொல்காப்பியனார் வற்புறுத்தியுள்ளார்.

"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை" —தொல். சூ. 274

"அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்" என்றவழித் துப்புடையன பலவற்றினும் அரிமா உயர்ந்தது

ஆகலின், அஃது உவமையாகக் கூறப்பட்டது என்று இளம்பூரணர் காட்டுவர். மற்றும் 'தாமரை புரையும் காமர் சேவடி' என்றவழிச் சிவப்புடைய பலவற்றினும் தாமரை உயர்ந்ததாகலின், அஃது உவமையாகக் கூறப்பட்டது என்று மேலும் விளக்கம் தருகிறார்.[1]

மற்றும், உவமை என்பது உயர்ந்த பொருளாக வரும் என்பதோடு அது சிறப்பு, நலன், காதல், வலி ஆகிய சிறப்புகளால் அமைகின்றது என்பர் ஆசிரியர் தொல்காப்பியனார்.

'சிறப்பே நலனே காதல் வலியொடு
அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப' —தொல். சூ-279

சிறப்புப் பற்றியது

'முரசு முழங்கு தானை மூவரும் கூடி
அரசவை இருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை எழாஅல்' —பொருநர். 54—56.

நலம் பற்றியது

''ஓவத்தன்ன வியனுடை வரைப்பின்''

காதல் பற்றியது

'கண்போலவான் ஒருவன் உளன்'

வலிமை பற்றியது

'அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்'
—பட்டினப். 298.

அந் நிலைக்களம் நான்கேயன்றிக் கிழக்கிடு பொருளோடு ஐந்தெனவும் படும்.

''அரவு நுங்கு மதியின் நுதலொளி கரப்ப'' —அகம். 313.

நுதலொளி கரத்தல் இழிபொருளாகும்.

---

1. தொல். உவமை இயல் இளம்பூரணர் உரை —பக். 391

**"பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்
வழிமருங்கு அறியத் தோன்றும் என்ப"** —தொல். சூ. 294

இவ் வுவமைகளோடு எண்வகைச் சுவைகளும் கலக்கின்றன என்பது அவர் உணர்த்தும் கருத்தாகும். உவமைகளைக் கூறுவதால் அவற்றின் வழியே உவகை, அவலம், வெகுளி, நகை முதலிய சுவைகளை வெளிப்படுத்த இயல்கின்றது என்பது தெரிகிறது. எனவே, உணர்வுமிக்க பாடல்களுக்கு உவமைகள் ஒளிவிளக்காக நின்று செய்யுட் செய்திகளை விளக்கப்படுத்துகின்றன எனக் கூறலாம்.

உவமைகளை வெளிப்படை உவமை எனவும், குறிப்பு உவமை எனவும் இருவகைப்படுத்தலாம். மேலும், இவற்றைத் **தொகை உவமம்** எனவும், **விரி உவமம்** எனவும் பிரித்துக் காட்டுவர். உவம உருபும் பொதுத் தன்மையும் விரித்துக் கூறப்படுவன விரி உவமம் எனப்பட்டன; தொக்கு வருவன தொகை உவமம் எனப்பட்டன.

பிறைநுதல் (தொகை உவமம்)

தளிர் ஏர் மேனி (உருபு விரிக்கப்பட்டது. ஏர் உவம உருபாம்—இது விரி உவமம்).

வேய் மருள் பணைத்தோள் (உருபும் தன்மையும் விரிக்கப் பட்டன—இது விரி உவமம்.)

இவ் வெளிப்படை உவமங்களேயன்றி உவமை பொருளாக ஒன்றிவிட்ட நிலையும் உள்ளது. அதனை **உருவகம்** என்பர். உவமையினின்று வடிவால் இவ்வுருவகங்கள் மாறுபட்டு விளங்குகின்றன.

அகப்பொருட் பாடல்களுள் வரும் கருப் பொருட் செய்திகளினின்று உவமச் செய்திகள் ஒருசில வெளிப்படுகின்றன. இவற்றினின்று பெறப்படும் குறிப்புப் பொருளைக் **குறிப்பு உவமம்** என்று கூறலாம். கருப்பொருள் செய்திகளிலே இருந்து குறிப்பாகப் பெறப்படும் உவமச் செய்திகளை **உள்ளுறை உவமம்** என்றனர். இதனை **உவமப் போலி** என்றும் கூறினர்.

இவ் உள்ளுறையைப் போலக் குறிப்பாகப் பெறக்கூடிய மற்றோர் பொருளை **இறைச்சி** என்றும் கூறினர். உள்ளுறை இறைச்சி ஆகிய இவற்றைக் **குறிப்பு உவமைகள்** என்று கூறலாம்.

முதலுக்கு முதலும் சினைக்குச் சினையும் உவமையும் பொருளுமாக அமையவேண்டும் என்னும் நியதி இல்லை. மாறி வருதலும் உண்டு.[1]

'தாமரை புரையும் காமர் சேவடி' —சினைக்குச் சினை உவமமாக வந்தது.

உவம உருபும் பொருள் தன்மையும் விரித்துக் கூறப்பட வேண்டும் என்ற நியதி இல்லை; தொகுத்தும் கூறப்படும்.

'பவள வாய்' இதனைப் பவளம் போலச் செந்துவர் வாய் என்று விரித்துப் பொருள்கொள்ளல் வேண்டும் என்பர்.

உவமையும் பொருளும் மனம் கொள்ளத்தக்க வகையில் பொருந்தி அமைந்து அழகுணர்ச்சியை உண்டாக்க வேண்டும்[2]

'மயில் தோகை போலும் கூந்தல்' என்பதன்றிக் 'காக்கைச் சிறகன்ன கருமயிர்' என்று கூறல் பொருந்தாது.

உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்'' —தொல்.சூ. 283

உயர்வுநவிற்சிபடக் கூறல்

உயர்வு நவிற்சிபட ஒரு பொருளை மிகுதிப்படுத்தியும் சிறுமைப்படுத்தியும் கூறினும் அவை மனங் கொள்ளத்தக்க வகையில் அமைய வேண்டும் என்பர்.[3]

---

1. ''முதலும் சினையும் என்று ஆயிரு பொருட்கும்
நுதலிய மரபின் உரியவை உரிய'' —தொல். சூ. 281
2. ''சுட்டிக் கூறா உவம மாயின்
பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தனர் கொளலே''
—தொல். சூ. 282
3. ''பெருமையும் சிறுமையும் சிறப்பின் திராக்
குறிப்பின் வருஉம் நெறிப்பாடு உடைய'' தொல்.சூ. 285

'சோறு வாக்கிய கொழுங் கஞ்சி
யாறு போலப் பரந் தொழுகி —பட்டினப். 44-45.

மரபுவழி அமைத்தல்

உவமப் பொருளை உணருங்காலை மருவி வந்த வழக்கொடுபடுத்து உணரப்படும் என்பர்.[1]

'களவுடம் படுநரின் கவிழ்ந்து நிலம் கிளையா' —அகம். 16.

என்பது, களவு உடம்படுநர்க்கு உள்ள வேறுபாடு உலகத்து அடிப்பட வந்த வழக்காதலான், அஃது ஏதுவாக அதனையும் அறிந்து கொள்ளப்படும் என்றவாறு.

'புறமதி போலும் முகம்' என்பது மருவிவரும் வழக்கன்று.

இரட்டைக் கிளவிகள்

சங்க இலக்கியத்தில் இரட்டைக்கிளவியாக உவமைகள் வருதல் பெருகிய வழக்காகும். பொருளும் உவமையும் அடையடுத்து வருதல் இரட்டைக்கிளவி என்பர்.[2]

'பொன்காண் கட்டளை கடுப்பச் சண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்'—பெரும்பாண். 220.

சண்பின் காயின் சுண்ணம் பூசப்பெற்ற மார்பு பொன்துகள் படர்ந்த உரைகல்லை உவமையாகப் பெற்றுள்ளது.

சங்க இலக்கியத்தில் இவை பயின்று வழங்குகின்றன.[3]

'சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு இவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிது' —சிறு. பாண். 18/4-5

'நீரின்று அமையா உலகம் போலத்
தம்மின்று அமையா நந்நயந்து அருளி' —நற். 1/6-7

---

1. "உவமப் பொருளை உணரும் காலை
மரீஇ மரபின் வழக்கொடு படுமே" —தொல், சூ. 296
2. "இரட்டைக் கிளவி இரட்டை வழித்தே" —சூ. 297.
3. சங்க இலக்கியத்தில் உவமைகள் பக், 18-19

'குன்றத் திருந்த குரீஇயினம் போல
' அம்புசென் றிறுத்த அரும்புண் யானை' —புறம். 19/89

உவமை வகைகள்

பொருளை உவமாகச் சொல்லுதலும் இரட்டைக் கிளவியும் சொல்முறை யழகேயன்றி, உவமை அணிவகைகள் என்று கூறுவதற்கு இல்லை. மரபுப்படி, உவமையும் பொருளும் இவ்வாறு அமைந்து வருதல் பொது நியதியாயினும், ஒருசில மாற்றங்கள் பெற்றுப் புது உத்திகள் கையாளப் பெறுதலும் உண்டு. அவற்றை உவமை அணி வகைகளாகக் கொள்வர்.

தொல்காப்பியர் வேறுபட உவமைகள் வரும் என்பதைக் கீழ்வரும் சூத்திரத்தால் குறிப்பிடுவர்.

'வேறுபட வந்த உவமத் தோற்றம்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல் —தொல்.சூ. 307,

என்பர்.

மேலும் விலக்கணியையும்[1], தடுமாறு உவமையையும்[2] நிரல் நிறை உவமை அணியையும்[3] அவர் குறிப்பிடக் காண்கிறோம்.

பிற உவமை அணி வகைகள்

1. அந்தாதித் தொடை உவமை

அந்தாதி உவமை என்பது உவமையைப் பொருளாக்கியும், பொருளை உவமையாக்கியும் இயைபுபடுத்தித்தொடுப்பது என்பர். மாலை உவமை என்பது இதனின்று வேறுபட்டது;

---

1. "ஓரிஇக் கூறலும் மரீஇய பண்பே" —சூ. 308
2. "தடுமாறு உவமம் கடிவரை யின்றே" —சூ. 310
3. "நிரல் நிறுத் தமைத்தல் நிரல் நிறை சுண்ணம்
வரைநிலை வைத்த் மூன்றலங் கடையே" —சூ. 212

உவமச் செய்திகளுள் தொடர்ச்சி உண்டாகும்படி மாலை போலக் கருத்துத் தொடர்பு உடையது என்பர். மாறன் அலங்காரம் அந்தாதித் தொடை உவமையைக் குறிப்பிடும்;[1] தண்டி குறிப்பிடவில்லை.[2]

'நெய்கனிந்து இருளிய கதுப்பின் கதுப்பென
மணிவயின் கலாபம் பரப்பி' —சிறுபாண். 141

2. அதிசய உவமை

வியப்புத் தோன்ற உவமையை அமைத்தல் அதிசய உவமை.

'முகம் உன்னிடம் காண்கின்றோம். தாமரையை நீரில் காண்கிறோம். இதுவல்லாமல் வேறுபாடு காண இயலவில்லை' என்பது அதிசய உவமையாம்.

3. அற்புத உவமை அல்லது மருட்கை

அற்புத உணர்வோ மருட்கை உணர்வோ கூடிய உவமை அற்புத உவமையாகும்.

'நிழற் கயத்துள் நீருள் குவளை
வெந்தற்று' —கலி. 41/30-31.

இதில் இல்பொருள் உவமையும் அமைந்துள்ளது.

4. ஒப்புமைக் கூட்ட உவமை அணி

'காவல் புரிந்து விண்ணவர் கோன் உறங்கான்; மண்ணில் நீயும் அத்தகையை. அவுணர் குலம் களைவான் இந்திரன்; நீயும் பகைவரை வேரறுப்பாய்' என்பர்.

5. ஏது உவமை

'சிவபெருமானின் தலையில் அரவின் செம்மணியும், வன்னிப் பசுமை இலையும், திங்கள் நிலவும் நீளொளியால் வான விற்போல வரும்' என்பது ஏது உவமை.

---

1. மாறன் அலங்காரம் உரை, பக். 150
2. தண்டி சூ 32. உரை, பக். 52

6. இடம் மாற்று உவமை

பொருளின் இயல்பும் தன்மையும் உவமைக்கு ஏற்றிக் கூறும் அழகு ஒருசில இடங்களில் காணப்படுகிறது. அதே போல உவமையின் தன்மையும் பொருளுக்கு ஏற்றிக் கூறப் படுகின்றது. இதனை இடம் மாற்று உவமை எனக் கூறலாம்.[1] இதனைச் சமாதி அணி என்பர் தண்டி ஆசிரியர்.

'உரிய பொருளின்றி ஒப்புடைப் பொருள்மேல்
தரும்வினை புணர்ப்பது சமாதி யாகும்' —தண்டி. சூ. 28

'பூ உயிர்த்தன்ன புகழ்சால் எழில் உண்கண்' —கலி. 142/1

பூ உயிர்த்தல் என்பது பொருளின் தன்மை. அஃது உவமைக்கு ஏற்றிக் கூறப்பட்டுள்ளது.

உருவகங்களில் இவ்வாறு உவமத்தன்மை பொருளுக்கு ஏற்றிக் கூறப்படுதல் காணப்படுகிறது.

கன்னிவிடியல், குழவித்திங்கள், குமரி ஞாழல், நிலமகள்[2]

7. இணைப்பு உவமை

அணி நூல்கள் இத் தனிச்சிறப்பை எடுத்துக் காட்ட வில்லை. உவமப் பொருள்களில் சில குறிப்பிட்ட பொருள் கள் இணைத்துக் கூறப்படுகின்றன. இவற்றை இணைப்பு உவமை எனக் கூறலாம்.

'பொன்னும் மணியும் போலும் யாழநின்
நன்னர் மேனியும் நாறிருங் கதுப்பும்' —நற். 166/1-2

பொன்னும் மணியும் இணைத்துக் கூறப்பட்டது.

'ஓவத்தன்ன வினைபுனை நல்லில்
பாவை அன்ன நல்லோள் கணவன்' —பதிற். 61/34

ஓவியமும் பாவையும் இணைத்துக் கூறப்பட்டன.

---

1. சங்க இலக்கியத்தில் உவமைகள் —பக். 18
2. சங்க இலக்கியத்தில் உவமைகள் —பக் 56

8. இல்பொருள் உவமை

இல்லாத பொருளை உவமையாகக் கொண்டு வந்து சித்திரிக்கும் அழகை இல்பொருள் உவமை என்பர். இதனைத் தண்டியலங்காரம் அபூத உவமை என்று கூறும்[1]

'குன்றுஅகல் நன்னுடன் வாய்மையில் பொய்தோன்றின்
திங்களுள் தீத்தோன்றி யற்று' —*கலி*. **41/23-2**

9. இயம்புதல் வேட்கை உவமை

பொருளை இன்னது போலும் என்று சொல்ல வேட்கின்றது என் உள்ளம் என்பது.

'தாமரை நின் வாள் முகத்திற்கு ஒப்பு என்று
எடுத்தியம்ப வேண்டுகின்றது இன்று'

10. இன்சொல் உவமை

பொருளினும் உவமைக்கு ஒரு மிகுதி தோன்றக் கூறி உவமித்து இன்ன மிகுதியை உடைத்தேனும் ஒப்பது அன்றிச் சிறந்தது அன்று என்பது.

'மான்விழி தாங்குமடக் கொடியே நின்வதனம்
மான்முழுதும் தாங்கி வருமதியம்– ஆனலும்
முற்றிழை நல்லாய்! முகம்ஒப்பது அன்றியே
மற்றுயர்ச்சி உண்டோ மதிக்கு' —*தண்டி. பக்.* 47

11. உண்மை உவமை

உவமையைக் கூறி மறுத்துப் பொருளினையே கூறி முடிப்பது என்பது.[2]

'தாமரை யன்று முகமேஈது இங்கு இவையும்
காமரு வண்டல்ல கருநெடுங்கண்—' —*தண்டி*. 48

---

1. *தண்டி —பக்.* 50
2. *தண்டி —பக்.* 43

12. எடுத்துக்காட்டு உவமையணி

அனைவருக்கும் தெரிந்த செய்திகளை எடுத்துக் காட்டாக (உதாரணமாகக்) கூறி அமைக்கும் உவமை எடுத்துக் காட்டு உவமை அணி எனப்படும்.[1]

'நீர்மிகின் சிறையும் இல்லை தீமிகின்
மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை
வளிமிகின் வலியும் இல்லை ஒளிமிக்கு
அவற்றோர் அன்ன சினப்போர் வழுதி' —*புறம்.* 51/1-4

13. ஐய உவமை

ஒன்றுக்கு மேற்பட்ட உவமைகளைக் கூறி இவற்றுள் எது பொருந்தும் என்ற ஐயத்தை எழுப்புவதும், உவமையையும் பொருளையும் கூறி இவற்றுள் எது உவமை எது பொருள் என்று கூறாமல் விடுவதும், ஐய உவமை யாகும்.

'அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு' —*திருக்குறள்.*

14, சமுச்சய உவமை

அதனை ஒப்பது இதனானே யன்றி இதனாலும் ஒக்கும் என்பது.

'அளவே வடிவொப்பது அன்றியே பச்சை
இளவேய் நிறத்தாலும் ஏய்க்கும்—துளவேய்
கலைக்குமரி போர்துளக்கும் காரவுணர் வீரம்
தொலைக்குமரி ஏறுஉகைப்பாள் தோள்' —*தண்டி.* 43

15 சிலேடை உவமை

இஃது இருவகைப்படும். செம்மொழிச் சிலேடை உவமையும், பிரிமொழிச் சிலேடை உவமையும் ஆகும்.

---

1. *தண்டி உரை. பக்.* 42

செம்மொழிச் சிலேடை

'செந்திருவும் திங்களும் தலைசிறப்பக்
கற்ருர் புனையும் கவிபோல் மனங்கவரும்
முகம்' —*தண்டி. பக்-53*

பிரிமொழிச் சிலேடை

'நளிதடத்த வல்லியின் கண்ணெகிழ ஞாலத்து
அளவின் நிறைகடாம் சிந்தி'—*என்பது யானைக்கும் தென்றலுக்கும் வந்த உவமை.*

பெருமைமிக்க தடமாகிய குளத்தில் அல்லியின் கள் நெகிழ, ஞாலத்தில் அளவில்லாத நிறைகள் (மனநிறைவு) சிந்தச் செய்துவரும் தென்றல்.

செறிவினையும் பெருமையினையும் உடைய கால் விலங்கு நெகிழ, ஞாலத்தில் அளவில் நிறை மதம் சிந்தி வரும் யானை.

16. கூடா உவமை

ஒரு பொருளுக்குக் கூடாத அதனைக் கூடுவதாகக் கொண்டு அதனை ஒன்றற்கு உவமையாக்கி உரைப்பது.

'சந்தனத்தில் செந்தழலும் தண்மதியில் வெவ்விடமும்
வந்தனவே போலுமால் நும்மாற்றம்'

17. தடுமாறு உவமை

உவமையைப் பொருளாக்கியும் அதனையே உவமையாக்கியும் கூறுதல் தடுமாறு உவமம் என்பர்.[1] *தண்டியாசிரியர் இதனை இதர விதர உவமை என்பர்.*[2]

'களிக்குங் கயல்போலும் நுங்கண்நுங் கண்போல்
களிக்கும் கயலும்' —*தண்டி உரை.*

18. தற்குறிப்பேற்ற உவமை அணி

இயல்பாக நிகழும் தன்மை யொழியக் கவி தான் கருதிய வேறொன்றினை அவற்றின்கண் ஏற்றிச் சொல்லுவது

---

1. "*தடுமாறு உவமம் கடிவரை இன்றே*" —*தொல்.சூ.* 310
2. *தண்டி, உரை, பக்.* 42

தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும். 'அன்ன; போல' என்பவை முதலாகிய உவமைச்சொல் சில இயைந்தும் வரும்[1]

இதனைத் தண்டியலங்காரம் உவமை அணியாகக் கொண்டிலது. அணிவகைகளுள் ஒன்ருகக் குறிப்பிடுகிறது.

'இன்துணைப் பிரிந்தோர் நாடித்
தருவது போலும் இப் பெருமழைக் குரலே —*நற்.* 208/11-12

19. திரிபு உவமை அல்லது விகார உவமை

உவமையைத் திரித்துப் பொருளுக்கு ஏற்றவாறு அமைத்தலும் உண்டு. அதனைத் திரிபு உவமை என்பர். இதனைத் தண்டியலங்காரம் விகார உவமை எனக் குறிப்பிடும்.

'இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பின்' —*அகம்.*4/3

'முத்துக் கூர்த்தன்ன முளையிளங் கூர் ஏயிற்று'
—*தண்டி பக்.*49

20. தெரிதரு தேற்ற உவமை

ஐயுற்றதனைத் தெரிந்து துணிவது.

'தாமரை நாண்மலரும் தண்மதியால் வீறழியும்
காமர் மதியும் கறைவிரவும்—ஆம் இதனல்
பொன்னை மயக்கும் புனைசுணங்கினுர் முகமே
என்னை மயக்கும் இது.'

21. நிந்தை உவமை

உவமையைப் பழித்து உவமிப்பது.

'மதி ஏக்கறூஉம் மாசறு திருமுகம்' —*பத்.*3/157

22. நிரல் நிறை உவமை

உவமைகள் ஒன்றன்பின் ஒன்று அடுக்கிக் கூறப்படுகின்றன.[2] *அவற்றை அடுத்து அதே முறைவைப்பில்*

---

1. *தண்டி., பக்.*48
2. *''நிரல் நிறுத்தமைத்தல் நிரல் நிறை சுண்ணம்
வரைநிலை வைத்த மூன்றலங் கடையே." தொல்.சூ-*312

பொருள்களும் அடுக்கிக் கூறப்படுகின்றன. இதனை நிரல் நிறை உவமம் எனத் தொல்காப்பியம் கூறும்.

'பொன்னும் மணியும் போலும் யாழநின்
நன்னர் மேனியும் நாறிருங் கதுப்பும்' —*நற்*-166/1-2

23. நியம உவமை

இன்னதற்கு இன்னதே உவமையாம் எனத் தேற்றேகாரம் புணர்த்துத் துணிந்து சொல்வது.[1]

'தாதொன்று தாமரையே நின்முகம் ஒப்பது; மற்று
யாதொன்றும் ஒவ்வாது இளங்கொடியே.'

24. அநியம உவமை

அநியம உவமை என்பது நியமித்த உவமையை விலக்கி மற்றையவும் இத்தன்மைய என்று கூறுவது.[2]

'மதுவார் கவிரேநின் வாய்போல்வ தன்றி
அது போல்வது உண்டெனினும் ஆம்.'

25. பல்பொருள் உவமை

ஒரு பொருளுக்கு ஓர் உவமையைக் கூறுவது பொது மரபாகும். ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களையும் உவமையாகக் கூறும் பொழுது, அவை அக் கவிஞனின் வியப்புணர்ச்சியையும் உவமைகளை மிகுதிப்படுத்திக்காட்டும் திறனையும் காட்டுகின்றன. இதனைப் பல்பொருள் உவமை அணி என்பர்.[3]

''முகை முல்லை வென்றுஎழில் முத்து ஏய்க்கும்
வெண்பல்—*பத்*. 8/76

---

1. *தண்டி —பக்*.45
2. *தண்டி —பக்*.46
3. *சங்க இலக்கியத்தில் உவமைகள் —பக்*,39

26. பலவயிற் போலி உவமை

ஒரு தொடர்மொழிக்கண் பல உவமை வந்தால் வந்த உவமைதோறும் உவமச் சொல் தோன்றப் புணர்ப்பது.[1]

'மலர் வாவி போல்வரால் மாதர் கமல
மலர் போலும் மாதர் வதனம்—மலர்சூழ்
அளிக்குலங்கள் போலும் அளகம் அதனுள்
களிக்கும் கயல் போலும் கண்'

இதற்கு மாறுபட்டது ஒருவயிற்போலி உவமையாகும். ஒரே உவமச்சொல் அமையவருவது என்பதாம்.

27. புகழ் உவமை

உவமையைப் புகழ்ந்து கூறுவது.

'இறையோன் சடை முடிமேல் எந்நாளும் தங்கும்
பிறையேர் திருநுதலும் பெற்றது'

பிறை சிவபெருமான் முடிமேல் உள்ளது. அது நுதலுக்கு உவமை யாயிற்று.

28. பொது நீங்கு உவமை

பொருளேயே உவமையாக உரைப்பது.

'தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது' —*குறள்*

29. பொருள் உவமை (*விபரீத உவமை*)

இதனைத் தண்டியாசிரியர் விபரீத உவமை அணி என்பர். உவமையையும் பொருளையும் இடம் மாற்றுவதால் ஒரு புதுமையை உண்டாக்க முடிகிறது.[2]

'பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின் அஃது உவமமாகும்' —*தொல்.சூ-284*

என்பர் தொல்காப்பியனார்.

---

1. *தண்டி —பக்.* 50
2. *சங்க இலக்கியத்தில் உவமைகள்* —*பக்.*46

கண்போல் நெய்தல் —ஐங். 11/3
கைபோல் காந்தள் —நற். 335/5

30. மறுபொருள் உவமை

முன்னர் வைத்த பொருட்கு நிகராவது ஒரு பொருள் பின்னர் வைப்பது.

'அன்னைபோல் எவ்வுயிரும் தாங்கும் அனபாயா!
நின்னையார் ஒப்பார் நிலவேந்தர்—அன்னதே
வாரிபுடை சூழ்ந்த வையகத்திற்கு இல்லையால்
சூரியனே போலும் சுடர்.'

31. மாலை உவமை

இது முற்கூறப்பட்ட அந்தாதி உவமைகளோடு நெருங்கிய தொடர்பு உள்ளது. வந்த கருத்துகளும் சொற்களும் மீண்டும் மீண்டும் வருதல் இவ்விரண்டு அணிகளுக்கும் உள்ள ஒற்றுமை நயமாகும். மாலையணியைப் பொருத்த வரையில், இதற்கு மற்றோர் தனிச்சிறப்பு உள்ளது. ஈண்டு கருத்தும் சொற்களும் தொடர்தல் என்பது உவமப்பகுதிகளோடு மட்டும் பொருந்துவதாகும். அவை ஒரு மாலை போல் இணைக்கப்படுகின்றது.

'தீங்கதிர் மதியேய்க்கும் திருமுகம்; அம்முகம்
பாம்புசேர் மதிபோலப் பசப்பூர்ந்து தொலைந்தக்கால்'
—கலி. 15/16-17

மதிபோன்றது முகம் எனவும் அரவுசேர் மதிபோல, அம் முகம் பசப்பு நிறம் பெற்றது எனவும் உவமைகளை அந்தாதித் தொடையாக அமைய மாலையணி அமைந்துள்ளது.[1]

32. முரண் உவமை அல்லது விரோத அணி

முரண்பாடு கொண்ட பொருள்களும் செய்திகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு உவமைகள் ஆக்கப்படுகின்றன.

---

1. சங்க இலக்கியத்தில் உவமைகள் —பக். 15

இவ்வாறு அமைப்பதால் முரண் அழகு தோன்றுகிறது. இதனை யாப்புநூலார் முரண்தொடை[1] என்று கூறுவர். உவமைகளுள்ளும் இவ்வழகு தோற்றுவித்தால் இதனை முரண் உவமை என்பர்.[2]

'அன்னை போல இனிய கூறியும்
கள்வர் போலக் கொடியன் மாதோ' —நற். 28/3-4

தண்டியலங்காரம் இதனை விரோத உவமை அணி எனக் குறிப்பிடும்—பக். 55.

33. முற்று உவமை

ஒரு பொருளை முழுவதும் வருணித்து அவற்றிற்குத் தக்க உவமைகள் தருதல் முற்று உவமை எனப்படும்.

இதனைப் பாதாதிகேச வருணனையாகவும் கேசாதி பாத வருணனையாகவும் அமைப்பர்.

'சேவடி செறி குறங்கின்
பாசிழை பகட்டு அல்குல்
தூசுடைத் துகிர்மேனி
மயிலியல் மானேக்கின்
கிளிமழலை மென் சாயலோர்' —பத். 9/146-48

34. மோக உவமை

ஒரு பொருள்மேல் எழுந்த வேட்கையால் வந்த உள்ள மயக்கம் தோன்ற உரைப்பது.

'கயல்போலும் என்றுநின் கண்பழிப்பல் கண்ணின்
செயல்போல் பிறழும் திறத்தால்—கயல்புகழ்வல்
ஆரத்தால் நேர்மருங்குல் அந்தரள வாண்முறுவல்
ஈரத்தால் உள்வெதும்பும் யான்.'

---

1. சங்க இலக்கியத்தில் உவமைகள்— பக். 52.
2. "சொற்பொருள் முரணத் தொடுப்பது விரோதம்" —மாறன். பக். 181.

முத்தாரத்தால் வருந்தும் இடை; அழகிய முத்தின் ஒளி பெற்ற முறுவலினையும் உடைய வாய்; வருந்தும் யான் இவற்றை இவ்வாறு மயங்கிப் புகழ்வேன் என்பதாம்.

35. வேற்றுமை அணி

பொருளுக்கும் உவமைக்கும் வேறுபாடு காட்டி உவமையினும் பொருளே சிறந்தது எனல் வேற்றுமையணியாகும்.

'ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகைக்
கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்ஙனம் ஒத்தியோ வீங்குசெலல் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந்து ஒளித்தி
அகலிரு விசும்பினானும்
பகல் விளங்குதியால் பல்கதிர் விரித்தே' —புறம். 8/4-10

என்பது வேற்றுமை அணிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

36. விலக்கு உவமை

உவமைகளை முதற்கண் நிறுவி, அதனை ஒவ்வாது என மறுத்துக் கூறலும் உண்டு. இதனை எதிர்மறுப்பு உவமை அணி எனக் கூறலாம்.[1]

தண்டியலங்காரம் இதனை விலக்கு உவமை அணி எனக் கூறும்.

உவமைகளைக் கூறி மறுத்து விலக்கியது.

'நில்என நிறுத்தான் நிறுத்தே வந்து
நுதலும் முகனும் தோளும் கண்ணும்
இயலும் சொல்லும் நோக்குபு நினைஇ
ஐதேய்ந் தன்று பிறையும் அன்று
மைதீர்ந் தன்று மதியும் அன்று

1. ச. இ. உ—பக் 27.

வேயமர்ந் தன்று மலையும் அன்று
பூவமர்ந் தன்று சுனையும் அன்று
மெல்ல இயலும் மயிலும் அன்று
சொல்லத் தளரும் கிளியும் அன்று' —*கலி*. 55./6-14.

உவமைகளைக் கூறி மறுத்து விலக்கியது.

உவமைக்கும் பொருளுக்கும் உள்ள தொர்புட்

பொருளுக்கும் உவமைக்கும் அடைகள் குறைந்தும் மிக்கும் வருதலும், பொருள் உவமைகளுள் உயர்வு தாழ்வு அமைதலும், பால் ஒற்றுமை இன்மையும் ஆகிய வேறுபாடு களும் அமைதல் உண்டு என்பர்.

'மிகுதலும் குறைதலும் தாழ்தலும் உயர்தலும்
பான்மாறு படுதலும் பாகுபாடு உடைய' —*தண்டி. பக்*. 58.

இதனைத் தொல்காப்பியம் கீழ்வரும் சூத்திரத்தால் உள்ளடக்கிக் கூறும்.

'வேறுபட வந்த உவமத் தோற்றம்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்'—*தொல். சூ*307.

உவமை வழு

உவமையையும் பொருளையும் அமைக்குங்கால் உவமைக்கு மற்றோர் உவமையை அடுக்கிக் கூறுதல் வழுவாகும்.

'அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே' —*தொல்சூ*. 315.

'மதியத் தன்ன வாள்முகம் போலும்
பொதியவிழ் தாமரைப் புதுப்பூம் பொய்கை'

எனவரின் இது வழுவாம் என்க.

தொல்காப்பியமும் தண்டியும்

தொல்காப்பியர் உவமைகள் வினை பயன் மெய் உரு இந் நான்குபற்றிப் பிறக்கும் என்பர். தண்டி வினை பயன்

பண்பு இம் மூன்றுபற்றி உவமம் பிறக்கும் எனக் கூறும். மெய் உரு என்பவற்றைப் பண்பில் அடக்குகிறது தண்டி.

உவமை வகை எனத் தெரித்துக் கூறுவிட்டாலும், தொல்காப்பியம் கீழ்க்காணும் உவமை வகைகளைப் பெற வைக்கிறது.

இரட்டைக் கிளவி தொல்காப்பியத்துக் கூறப்படும் சிறப்பு வகையாகும். வேறுபட வந்த உவமத் தோற்றம் என்பதில் எல்லா உவம வகைகளையும் குறிப்பிடுகின்றது. ஒக்கும் எனக் கூறுது ஒவ்வாது எனக் கூறலும் உவமையாகும் என்பது அது தரும் சிறப்புச் செய்தியாகும். இதனைத் தண்டி விலக்கு உவமை அணியின்பாற் படுத்தும். தடுமாறு உவமம் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுவதைத் தண்டி இதர இதர உவமை அணி எனக் குறிப்பிடுகிறது. நிரல் நிறை உவமையைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. சுண்ணம், அடிமறி மொழி மாற்று இப் பொருள்கோள் முறைகள் உவமைகளுக்குப் பொருந்தா. நிரல் நிறை ஒன்றே உவமப் பொருள் கோளுக்கு உதவுவதாகும்.

> ''நிரல் நிறுத் தமைத்தல் நிரல்நிறை சுண்ணம்
> வரைநிலை வைத்த மூன்றலங் கடையே' —தொல். சூ 312

'பொருளே உவமம் செய்தனர் மொழியினும்' என்பதைத் தண்டி விபரீத உவமையணி எனக் குறிப்பிடும்.

தண்டியலங்காரம் கீழ்க்காணும் உவமை வகைகளைக் குறிப்பிடுகிறது.

1. அதிசயம், 2. அபூதம், 3. அற்புதம், 4. இதர இதரம், 5 இயம்புதல் வேட்கை, 6. இன்சொல், 7. உண்மை 8. ஏது உவமை, 9. ஐயம், 10. ஒப்புமைக் கூட்டம், 11. ஒருவயிற்போலி, 12. கூடா உவமை, 13. சிலேடையுவமை, 14. சமுச்சயம், 15. தற்குறிப்பேற்றம், 16. தெரிதரு தேற்றம், 17. நிந்தை, 18. நியமம், 19. அநியமம், 20. பலவயிற்போலி, 21. புகழ்தல், 22. பொதுநீங்கு உவமை, 23. மறுபொருள்,

24. *மாலை,* **25.** *மோகம்,* **26.** *விபரீதம்,* **27.** *விரோதம்,* **28.** *விலக்கு.*[1]

உவம உருபுகள்

தொல்காப்பியர் குறிப்பிடுவன : (1) **அன்ன** (2) **ஆங்க** (3) *இறப்ப* (4) **உறழ** (5) **என்ன** (6) **எள்ள** (7) *ஏய்ப்ப* (8) *ஒன்ற* (9) *ஒடுங்க* (10) **ஒப்ப** (11) *ஒட்ட* (12) *ஓட* (13) **கடுப்ப** (14) *கள்ள* (15) *காய்ப்ப* (16) *தகைய* (17) *நடுங்க* (18) *நந்த* (19) *நளிய* (20) *நாட* (21) **நிகர்ப்ப** (22) **நேர** (23) *நோக்க* (24) *புல்ல* (25) **புரைய** (26) *பொருவ* (27) *பொற்ப* (28) **போல** (29) *மதிப்ப* (30) *மருள* (13) *மறுப்ப* (32) **மான** (33) *மாற்ற* (34) *வியப்ப* (35) *வினைய* (36) *வீழ* (37) *வெல்ல* (38) *வென்ற.*[2]

தொல்காப்பியர் இவற்றுள் ஒருசிலவற்றை வினை பயன் மெய் உரு என நான்கற்குச் சிறப்பு உருபுகளாகப் பிரித்துக் காட்டுவர். இது அக்கால மரபு எனத் தெரிகிறது. சங்க காலத்திலேயே இம்மரபு மாறிவிட்டது.[3]

நிகர, ஏர, ஏய, மலைய, இயைய, ஏற்ப, அனைய, அமர, இகல, விழைய, எதிர, துணை, தூக்கு, ஆண்டு, ஆங்கு,

---

"*அதுவே,*

1. *விரியே, தொகையே, இதர இதரம்,*
உரைபெறு சமுச்சயம், உண்மை, மறுபொருள்,
புகழ்தல், நிந்தை, நியமம், அநியமம்
ஐயம், தெரிதரு தேற்றம், இன்சொல்,
எய்திய விபரீதம், இயம்புதல் வேட்கை,
பலபொருள், விகாரம், மோகம், அபூதம்
பலவயிற் போலி, ஒருவயிற் போலி,
கூடா உவமை, பொதுநீங்கு உவமை,
மாலை என்னும் பால தாகும்." —*தண்டி. சூ.* 32

2. *தொல்*—*சூ.* 286-291.
3. *ச.இ.உ.*—*பக்*-76.

மிகு, தகை, வீழ, இணை, சிவண், கேழ், அற்று, செத்து பிறவும் உவமைச்சொல் எனப் புதிதாகக் கூறுவர் தண்டியாசிரியர். தொல்காப்பியர் குறிப்பிடுபவற்றுள் அன்ன, ஆங்க, உறழ, என்ன, எள்ள, ஒப்ப, கடுப்ப, நிகர்ப்ப, நேர புரைய, பொருவ, போல, மான இவைமட்டும் தண்டி குறிப்பிடும்.[1]

தொல்காப்பியர் செய என்னும் வாய்பாட்டில் வைத்து வாய்பாடுகளைக் குறிப்பிடுவர். தண்டி எல்லாவகை வாய்பாடுகளிலும் குறிப்பிடுவர்.

2. உருவக அணி

தொல்காப்பியர் உருவகத்தைப்பற்றிக் குறிப்பிடவில்லை. எனினும் 'பொருளே உவமம் செய்தனர் மொழியினும் மருளறு சிறப்பின் அஃது உவமாகும்' (தொல்.சூ. 84.) என்னும் சூத்திரத்தைக் கொண்டு, தொல்காப்பியர் உருவகத்தையும் கூறியுள்ளார் என்ற கருத்தும் கொள்ளப்படுகிறது. இவ்வாறு கொள்ளுதல் பொருந்தாது என்பது பேராசிரியர் கருத்தாகும்.

'இவை உவமைத் தொகையாகையால், 'முலைக் கோங்கம்' 'முகத் தாமரை' எனப்படும். இவற்றை வேறு உருவக மென்றும் பிறர் மயங்குப' என்பர் பேராசிரியர். (பக். 69)

'வருமுலை யன்ன வண்முகை உடைந்து
திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை' — சிறுபாண். 72-73

என்பதே இச் சூத்திரத்திற்குத் தரப்படும் எடுத்துக்காட்டாகும். தொல்காப்பியர் காலத்தில் உருவகம் கால் கொள்ளவில்லை எனத் தெரிகிறது. சங்க இலக்கியத்திலும் உருவகங்கள் அருகியே வருகின்றன.[2]

---

1. தண்டி. —சூ. 35.
2. ச. இ. உ—பக். 80

உவமை என்பது உவமையும் பொருளுமாகத் தனித்து இயங்குகிறது. உருவகம் என்பது பொருள் உவமையோடு ஒன்றிவிடுவது என்று கூறலாம். உவமையும் பொருளும் வேறுபாடு ஒழிவித்து ஒன்று என அமைந்தால் அஃது உருவகம் ஆகும் என்பது தண்டியாசிரியர் உணர்த்தும் கருத்தாகும். —தண்டி. சூ. 36.

இவற்றைத் தண்டி கீழ்வருமாறு வகைப்படுத்திக் காட்டுவர்.

தொகை உருவகம்

'ஆகிய' என்னும் மாட்டேற்றுச்சொல் தொகுத்துக் கூறுவது. அங்கைமலர்; அடித்தளிர்; கண்வண்டு; கொங்கை முகிழ்; குழற்கால்; மாதர்க்கொடி என்பன தொகை உருவகங்களாம்.

விரி உருவகம்

அச்சொல் விரிந்து நிற்பது.

'கொங்கை முகையாக,' 'மருங்குல் கொம்பாக,' 'அங்கை மலராக,' 'அடி தளிராக' என வருவன.

தொகைவிரி உருவகம்

உருவக உருபு தொக்கும் விரிந்தும் வருதல்.

'வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய **கதிரோன் விளக்காகச்**
செய்ய சுடராழி யான் அடிக்குச் சூட்டினேன் **சொன்மாலை**
இடராழி நீங்குகவே என்று.'

இயைபு உருவகம்

பல பொருளை உருவகம் செய்யுங்கால் தம்முள் இயைபு உடையவாக வைத்து உருவகம் செய்வது.

'செவ்வாய்த் தளிரும் நகைமுகிழும் கண்மலரும்'

இயைபில் உருவகம்

பல பொருளும் தம்முள் இயையாமை வைத்து உருவகம் செய்வது.

'கொன்றை பொன்னாகச் செஞ்சடையே
பவளக் கொடியாக' —*என வரும்.*

ஒரு சில அடிகளை உருவகம் செய்தும் ஒருசிலவற்றை உருவகம் செய்யாமலும் அங்கியை உருவகிப்பது.

'செவ்வாய் நகை அரும்பச் செங்கைத் தளிர்விளங்க
மைவாள் நெடுங்கண் மதர்த்துலவச்--செவ்வி
நறவலரும் சோலைவாய் நின்றதே நண்பா
குறவர் மடமகளாங் கொம்பு'

நகையும் கையும் அரும்பாகவும் தளிராகவும் உருவகிக்கப்பட்டுள்ளன, கண்கள் உருவகிக்கப்படவில்லை. குறவர் மடமகள் கொம்பு என உருவகிக்கப்பட்டுள்ளாள்.

சிறப்பு உருவகம்

ஒரு பொருளை எடுத்து அதற்குச் சிறந்த அடைகளை உருவகம் செய்து அவற்றுளே உருவகமாக்கி உரைப்பது.

'உலகம் நாவாயாகும்; நான்முகன் மீகான்:
கங்கை பாய்; திருமால் கூம்பு ஆகும்'—

இது சிறப்பு உருவகம்.

விருபக உருவகம்

ஒரு பொருட்குக் கூடாத தன்மை பலவுங் கூட்டி உருவகம் செய்வது.

'அரிவை வதனும் புயம் தண்மதிக்குத் தோலாது; தடத்து வைகாது; தாள்மேல் முகிழாது; இருபொருளும் செவ்வி இயல்பாய் மலரும்.'

சமாதான உருவகம்

பொருளை உருவகம் செய்து அதன் தீங்கிற்கு வேறோர் காரணத்தைக் கூறுதல்.

'கைக் காந்தள் வாய் குமுதம் கண்ணெய்தல் காரிகையீர் இவ் வனைத்தும் சேர்ந்து ஆவி வருத்துவது மாதவம் ஒன்று இன்மையே யன்றோ எமக்கு.'

உருவக உருவகம்

உருவகம் செய்யப்பட்ட ஒன்று மற்றொன்றாக மீண்டும் உருவகிக்கப்படுதல்.

'கன்னிதன் கொங்கைக் குவடாம் கடாக்களிற்றை'—

கொங்கையைக் குவடாக உருவகம் செய்து அதனையே மீண்டும் களிறாக உருவகம் செய்யப்பட்டது.

ஏகாங்க உருவகம்

ஒரு பொருளினது ஓர் அங்கத்தை மட்டும் உருவகித்தல்.

'இன்மொழித் தேன் மாதர்'

அநேகாங்க உருவகம்

'கைத் தளிர், கொங்கை முகிழ், கண் என்னும் சேல் இவை தாங்கிய மகள்.'

முற்றுருவகம்

அவய அவயவிகளை யேற்ற இடத்தோடும் பிறவற்றோடும் முற்ற உருவகம் செய்து உரைப்பது.

அவயவ உருவகம்

அவயவத்தை உருவகம் செய்து அவயவியை வாளாவே கூறுவது.

அவயவி யுருவகம்

அவயவியை உருவகம் செய்து அவயவங்களை வாளாவே கூறுவது.

உவமை உருவகம்

'மாதர் வதன மதியம் உதய மதியமே ஒக்கும்'

ஏது உருவகம்

காரணத்தோடு கூடிவரும் உருவகம்.

'மாற்றத்தாற் கிள்ளை நடையால் மடவன்னம்'

வேற்றுமை உருவகம்

'கைக்காரும் வானிற் பொழிகாரும் வையகம் புரக்கும்; காருக்குப் பருவம் உண்டு; கைக்குப் பருவம் இல்லை' எனக் கூறுவது.

உருவகப்படுத்திய பிறகு இரண்டுக்கும் வேறுபாடு காட்டுவது வேற்றுமை உருவகமாகும்.

விலக்கு உருவகம்

'வதன மதிக்கு மதித்தன்மை இல்லை; பகற்பொழுதும் தன்னிடத்திலே ஒளியை மிகுத்து நம்மை வருத்தி அறிவை யழிக்கும் இயல்புடைத்தாகும்.' மதியாக உருவகப்படுத்தி விலக்கப்பட்டது.

சிலேடை உருவகம்

'கண்ணெகிழ்ந்து வாவி கடவாது மாதர் வதனம்புயம்'

- கள்நெகிழ்ந்து நீர் நிலை கடவாதுதாமரை; கண் பார்வை ஆசையை ஊட்டி உள்ளம் கடவாது இவளுடைய வதனம் என ஒரே தொடர் இருவகைப் பொருளைத் தரத்தக்க வகையில் உருவகம் அமைந்துள்ளது.

புறநடை

உருவகமும் உவமையும் என்னும் இவ்விரண்டு அணிகளும் அளவில் மிக்கன. அவற்றைக் கூறிய நெறிக்கொண்டு வேறுபாடு அறிந்து கொள்வது அறிவுடையோர் கடனாகும்.[1]

---

1. தண்டி—சூ. 39

3. தன்மை அணி - ந. க. ம.

உவமைகள் யாதும் இன்றி, உள்ளதை உள்ளவாறு இயல்புபட வருணிப்பது தன்மை நவிற்சி அணியாகும். இதில் உயர்வு நவிற்சி கலக்காது என்பதாம். 'எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும் சொன்முறை தொடுப்பது தன்மையாகும்' (சூ.—29.) என்பர் தண்டி ஆசிரியர். அது பொருள்தன்மை, குணத்தன்மை, சாதித்தன்மை, தொழில் தன்மை என நான்கு வகைப்படும். (—சூ. 30)

பொருள் தன்மை

'நீல மணிமிடற்றன் நீண்ட சடை முடியன்' என வருவதாம்.

குணத் தன்மை

'உள்ளங் குளிர உரோமஞ் சிலிர்த்து உரையும் தள்ள விழிநீர் அரும்பத் தன் மறந்தாள்'—இங்கே மறந்தாள் என்பது குணங் கருதின வாசகம்.

சாதித் தன்மை

'பத்தித்து அக்ட்ட கறைமிடற்ற பைவிரியும்
துத்திக் கவைநாத் துளை எயிற்ற பணி'

(பணி—பாம்பு) - இது பாம்புச் சாதியின் தன்மையைக் கூறியதாம் என்க.

தொழில் தன்மை

'சூழ்ந்து முரன்று அணவி வாசந் துதைந்தாடித்
தாழ்ந்து மது நுகர்ந்து தாதருந்தும்
வாசத்தார் நீங்காத வண்டு'

என்பது தொழில் தன்மை யணியாகும்.

4. தீவக அணி - சூ 2

ஓரிடத்து வைக்கப்பட்ட விளக்கானது பலவிடங்களிற் சென்று பொருள்களை விளக்குதல் போல, இதுவும் ஓரிடத்து நின்று பலவிடங்களிலும் சென்று பொருள் விளக்குதலின் தீவகம் எனப்பட்டது. (தீபகம் - விளக்கு). இதுவும் முதல் நிலை, இடைநிலை, ஈற்று நிலை என்னும் மூவிடங்களில் நின்று ஏனையவற்றோடும் பொருந்திப் பொருளை விளக்கும். குணம், தொழில், சாதி, பொருள் எனத் தன்மை யணியைப் போலவே இதுவும் நான்கு வகைப்படும்.[1] இது பிற அலங் காரங்களோடும் கூடிவரும்.

5. பின்வரு நிலையணி

ஒரு செய்யுளுள் முன்னர் வந்த சொல்லாவது பொரு ளாவது பின்னர்ப் பலவிடத்தும் வருமாயின் அது பின்வரு நிலை என்னும் அணியாகும்.[2]

"வைகலும் வைகல் வரக்கண்டும் அஃது உணரார்
வைகலும் வைகலை வைகும் என் றின்புறுவர்."

6. முன்ன விலக்கணி

ஒரு பொருளைக் குறிப்பினால் விலக்கின் அது முன்ன விலக்கு என்னும் அணியாகும். அஃது இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்னும் மூவகைப்பட்ட காலங்களோடு கூடி வரும்.

---

1. "குணம் தொழில் சாதிபொருள் குறித் தொருசொல்
ஒருவயி னின்றும் பலவயிற் பொருள்தரின்
தீவகம்; செய்யுள் மூவிடத் தியலும்" —சூ. 40.
"அதுவே,
மாலை விருத்தம் ஒருபொருள் சிலேடை யென
நால்வகை யானும் நடைபெறும் என்ப" —சூ. 41.
2. "முன்வரும் சொல்லும் பொருளும் பலவயிற்
பின்வரும் என்னிற் பின்வரு நிலையே" —சூ. 42.

அது பொருள், குணம், காரணம், காரியம் என நான்கு வகையாக அமையும்.[1]

வன்சொல், வாழ்த்து, தலைமை, இகழ்ச்சி, துணைசெயல், முயற்சி, பரவசம், உபாயம், கையறல், உடன்படல், வெகுளி, இரங்கல், ஐயம் என்ற பதின்மூன்று பாகுபாட்டையும் இவை பெறும் என்பர்.[2]

7. வேற்றுப்பொருள் வைப்பணி

முன் ஒரு பொருள் திறம் தொடங்கிப் பின்னர் அது முடித்தற்கு வலியுடைய பிறிதொரு பொருளை உலகறி தன்மையால் வைத்து மொழிவது வேற்றுப் பொருள் வைப்பணியாம்

''புறந்தந் திருளிரியப் பொன்னேமி உய்த்துச்
சிறந்த ஒளிவளர்க்கும் தேரோன்— மறைந்தான்
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்'' —என வரும்.

அது முழுவதும் சேறல், ஒருவழிச் சேறல், முரணித் தோன்றல், சிலேடையின் முடித்தல், கூடா இயற்கை, கூடும் இயற்கை, இருமை இயற்கை, விபரீதப்படுத்தல் என்று

---

1. 'முன்னத்தின் மறுப்பினது முன்ன விலக்கே
மூவகைக் காலமும் மேவிய தாகும்' —சூ. 43

'அதுவே,
பொருள் குணம் காரணம் காரியம் புணரும்' —சூ. 44

2. 'வன்சொல் வாழ்த்துத் தலைமை இகழ்ச்சி துணைசெயல்
முயற்சி பரவசம் உபாயம் கையறல் உடன்படல்
வெகுளி இரங்கல் ஐயம் என்றாங்கு அறிந்தனர்
கொளலே' —சூ. 45

எட்டு வகையாக வரும் என்பர் தண்டி (48). இதுவும் குணம் பொருள் சாதி தொழிலொடும் புணரும்.[1]

8. வேற்றுமை யணி

வெளிப்படையாகவோ குறிப்பாகவோ ஒப்புடைய இரு பொருளை ஒப்புமைப்படவைத்து அவை தம்முள் வேற்றுமைகளை எடுத்துக் கூறுவது வேற்றுமை யணியாகும்.[2]

'மலிதேரான் கச்சியும் மாகடலும் தம்முள்
ஒலியும் பெருமையும் ஒக்கும்—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா; கச்சி
கடல் படுவ எல்லாம் படும்.'

காஞ்சியில் கிடைப்பன எவ்லாம் கடலில் அகப்படா; கடலில் விளைவன காஞ்சியில் கிடைக்கும் என்பது வேற்றுமை அணியாகும்.

9. விபாவனை அணி

உலகு அறியும் காரணத்தை ஒழித்துப் பிறிதொரு காரணத்தை இயல்பட உரைப்பது விபாவனை அணியாகும்.

---

1 "முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப்
பின்னொரு பொருளை உலகறி பெற்றி
ஏற்றி வைத் துரைப்பது வேற்றுப் பொருள்
வைப்பே" —சூ. 47

"முழுவதுஞ் சேறல் ஒருவழிச் சேறல்
முரணித் தோன்றல் சிலேடையின் முடித்தல்
கூடா வியற்கை கூடும் இயற்கை
இருவகை இயற்கை விபரீதப் படுத்தல் என்று
இன்னவை எட்டும் அதனது இயல்பே." —சூ.48

2. கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை யதுவே" சூ. 49
"அதுவே.
குணம் பொருள் சாதி தொழிலொடு புணரும்" —சூ.50

இதுவும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் உரைக்கப் படும்.[1]

'தீயின்றி வேம் தமியோர் சிந்தை. செழுந்தேறல்
வாயின்று மஞ்ஞை மகிழ் தூங்கும்'

10. ஒட்டணி (பிறிது மொழிதல்)

தன்னால் கருதப்படும் பொருளை வெளிப்படக் கூறாமல் அதனை வெளிப்படுத்துவதற்குத் தக்க பிறிதொரு செய்தியைச் சொல்லின் அஃது ஒட்டென்னும் அணியாகும்[2]

இத்தனை உவமைப்போலி என்றும் பிறிது மொழிதல் என்றும் கூறுவர்.

இதனை அடையும், பொருளும், அயல்பட மொழிதலும், அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதலும், அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிதலும், அடையை மிகைப்படுத்திப் பொருள் வேறுபடமொழிதலும் என நான்கு வகைப்படுத்துவர்.[3]

'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்தப் பெயின்'

இஃது ஒட்டணிக்கு எடுத்துக்காட்டாகும்.

11. அதிசய வணி

கவி தான் கருதிய பொருளினது வனப்பை உவந்து சொல்லுங்கால் உலக நடை இறவாமல், ஆன்றோர் வியப்பு

---

1. ''உலகறி காரணம் ஒழித்து ஒன்று உரைப்புழி
வேறொரு காரணம் இயல்பு குறிப்பின்
வெளிப்பட உரைப்பது விபாவனை யாகும்'' —சூ.51

2. 'கருதியபொருள் தொகுத்து அதுபுலப்படுத்தற்குஒத்தது
ஒன்று வுரைப்பின் அஃது ஒட்டெனமொழிப' —சூ.52

3. 'அதுவே,
அடையும் பொருளும் அயல்பட மொழிதலும்
அடை பொது வாக்கி யாங்ஙன மொழிதலும்
விரவத் தொடுத்தலும் விபரீதப்படுத்தலும்
எனநால் வகையினும் இயலும் என்ப' —சூ.53

அடையும்படி சொல்லுவது அதிசய அணியாகும். அது பொருள், குணம், தொழில், ஐயம், துணிவு, திரிபு என ஆறுவகையால் தெளிவுறத் தோன்றும் என்பர்.[1]

'உள்ளம் புகுந்தே உலாவும் ஒருகால் என்
உள்ளம் முழுவதும் உடன்பருகும்—ஒள்ளிழைநின்
கள்ளம் பெருகும் விழிபெரியவோ கவல்வேன்
உள்ளம் பெரிதோ உரை'

—ஐய அதிசயம்

12. தற்குறிப்பேற்ற வணி

அசையும் பொருளும் அசையாப் பொருளும் என்னும் இருபொருட் கண்ணும் இயல்பாக நிகழும் தன்மை யொழியக் கவி தான் கருதிய வேறு ஒன்றினை அவற்றின் கண் ஏற்றிச் சொல்வது தற்குறிப் பேற்ற அணியாகும். அவற்றில் அன்ன போல என்னும் உவமைச் சொற்கள் சில இசைந்து வருதலும் உண்டு.[2]

''இன்துணைப் பிரிந்தோர் நாடித்
தருவது போலும் இப் பெருமழைக் குரலே'

—நற் 208/10-2

---

1. ''மனப்படும் ஒருபொருள் வனப்புவந் துரைப்புழி
உலகுவரம் பிறவா நிலைமைத் தாகி
ஆன்றோர் வியப்பத் தோன்றுவது அதிசயம்" —சூ.54
''அதுதான்,
பொருள் குணம் தொழிலையம் துணிவு திரிபு எனத்
தெருளுறத் தோன்று நிலைமையது என்ப.'' —சூ.55

2. ''பெயர் பொருள் அல் பொருள் என இருபொருளினும்,
இயல்பின் விளைதிறன் அன்றி அயல் ஒன்று
தான்குறித் தேற்றுதல் தற்குறிப்பேற்றம்'' —சூ.56
''அன்ன போலெனும் அவைமுத லாகிய
சொன்னிலை விளங்கும் தோற்றமும்
உடைத்தே''—சூ.57

13. ஏதுவணி

யாதானும் ஒரு பொருளிடத்து இதனால் இது நிகழ்ந்தது என்று காரணம் விதந்து சொல்லுவது ஏது என்னும் அணியாகும். அது காரக ஏது ஞாபக ஏது என்று இரண்டு வகைப் படும்.[1]

காரகம் என்பது வெளிப்படையாக விளங்கும் பொருள்கள். அவை கருத்தா, பொருள், செயல், கருவி, ஏற்பது, நீக்கம் என விளக்கப் படுத்துவர். இவையல்லாமல், உய்த்துரைக்கத் தோன்றுவது ஞாபக ஏது வாகும். அபாவம் ஆகிய ஒன்றனது இன்மையும் அதன்பாற் படும். தூர காரியமும். ஒருங்குடன் தோற்றமும், காரணம் முந்துறும் காரிய நிலையும், யுக்தமும், அயுக்தமும் அவ் ஏது அலங்காரத்தோடு நடக்கும்.

14. நுட்பவணி

தெளிவாக வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பாகவாவது செய்கையாலாவது வெளிப்படுத்த அதனை நுட்பமாக உணர்த்தல் நுட்பவணி என்பர்.[2]

---

1. 'யாதன் திறத்தினும் இதினிது விளைந்தென்று
ஏதுவிதந் துரைப்பது ஏது; அதுதான்
காரகம் ஞாபகம் என இரு திறப்படும்' — சூ.58
'முதல்வனும் பொருளும் கருமமும் கருவியும்
ஏற்பது நீக்கமும் என இவை காரகம்.' —சூ.59
'அவையல பிறவின் அறிவது ஞாபகம்' சூ.61
'அபாவம் தானும் அதன்பாற் படுமே' —சூ.61
என்று மபாவமும் இன்மையத பாவமும்
ஒன்றினொன் றபாவமும் உள்ளதன் அபாவமும்
அழிவுபாட்டபாவமும் எனவைந் தபாவம்" —சூ.62
"தூர காரியமும் ஒருங்குடன் தோற்றமும்
காரணம் முந்துறுஉம் காரிய நிலையும்
யுத்தமும் அயுத்தமும் முத்தையோ டியலும்" —சூ.63
2. "தெரிபுவேறு கிளவாது குறிப்பினும் தொழிலினும்
அரிதுணர் வினைத்திறம் நுட்பமாகும்" —சூ.64

'காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததால்
பேதையர் ஆயம் பிரியாத மாதர்
படரிருள் ,கால்சீக்கும் பகலவனை நோக்கிக்
குடதிசையை நோக்கும் குறிப்பு'

இது குறிப்பு நுட்பம் என்பர்.

'பாடல் பயிலும் பணிமொழி தன் பணைத்தோள்
கூடல் அவாவால் குறிப்பு உணர்த்தும்—ஆடவற்கு
மென்தீக் தொடையாழில் மெல்லவே தைவந்தாள்
இன்தீங் குறிஞ்சி யினை''

—யாழி சைத்துத் தம் கருத்தை உணர்த்தினமையின் இது தொழில் நுட்பம் என்பர்.

15. இலேசவணி

குறிப்பு வெளிப்படுத்தும் மெய்ப்பாட்டினைப் பிறிதொன்றால் புகழ்வதாகச் சொல்லுவது இலேசம் என்னும் அணியாகும்.[1]

புகழ்வதுபோலப் பழித்து உரைத்தலும், பழிப்பது போலப் புகழ்ந்து உரைத்தலும் இவ் இலேச அணியின்பால் படும் என்று உரைப்பாரும் உளர்.

'பாரி பாரி என்று ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே'

என்பது இகழ்வது போலப் புகழ்தல்.

---

1. 'குறிப்புவெளிப் படுக்கும் சத்துவம் பிறிதின்
மறுத்துரை யாடல் இலேச மாகும்' —சூ. 65.

'புகழ்வது,போலப் பழித்திறம் புனைதலும்
பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலும்
அலையும் அன்னதென் றறைகுநர் உளரே' —சூ. 66.

"இவ்வே பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து
கடியுடை வியனக ரவ்வே அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயிற் பதங் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல்எங் கோமான் வைந்நுதி வேலே"

என்னும் அவ்வையார் பாடல் புகழ்வது போலப் பழித்தல் ஆகும். இவற்றை வஞ்சப் புகழ்ச்சி அணி என்றும் கூறுவர்.

16. நிரல்நிறையணி

சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது நிரல் நிறை என்னும் அணியாகும்.[1]

17. ஆர்வமொழியணி

உள் நிகழ்ந்த ஆர்வம் பற்றி மொழி மிகத் தோன்றச் சொல்வது ஆர்வமொழி என்னும் அணியாகும்.[2]

18. சுவையணி

எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவை என்பர். அவை வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை என்பர்.[3]

---

1. "நிரல்நிறுத்தி இயற்றுதல் நிரல்நிறை அணியே"—சூ. 67.
"ஆர்வ மொழி மிகுப்பது ஆர்வ மொழியே" —சூ. 68.
2. "உள்நிகழ் தன்மை புறத்துத் தோன்ற
எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவையே"
—சூ. 69.

"அவைதாம்,
3. "வீரம், அச்சம், இழிப்பொடு வியப்பே
காமம், அவலம், உருத்திரம், நகையே" —சூ 70.

19. பரியாய அணி

கருதியது கிளவாமல் அப்பொருள் தோன்றப் பிறிது ஒன்று உரைப்பது பரியாயம் என்னும் அணியாகும். பரியாயம்-சாமர்த்தியமாக அறிவிக்கும் சொல். இதனைப் பரிபாஷை என்று இக்காலத்தார் வழங்குவர்.[1]

'நீ மாதவிச் செடியருகில் நில்; நான் செங்காந்தள் பூவுடன் குவளை மலரையும் கொண்டு நின் கூந்தலுக்கு அணிய வருகிறேன்' என்று தலைவன் கூறிப் பிரிகிறான்.

இது தோழி கூற்று. தான் தலைவன் தலைவியர் சந்திப்புக்கு இடையூறாக இருப்பது கூடாது என்பதால் இவ்வாறு கூறி விடைபெறுகிறாள்.

20. சமாகித அணி

சமாகிதம்-துணைபேறு, தன்னால் முயலப்பட்ட தொழிலின் பயன் மற்றொன்றால் முடிந்ததாகக் கூறுவது சமாகித அணியாகும்.[2]

'இராவணன் கைலைமலையை அசைக்க, பார்வதி அஞ்சிப் பரமசிவனைத் தழுவ, ஊடல் தீர்ந்தது' என்பது இவ்வணியாம் என்க.

21. உதாத்தவணி

இதனை வீறுகோளணி என்றும் கூறுவர். பிறிது ஒன்றற்கு இல்லாத தனிச் சிறப்பு உதாத்தம்[3] என்பது. வியக்கத்தக்க செல்வத்து உயர்ச்சியையும் மேம்பட்ட

---

1. "கருதியது கிளவாது அப்பொருள் தோன்றப்
பிறிதொன் றுரப்பது பரியா யம்மே." —சூ. 72.
2. "முந்துதான்முயல்வுறாஉந்தொழிற்பயன் பிறிதொன்று
தந்ததா முடிப்பது சமாகிதம் ஆகும்" ...72.
3. "வியத்தகு செல்வமும் மேம்படும் உள்ளமும்
உயர்ச்சி புனைந்து உரைப்பது உதாத்த மாகும்" —74.

உள்ளத்து உயர்ச்சியையும் மிகுத்துச் சொல்வது உதாத்தம் என்னும் அணியாகும்.

'வறிஞர் வாரி எடுத்துச் செல்லவும் வளங்குன்றாத செல்வம்' என்பதும், 'வில்லொன்றைக் கொண்டே பார்த்திபன் அசுரர் குலத்தை அழித்தான்' என்பதும் இதற்கு எடுத்துக்காட்டுகளாம்.

22. அவநுதியணி

அவநுதி - மறுத்துரைத்தல். சிறப்பும் பொருளும் குணமும் உளவாக அவற்றை மற்றுப் பிறிதொன்றாக உரைப்பது அவநுதி அணியாகும்.[1]

'சோழன்பால் காதல்கொள்ளும் மகளிர்க்குத் தண்ணளி செய்திலன். அதனால் அவன் செங்கோலன் அல்லன்; கொடுங்கோலன்' என்பது.

23. சிலேடை அணி

ஒரு வகையாக நின்ற தொடரின் சொல் பல பொருள்கள் தோன்ற வருவது. அது செம்மொழி பிரிமொழி என இருவகைப்படும்.[2]

'செங்கரங்களால் **இரவு நீங்கும்**'—இரவு - இராப்பொழுது; பிச்சை. அரசனுக்கும் கதிரவனுக்கும் சிலேடை—இது செம்மொழிச் சிலேடை.

'தள்ளாத விடத்தேர் தடந்தா மரையடைய'

தள்ளாத இடத்து ஏர் பெரிய தாமரையைப் பொருந்த—ஒரு பொருள்.

---

1. "சிறப்பினும் பொருளினும் குணத்தினும் உண்மை
மறுத்துப் பிறிதுரைப்பது அவநுதியாகும்" —சூ. 75.

2. "ஒருவகைச் சொற்றொடர் பலபொருட் பற்றித்
தெரிதர வருவது சிலேடை யாகும்" —சூ. 76

"அதுவே,
செம்மொழி பிரிமொழி என இருதிறப்படும்" —சூ. 77.

'அசையாத விடத்தேர் என்னும் மரமுடைத்தாய்ப் பெரிய மலைச் சிகரங்களைத் தாவும் மரைகளை உடைத்தாய்'—மற்றொரு பொருள்.

இது பிரிமொழிச் சிலேடை.

24. விசேட அணி

குணம், தொழில், சாதி, பொருள், உறுப்பு முதலியன குறைபடுதல் காரணமாக ஒரு பொருட்கு மேம்பாடு தோன்ற உரைப்பது விசேட அணியாம்.[1]

'சோழனுடைய புருவம் வளையவில்லை. பகைவர் செங்கோல் வளைந்து அழிந்துவிட்டது. அவன் கண்கள் சிவக்கவில்லை. பகைவர் நாடு தீ எரித்தலால் சிவப்புற்றது.'

25. ஒப்புமைக் கூட்டம்

ஒரு பொருளைச் சொல்லுமிடத்துத் தான் கருதிய குண முதலாயினவற்றின் மிக்க பொருளைக் கூடவைத்துச் சொல்லுவது ஒப்புமைக் கூட்டம் என்னும் அணியாகும். அஃது ஒன்றனைப் புகழ்தற் கண்ணும் பழித்தற் கண்ணும் தோன்றும்.[2]

புகழ் ஒப்புமைக் கூட்டம்

'ஏகாம்பரநாதரும், நந்தாவிளக்கும், வண்மைசால் சான்றவரும், காஞ்சிமாநகரில் இருப்பதால் இவ்வுலகம் நிலைபெற்றிருக்கிறது.'

---

1. "குணந் தொழில் முதலிய குறைபடு தன்மையின்
மேம்பட ஒருபொருள் விளம்புதல் விசேடம்" —சூ. 79.
2. "கருதிய குணத்தின் மிகுபொரு ளுடன்வைத்
தொருபொரு ளுரைப்ப தொப்புமைக் கூட்டம்"
—சூ. 80.
"புகழினும் பழிப்பினும் புலப்படும் அதுவே"—சூ. 81.

இகழ் ஒப்புமைக் கூட்டம்

'பொருள் விரும்பிக் குடியலைக்கும் வேந்தனும், பொய் சொல்லி ஏமாற்றும் வஞ்சகர்களும், இல்லிருந்து எல்லைகடப் பவனும் ஆகிய இம்மூவரும் மழையைப் பெய்யாமல் செய் பவர் ஆவர்.'

26. விரோதவணி

இதனை முரண் அணி எனவும் கூறலாம்.

மாறுபட்ட சொல்லும் பொருளும் அமைந்து முரண் தொடை அமையச் செய்திகளைக் கூறுவது விரோத அணி.[1]

'தீயும் வளியும் விசும்பு பயந்தாங்கு
நோயும் இன்பமும் ஆகின்று மாதோ'

—நற். 294/12.

27. மாறுபடு புகழ்நிலை அணி

கவி, தான் கருதிய பொருளை மறைத்து, அதனைப் பழித் தற்கு வேறொன்றினைப் புகழ்வது மாறுபடு புகழ்நிலை அணியாம்.

'இப் புள்ளிமான் இரத்தல் செய்யாது; யாவரையும் எதிர்பார்த்துப் பின் செல்லாது; நல்ல மர நிழலை நாடும்; தண்ணீரைக் குடித்து உறங்கும்; பிறர் படைக்கும் உணவை எதிர்பார்க்காது; இது உலகத்தில் யாருக்கும் துன்பத்தைத் தருவது இல்லை.'

இதனால் இரவலன் ஒருவன் பிறரை எதிர்பார்த்து வாழ் கிறான் என்று இகழ்ந்து கூறப்படுகிறது.

---

1. "மாறுபடு சொற்பொருள் மாறுபாட் டியற்கை
விளைவுதர உரைப்பது விரோத மாகும்" —சூ. 82
2. "கருதிய பொருள் தொகுத்து ஆங்கது பழித்தற்கு
வேறொன்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை" —சூ. 83

28. புகழாப் புகழ்ச்சி அணி

பழிப்பது போலப் புகழ்தல் புகழாப் புகழ்ச்சியணி யாகும்.[1]

'சோழன் வெற்றி கொண்டு கைப்பற்றியதும், அவன் தோளால் தாங்குவதும், தன் ஆணைச்சக்கரத்தால் காப்பதும் திருமால் தன் ஓரடியில் அடக்கி வைத்ததாகும்.'

இதில் பழிப்பது போலப் புகழ்ச்சி அமைந்துள்ளது.

29. நிதரிசன அணி

ஓரிடத்து நிகழ்ச்சியால் பிறிதொன்றற்கு நன்மையும் தீமையும்நிகழ்வதாகக்கூறி, அதைக்கொண்டு நேரிடையாகக் காணத்தக்க உண்மைச் செய்தியைக் கூறுதலாம்.[2]

'பிறர் செல்வம் கண்டால் பெரியோர் மகிழ்வும்
சிறியோர் பொருத திறமும்—அறிவுறீஇச்
செங்கமலம் மெய்ம்மலர்ந்த தேங்குமுதம் மெய்யயர்வ
பொங்கொளியோன் வந்துஎய்தும் போது'

தாரை மலரின் மலர்ச்சியும் குமுதத்தின் குவிவும் கொண்டு, பெரியோர் மகிழ்வும் சிறியோர் இகழ்வும் காட்டப்படுகின்றன. அதனுல் இது நிதரிசன அணியாகும்.

30. புணர்நிலை அணி

வினையானும் இரண்டு பொருளுக்கு ஒன்றே பொருந்தச் சொல்லுவது புணர்நிலை அணியாகும்.[2]

---

1. "பழிப்பது போலும் பான்மையின் மேன்மை
புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி" —சூ. 84
2. "ஒருவகை நிகழ்வதற்கு ஒத்தபயன் பிறிதிற்குப்
புகழ்மை தீமை என்றிவை புலப்பட
நிகழ்வ தாயின் நிதரிசனம்"
"அதுவே, —சூ. 85
3. 'வினைபண்பு என இவை இருபொருட் கொன்றே
புணர மொழிவது புணர்நிலை யாகும்' —சூ. 86

'நீண்ட முகிலோடு நீர் பொழிந்த காதலனைப் பிரிந்த தலைவியின் கண்கள்.'

'புன்மாலைப் பொழுதோடு பிரிந்த மடவாருடைய உயிரானது நீங்காத துயரம் செய்து தானும் கழியாதே நின்றது'

இவை புணர்நிலை அணியாகும். மற்றொன்றனோடு இயைந்த ஒரே வினையைப் பெற்றே இது வரும்.

31. பரிவருத்தனை அணி

பொருள்கள், ஒன்றற்கு ஒன்று கொடுத்து ஒன்றுகொண்டனவாகச் சொல்வது பரிவருத்தனை என்னும் அணியாகும். பொருள் பரிமாறுதல் பரிவருத்தனை அணியாகும்.[1]

'சிவனின் சடைமீது உண்டாகிய மதியும், கங்கையும் அரவின் மணிகள் தோறும் தத்தம் உருவத்தைக் கொடுத்து ஆயிரமாயிரம் உருவத்தைப் பெற்றன' என்பது பரிவருத்தனை அணியாகும்.

32. வாழ்த்தணி

இன்னார்க்கு இன்னது இயைக என்று தாம் கருதியதனைக் கிளப்பது வாழ்த்து என்னும் அணி என்பர்.[2]

'வாழ்க செந்தமிழ் வாழிய நற்றமிழர்' —இது வாழ்த்தணி

33. சங்கீரண அணி

இதனைக் கலவை அணி என்றும் கூறலாம்.

மேல் கூறப்பட்ட அணிகள் பலவும் தம்முள் பொருந்த உரைப்பது சங்கீரண அணியாகும்.[3]

---

1. "பொருள்பரி மாறுதல் பரிவருத் தனையே" —சூ. 87
2. "இன்னார்க் கின்னது இயைக என்றுதாம் முன்னியது
   கிளத்தல் வாழ்த்தென மொழிப" —சூ. 88
3. "மொழியப்பட்ட அணி பல தம்முள்
   தழுவ உரைப்பது சங்கீ ரணமே" —சூ. 89

‘தண்டுறைநீர் நின்ற தவத்தால் அளிமருவப்
புண்டரிகம் நின்வதனம் போன்றதால்—உண்டோ
பயின்ருர் உளம்பருகும் பான்மொழியாய் பார்மேல்
முயன்ருல் முடியாப் பொருள்!’

இதனுள் ‘தண்டுறைநீர் நின்ற தவம்’ என்பது தற்குறிப் பேற்றம். ‘தவத்தால்’ என்பது காரக வேது; ‘அளிமருவு’ என்பதுசிலேடை.‘புண்டரிகம் நின்வதனம்போலும்’ என்பது உவமை. ‘உண்டோ முயன்ருல் முடியாப் பொருள்’ என்பது வேற்றுப்பொருள் வைப்பு. ‘உளம் பருகும் பான்மொழியாய்’ என்பது சுவை. ஒரே பாட்டில் இப் பல்வகை அணிகளும் பயின்று வந்துள்ளதால் இதனைச் சங்கீரண அணி என்பர்.

5. உள்ளுறையும் இறைச்சியும்

உள்ளுறை இறைச்சிபற்றி ஆராயத் தொல்காப்பியச் சூத்திரங்கள் வழி காட்டுகின்றன. தொல்காப்பியம் இவற்றைப்பற்றிய தெளிவான விளக்கங்களைத் தருகின்றது. எனினும், அவற்றின்கருத்துகளை அறிவதற்கு உரையாசிரியர் களின் உரைகள் தேவைப்படுகின்றன. இவ்விரண்டையும் வைத்துக்கொண்டே உள்ளுறை இறைச்சி ஆகிய இவற்றின் அடிப்படையை உணர வேண்டியுள்ளது. தொல்காப்பியச் சூத்திரங்களுக்கு மாறுபட்ட உரைகளும் உள்ளன. இளம்பூரணர் கருதுவது வேறு; பேராசிரியர் கருதுவது வேறு; அதனுல் எது முடிந்த கருத்து என்று கூறுவதும் எளிதன்று. இவற்றை மரபுவழிச் செய்தியாகக் கொண்டு, இவற்றின் வழிநின்று உள்ளுறையையும் இறைச்சியையும் பற்றி அறியவேண்டியுள்ளது.

மற்றும், பாடல் பகுதிகளில் எவை உள்ளுறைப்பகுதிகள் எவை இறைச்சிப் பகுதிகள் என்று கோடிட்டுப் பிரித்து அறிவது அரிய முயற்சியாகும். கொள்வோர் எந்தப் பகுதி யையும் இவற்றிற்கு நிலைக்களனுகக் கொள்ளலாம். எனினும், இவற்றைப்பற்றி மரபுவழிச் செய்திகளை அறியப் பழைய உரையாசிரியர்கள் தரும் குறிப்புகளையே பின்பற்ற வேண்டியுள்ளது. அவர்கள் காட்டும் பகுதிகள் அல்லாமல் ஏனைய பகுதிகளையும் உள்ளுறை இறைச்சிக்கு நிலைக்கள னுகக் கொள்ளலாம். எனினும், இவ்வாறு உள்ளுறை இறைச்சியாகக் கொள்வதற்குச் சில அடிப்படைகள் காணப்

படுகின்றன. அவற்றையே உரையாசிரியர்கள் நிலைக் களனாகக் கொண்டு உரைக்குறிப்புகள் தந்துள்ளனர்.

தொல்காப்பியச் சூத்திரங்களும், அவற்றிற்குத் தரப் படும் உரைவிளக்கங்களும் கொண்டு கீழ்வரும் செய்திகளை அறியமுடிகிறது.

வெளிப்படையாக உவமும் பொருளும் இயைத்துக் கூறப்படும் உவமமேயன்றி, பாட்டின் கருப்பொருளைத் துணையாகக் கொண்டு பெறப்படும் உள்ளுறை இறைச்சிகள், உவமையையும் குறிப்புப் பொருளையும் தரும் கருப் பொருள்களை மட்டும் பெற்று இயங்கும். அவற்றோடு இணைத்துப் பொருத்தப் பெறும் பொருட் செய்திகள் அப்பாட்டின்கண் இடம்பெறா.

உள்ளுறையும் இறைச்சியும் தொல்காப்பியர் காலத்தி லேயே போற்றப்பட்ட உவமைப்பொருள் நய உத்தி களாகும். தொல்காப்பியர் காட்டி விளக்கும் உத்திகள் அகப்பொருள் இலக்கியத்திற்கே உரியனவாகப் போற்றப் பட்டன. சங்க இலக்கியங்களிலும் அகப்பொருள் பாடல் களிலேயே இவை இடம்பெறுகின்றன.

உள்ளுறை என்பது கருப்பொருளின் துணைகொண்டு பெறப்படும் குறிப்பு உவமையாகும். இஃது அகப் பொருளுக்கே உரியது என்ற அடிப்படையில் தொல்காப்பி யத்தில் அகத்திணையியலிலும் பொருளியலிலும் விளக்கப்படு கிறது. உவமை என்ற அடிப்படையில் இதன் இயல்பு உவமயியலில் ஆராயப்படுகிறது.

தொல்காப்பியர் தரும் விளக்கத்தின்படி உள்ளுறை பற்றி அறியப்படுவன கீழ்வருமாறு:

திணையை உணர்வதற்கு உள்ளுறை உவமம் பெரிதும் துணை செய்யும் என்பர்.

"உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்
தள்ளாதாகும் திணையுணர் வகையே" தொல். அகத். சூ 46,

கருப்பொருள்கள் என்று கிளக்கப் பெறுபவற்றுள் தெய்வம் நீங்கலாக ஏனைய பொருள்களை ஒட்டியே உள்ளுறை பிறக்கும் என்பர்.

"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே." —தொல். அகத்.சூ. **47**

கருப்பொருளோடு ஒத்துப் பொருள் கொள்ளும் வகையில் இவ் உள்ளுறைச்செய்தி கொள்ளப்படுகிறது.

"உள்ளுறுத் திதனோடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத் திறுவது உள்ளுறை உவமம்"
—தொல். அகத். சூ. 48

உள்ளுறை ஐவகை அமைப்புகளைக் கொண்டு விளங்கு மென்பர். உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என்னும் மரபுகளைப் பெற்று விளங்கும் என்பர்.

"உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்புஎனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே"
—தொல். பொருள். சூ.242

உடனுறை என்பதற்கு **இறைச்சி** என ஆசிரியர் நச்சினார்க்கினியர் பொருள் **கொள்வர்**. எனவே, இதில் இறைச்சியாகிய குறிப்புப்பொருளும், உவமம் ஆகிய பொருள் கொள்ளத்தக்க அமைப்பும், சுட்டிக் கூறும் இயல்பும், நகை உணர்வும், சிறப்புப் பொருளும் அமைதல் இதன் தனி அமைப்பாகும். சிறப்பு என்பதற்கு ஏனை உவமம், உள்ளுறை உவமத்தைச் சிறப்பித்து அடையாக நின்று பொருள் உணர்த்துதல் என ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைவிளக்கம் தருவர். இவ் ஐவகைப் பகுதிகளைக் கொண்டு விளங்குவது உள்ளுறை எனினும், உவமமும் குறிப்புப்பொருளும் இவற்றின் அடிப்படைகள் எனலாம்.

இவை நுட்பமாகவே உணரும் திறத்தன என்பதும் வற்புறுத்தப்படுகிறது. இப் பொருளைக் கொள்வதற்குக் கூர்த்த அறிவும், நுட்பமான உணர்வும், பொருளின்

துணிவும் தேவை என்பதும் வற்புறுத்தப்படுகின்றது. எனவே, அனைவர்க்கும் இவை எளிதில் விளங்கும் திறத்தன என்று கூற இயலாது.

"பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்னை மரபிற் கூறுங் காலைத்
துணிவொடு வருஉந் துணிவினோர் கொளினே"

—தொல். பொருள். சூ. 208

உவமை என்ற அடிப்படையில், உள்ளுறையை ஆராயு மிடத்து, அது பொருளோடு இயைபு கொள்ளும்பொழுது ஐவகைத் தன்மைகள் சுட்டப்படுகின்றன. பொதுவாக உவமைக்குரிய பொதுத்தன்மைகள் ஆகிய வினை, பயன், மெய், உரு ஆகிய இவற்றோடு பிறப்பு என்பதும் சேர்த்துக் கூறப்படுகிறது.

"தவலருஞ் சிறப்பின்அத் தன்மைநாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
பிறப்பினும் வருஉந் திறத்தியல் என்ப'

—தொல். பொருள். சூ 300

உள்ளுறை, பாடல் மாந்தர்களின் கூற்றுகளில் அமைவ தாகும். அகப்பாடல்கள் அனைத்தும் கவிஞன் கூற்றாக அமையாமல், பாடல் மாந்தரின் கூற்றாக அமைவனவாகும். இது நாடக நூல்களில் அமையும் பெற்றியாகும். அகப் பாடல்கள் இவ்வகையில் நாடக இயல்பு கொண்ட தனிக் கூற்றுகள் எனப் பொதுவாகக் கூறலாம். கலித்தொகைப் பாடல்களுள் ஒருசில இருவர் உரையாடும் பகுதிகளையும் கொண்டு விளங்குகின்றன. நாடகத்தில் இரட்டுற மொழிதல் என்னும் உத்தி தோன்ற உரையாடல்கள் அமைவனவற்றை இருபொருள் அமைப்பு என்று சிறப்பிப்பர்.

இதில், நாடகமாந்தர் உள்ளொன்று வைத்துப் புற மொன்று பேசிக் கேட்போருக்கு ஒரு பொருளும், நாடகத் தைப் பார்ப்போருக்கு மற்றொரு பொருளும் தோற்றுவித்து

உரையாடும் திறனைக் காட்டுவர். இதைப் போன்ற அமைப்பே இவ் உள்ளுறை உவமத்தில் காணப்படுகிறது. வெளிப்படையாக உணர்த்தப்படும் கருப்பொருள் செய்தியே யன்றிக் குறிப்பாகப் புலப்படுத்தப்படும் உரிப் பொருள் செய்தியும் தோற்றுவிக்கப் படுகிறது. இக் கூற்றினைக் கேட்பவரின் நிறையையும் குறையையும் எடுத்துக்காட்டும் வகையில் இக்குறிப்புப்பொருள் அமையும் என்பர் இந் நுட்பத்தினை ஆசிரியர் தொல்காப்பியனார் சுட்டிக் காட்டுவர்.

"இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப."

—தொல். உவமம். சூ. 303

ஆசிரியர் தொல்காப்பியனார் உள்ளுறை உவமம் கிளக்கப்படும் இடங்களும், அவற்றைக் கூறும் பாடல் மாந்தர் கிளக்குமாறும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத் தக்க செய்தியாகும். இவை அவர் காலத்து இலக்கியங் களில் பயின்றுவந்த மரபுகளாகும்.

மேலே குறிப்பிட்ட செய்திகளைத் தொகுத்துக் கூறு மிடத்து உள்ளுறை என்பது உடனுறை, உவமம், சுட்டு நகை, சிறப்பு ஆகிய அமைப்புகளைக் கொண்டு, குறிப்பாகக் கொள்ளப்படும் உவமைவகை ஆகும் என்பதும், வினை, பயன் மெய், உரு, பிறப்பு ஆகிய இயல்புகளின் அடிப்படையில் உவமச் செய்திகள் பெறப்படும் என்பதும், இவற்றால் இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும் அமையும் என்பதும், இவை ஒரு சிலர் உரையாடலில் பயின்று வரும் மரபைப் பெற்றுள்ளன என்பதும் புலனாகின்றன.

இறைச்சி என்பது உள்ளுறையைப் போல அகப் பொருள் இலக்கியங்களில் எடுத்தாளப்படும் பொருள்நய உத்தியாகும். இக் காரணம் பற்றியே தொல்காப்பியப் பொருளியல் நூற்பாக்களில் இது விளக்கப்படுகிறது இறைச்சி என்பதற்குக் கருப்பொருள் எனப் பொருள் கொள்ளப்படுதலைக் காண இயல்கின்றது. மற்றும்

உடனுறை என்ற தொடருக்கு இறைச்சி என்ற பொருளை ஆசிரியர் நச்சினார்க்கினியர் தருவதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும். கருப்பொருள் செய்திகளில் உடனுறைகின்ற குறிப்புப் பொருளையே இறைச்சி எனக் கொண்டனர் என்பது தெரிகிறது. இறை என்பது இறு என்பதன் திரிபாகக் கொண்டால், இறைச்சி என்பதற்குத் தங்குதல் என்னும் பொருள்கொள்ள இடம் தருகிறது.

—தொல். பொருள். சூ. 242.-நச். உரை

இறைச்சி என்பது கருப்பொருளின் புறத்ததாகவே பெறப்படும் குறிப்புப் பொருள் என்பது பொதுவாக நிலவும் கருத்தாகும். இதற்குத் துணைசெய்வது 'இறைச்சி தானே பொருள் புறத்ததுவே' என்னும் சூத்திரமாகும், (தொல் பொருள் 229. நச் உரை). எனினும், உள்ளுறை உவமங்கள் பல இறைச்சியாக உரையாசிரியர்களால் கொள்ளப்படுகின்றன. இவற்றை நோக்கும்பொழுது, கருப்பொருளின் புறத்ததாகக் கொள்ளப்படும் இறைச்சி வேறு; உவமை வழியாக உள்ளுறையைப் போல அமைக்கும் இறைச்சி வேறு என்று கொள்ள வேண்டியுள்ளது. ஆசிரியர் நச்சினார்க்கினியர் இவ் வேறுபாட்டினை நுட்பமாக உணர்த்துகிறார். இவ் விரண்டாம் வகைக்கு ஆதாரமாகக் கீழ்வரும் சூத்திரத்தைக் காட்டுவர்.

'இறைச்சியிற் பிறக்கும் பொருளு மாருளவே
திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே'

— தொல். பொருள். சூ. 230.

இஃது உவமை வழி அமையும் இறைச்சி என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும்.

உவமை வழியாக அமையும் இறைச்சிக்கும் உள்ளுறைக்கும் உள்ள வேறுபாடு மிக நுட்பமானதாகும். உள்ளுறையில் உவமும் உண்டு; இறைச்சியும் (குறிப்புப் பொருளும்) உண்டு. இறைச்சியில் குறிப்புப் பொருளும் உண்டு; உவமமும் உண்டு. இவை இரண்டுக்கும் உள்ள ஒற்றுமைப்

பண்புகளாம். இவற்றை உள்ளுறை என்றே இறைச்சி என்றே கொள்வது கொள்வோரின் மனநிலையைப் பற்றிய தாகும். உவமைக்குத் தலைமையும் சிறப்பும் கொடுத்தால், அவை உள்ளுறை உவமம் எனக் கொள்ளப்படுகின்றன. குறிப்புப்பொருளுக்குத் தலைமையும் சிறப்பும் கொடுத்தால் அவை இறைச்சி எனக் கொள்ளப்படுகின்றன. இவையே இவ்விரண்டிற்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகள் எனலாம்.[1]

உள்ளுறை உவமங்களுக்கு உரையாசிரியராகிய பேராசிரியர் கீழ்வரும் எடுத்துக்காட்டுகளைத் தருவர்:

'கரும்பு நடு பாத்திக் கலித்த தாமரை
சுரும்புபசி களையும் பெரும்புனல் ஊர
புதல்வன் ஈன்ற எம் முயங்கல்
அதுவே தெய்யநின் மார்புசிதைப் பதுவே'

என்பது வினையுவமப் போலி.

'தாமரையினை விளைப்பதற்கன்றிக் கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியில், தானே விளைந்த தாமரை சுரும்பின் பசி தீர்க்கும் ஊரன்' என்றாள். இதன் கருத்து காதற் பரத்தை யர்க்கும் இற்பரத்தையர்க்கும் ஏன்றமைக்கப்பட்ட கோயி லுள், யாமும் உளமாகி இல்லறம் பூண்டுவிருந்தோம்புகின்ற னம் அதுபோல, என்பதாகலான், உவமைக்குப் பிறிது பொருள் எதிர்ந்து உவமம் செய்யாது, ஆண்டுப் பிறந்தன வற்றோடுநோக்கிக் கருத்தினால் கொள்ள வைத்தலின், இஃது உள்ளுறை உவமம் ஆயிற்று என்பர்.

'கரைசேர் வேழங் கரும்பிற் பூக்கும்
துறைகேழ் ஊரன் கொடுமை நாணி
நல்லன் என்னும் யாமே
அல்லன் என்னும் என் தடமென் தோளே'

---

1. சங்க இலக்கியத்தில் உவமைகள். பக். 223—230,

என்பது பயஉவமப் போலி. இழிந்த வேழம் உயர்ந்த கரும்பிற் பூக்கும் எனவே அவற்றிற்கு இழிவு உயர்வு என்பது ஒன்றில்லை; எல்லாரும் இன்பம் கோடற்குரியர் தலைமகற்கு; தலைவியும் பரத்தையரும் அவனுக்கு ஒன்றுயினர் என்றமையின் பயஉவமைப்போலி ஆயிற்று என்பர்.

'ஒன்றேன் அல்லன் ஒன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்று கொய மலரு நாடனொடு
ஒன்றேன் தோழி ஒன்றினுனே'

என்பது மெய்யுவமப் போலி. மிதியுண்டு வீழ்ந்த வேங்கை மலர் குறையுயிரோடு மலர்ந்தாற் போலத் தானும் உளள் என்றமையின்.

'வண்ண ஒண்டழை நுடங்க வாலிழை
ஒண்ணுதல் அரிவை பண்ணை பாய்ந்தெனக்
கண்ணறுங் குவளை நாறித்
தண்ணென் றிசினே பெருந்துறைப் புனலே'

இஃது உருவுவமப் போலி.

'நீ புனலாடிய ஞான்று பரத்தை பாய்ந்தாடிய புனலெல்லாம் தண்ணென்றது' எனக் கூறியவழி, அத்தடம் போல் இவள் மிகுதியும் கலங்கித் தெளிந்து தண்ணென்றுள் என்பது கருதி உணரப்பட்டது. அவளொடு புனல் பாய்ந்தாடிய இன்பச் சிறப்புக் கேட்டு நிலையாற்றுள் என்பது கருத்து. பண்பும் உருவில் அடங்கும் என்பது பேராசிரியர் விளக்கமாகும்.

'பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉம் ஊர
எந்நலம் தொலைவ தாயினும்
துன்னலம் பெருமபிறர்த் தோய்ந்த மார்பே'

—ஐங்குறு. 63.

என்பது பிறப்பு உவமப் போலி. 'பொய்கைப் பள்ளிப் பிறந்த நீர்நாய் முன்னுள் தின்ற வாளைமீன் புலவு நாற்றத் தோடு பின்னுளும் அதனையே வேண்டும் ஊரன்' என்றமையின், பரத்தையர் பிறப்பு இழிந்தமையும் தலைவி பிறப்பு உயர்ந்தமையும் கூறி, அவன் பிறப்பின் உயர்வும் கூறினமையின் இது பிறப்பு உவமப் போலியாயிற்று என்பர்.

தொல். பொருள்.—சூ. 300 உரை.

தொல்காப்பியனூர் அவர் காலத்துச் செய்யுளியலைக் கொண்டு, உள்ளுறை உவமம் இடம் பெறும் கூற்றுகளைத் தெளிவுபடுத்துவர். கிழவி சொல்லின் அவள் அறிந்த கிளவியாகவே அக் கருப்பொருட் செய்திகள் அமையும் என்பர். தோழிக்காயின் நிலம் பிறழாமல் தாம் பழகிய இடத்தை ஒட்டியே அவை அமையும் என்பர். கிழவனின் கூற்று உடைமை தோன்ற உரனொடு கிளக்கும் என்பர். ஏனோர்க்கெல்லாம் இடம் வரையறையில்லை.

தொல். பொருள். சூ. 302

தலைவிக்கு மருதமும் நெய்தலுமே அவள் கூற்றில் பெறும் கருப்பொருள்களாம். உரையாசிரியர் குறிஞ்சியிலும் அவர் கூற்று இடம்பெறுதலைக் காட்டுவர். தலைவனுக்கு இடம் வரையறை இல்லை என்பர். தோழியும் செவிலியும் காலத்திற்கும் இடத்திற்குமேபொருந்துமாற்றால் உள்ளுறை உவமம் கூறுதற்கு உரியர் என்பர். —தொல். பொருள். சூ. 305 306

6. பொதுவணி இயல்

செய்யுள் முத்தகம், குளகம், தொகை, தொடர்நிலை என நான்கு வகைப்படும். முத்தகம் என்பது தனிச்செய்யுளாக வருவது; குளகம் பல பாட்டுகள் ஒரேவினையைக் கொண்டு முடிவது; தொகைநிலைச் செய்யுள் என்பது நூல் வடிவம் பெற்று இயங்குவது. பல செய்திகளை ஒருங்கு தொகுத்து உரைப்பதே நூல் ஆகும். இதனையே தொகை நிலைச் செய்யுள் என்பர்.

புறநானூறு—பொருளால் தொகைப்பட்டது.

களவழி நாற்பது—இடம்பற்றித் தொகைப்பட்டது.

கார் நாற்பது—காலம்பற்றித் தொகைப்பட்டது.

ஐந்திணை—தொழிலால் தொகைப்பட்டது.

கலித்தொகை—பாட்டால் தொகைப்பட்டது.

நாலடியார்—அளவால் தொகைப்பட்டது.

முத்தொள்ளாயிரம்—எண்ணால் தொகைப்பட்டது.

நன்னூல்—தன்மையால் தொகைப்பட்டது.

இவ்வாறு, பொருள் இடம் காலம் தொழில் தன்மை முதலிய காரணங்கள் பற்றி நூல்கள் தொகைப்படுகின்றன. இவை ஒரே ஆசிரியராலும் பல ஆசிரியர்களாலும் படைக்கப்படுவனவாகும். திருக்குறள் பாவடிபற்றித் தொகுக்கப்பட்ட ஒரே ஆசிரியரின் படைப்பாகும்; புறநானூறு பல ஆசிரியர்களின் படைப்பாகும். இது பொருள்பற்றித் தொகுக்கப்பட்டது.

இம் மூன்றும் சங்ககாலத்தில் வழங்கிய செய்யுள் நிலைகளாம். சிலப்பதிகாரமும் மணிமேகலையுமே முதல் காப்பியத் தொடர்நிலைச் செய்யுள்களாகும். பொருளிலும் சொல்லிலும் இருவகையாகத் தொடர்நிலை அமையும் என்பர். —சூ. 6. அந்தாதியாகத் தொடர்பு பெறும் சிறு பிரபந்தங்கள் சொற்றொடர்நிலைச் செய்யுளாகும். பொருள் பற்றித் தொடர்நிலை பெற்றவை சிந்தாமணி, கம்ப ராமாயணம், பெரியபுராணம் போன்றவை. இவற்றைக் காப்பியங்கள் என்பர். எனவே, பிற்காலத்து எழுந்த நூல்கள் காவியங்களும் சிறுபிரபந்தங்களும் எனத் தெகின்றது.

பெருங் காப்பியம் (epic)

அவற்றுள் பெருங்காப்பியம் என்பது வாழ்த்து, வணக்கம், வருபொருள் இவற்றின் ஒன்று முன்னர் இடம் பெறும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருளைப் பயக்கும் இயல்பினதாக விளங்கும். இதில் பேசப்படும் தலைவன் தன்னிகரில்லாத் தன்மை உடையவன்; மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர்த் தோற்றம். மறைவு என்ற வருணனைகள் பெறும். இதில் சொல்லப் படும் செய்திகள் திருமணம், பொன்முடி ஏற்றல், புனல் விளையாட்டு, பொழில் விளையாட்டு, மக்களைப் பெறுதல், கூடுதலும் ஊடுதலும் முதலிய இன்பச் செய்திகள்; இவற்றோடு மந்திரம், தூது, செலவு, இகல், வெற்றி, சந்து முதலிய அரசுச் செய்திகளும் இடம் பெறும். சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்னும் பாகுபாடுகளைப் பெறும். சுவையும் உணர்வும் கலந்து இச் செய்திகள் கூறப்பெறும். கற்றோர் புனைந்து அமைக்கும் கற்பனை நூல்களாக இவை விளங்கும். இவையே காப்பியத்தின் இலக்கணம் என்பர். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் மக்கட் காவியமாக விளங்கியமை குறிப்பிடத் தக்கது. தண்டியாசிரியர் காலத்தில் அரசர் சிறப்புப்பற்றிப் பாடும் மரபே நிலைத்து விட்டது என்பது இதனால் தெரிகிறது- (சூ. 28).

வைதருப்பம் கவுடம் என்று இருவகை நெறிகள் இலக்கியமரபில் போற்றப்பட்டன என்பது தெரிகிறது.

செய்யுளுக்கு மேற்கூறிய சுவையும் மெய்ப்பாடும் அன்றி இத் தனியழகுகளும் அமைகின்றன. இவற்றைத் தண்டியலங்காரம் செய்யுளுக்கு வாய்த்த நலன்கள் என உரைக்கும். அவை பின்வருமாறு:

செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி எனப் பத்து என்பர். இவ்வழகுகள் வேண்டப்படுதல் பற்றிக் கருத்து வேறுபாடு இல்லை. இவை எவை என்பதிலேயே இருசாரார்க்கும் கருத்து வேறுபாடு உளது என்பர்.*

செறிவு எனப்படுவது நெகிழிசை இன்மை; தெளிவு எனப்படுவது பொருள் புலப்பாடு; வன்மை மென்மை இடைமை என்னும் மூவினமும் விரவத் தொடுப்பது சமநிலையாம். சொல்லினும் பொருளினும் சுவைபடல் இன்பம். ஒழுகிசை என்பது இன்னா இசை இன்றித் தொடுப்பது. உதாரம் என்பது குறிப்பால் பொருள் புலப்படுத்தல். உய்த்தலில் பொருண்மை என்பது சொற்களை வருவித்துப் பொருள் கொள்ள வேண்டாமை. உயர்வுநவிற்சிபடப் புகழ்ந்து உரைப்பது காந்தம். வலி எனப்படுவது தொகைமிக வருதல். சமாதி என்பது, ஒன்றன் தன்மையை மற்றொன்றுக்கு ஏற்றிக் கூறுதல். கன்னி எயில், குமரி ஞாழல், விழித்த குவளை என்பன சமாதி என்பர். இப் பத்தும் செய்யுளில் காணப் படும் சிறப்பு நலன்களாகும்.

---

* தண்டி -14, 15.

7. யாப்பியல்

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, தூக்கு என்பன யாப்பின் உறுப்புகள் ஆகும். தூக்கு எனினும் செய்யுள் எனினும் ஒன்றே யாகும்.[1]

எழுத்துகள்

உயிர், மெய், உயிர்மெய் என்ற பிரிவும்; குறில், நெடில், அளபெடை என்ற வேறுபாடும், வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் ஓசை வேறுபாடும், குற்றியல் உகரம் குற்றியலிகரம், ஆய்தம் என்ற சார்பு ஒலிகளும்; ஐ, ஔ, மகரக் குறுக்கங்களும் எழுத்தியலில் அறியப்படுகின்றன.[2]

யாப்பு நூலார் குற்றியலுகரத்தை ஓசைநயம்பற்றி நெடிற்கீழ், நெடிலொற்றின் கீழ், குறிலிணைக் கீழ், குறிலிணை ஒற்றின் கீழ், குறில் நெடிற்கீழ், குறில் நெடில் ஒற்றின்கீழ்,

---

'எழுத்து அசை சீர்தளை அடிதொடை தூக்கோடு
இழுக்கா நடையது யாப்பெனப் படுமே.' சூ. 1

'உயிரே மெய்யே உயிர்மெய் என்று
குறிலே நெடிலே அளபெடை என்று
வன்மை மென்மை இடைமை என்று
சார்பில் தோன்றும் தன்மைய என்று
ஐ ஔ மகரக் குறுக்கம் என்று
அம்மூ வெழுத்தும் ஆம் அசைக் குறிப்பே.' சூ. 2

குற்றொற்றின் கீழ் என எழுவகையாக இடச்சார்பு ஒட்டிப் பிரித்துக் காட்டுவர்.

நாகு, நாக்கு, வரகு, அரக்கு, அசோகு, பஞட்டு, நக்கு என்பன எடுத்துக்காட்டுகளாம். நக்கு, நாக்கு, அரக்கு, பஞட்டு என்பவற்றைவன்தொடர்க்குற்றியலுகரம் என்றும், நாகு என்பதை நெடில் தொடர்க் குற்றியலுகரம் என்றும், வரகு அசோகு என்பவற்றை உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்என்றும் இலக்கணநூல்கள் பிரித்துக்காட்டும்.

நாகியாது, கேண்மியா என்பன குற்றியலிகரத்திற்கு எடுத்துக்காட்டுகளாம்.

வெஃகா கஃசு எனத் தனிமொழிக் கண்ணும், கஃறீது முஃடீது எனத் தொடர்மொழிக் கண்ணும், குற்றெழுத்தை அடுத்தும், வல்லெழுத்து முன்னும் ஆய்தம் வருகிறது.

ஐ ஔ என்பன நெட்டெழுத்து எனக் கூறப்படும். எனினும் அவை, 'அய், அவ்' என்பவற்றின் கூட்டெழுத்தே ஆகலின், அவை ஒன்றரை மாத்திரையே பெறுகின்றன. மொழி மூவிடத்தும் தம் இயல்பான இரண்டு மாத்திரையில் குறைந்து வரும் என்பர். இவற்றை ஐகார ஔகாரக் குறுக்கங்கள் என்பர்.

தரும்வளவன், மருண்ம், போன்ம் என்னும் தொடர் களில் மகரம் கால் மாத்திரையே பெறும் என்பர். இவற்றை மகரக்குறுக்கம் என்பர்.

அலகு பெருதவை

(1) ஆய்தமும், ஒற்றும், அளபெடுக்காவிடத்து அலகு பெறுவது இல்லை.[3]

'தனிநிலை, ஒற்றிவை தாம்அல கிலவே
அளபெடை அல்லாக் காலை யான.' சூ. 3

(2) சீரும் தளையும் வண்ணமும் கெடுமிடத்துக் குற்றியலுகரமும் குற்றியலிகரமும் உயிரளபெடையும் அலகு பெறுவது இல்லை.[4]

அசையும் சீரும்

நேரசையும் நிரையசையும் அசைகளாகக் கருதப்படு கின்றன.[5]

நேரசை: ஆ, பூ, வெள், வேல் என்பன.

தனிக்குறில் மொழிமுதற்கண் நேரசையாக வருவது இல்லை. குறிப்பு, ஏவல், தற்சுட்டு ஆகிய இம்மூன்று இடத்து மட்டும் தனிக்குறிலும் நேரசையாகின்றது.[6]

"**அ ஆ** இழந்தான்' — 'அ ஆ' — இதில் அ குறிப்பு; நேரசையாகிறது.

அ உ அறியா — அ, உ என்பன தற்சுட்டுகள்.

நொ அலையல் நின்னாட்டை நீ' — 'நொ' என்பது ஏவலின்கண் வந்த தனிக்குறில். இவை நேரசையாகவே கொள்ளப்படும்.

'அ அவனும் இ இவனும் உ உவனும் கூடியக்கால்
எ எவனை வெல்லார் இகல் —

அ, இ, உ, எ என்பன சுட்டின் கண்ணும் வினாவின் கண்ணும் வந்தன. இவையும் நேரசையாகவே கொள்ளப் படும்.[7]

'தளைசீர் வண்ணம் தாம் கெட வரினே
குறுகிய இகரமும் குற்றிய லுகரமும்
அளபெடை ஆவியும் அலகியல் பிலவே' சூ. 4

'நேரசை என்று நிரையசை என்று
ஆயிரண் டாகி அடங்குமன் அசையே' ,, 5

'நெடில் குறில் தனியாய் நின்றும் ஒற்றடுத்தும்
நடைபெறும் நேரசை நால்வகை யானே' ,, 6

'குறிப்பே ஏவல் தற்சுட்டு அல்வழித்
தனிக்குறில் மொழிமுதல் தனியசை இலவே' ,, 7

நிரையசை: வெறி, நிறம், சுறு, விளாம்.[8]

ஐகாரம்நெடில் எனக் கருதப்பட்டாலும், சீர்க்கு இறுதி யும், இடையும், மற்ருெரு ஐகாரத்தோடு இணைந்தும் வரின் அது நிரையசைஎன்றே கூறப்படும்.[9]

கெண் **டையை,**

அன்னை**ய** யான், புன்னையை யான்

ஈற்றின் கண்ணும் இடையின் கண்ணும் ஐகாரம் இணைந்து நிரையசை யாயின.

பையுள் மாலை—இதனுள் பையுள் என்பது சீர்முதற்கண் நெடிலாகவே கொள்ளப்பட்டு நேரசை ஆகியது காண்க.

'அடைப் **பையா** கோல்தா'—ஐகாரம் நெட்டெழுத் தோடும் இயைந்து நிரையசை யாயிற்று.

அசைத்து இசை கொள்வது **சீர்** எனப்படும்.

இயற்சீர்—தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் இவை இயற்சீர்.[10], [11]

உரிச்சீர் – இவற்றேடு காய் அல்லது கனி சேர்ந்தால் தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் எனவும்; தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங் கனிஎனவும் அமைவன மூவசைச்சீர் என்பர். இவற்றை உரிச்

'குறிலிணை குறில்நெடில் தனித்தும் ஒற்றடுத்தும்
நெறிமையின் நான்காய் வரும்நிரை அசையே' சூ. 8

'ஈறும் இடையும் இணைந்தும் இணையசை
ஆகும் ஐ என்ப அறிந்திசி ஞேரே' ,, 9

'இயற்சீர் உரிச்சீர் பொதுச்சீர் என்று
மயக்கற வகுத்த சீர்மூன் ருகும்' ,, 10

'ஈரசை கூடிய சீர்இயற்சீர்; அவை
ஈரிரண் டென்ப இயல்புணர்ந் தோரே' ,, 11

சீர் என வழங்குவர். காய்ச்சீர் வெண்பாவுக்கு உரியது; கனிச் சீர் வஞ்சிப்பாவுக்கு உரியது.[12]

பொதுச்சீர்—நாலசைச்சீரும், நாள், மலர் என்னும் ஓரசைச் சீர்களும் பொதுச்சீர் எனப்படும்.[13]

தண்ணிழல், தண்பூ, நறுநிழல், நறும்பூ இவை உரிச் சீரோடு சேரும்பொழுது நாலசைச் சீராகிய பொதுச்சீர்கள் ஆகின்றன.[14]

சீர்கள் செய்யுளில் நிற்கும் முறை

ஒரே செய்யுளில் இப் பல்வகைச் சீர்களும் இடம் பெறுதல் உண்டு. இயற்சீரும் உரிச்சீரும் செய்யுளகத்து மயங்கியும் வரும்; பொதுச்சீர் அருகியும் வரும். இயற்சீரும் உரிச்சீரும் வேறுவேறு ஆகியும் வரும். நிரையீருகிய நாலசைப் பொதுச்சீர் எட்டும் வஞ்சிப்பாவினுள்ளே வரும். வஞ்சியுரிச்சீர் வெண்பாவினுள் வரப்பெறா.[15]

பொதுச்சீர் வருமிடங்கள்

வெண்பாவினுள் நாலசைச் சீர் வாரா; கலியுள்ளும் பெரும்பான்மையும் குற்றுகரம் வந்துழியன்றி வாரா; வஞ்சியுள் குற்றுகரம் வாராதேயும் வரப்பெறும். வஞ்சியுள் இரண்டு நாலசைச்சீர் ஓரடியுள் அருகிக் கண்ணுற்று நிற்கவும் பெறும். அல்லனவற்றுள் பெருபான்மையும் ஓரடியுள் ஒன்றன்றி வாரா. இரண்டு வரினும் இயற்சீர் ஆயினும் இடையிட்டு வரும்.

'மூவசைச் சீர்உரிச் சீர்இரு நான்கனுள்
நேருரி நான்கும் வெள்ளை; அல்லன
பாவினுள் வஞ்சியின் பாற்பட் டனவே' சூ. 12.

'நாலசைச் சீர்பொதுச் சீர்பதி னாறே' ,, 13.

'ஓரசைச் சீரும்அஃது ஓரிரு வகைத்தே' ,, 14.

'விரவியும் அருகியும் வேறும் ஒரோவழி
மருவியும் பெறுதும் வழங்குமன் அவையே, ,, 15.

ஓரசைச்சீர் வரும் இடம்

ஓரசைச்சீர் பெரும்பான்மை வெண்பாவின் இறுதிக் கண்ணும், அம்போதரங்க உறுப்பின்கண்ணும் வரும்.

ஏனைய சீர்கள்

மூவசைச் சீராகிய உரிச்சீரான் ஆசிரியம் பயின்று வாரா. இயற்சீரானே வஞ்சியும் கலியும் பயின்று வாரா.

வஞ்சியுரிச்சீர் வெண்பாவினுள் வாரா; நேரீற்றியற் சீர் ஒத்தாழிசைக் கலிப்பாவினுள் வாரா.

நேர் நடுவாகிய தேமாங்கனி, புளிமாங்கனி என்னும் வஞ்சியுரிச்சீர் கலியுள்ளும் ஆசிரியத்துள்ளும் வரப்பெறும்.[16]

தளை

சீரோடு சீர் பொருந்தி நிற்பது தளை. அவை ஏழுவகைப் படும்.[17]

தளை வழங்குகின்ற வழிநின்ற சீரின் ஈற்றசையும், வரும் சீரின் முதலசையும் தம்முள் ஒன்றுதலும், ஒன்ருமையும் கொண்டு வழங்கப்படும்.

வெண்தளை

காய்முன்நேர்—வெண்சீர் வெண்தளை
மாமுன் நிரையும்; விளம்முன் நேரும் வருவன
இயற்சீர் வெண்தளை.[18]

**'குன்றேறி யானைப்போர் கண்டற்ருல் தன்னகத்தது
ஒன்றுண்டா கச்செய்வான் வினை'**

'நிரைநடு இயலா வஞ்சி உரிச்சீர்
கலியினோ டகவலிற் கடிவரை இலவே' சூ. 16
'சீரோடு சீர்தலைப் பெய்வது தளை; அவை
ஏழென மொழிப இயல்புணர்ந் தோரே' ,, 17.
''வெண்சீர் ஒன்றலும் இயற்சீர் விகற்பமும்
என்றிரண் டென்ப வெண்டளைக் கியல்பே'' ,, 18.

இது வெண்சீரோடு வெண்சீர் ஒன்றிவந்த வெண்சீர் வெண்டளை.

'கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று'

இது வெண்சீரோடு வேற்றுச்சீர் ஒன்றிய வெண்சீர் வெண்டளை.

'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்'—

இது இயற்சீர் நின்று இயற்சீரோடு விகற்பித்து வந்த இயற்சீர் வெண்டளை.

'இருநோக் கிவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக் கொன்றந்நோய் மருந்து

இது இயற்சீர் நின்று வேற்றுச் சீரோடு விகற்பித்து வந்த இயற்சீர் வெண்டளை.

ஆசிரியத் தளை

தேமா, புளிமா முன் நேர்; கருவிளம் கூவிளம் முன் நிரை வருவன ஆசிரியத் தளையாம். மாமுன் நேர்; விளம் முன் நிரை ஆசிரியத் தளையாம்.[19]

ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்கம் உடைமை'

கலி உலகத்து—நிரையொன் றாசிரியத்தளை
மக்கட் கெல்லாம்—நேரொன் றாசிரியத்தளை

'ஈரசைச் சீர்நின்று இனிவரும் சீரொடு
நேரசை ஒன்றல் நிரையசை ஒன்றல் என்று
ஆயிரு வகைத்தே ஆசிரி யத்தளை' சூ. 19.

நேர் ஈறுகிய உரிச்சீர் முன்னர் (காய் முன்) நிரையசை வருங்காலை அது கலித்தளை யாகும்.[20]

'செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி'

நேரீற்று உரிச்சீர் நின்று நிரை வந்தமையால் கலித் தளையாம்.

வஞ்சித் தளை

கனிச்சீரோடு நேரும் நிரையும் வருவன வஞ்சித் தளையாம்.[21]

'புனல் பொழிவன சுனையெல்லாம்
பூநாறுவ புறவெல்லாம்'
'வரைமூடுவ மஞ்செல்லாம்
தேனூறுவ பொழிலெல்லாம்.'

பொழிவன சுனை.—நிரை ஒன்றியது.
மூடுவ மஞ்செல்லாம்—நேர் ஒன்றியது.

பொதுச்சீர்கள் தளைகொள்ளுதல்

நேர் ஈறுகிய நாலசைப் பொதுச் சீரை வெண்பா உரிச்சீர் போலக் கொண்டு வரும்சீர் முதல் அசையோடு ஒன்றியது வெண்தளை; ஒன்றுதது கலித்தளை.

நிரை ஈறுகிய நாலசைப் பொதுச்சீரை வஞ்சியுரிச்சீரே போலக் கொண்டு வரும்சீர் முதல் அசையோடு ஒன்றினும் ஒன்றுவிடினும் வஞ்சித்தளை.

ஓரசைப் பொதுச்சீரை இயற்சீரே போலக் கொண்டு வரும்சீர் முதல் அசையோடு ஒன்றியது ஆசிரியத்தளை; ஒன்றுதது வெண்தளை.

'நிரையீ றில்லா உரிச்சீர் முன்னர்
நிரைவருங் காலைக் கலித்தளை ஆகும்' சூ. 20.

'தன்சீர் இறுதி நிரையொடு நேர்வரின்
வஞ்சித் தளையின் வகையிரண் டாகும். ,, 21.

தளை மயக்கம்

வெண்பாவினுள் பிற தளை விரவா; ஏனைய பாவிடத்தும் பாவினத்தும் வேற்றுத் தளைகளும் மயங்கி வரும்.[22]

5. அடி

இருசீர் குறளடி; முச்சீர் சிந்தடி; நாற்சீர் அளவடி; ஐஞ்சீர் நெடிலடி;[23] அறுசீர்முதலாகமிக்கு வருவன கழி நெடிலடியாம்.[24]

'திரைத்த சாலிகை' (குறளடி)

'கருதுவேல் தடங் கையினாய்' (சிந்தடி)

'தேம்பழுத்து இனியநீர் மூன்றும் தீம்பலா' (அளவடி)

'நின்றான் அடிக்கீழ்ப் பணிந்தார் வினை நீங்கி நின்றார்' (நெடிலடி)

அறுசீர் முதல் பத்துச் சீர்வரை வருவனவும் அவற்றுள் மிக்கு வருவனவும் கழி நெடிலடி என்பர்.[25] எண்சீரின் மிக்கு வருவன சிறப்பில என்பர். பத்துச்சீரின் மிக்கு வருவன கடையாகு கழி நெடிலடி எனப்படும் என்பர். எட்டுமுதல் பத்துவரை இடையாகு கழி நெடிலடி என்பர். எண்சீர்வரை தலையாகு கழி நெடில் எனப்படும்.

'வெள்ளையுள் பிறதளை விரவா; அல்லன
எல்லாத் தளையும் மயங்கியும் வழங்கும்' சூ. 22.

'குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி,
கழிநெடில் அடியெனக் கட்டுரைத்தனரே' ,, 23.

'குறளடி சிந்தடி இருசீர் முச்சீர்
அளவடி நெடிலடி நாற்சீர் ஐஞ்சீர்
நிரல்நிரை வகையால் நிறுத்தனர் கொளலே ,, 24.

'கழிநெடி லடியே கசடறக் கிளப்பின்
அறுசீர் முதலா ஐயிரண் டீறா
வருவன பிறவும் வகுத்தனர் கொளலே' ,, 25.

வஞ்சியடி

குறளடியும் சிந்தடியும் வஞ்சிக்கு உரியன.[26]

வெண்பா ஆசிரியம் கலி

இவற்றிற்கு அளவடி உரியது; கலியுள் அம்போதரங்க உறுப்புகள் சில இருசீர் முச்சீர் அடிகளாலும் வரும்.[27] அராக உறுப்பு நாற்சீரடியின் மிக்கு வரும்.

வெண்பாவின் ஈற்றடியும், நேரிசை ஆசிரியப்பாவின் ஈற்றயல் அடியும், கலிவெண்பாவின் ஈற்றடியும் முச்சீரான் வரும்.

இணைக்குறள் ஆசிரியப்பாவின் இடையடி இரண்டும் பலவும் இருசீரடியானும் முச்சீரடியானும் வரும்.

ஆசிரிய விருத்தமும் கலித்துறையும் ஒழித்து மூன்று பாவினமும் பெரும்பான்மையும் நாற்சீரடியான் வரும்.

ஒருசார் ஆசிரிய அடியும் கலியடியும் ஐஞ்சீரான் அருகி வருவனவும் உள.

பாவினம் எல்லா அடியினும் நடக்கும்.[28]

ஆசிரியப்பாவில் இயற்சீர் வெள்ளடியும் வஞ்சியடியும் இடம் பெறுதல் உண்டு.[29]

கலிப்பாவில் வெண்பா அடியும்[30] வஞ்சியுள் ஆசிரிய அடியும் விரவி வரும்.[31]

'சிந்தடி குறளடி என்றிரண் டடியான்
வஞ்சி நடக்கும் என்மனார் புலவர். சூ. 26.

'கலியொடு வெண்பா அகவல் கூறிய
அளவடி தன்னல் நடக்குமன் அவையே.' ,, 27.

'பாவினம் எல்லா அடியினும் நடக்கும்' ,, 28.

'இயற்சீர் வெள்ளடி வஞ்சி அடியிவை
அகப்பட வருஉம் அகவலும் உளவே.' ,, 29.

'வெள்ளடி கலியினுள் விரவவும் பெறுமே.' ,, 30.

'வஞ்சியுள் அகவல் மயங்கினும் வரையார்', ,, 31.

அடிச் சிறுமை

ஈரடி வெண்பாவிற்குச் சிறுமை; மூன்றடி ஆசிரியப் பாவிற்கும் வஞ்சிப்பாவிற்கும் சிறுமை; ஒழிந்த கலிப்பா விற்கு நான்கடி சிறுமை என்பர்.[32]

தொடை

தொடை என்று சொல்லப்படுவது அடி இரண்டு இயைந்தவழி பெறப்படும்.[33]

மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை இவை ஐந்தும் தொடை எனப்படும். இவை அடி, இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என இவற்றோடு பொருந்தி ஒவ்வொன்றும் எட்டு வகைப்படும்.[34]

அடிமோனைத் தொடை

முதலடி முதற்கண் வந்த எழுத்தே எல்லா அடிமுதற் கண்ணும் வரின் அதனை அடிமோனைத்தொடை என்பர்.[35]

'ஈரடி வெண்பாச் சிறுமை; மூவடி
ஆசிரி யத்தொடு வஞ்சி; எஞ்சியது
ஈரிரண் டடியே இழிபுஎன மொழிப' சூ. 32.

'தொடையே அடிஇரண்டு இயையத் தோன்றும்'
,, 33.

'மோனை எதுகை முரணியைபு அளபெடை
பாதம் இணையே பொழிப்போடு ஒரூஉத் தொடை
கூழை கதுவாய் மிசையதூஉம் கீழதூஉம்
சீரிய முற்றொடு சிவணுமார் அவையே.' ,, 34.

'ஆதி எழுத்தே அடிதொறும் வரின் அடி
மோனைத் தொடையென மொழிமனார் புலவர்' ,, 35.

'மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவும் கூம்ப
மாலை தொடுத்த கோதையும் கமழ
மாலை வந்த வாடை
மாயோள் இன்னுயிர்ப் புறத்திறுத் தற்றே'

இஃது அடிதொறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுத்தமையின் அடிமோனை. சீர்தோறும் வந்த எழுத்தே முறையாய் வந்தால் அவை தொடை விகற்பமாகும். அவை இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கது வாய், முற்று என ஏழுவகையாக அமையும்.

அடியெதுகைத் தொடை

அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது 'அடி எதுகை' எனப்படும்.[36]

கட்டு என்பதற்குப் பாட்டு என்பது எதுகையாகாது. பட்டு எனவே வரவேண்டும். காட்டு என்பதற்குப் பாட்டு எனவே வரவேண்டும் என்பதும் மனத்தில் கொள்ள வேண்டும்.

வருக்கமும் நெடிலும் இனமும் வந்தாலும் அவை மோனை எதுகைகளாகக் கொள்ளப்படும்.[37]

அவற்றை வருக்கமோனை, வருக்க எதுகை, நெடில் எதுகை, இனமோனை, இன எதுகை என்று வழங்குவர்.

'பகலேபல் பூங்கானல் கிள்ளை ஓப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇப்
பின்னுப் பிணிஅவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்ங்கப் பெய்து தேம்படத் திருத்தி'

'முதலெழுத்து ஒன்றி முடிவது மோனை
ஏனையது ஒன்றின் எதுகைத் தொடையே'
'இரண்டாம் எழுத்துஒன்றி இயைவது எதுகை'—சூ. 36.
'வருக்க நெடில் இனம் வரையார் ஆண்டே' ,, 37.

—இது பகரமெய் வருக்க மோனை வந்த செய்யுள்.

'நீடிணர்க் கொம்பர்க் குயிலாலத் தாதூதிப்
பாடுவண் டஞ்சி அகலும் பருவத்துத்
தோடார் தொடிநெகிழ்ந்தார் உள்ளார் படரொவ்வாப்
பாடமை சேக்கையுட் கண்'

—இது டகரமெய் வருக்க எதுகை.

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை"

—இது நெடில் மோனை அமைந்த செய்யுள்.

'ஆவா என்றே அஞ்சினர் ஆழ்ந்தார்—ஒருசாரார்
கூகூ என்றே கூவிளி கொண்டார்—ஒருசாரார்
மாமா என்றே மாய்ந்தனர் நீத்தார்—ஒருசாரார்
ஏகீர் நாகீர் என்செய்தும் என்றார்—ஒருசாரார்'

—இது நெடில் எதுகை அமைந்த செய்யுள்.

'கயலேர் உண்கண் கலுழ நாளும்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத்
திருந்திழை அமைத்தோள் அரும்படர் உழப்ப'

—இது வல்லின மோனை அமைந்த செய்யுள்.

'தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்'

—இஃது இரண்டாம் எழுத்து வல்லினம் வந்தமையால் வல்லின எதுகை அமைந்த செய்யுள் ஆகும்.

'அன்பீனும் ஆர்வம் உடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு'

—இது மெல்லின எதுகை.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு"

—இஃது இடையின எதுகை.

எதுகைத் தொடையில் சீர் முழுவதும் வருவது தலையாகு எதுகை; ஒரெழுத்தேவரத் தொடுப்பது இடையாகு எதுகை. இனத்தானும் மாத்திரையானும் பிறவாற்ருனும் வரத் தொடுப்பது கடையாகு எதுகை.

முன்னிரண்டடியும் ஓர் எதுகைத் தொடையாய் வந்து, பின் இரண்டடியும் மற்ருெரு திறத்தான் வரின், அஃது இரண்டடி எதுகை எனப்படும். எதுகைத் தொடையுள் ய, ர, ல, ழ என்னும் நான்கு ஒற்றும் வந்து மிகும்படி தொடுத்தால் அதனை ஆசிடை எதுகை என்பர்.

'ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை'

—ரகர ஒற்று இடைவந்த ஆசிடை எதுகை.

'ஆவே றுருவின ஆயினும் ஆபயந்த
பால்வே றுருவின அல்லவாம்'

—இது லகர ஒற்று இடைவந்த ஆசிடை எதுகை.

'அ உறியா அறிவில் இடைமகனே
நொ அலையல் நின்ருட்டை நீ'

—இதனுள் முதலெழுத்து இரண்டும் அளவொத்து விட்டிசைத்தமையால் விட்டிசை மோனை.

எல்லா எதுகைக்கும் முதலசை நேர்க்கு நிரையும், நிரைக்கு நேரும் வாரா. நேர்க்கு நேரும், நிரைக்கு நிரையுமே வருவது மரபு எனக் கொள்க.

முரண் தொடை

அடிதோறும் சொல்லும் பொருளும் மறுதலைப்படத் தொடுப்பது அடி முரண்தொடை எனப்படும்.[38] அம்முரண் மூன்று வகைப்படும். அவை சொல்லால் முரணுதலும், பொருளால் முரணுதலும், சொல்லும் பொருளும் தம்முள்

"மொழியினும் பொருளினும் முரணுதல்முரணே" சூ.38.

முரணுதலும் ஆம். கடையிணை, பின்முரண், இடைப்புணர் முரண் என்று சொல்லுவர் ஒருசார் ஆசிரியர்.[39]

'மீன்தேர்ந்து வருந்திய **கருங்கால்** **வெண்**குருகு' —இது கடையிரு சீரும் மறுதலைப்படத் தொடுத்தமை யான் கடையிணை முரண்.

'சாரல் **ஓங்கிய** தடந்தாள் **தாழை**'

—இது கடைச்சீரும் இரண்டாம் சீரும் மறுதலைப்படத் தொடுத்தமையான் பின் முரண்.

'கோதையில் **தாழ்ந்த** **ஓங்கு**வெள் ளருவி'

—இஃது இடையிருசீரும் மறுதலைப்படத் தொடுத்தமை யால் இடைப்புணர் முரண்.

'காவியங் **கருங்கண்** **செவ்வாய்ப்** **பைந்**தொடி'

—இது கடைச்சீர் மூன்றும் மறுதலைப்படத் தொடுத் தமையாற் கடைக் கூழை முரண்.

ஒன்றினம் முடித்தல் தன்னினம் முடித்தல் என்பதுபற்றி ஏனைத் தொடைக்கும் இவ்வாறே கொள்க.

அடி இயைபுத் தொடை

அடிதோறும் இறுதிக்கண் எழுத்தாலும் சொல்லாலும் ஒன்றிவரின் அஃது 'அடி இயைபுத் தொடை' எனப்படும்.[40]

'மாயோள் கூந்தற் குரலும் **நல்ல**
கூந்தலில் வேய்ந்த மலரும் **நல்ல**'

—இஃது அடி இயைபுத் தொடை.

'கடையிணை பின்முரண் இடைப்புணர் முரணென
இணையும் கூறுப ஒருசா ரோரே' சூ. 39.

'இறுவாய் ஒப்பின் அஃது இயைபெனப் படுமே' ,, 40.

அளபெடைத் தொடை

அடிதோறும் முதற்சீர்க்கண் அளபெடுத்து ஒன்றிவரின் அஃது அளபெடைத் தொடை எனப்படும்.[41]

'கடாஅக் களிற்றின் மேற் கட்படா மாதர்

'படாஅ முலைமேல் துகில்.'

—இஃது அளபெடைத் தொடை.

'தாஅள் தாஅ மறைமால் உழக்கி'

—இஃது இணை அளபெடை.
இவ்வாறே எட்டுவகையனும் வரும்.

தொடை விகற்பங்கள்

இணைத்தொடர்முதல் இருசீர்க்கண்ணும் மோனை, எதுகை' முரண்,இயைபு, அளபெடை வரத் தொடுப்பது 'இணை, எனப்படும்.[42]

'தண்ணறுந் தகரம் நீவிய கூந்தல்'—இணை மோனை.

'கல்லிவர் முல்லைக் கணவண்டு வாய்திறப்ப'
—இணை எதுகை.

'கருங்கால் வெண்குருகு கனைதுயில் மடியும்'
—இணைமுரண்

'அருஞ்சுரத் துள்ளும் வரும்'—இணை இயைபு.

'ஒரீஇ ஒரீஇ ஊரலர் எழவே'—இணை அளபெடை.

இயைபு ஒன்றுக்கு மட்டும் ஈற்றுச் சீர்களை முதல் இரு சீராகக் கொள்க. இவ்வாறே ஏனையவற்றிற்கும் அமைக்க.

'அளபெடை ஒன்றுவது அளபெடைத் தொடையே'
—சூ. 41.

'இருசீர் மிசைவரத் தொடுப்பது இணையே' —சூ. 42.

பொழிப்புத் தொடை

முதற்சீர்க் கண்ணும் மூன்றாஞ்சீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது பொழிப்புத் தொடை.[43]

'கணங்கொள் வண்டினம் கவர்வன மொய்ப்ப'
—பொழிப்பு மோனை

'பல்கால் வந்து மெல்லக் கூறி'—பொழிப்பு எதுகை.

'ஓங்குமலைத் தொடுத்த தாழ்ந்திலங்கு அருவி'
—பொழிப்பு முரண்.

'பெருங்கண் கயலே சீறியாழ் சொல்லே'
—பொழிப்பு இயைபு.

'சுரூஅக் கொட்கும் அரூஅ இருங்கழி'
—பொழிப்பு அளபெடை.

ஒரூஉத் தொடை

நடு இருசீர்க் கண்ணும் இன்றி, முதற்சீர்க் கண்ணும் நாலாஞ்சீர்க் கண்ணும், மோனை முதலாயின வரத் தொடுப்பது ஒரூஉத் தொடை.[44]

'புயல்வீற் றிருந்த காமர் புறவில்'—ஒரூஉ மோனை.

'பரியல் யாவதும் பைந்தொடி அரிவை'
—ஒரூஉ எதுகை.

குறுங்கால் ஞாழல் கொங்குசேர் நெடுஞ்சினை'
—ஒரூஉ முரண்.

பல்லே முத்தம் புருவம் வில்லே—ஒரூஉ இயைபு.

'வழாஅ நெஞ்சில்தம் தெய்வம் தொழாஅ'
—ஒரூஉ அளபெடை.

'முதலொடு மூன்றுஞ் சீர்த்தொடை பொழிப்பே'
—சூ. 43.

'சீர் இரண்டு இடைவிடத் தொடுப்பது
ஒரூஉத்தொடை' —சூ. 44.

கூழைத் தொடை

கடைச்சீர்க்கண் இன்றி முதல் மூன்று சீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பின் அது கூழைத் தொடையாம்.[45]

'**அ**ருவி **அ**ரற்றும் **அ**ணிதிகழ் சிலம்பு'—கூழை மோனை.

'பொன்னின் அன்ன புன்னை நுண்தாது'
—கூழை எதுகை.

'**கரிய வெளிய செய்ய** கானவர்' —கூழை முரண்.

'நின்றழல் செந்**தியும்** தண்புன**லும்** இவ்விரண்**டும்**'
—கூழை இயைபு.

'வி**டாஅ** வி**டாஅ** வெரீஇப் பெயரும்'
—கூழை அளபெடை.

மேற்கதுவாய்த் தொடை

இரண்டாம் சீர்க்கண் இன்றி அல்லாத மூன்று சீர்க் கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது மேற்கது வாய்த் தொடை.[47]

'**க**ணைக்கால் நெய்தல் **க**ண்போல் **க**டிமலர்'—மோனை.
க**ண்ட**லம் கைதையொடு வி**ண்ட**ன மு**ண்ட**கம்—எதுகை.

'**வெளிய**வும் வெற்பிடைக் **கரிய**வும் **செய்ய**வும்
—முரண்.

இருங்**கண்** விசும்பின்**கண்** மான்ற முகங்**காண்**
—இயைபு.

'**தாஅ**ம் சொல்லவும் **பெருஅ**ர் இதோ'—அளபெடை.

—இவை ஐந்தும் மேற்கதுவாய்த் தொடைகளாம்.

'மூவொரு சீரும் முதல்வரத் தொடுப்பது
கூழை என்மனார் குறியுணர்ந் தோரே' —சூ. 45.
'முதலயற் சீர்ஒழித்து அல்லன மூன்றின்
மிசைவரத் தொடுப்பது மேற்கது வாயே' —சூ. 46.

கீழ்க்கதுவாய்த் தொடை

மூன்றாஞ் சீர்க்கண் இன்றி ஏனைய மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது கீழ்க்கதுவாய்த் தொடை.[47]

'குழலிசைக் குரல் தும்பி குறைத்த' —மோனை.

'அடும்பின் நெடுங்கொடி ஆழி எடுப்ப' —எதுகை.

'விரிந்தும் சுருங்கியும் வில்லென நசிந்தும்— —முரண்.

'அன்னையும் என்னையும் தன்னில் கடியும்' —இயைபு.

'ஆஅம் பூஉ மணிமலர் தொடாஅ' —அளபெடை.

முற்றுத் தொடை

நான்கு சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது முற்று எனப்படும்.[48]

'அரிமதர் அலர்க்கண் அரும்பனி அரும்ப'
—முற்று மோனை.

கல்லிவர் முல்லையும் மெல்லியலார் பல்லரும்பும்'
—முற்று எதுகை.

'நெடுந்தோள் குறுந்தொடி வீங்குபிணி நெகிழ'
—முற்று முரண்.

'கண்ணும் புருவமும் மென்தோளும் இம் மூன்றும்'
—முற்று இயைபு.

'குராஅம் விராஅம் பராஅம் உராஅம்'
—முற்று அளபெடை.

செந்தொடை

செந்தொடையும் இரட்டைத் தொடையும் அந்தாதித் தொடையும் என இவை வழக்குப்பற்றிப் பெயர் பெறுவன

'ஈற்றயற் சீர்ஒழித்து எல்லாம் தொடுப்பது
கீழ்க்கது வாயின் கிழமைய தாகும்' —சூ. 47

'சீர்தொறும் தொடுப்பது முற்றெனப் படுமே' —சூ. 48.

வாகும்.[49] செந்தொடை என்பது மேற்சொல்லப்பட்ட தொடையும் தொடை விகற்பமும் போலாது வேறுபடத் தொடுப்பது.[50]

'பூத்த வேங்கை வியன்சினை ஏறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தானே' —செந்தொடை.

இரட்டைத் தொடை

ஓர் அடி முடியும் அளவும் ஒரு சீரே நடப்பது இரட்டைத் தொடை.[51]

'ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினிற் சீறெரி ஒக்குமே, ஒக்கும்.
குளக் கொட்டிப் பூவின் நிறம்'
—இஃது இரட்டைத் தொடை

அந்தாதித் தொடை

எழுத்தும் அசையும் சீரும் அடியும் இறுவாய் எழுவாயாகத் தொடுப்பது அந்தாதித் தொடை.[52]

'உலகுடன் விளங்கும் ஒளிகிளர் அலர்மதி
மதி நலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழல் பொற்புடை ஆசனம்'

தொடை தளைப் பெயர் வழங்குதல்

ஒரு செய்யுளகத்துத் தொடை பல தொடுத்து வந்தாலும், தளை பல விரவி வந்தாலும் அவற்றை முதல் வந்த தொடையாலும் முதல் வந்த தளையாலும் பெயர் கொடுத்து வழங்குவர்.[53]

"செந்தொடை இரட்டையொடு அந்தாதி எனவும்
வந்த வகையான் வழங்குமன் பெயரே" —சூ.49.
"செந்தொடை ஒவ்வாத் திறத்தன வாகும்' —சூ. 50.
'இரட்டை அடி முழுது ஒருசீர் இயற்றே' — சூ. 51
'ஈறு முதலாத் தொடுப்பது அந்தாதி என்று
ஓதினர் மாதோ உணர்ந்திசி னோரே' — சூ. 52
'தொடைபல தொடுப்பினும் தளைபல விரவினும்
முதல்வந் ததனால் மொழிந்திசின் பெயரே' —சூ. 53.

'தாமரை புரையும் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே'

ஏனைய எதுகை மோனைகள் பிற அடிகளுள் வந்திருப்பினும் இதனைப் பொழிப்பு எதுகைச் செய்யுள் என்பர். **தாமரை** காமர்—இவை பொழிப்பு எதுகையாய் முதல் வந்தமையின். குன்றி குன்றின்—இவை ஒரூஉ எதுகை; நெஞ்சு நெடுவேல்—இவை ஒரூஉ மோனை; ஏம வைகல் எய்தின்றால் உலகே – இதில் பொழிப்பு மோனை வந்துள்ளது.

நடையழகு

வல்லெழுத்துமிகத் தொடுப்பது வல்லின நடை; மெல்லெழுத்துமிகத் தொடுப்பது மெல்லின நடை; இடையெழுத்துமிகத் தொடுப்பது இடையின நடை. எடுத்துக் கொண்ட நடையின் வழுவாது வரத்தொடுத்து முடிப்பது செய்யுள்களுக்குச் சிறப்புத் தருகிறது.

'அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே'
—வல்லின நடை

'பஞ்சி யொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி' —மெல்லின நடை

'குழலும் யாழும் அமிழ்தும் குழைத்தநின்
மழலைக் கிளவி'— —இடையின நடை

நால்வகைப் பாக்கள்:

வெண்பா

செப்பல் இசையுடையது வெண்பா. ஈற்றடி முச்சீராகியும் இறுதிச்சீர் அசைச்சீராகியும், சீர்ச்சீர் ஆகியும் நிற்கப்

பெறும். காசு பிறப்பு நாள் மலர் என்னும் வாய்பாடுகளாக வரும்.[57]

செப்பல் ஓசை ஏந்திசைச் செப்பல், தூங்கிசைச் செப்பல், ஒழுகிசைச் செப்பல் என மூன்று வகைப்படும். வெண்சீரே வந்து வெண்தளை தட்ப ஏந்திசைச் செப்பல் பிறக்கும்; இயற்சீரே வந்து வெண்தளை தட்ப ஒழுகிசைச் செப்பல் பிறக்கும். வெண்சீரும் இயற்சீரும் வந்து வெண்தளை தட்பத் தூங்கிசைச் செப்பல் பிறக்கும்.

குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என வெண்பா ஐந்து வகைப்படும்.[58]

ஈரடி குறள் வெண்பா; மூவடி சிந்தியல் வெண்பா ஆகும்.* [59]

நான்கு அடியாய்த் தனிச்சொல் இரண்டாம் அடியின் இறுதியாய் அவ்விரண்டாமடி ஒரூஉத் தொடையாயும் கதுவாய்த் தொடையாயும் முற்றுத் தொடையாயும் இரண்டு விகற்பத்தாலும் ஒரு விகற்பத்தாலும் வருவது

'செய்யுள் தாமே மெய்பெற விரிப்பின்
பாவே பாவினம் எனவிரண் டாகும்' —சூ. 54.

'வெண்பா ஆசிரியம் கலியே வஞ்சியெனப்
பண்பாய்ந் துரைத்த பாநான் காகும்' —சூ. 55.

'செப்பல் இசையன வெண்பா; மற்றவை
அந்தடி சிந்தடி ஆகலும் அவ்வடி
அந்தம் அசைச்சீர் ஆகலும் பெறுமே' —சூ. 57.

'குறள்சிந்து இன்னிசை நேரிசை பஃறொடை
என ஐந் தாகும் வெண்பாத் தானே' —சூ. 58.

'ஈரடி குறள் சிந்து இரு தொடை இயற்றே' —சூ. 59.

நேரிசை வெண்பாவாம்.[60] தனிச்சொல் இன்றி நான்கடியாய் வருவன இன்னிசை வெண்பா. இஃது ஒரு விகற்பத்தாலும் பல விகற்பத்தாலும் வரும். *[61]

நான்கடியின் மிக்க பல அடியால் வருவது பஃறொடை வெண்பா எனப்படும்.[62]

குறட்பாவின் இனம்

வெண்செந்துறை, குறள் தாழிசை இவை இரண்டும் குறட்பாவின் இனங்களாம்.

ஒழுகிய ஓசையினை உடைத்தாய்த் தம்முள் ஒத்து வந்த இரண்டு அடித்தாய் விழுமிய பொருளைத் தந்து நிற்பது வெண்செந்துறை.[63]

'ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை'

—வெண் செந்துறை.

(1) இரண்டடியாய் ஈற்றடி குறைந்து வருவனவும், (2) விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் இன்றி வெண் செந்துறையிற் சிதைந்து இரண்டடியும் ஒத்து வருவனவும், (3) செப்பல் ஓசையில் சிதைந்து வந்த குறள் வெண்பாவும் தாழிசைக் குறள் அல்லது குறள் தாழிசை எனப்படும்.[64]

'தண்ணங் தூநீர் ஆடச் சேர்ந்த
வண்ண ஓதி கண்'

"நாலோ ரடியாய்த் தனியிரண் டாவதன்
ஈற்றுரூஉ வாய்முற்று இருவிகற் பொன்றினும்
நேரிசை வெண்பா எனப்பெயர் ஆகும்." —சூ. 60.

'விகற்பு ஒன்றாகியும் மிக்கும் தனிச்சொல்
இயற்றப் படாதன இன்னிசை வெண்பா' —சூ. 61.

'பாதம் பலவரின் பஃறொடை வெண்பா' —சூ. 62.

'ஒழுகிய ஓசையின் ஒத்தடி இரண்டாய்
விழுமிய பொருளது வெண்செந் துறையே' —சூ. 63.

'அந்தடி குறைநவும் செந்துறைச் சிதைநவும்
சந்தழி குறளும் தாழிசைக் குறளே' —சூ. 64

இஃது இரண்டடியாய் ஈற்றடி குறைந்து வந்த குறள் தாழிசை.

"என்னே சொல்லுதி வாழி நங்காய்
பொன்னே சொல்லுவன் போகு நங்காய்'

இஃது ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளும் இன்றி, இரண்டடியும் ஒத்து வந்த செந்துறை சிதைந்த குறள் தாழிசை.

''வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டையள் அல்லள் படி"

இஃது நாலசைச் சீரால் வந்தும் வேற்றுத்தளை விரவியும் செப்பலோசை அழிந்தும் வந்தமையால் குறள் தாழிசை யாகும்.

வெண் தாழிசை

1. அடி மூன்றாய் ஈற்றடி முச்சீராய் இறுவன வெள்ளொத் தாழிசை. 2. ஒரு பொருள் மேல் மூன்று வந்து நடப்பனவும் வெள்ளொத்தாழிசை எனப்படும். 3. மேலும் சிந்தியல் வெண்பா இசையிலும் தளையிலும் வேறுபட்டியல்வன வெண்தாழிசை.[66]

''அன்னாய்! அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
ஒன்னார் உடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்னான் துறந்து விடல்''

''போதார் நறும்பிண்டிப் பொன்னார் மணியனையான்
தாதார் மலரடியைத் தணவாது வணங்குவார்
தீதார் வினைகொடுப்பார் சிறந்து''

'உரைத்தன இரண்டும் குறட்பா இனமே' —சூ. 65
'அடியொரு மூன்றுவந்து அந்தடி சிந்தாய்
விடின் அது வெள்ளொத் தாழிசை யாகும்.' —சூ. 66

இது வெள்ளோசை தழுவாது வேற்றுத்தளை விரலி முதற்கண் வெண்டளை தட்டு வந்தமையின் வெண்டாழிசை எனப்படும்.

''நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவ செய்யார்
அன்பு வேண்டு மவர்''

இஃது ஆசிரியத் தளையால் வந்த வெண்டாழிசை.

வெண்டுறை

மூன்று அடி முதலாக ஏழடி காறும் வந்து ஒன்றுதலைச் சிறந்து கடைக்கண் ஓரடியும் பல அடியும் ஒரு சீரும் இரு சீரும் பலசீரும் குறைந்து, அவை எல்லாம் ஓர் இசையாய் வரினும்,முதல் ஓர் இசையாய்ப் பின் ஓர் இசையாய்வரினும் வெண்டுறையாம். * 67

ஓரொலி வெண்டுறை

"தாளாளர் அல்லாதார் தாம்பலர் ஆயக்கால் என்னும் என்னும்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்து விடும் பிளிற்றி யாங்கே"

வேற்றொலி வெண்டுறை

''கல்லாதார் நல்லவையுள் கல்லேபோல் சென்றிருந்தால்
கருமம் யாதாம்?
இல்லாதார் செல்வரைக்கண் டிணங்கியே ஏமுற்றால்
இயைவ தென்னும்?
பொல்லாதார் நன்கலன்கள் மெய்புதையப் பூண்டாலும்
பொலிவது என்னும்?
புல்லாதார் பொய்க்கேண்மைபுனைந்துரைத்தால் ஆவதென்னே?
அல்லாதார் பொய்யாவது அறிபவேல் அமையாதோ"

*'மூன்றடி முதலா ஏழடி காறும் வந்
தீற்றடி சிலசில சீர்தப நிற்பினும்
வேற்றொலி விரவினும் வெண்டுறை யாகும்' —சூ. 67.

இஃது ஐந்தடியாய் ஈற்றடி இரண்டும் இரண்டு சீர் குறைந்து வந்த வேற்ருெலி வெண்டுறை.

வெளி விருத்தம்

நான்கு அடியால் வந்து அடிதொறும் இறுதிக்கண் ஒரு சொல்லே தனிச் சொல்லாய்ப் பொருள் கொண்டு முடியின் 'வெளி விருத்தம்' எனப்படும். 68

"ஆவா என்றே அஞ்சினர் ஆழ்ந்தார்—ஒரு சாரார்
கூகூ என்றே கூவிளி கொண்டார்—ஒரு சாரார்
மாமா என்றே மாய்ந்தனர் நீந்தார்—ஒரு சாரார்
ஏகீர் நாகீர் என்செய்தும் என்ருர்—ஒரு சாரார்.

இது வெளிவிருத்தம்.

ஆசிரியப்பா

ஆசிரியப்பா அகவல் ஓசையைப் பெறும்; ஈற்றில் ஏ, ஓ, ஈ, ஆய், என்று, ஐ என், இறும். அகவல் ஓசை ஏந்திசை அகவலும், தூங்கிசை அகவலும், ஒழுகிசை அகவலும் என மூன்று வகைப்படும். நேர் நேர் இயற்றளே ஏந்திசை; நிரை நிரை இயற்றளே தூங்கிசை; இருதளேயும் கலந்து வருதல் ஒழுகிசை அகவல்.

நேரிசை ஆசிரியம், இணைக்குறள் ஆசிரியம், நிலேமண்டில ஆசிரியம், அடிமறி மண்டிலம் ஆசிரியம் எனஆசிரியம் நான்காகும்.

'நான்கடி யானும் நடைபெற் றடிதொறும்
தான்தனிச் சொற்சொளின் வெளிவிருத் தம்மே'
—சூ. 68.

"அகவல் இசையன அகவல்; மற்றவை
ஏஓ ஈஆய் என்ஐஎன்று இறுமே." —சூ. 69.
"நேரிசை இணைக்குறள் மண்டிலம் நிலேப்பெயர்
ஆகுமண் டிலமென்று அகவல் நான்கே" —சூ. 70.

"ஈற்றடியின் அயலடி முச்சீரடியால் வருவன நேரிசை ஆசிரியப்பா எனப்படும்"[71].

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோல் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"

—இது நேரிசை ஆசிரியப்பா.

ஈற்றடியின் மேலையடிகள் இரண்டு சீரும் ஒருசீரும் குறைந்து இறுதல் இணைக்குறள் ஆசிரியப்பா.[72]

"நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்புஒல் லாதே."

—இஃது இணைக்குறள் ஆசிரியப்பா.

அடியை மறித்து எப்படி அமைப்பினும் சீரும் தளையும் சிதையாமலும் பொருள் கெடாமலும் வருவது அடிமறி மண்டில ஆசிரியப்பா.[73]

'மாறுக் காதலர் மலைமறந் தனரே
ஆறுக் கட்பனி வரலா னுவே
ஏறு மென்தோள் வளைநெகி ழும்மே
கூறுய் தோழியாம் வாழு மாறே'

—இஃது அடிமறி மண்டில ஆசிரியப்பா.

'அந்த அடியின் அயலடி சிந்தடி
வந்தன நேரிசை ஆசிரி யம்மே' —சூ. 71.

'இணைக்குறள் இடைபல குறைந்திறல் இயல்பே'
—சூ. 72.

'மனப்படும் அடிமுத லாயிறின் மண்டிலம்.' —சூ. 73

எல்லா அடியும் சீர் ஒத்து நிற்பன நிலை மண்டில ஆசிரியப்பாவாகும். இவை 'என்' என முடிவது சிறப்புடையன என்பர்.[74]

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யார் அஃது அறிந்திசி னோரே சாரல்
சிறு கோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே'—

இது நிலை மண்டில ஆசிரியப்பா.

ஆசிரியப் பாவினம்

அடி மூன்றாகத் தம்முள் அளவு ஒத்து இறுவன **ஆசிரியத் தாழிசையாகும்.** இவை எனைத்துச் சீரானும் வரப்பெறும். ஒரு பொருள் மேல் மூன்று அடுக்கி வருவது சிறப்புடைத்து.[75]

"கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ!"

(1) ஈற்றயல் அடி குறைந்து நான்கடியாய் வருவனவும், (2) ஈற்றயலடி குறைந்து இடையந்தத்து அடி மடக்காய் நான்கடியாய் வருவனவும், (3) இடையடி குறைந்து நான்கடியாய் வருவனவும், (4) இடையிடை குறைந்து இடைமடக்காய் நான்கடியாய் வருவனவும், ஆசிரியத்துறையாகும். இவை எனைத்துச் சீரானும் அடியாய் வரப்பெறும்[76].

"ஒத்த அடியின் ஆகியும் ஒற்றிற
நிற்பவும் என்னும் நிலைமண் டிலமே." —சூ. 74

"மூன்றடி ஒத்த முடிபின ஆய்விடின்
ஆன்ற அகவல் தாழிசை ஆகும்." —சூ. 75

"கடையதன் அயலடி கடைதபு நடையவும்
நடுவடி மடக்காய் நான்கடி யாகி
இடையிடை குறைநவும் அகவல் துறையே." —சூ. 76

எனவே, இடையடிகள் குறைந்து வருவன ஆசிரியத் துறை என்பதாம். அவை இடை மடக்காகவும் மடக்கின்றி யும் வரும்.

'இரங்கு குயில்குழலா இன்னிசையாழ் தேனு
அரங்கம் அணிபொழிலா ஆடும்போலும் இளவேனில்
அரங்கம் அணிபொழிலா ஆடு மாயின்
மரங்கொல் மணந்தகன்ருர் நெஞ்சம்என்
செயதது இளவேனில்'

இஃது இடை இடை குறைந்து இடைமடக்காய் வந்த ஆசிரியத்துறை.

கழி நெடில் அடி நான்காய்த் தம்முள் அளவொத்து முடியின் அஃது ஆசிரிய விருத்தமாகும்.[77]

'விடஞ்சூழ் அரவின் இடைநுடங்க விறல்வாள் வீசி
விரையார் வேங்
கடஞ்சூழ் நாடன் காளிங்கன் கதிர்வேல் பாடும் மாதங்கி
மடஞ்சேர் நோக்கம் மா தாந்தாம் வடிக்கண் நீல மலர்
தாந்தாம்
தடந்தோள் இரண்டும் வேய் தாந்தாம் என்னும் தன்கைத்
தண்ணுமையே'

இஃது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

கலிப்பா

கலிப்பா துள்ளல் ஓசையைப் பெறும். அவை வெண் பாவும் ஆசிரியப்பாவுமாக இறும்.[78]

"கழிநெடில் அடிநான்கு ஒத்திறின் விருத்தம் அஃது
அழியா மரபின் அகவல் ஆகும்." —சூ.77

'துள்ளல் இசையன கலிப்பா; மற்றவை
வெள்ளையும் அகவலு மாய்விளைந் திறுமே' —சூ.78

துள்ளல் ஓசை ஏந்திசைத் துள்ளல், அகவல் துள்ளல், பிரிந்திசைத் துள்ளல் என மூன்று வகைப்படும். அனைத்தும் கலித்தளையாய் வருவது ஏந்திசைத் துள்ளல்; வெண்டளையும் கலித்தளையும் விரவிவருவது அகவல் துள்ளல்; கலித்தளையும் பிறதளைகளும் பொருந்தின் பிரிந்திசைத் துள்ளல் என்பர்.

கலிப்பா (1) ஒத்தாழிசைக்கலி, (2) வெண்கலிப்பா, (3) கொச்சகக் கலி என மூன்று வகைப்படும். [79]

ஒத்தாழிசைக் கலியின் வகை

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா என மூன்று வகைப்படும். [80]

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

தரவு என்னும் உறுப்பு முதற்கண்ணே வரத் தாழிசை மூன்று வந்து தனிச்சொல் பெற்றுச் சுரிதகத்தால் இறுவது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா. தாழிசை தரவினும் சுருங்கிய அடி உடையதாகும். சுரிதகம் வெண்பாவானும் ஆசிரியத்தானும் ஒன்றில் முடியும். [82]

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் வரும். கலிப்பாவில் தாழிசையை அடுத்து அம்போதரங்க உறுப்பு வருவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவாகும்.

''ஒத்தா ழிசைக்கலி வெண்கலிப் பாவே
கொச்சகக் கலியொடு கலிமூன் றாகும்'' —சூ. 79

''நேரிசை அம்போ தரங்கம்வண் ணகமென்று
ஓதிய மூன்றே ஒத்தா ழிசைக்கலி'' —சூ. 80

அடியாலும் சீராலும் முறையே ஒன்றினுக்கு ஒன்று சுருங்கி வரும் உறுப்பே, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா என்று வழங்கப்படும்.[83]

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

மேற்கூறப்பட்ட உறுப்புகளோடு முடுகியல் அடியுடைய அராக உறுப்பைத் தாழிசையின்பின் கூட்டிச் சொல்லப் படின், அது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா என்று வழங் கப்படும்.[84]

இவை மூன்றற்கும் எடுத்துக் காட்டுகள் யாப்பருங்கல நூல் பக்கம் 296-324 காண்க.

கலிவெண்பா

கலித்தளை பொருந்தியும், கலியோசை தழுவியும் இறுதி அடி வெண்பா இறுமாறு போல முச்சீர் அடியால் இறுவது கலிவெண்பா எனப்படும்*[85]. வெண்கலிப்பா எனினும் கலிவெண்பா எனினும் ஒன்றேயாம். ஈற்றேசை வெள் ளோசை கொண்டும் கொள்ளாதும் முச்சீர் அடியால் இறும் என்பதாம்.

"தரவொன்று தாழிசை மூன்றும் சமனாய்த்
தரவிற் சுருங்கித் தனிநிலைத் தாகிச்
சுரிதகம் சொன்ன இரண்டினுள் ஒன்றாய்
நிகழ்வது நேரிசை ஒத்தா ழிசையே" —சூ. 82

"முந்திய தாழிசைக்கு ஈறாய் முறை முறை
ஒன்றினுக்கு ஒன்று சுருங்கும் உறுப்பினது
அம்போ தரங்கத் தாழிசைக் கலியே" —சூ. 83

"அவற்றேடு முடுகியல் அடியுடை அராகம்
மடுப்பது வண்ணக ஒத்தா ழிசைக்கலி" —சூ. 84

"தன்தளை ஓசை தழிஇநின்று ஈற்றடி
வெண்பா இயலது கலிவெண் பாவே" —சூ. 85

'உண்ணுநீர் விக்கினன் என்றேனு அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கணுற் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தான்அக் கள்வன் மகன்''

இது கலிவெண்பா

கொச்சகக் கலிப்பா

தரவே வந்தும், தரவு இரண்டாய் வந்தும், தாழிசை சில வந்தும், தாழிசை பல வந்தும், தரவு முதலாகிய ஆறு உறுப்பும் தம்முள் மயங்கியும் வெண்பாவினோடும் ஆசிரியத்தினோடும் மயங்கியும் வருவன எல்லாம் கொச்சகக் கலிப்பா என்பர்.[86]

"செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ இடைநுழையும் மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே—

இது தரவு ஒன்றுமட்டும் வந்த தரவுகொச்சகக் கலிப்பா.

கலிப்பாவினம் கலித்தாழிசை:

அடி சிலவாயும் பலவாயும் வந்து தத்தமில் ஒத்து ஈற்றடிக்கு மிக்கு வருவன எல்லாம் 'கலித்தாழிசை' என்று வழங்கப்படும். [87]

"பூண்ட பறையறையப் பூதம் மருள
நீண்ட சடையான் ஆடுமே;
நீண்ட சடையான் ஆடும் என்ப
மாண்ட சாயல் மலைமகட் காணவே காணவே''

"தரவே, தரவிணை, தாழிசை தாமும்
சிலவும் பலவும் சிறந்து மயங்கியும்
மற்றும் விகற்பம் பலவாய் வருநவும்
கொச்சகம் என்னும் குறியின ஆகும்'' —சூ. 86

"அடியெனைத் தாகியும் ஒத்து வந்து அளவினில்
தலையடி மிகுவது கலித்தா ழிசையே'' —சூ. 87

கலித்துறை

ஐஞ்சீர் அடி நான்காய் நடப்பது கலித்துறை எனப் படும்.[88]

'யானும் தோழியும் ஆயமும் ஆடும் துறைநண்ணித்
தானும் தேரும பாகனும் வந்தென் நலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளும் கைதையும் எல்லாம் கரியன்றே.

கலிவிருத்தம்

நாற்சீரால் ஆகிய நான்கடி உடையன எல்லாம் கலிவிருத்தம் எனப்படும்.[89]

''விரிகதிர் மதிமுக மடநடை கணவனொ
டரியுறு கொழுநிழல் அசையின பொழுதினில்
எரிதரு தளிர்சினை இதழ்மிசை உறைவோன்
தரவிலன் எனின்மனம் உரைமினம் எனவே''

வஞ்சிப்பா

வஞ்சிப்பா தூங்கல் இசையைப் பெறும்; அது தனிச் சொல்லோடு புணர்ந்து ஆசிரியச் சுரிதகத்தால் இறும்.[90]

ஏந்திசைத் தூங்கல், அகவல் தூங்கல், பிரிந்திசைத் தூங்கல் எனத் தூங்கல் ஓசை மூன்று வகைப்படும். ஒன்றிய வஞ்சித் தளையே வருவது ஏந்திசைத் தூங்கல்; ஒன்றாத வஞ்சித் தளையே வருவது அகவல் தூங்கல்; இவ்விரு தளைகளும் பிறதளைகளும் மயங்கி வருவது பிரிந்திசைத் தூங்கல் என்பர். இஃது குறளடியானும் சிந்தடியானும் வரும்.

''நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை'' —சூ. 88.

''அளவடி நான்கின கலிவிருத் தம்மே'' —சூ. 89.

''தூங்கல் இசையன வஞ்சி; மற்றவை
ஆய்ந்த தனிச்சொலோ டகவலின் இறுமே'' —சூ. 90.

'சுற்றும்நீர் சூழ் கிடங்கில்
பொற்றாமரைப் பூம்படப்பைத் தெண்ணீர்
நல்வயல் ஊரன் கேண்மை
அல்லிருங் கூந்தற்கு அலரா னாதே'

பாவினம்

இருசீர் அடி நான்காய் ஒரு பொருள் மேல் மூன்றாய் வருவன வஞ்சித் தாழிசை; ஒரு செய்யுள் மட்டும் வருவது வஞ்சித்துறை.[91]

'மார்வுற அணிந்தாலும்
மார்வுறாய் மணிவடமே
தோளுறச் செறித்தாலும்
தோளுறாய் கிளர்வளையே'

இஃது ஒரு பொருள்மேல் ஒன்றாய் வந்த வஞ்சி நிலைத் துறை. மூன்று செய்யுள்கள் வந்தால் வஞ்சித் தாழிசை யாகும்.

முச்சீர் அடி நான்கு பெற்று வரும் செய்யுள் வஞ்சி விருத்தம் என்பர். ஒரே செய்யுளாக வரும்என தெரிகிறது.[92]

"முந்து கொன்ற மொய்ம்பினான்
வந்து தோன்ற வார்சிலை
அம்பின் எய்து கொன்றதாய்க்
கின்பம் எய்து வித்தபின்"

மருட்பா

வெண்பா முதல வந்து ஆசிரியமாய் இறுவது மருட்பா ஆகும். அவை புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ என இம்மூன்று பொருள்களில் வரும்.

"குறளடி நான்மையில் கோவை மூன்றாய்
வருவன வஞ்சித் தாழிசை; தனிவரின்
துறையென மொழிப துணிந்திசி னோரே" —சூ. 91.

"சிந்தடி நான்காய் வருவது வஞ்சியது
எஞ்சா விருத்தம் என்மனார் புலவர்" —சூ. 92.

'தென்றல் இடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றில் முகைவிரியும் முத்தநீர்த் தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றான் நிற்காப்ப என்றும்
தீரா நண்பின் தேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே'

இது புறநிலை மருட்பா.

மெய்ப்பொருள் கூறும் பா வாயுறை வாழ்த்து மருட்பா எனப்படும்.

செவியுறை என்பது ஆன்ற ஒழுக்கம் சான்று விளங்குதல் கடன் என அறிவித்தல்.

இம் மூன்று பொருள்களேயன்றிக் கைக்கிளையும் வெண்பா முதலாக ஆசிரியம் இறுதியாக வரும் மருட்பாவைப் பெறும்.

"கைக்கிளை தானே வெண்பா வாகி
ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே"

"வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ"

—தொல். செய். 104.

"வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே"

—தொல். செய். 111.

"செவியுறை தானே
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடன்எனச் செவியுறுத் தன்றே"

—தொல், செய். 113.

"திருநுதல் வேரரும்பும் தேங்கோதை வாடும்
இருநிலம் சேவடி தோயும்—அரிபரந்த
போகிதழ் உண்கணும் இமைக்கும்
ஆகும் மற்றிவள் அகலிடத் தணங்கே"

இது கைக்கிளைபற்றி வந்த மருட்பா.

வெண்பாவடியும் ஆசிரியவடியும் சம நிலையில் வந்தால் அவை சமநிலை மருட்பா வாகும். ஒவ்வாது வருவனவற்றை வியனிலை மருட்பா என்றும் கூறுவர். கலி அடியும் வஞ்சியடியும் மருட்பாவில் இடம்பெறா.

எல்லாப் பாக்களுக்கும் புறனடை

அடிகள் சற்றேறக் குறைய மிகுந்தும் குறைந்தும் வந்தாலும் மிகுதிபற்றிப் பாடல்கள் வரையறை செய்யப் படும் என்பர்.[88]

"மிக்கும் குறைந்தும் வரினும் ஒருபுடை
ஒப்புமை நோக்கி ஒழிந்தவும் கொளலே" —சூ. 93.

8. அகத்திணையியல்

பொருளியல்

தமிழ் இலக்கியம் அகப்பொருள் புறப்பொருள் பற்றிய பாகுபாடுகளைக் கொண்டதாக விளங்கியது. இதனைக் கூறுவதே பொருளியலாகத் தொல்காப்பியனார் கொண்டார் எனத் தெரிகிறது. இதனை அகம் புறம் என்ற பாகுபாட்டோடு விளக்கி, அகப்பொருள் நுட்பங்களை மட்டும் களவியல் கற்பியல் பொருளியல்களில் சுட்டிக்காட்டி அமைந்திருப்பது போற்றத்தக்கதாகும். பொருள்களுக்கு எடுத்தாளப்பட்ட சொல்மரபுகளை மரபியல் உணர்த்தக் காண்கிறோம். மெய்ப்பாடும் உவமையும் இப் பொருள்களைக் கிளத்தற்கண் தோன்றும் சுவையும் அணியும் ஆகும். செய்யுளியல் யாப்பியல் ஆகும். இவ்வொன்பது இயல்களைக் கொண்டதே பொருளதிகாரம் எனப்படுகிறது.

ஏழு திணைகள்

அகப்பொருள் ஏழு திணைகளைக் கொண்டது. அவை கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்பன.[1]

கை என்பதற்குச் சிறுமை என இளம்பூரணர் உரை கொள்வர். கிளை என்பது உறவு. பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்பர். நச்சினார்க்கினியர் தரும் விளக்கமே

---

1. "கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப" —சூ. 1.

பொருந்துவதாக உள்ளது. கைக்கிளை என்பது ஒரு மருங்கு பற்றிய கேண்மை என்பர் நச்சினார்க்கினியர்.

பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். எண்வகை மணத்தினும் பிரமம்,* பிரசாபத்தியம்,* ஆரிடம்,* தெய்வம்* என்பன பெருந்திணைப்பாற் படுதலானும், இந் நான்குமணம் மேன்மக்கள்மாட்டு நிகழ்வதானும், இவை உலகினுள் பெருவழக்கு எனப் பயின்று வருதலானும், இது பெருந்திணை எனப்பட்டது.

மேற் சொல்லப்பட்ட ஏழுதிணையுள் நடுவண் ஐந்திணை யாகிய குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய இவற்றுள் பாலைமட்டும் தனக்கு என ஓர் நிலம் பெறுவது இல்லை. இவ்வைந்து திணைகளும் உரிப்பொருள் பற்றியே பெயர் பெற்றன என்பர்.[2]

சான்றோர் செய்யுளகத்துப் பயின்ற பொருளை ஆராயுங் கால் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்னும் மூன்று பொருள்கள் காணப்படும். அவை ஒன்றனின் ஒன்று முறைமையாற் சிறந்தனவாகும்.

முறைமையாற் சிறத்தலாவது முதல் கரு உரி மூன்றும் அமையத் திணையாகும்; முதல் இன்றிக் கரு உரி இவை மட்டும் வந்தாலும் திணையாகும்; உரிப்பொருள் ஒன்றே வந்தும் அது திணையாகிறது. எனவே, முதலைவிடக் கருவும் கருவைவிட உரியும் இன்றியமையாதன என்பதாகிறது.[3]

"அவற்றுள்,
நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே" —சூ. 2.

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முறைசிறந் தனவே
பாடலுள் பயின்றவை நாடுங் காலை" —சூ. 3.

முதற்பொருள்

நிலமும் பொழுதும் முதற்பொருள் என்பர்.[4] முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நிலம் நான்கு வகைப்படும். முல்லைக்குத் தெய்வம் திருமால்; குறிஞ்சிக்குத் தெய்வம் முருகன்; மருதத்திற்குத் தெய்வம் இந்திரன்; நெய்தலுக்குத் தெய்வம் வருணன்.[5]

நிலத்தின் பெயரால் உரிப்பொருள் சிறப்புப் பெறுகிறது. அவ்வொழுக்கங்கள் அவ்வந் நிலப் பெயர்களாலேயே வழங்கப்பெறுகின்றன. இவை அவ்வந்நிலங்களில் வழங்கிய மரஞ் செடிகளைக் கொண்டே பெயர் பெற்றன என்பர். காடுறை உலகிற்கு முல்லைப் பூவும், மைவரை உலகிற்குக் குறிஞ்சிப் பூவும், தீம்புனல் உலகிற்கு மருதமும், பெருமணல் உலகிற்கு நெய்தலும் சிறந்தவை என்பது இலக்கிய வழக்கால் பெறப்படுகின்றது. பாலைக்கு நிலம் இன்றேனும், அதற்குரிய வேனில் - காலத்தில் தளிரும் இலையும் வாடுதலின்றி நிற்பது பாலை என்பதோர் மரம் உண்டாகலின், அச்சிறப்பு நோக்கிப் பாலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கைக்கிளை பெருந்திணைகட்கு நிலமும் காலமும் இன்மையின் இவ்வாறன்றிப் பிறிதோர் காரணம்பற்றி அவை பெயர் பெற்றன.

காலம்

காரும் மாலையும் முல்லைக்குரிய காலமாகும். கார் பெரும்பொழுது; மாலை சிறு பொழுது.[6] காராவது மழை

"முதல்எனப் படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பு என மொழிப இயல்புணர்ந் தோரே" —சூ. 4.

'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே' —சூ. 5.

"காரும் மாலையும் முல்லை" —சூ. 6.

பெய்யும் காலம். அஃது ஆவணித் திங்களும் புரட்டாசித் திங்களும். மாலையாவது இராப்பொழுதின் முற்கூறு.

குறிஞ்சித் திணைக்குப் பெரும்பொழுது கூதிர்; சிறு பொழுது யாமம். கூதிராவது ஐப்பசித் திங்களும் கார்த்திகைத் திங்களும். யாமமாவது இராப்பொழுதின் நடுக் கூறு.[7] இதற்கு முன்பனிக் காலமும் உரியது. முன்பனிக் காலமாவது மார்கழித் திங்களும் தைத் திங்களும்.[8]

வைகறையும் விடியலும் மருதத்திற்கு உரிய சிறு பொழுதுகளாம். வைகறையாவது இராப் பொழுதின் பிற்கூறு; விடியலாவது பகற்பொழுதின் முற்கூறு. பருவம் வரைந்து ஓதிற்றிலர்; அறுவகைப் பருவமும் மருதத்திற்குக் கொள்ளப்படும். இது நெய்தலுக்கும் பொருந்தும்.[9]

எற்படு பொழுது நெய்தல் திணைக்கு உரியது. எற்பாடாவது பகற்பொழுதின் பிற்கூறு.[10]

பாலைக்கு வேனிற் காலமும் நண்பகற் பொழுதும் உரியன. இஃது இளவேனில் முதுவேனில் என்னும் இரு வகைப் பருவத்தின்கண்ணும் வரும். நண்பகற் பொழுது காலமாம் என்பதும் ஆண்டு இயங்கும் நெறி நிலமாம் என்பதும் உணர்த்தப்பட்டன. இளவேனிலாவ்து சித்திரைத் திங்களும் வைகாசித திங்களும். முதுவேனிலாவது ஆனித் திங்களும், ஆடித் திங்களும். நண்பகலாவது பகற்பொழுதின் நடுக்கூறு.[11] பாலைக்குப் பின்பனிக்காலமும் உரித்து என்று

---

7. "குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்" —சூ. 7.
8. "பனிஎதிர் பருவமும் உரித்தென மொழிப" —சூ. 8.
9. "வைகறை விடியல் மருதம்" —சூ. 9.
10. "எற்பாடு, நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்" —சூ. 10.
11. "நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே" —சூ. 11,

கூறுவர். அஃது வேனில் போலச் சிறப்பினது அன்று பின்பனியாவது மாசித் திங்களும் பங்குனித் திங்களும்.[12]

வேனில் காலத்து வெப்பத்தால் கவின் அழிந்து கிடக்கும் புதரும் மரனும் மழை முழங்கக் கவின்பெறும் ஆதலின், அதற்குக் கார்காலம் சிறந்தது. மாலைப்பொழுது முல்லை மலரும் காலமாதலானும், ஆனிரை வீடுவருங் காலமாதலானும் அவை கண்டுழித் தனியிருப்பார்க்கு வருத்தம் மிகுதலின் அதுவும் சிறந்தது ஆயிற்று.

குறிஞ்சி ஒழுக்கத்திற்குத் தனிமை வேண்டப்படுவது ஒன்று ஆகும். கூதிர்காலத்துப் பகலும் இரவும் நுண்துளி சிதறி இயங்குவார் இலராம் ஆகலின், ஆண்டுத் தனிப்படல் எளிது ஆதலின் கூதிர்ப்பருவம் குறிஞ்சிக்குச் சிறந்தது. நடு இரவு யாமமும் அவ்வாறுகலின் அதுவும் சிறந்தது.

மருத நிலத்து மேன்மக்கள் பரத்தை இல்லத்தினின்று திரும்பத் தம் மனையகம் பிறர் அறியாமல் வருவதற்கு வைகறையே சிறந்தது. மனைவி ஊடல் கொள்ளுதல் அதனை அடுத்து வரும் விடியற்பொழுது. எனவே, இவ்விரு பொழுதுகளும் மருதத்திற்குச் சிறந்தன.

நெய்தற்குப் பெரும்பான்மையும் இரக்கம் பொருளாதலின், தனிமையுற்று இரங்குவார்க்குப் பகற்பொழுதினும் இரவுப்பொழுது நீள்வு உடையதும், மாலைப் பொழுது அறிவிக்கும் எற்பாடு கண்டு வருத்தம் கொள்ளுதலின் எற்பாடு நெய்தலுக்குச் சிறந்தது.

பாலைப் பொருளாவது பிரிவு. அப் பிரிவின்கண் தலைமகனுக்கு வருத்தம் உறும் என்று தலைவி கவலுங்கால் நிழலும் நீரும் இல்லாத வழி ஏகினர் எனக் கவலை கொள்வாள் ஆதலின் அப் பிரிவிற்கு வேனில் சிறந்தது ஆகும்.

"பின்பனி தானும் உரித்தென மொழிப" —சூ. 12.

பாலைக்கு உரிய பொருள்

தலைமகளைப் பிரிந்து தான் மட்டும் செல்லுதலும், அவளை உடன் அழைத்துத் தமரினின்று பிரிதலும் எனப் பிரிவு இருவகைப்படும்.[13]

திணைமயக்கம்

ஒரு திணைக்கு உரிய கருப்பொருளும் காலமும் மற்றொரு திணையின்கண் வருதலும் உண்டு. இதனைத் திணை மயக்கம் என்பர். உரிப்பொருளும் நிலமும் மயங்குவது இல்லை என வற்புறுத்தப்படுகிறது.[14]

உரிப்பொருள்கள்

புணர்தலும், பிரிதலும், இருத்தலும், இரங்கலும், ஊடலும், அவற்றின் நிமித்தமும் என்று சொல்லப்படும் இவை ஐந்திணைக்கு உரிய பொருளாம்.[16]

இவை முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் இவற்றிற்கு உரியனவாகும். இருத்தலாவது தலைமகன் வருந்துணையும் ஆற்றியிருத்தல். இரங்கலாவது ஆற்றாமை.

தலைவன், தான் பிரிதலேயன்றித் தலைவியை உடன் கொண்டு செல்லுதலும், ஒருவரை ஒருவர் அடையப்

"இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலும்
உரிய தாகும் என்மனார் புலவர்" —சூ. 13.

"திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே
நில னொருங்கு மயங்குதல் இல்லென மொழிப
புலன்நன் குணர்ந்த புலமை யோரே." —சூ. 14.

"உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே" —சூ. 15.

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே" —சூ. 16.

பெறுமல் தனித்திருந்து இரங்கலும் உரிப்பொருளே என்பர்.[17]

தலைவனைக் கண்ணுற்ற வழித் தலைவிக்கு உளதாம் மன நெகிழ்ச்சியும், அவ்வாறே தலைவன் அவளைக் காணுங்கால் அவனுக்கு உளதாம் மன நெகிழ்ச்சியும், புணர்தலும் புணர் தல் நிமித்தம் எனக் கூறப்படாது; அதற்குக் காரணமாகிய கைக்கிளையின்பாற்படும் என்பதாம்.[18] கைக்கிளை குறிஞ்சிக் குத் துணைசெய்யவும் செய்யலாம்; அல்லது இருமருங்கு பற்றிய கேண்மையாக மாருமலும் நின்றுவிடலாம். அதனுல் இது வேறு ஓதப்பட்டது.

உடன் கொண்டு செல்லுங்கால் நிலம் பெயர்தலின் புணர்தலின் அடங்காது; எனவே இது வேறு ஓதப்பட்டது என்பர்.

பிரிந்து அவண் இரங்கல் என்பது நாடியவழிச் செல்லும் பாலைப்பிரிவும் இன்றி, ஒருவழித் தணப்பும் இன்றி, ஒருவரை ஒருவர் அடையப் பெறுமல் இரங்கும் இரக்கம். எனவே இது வேறு ஓதப்பட்டது என்பர். ஏறிய மடற்றிறமும், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறமும் பிரிந்தவண் இரங் கலில் அடங்கும் என்பது அவர் கருத்து. எனவே, இது பெருந்திணைக்கு உரித்து என்பர்.

முதற்பொருள்

முதற்பொருள் நிலமும் பொழுதும் என இருவகைப் படும்.[19] தெய்வம், உணவு, விலங்கு, மரம், புள், பறை

"கொண்டுதலைக் கழிதலும் பிரிந்து அவண் இரங்கலும்
உண்டெனமொழிப ஓரிடத் தான" —சூ. 17.

"கலந்த பொழுதும் காட்சியன்ன" —சூ. 18.

"முதல் எனப் படுவது ஆயிரு வகைத்தே" —சூ.19.

செய்தி, யாழின் பகுதி இவையும், இன்ன பிறவும் கருப் பொருள் என்பர்.[20]

முல்லைக்குத் தெய்வம் திருமால்; உணவு வரகும் முதிரையும். விலங்கு மானும் முயலும்; மரம் கொன்றையும் குருந்தும் புதலும்; புள் கானங்கோழி; பறை ஏறுகோட் பறை; செய்தி நிரை மேய்த்தல்; யாழின் பகுதி பண்; அது சாதாரிப் பண்; பிறவும் என்றதால் பூ முல்லையும் பிடவும் தளவும்; நீர் கான்யாறு; பிறவும் இந்நிகரன கொள்க.

ஒரு நிலத்திற்கு உரிய பூவும் புள்ளும் அந்நிலத்தொடும் பொழுதொடும் வந்திலவாயினும் வந்த நிலத்தின் பயத்த வாகும். எனவே பிற நிலத்திற்கு உரிய பூவும் புள்ளும் வருதல் உண்டு என்பதாம். இது திணை மயக்கம் அன்று என்பர் உரையாசிரியர். எனவே, இது அருகிவரும் வழக்கன்று என்பதும், நியதி வழக்கு என்பதும் அறிவித்தவாறு[21]

திணைதொறும் மருவிய திணைநிலப் பெயரும், குலப் பெயரும் தொழிற்பெயரும் என இருவகைப்படும்.[22] ஈண்டுத் திணைநிலைப் பெயர் என்றது எல்லா நிலத்திற்கும் உரிய மேன்மக்களைக் குறிப்பிடாமல், அவ்வந்நிலங்களையே உரிமையாகக் கொண்டு வாழும் நிலமக்களைக் குறித்தது என்பர். அந் நிலமக்கள் கீழ்மக்கள் என்பர் உரையாசிரியர். அவர்களுள் தலைமக்கள் ஆதற்கு உரிய சிறப்பும் உள. ஆயர் வேட்டுவர் என்பர் தலைமக்களாக வருதற்கும் உரியர்.[23]

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவன மொழிப" —சூ. 20.

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும்" —சூ. 21.

"பெயரும் வினையும் என்று ஆயிரு வகைய
திணைதொறும் மரீஇய திணைநிலப் பெயரே" —சூ. 22.

முல்லைக்கும் குறிஞ்சிக்கும் உரிய ஆயர் வேட்டுவரே யன்றி ஏனைய நிலத்திலும் தலைமக்களாக ஆதற்கு உரியரும் உளர்.[23]

குறிஞ்சிக்கு மக்கட் பெயர் குறவன் குறத்தி என்பன; தலைமக்கட் பெயர் மலைநாடன் வெற்பன் என்பன.

பாலைக்கு மக்கட் பெயர் எயினர் எயிற்றியர் என்பன; தலைமக்கட் பெயர் மீளி விடலை என்பன.

மருதத்திற்கு உழவர் உழத்தியர் மக்கட் பெயர்; ஊரன் மகிழ்நன் என்பன தலைமக்கட் பெயர்.

நெய்தலுக்கு மக்கட் பெயர் நுளையர் நுளைச்சியர்; தலைமக்கட் பெயர் சேர்ப்பன், துறைவன், கொண்கன் என்பன; பிறவும் அன்ன.[24]

ஐந்திணை நிலம், காலம், கருப்பொருள், உரிப் பொருள், நிலமக்கள் தலைமக்களால் வரும் எனவும், கைக்கிளை பெருந்திணை மட்டும் உரிப்பொருளான் வரும் எனவும் இதுகாறும் கூறப்பெற்றது என்பர் உரையாசிரியர். —பக் 21.

கைக்கிளை பெருந்திணைக்குரிய தலைமக்கள்

ஐந்திணைப் புறத்தவாகிய கைக்கிளை பெருந்திணைக்கண் அடித்தொழில் செய்வார் பக்கத்திலும், வினை செய்வார் பக்கத்திலும், மேற்சொல்லப்பட்ட புணர்தல் முதலான பொருளைக் கூறுதல் கடிந்து நீக்கும் நிலைமை இல்லை[25].

"ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வருஉம் கிழவரும் உளரே" — சூ. 23.

"ஏனோர் மருங்கினும் எண்ணுங் காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே." —சூ. 24.

"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை இலபுறத்து என்மனார் புலவர்" —சூ. 25.

இவர் அகத்திணைக்கு உரியர் அல்லர். பிறர்க்குக் குற்றேவல் செய்வார்க்கு அத்திணையியல் ஒழுக்கம் அரிது அவர்கள் நாணுக் குறைபாடு உடையர்; குறிப்பறியாது வேட்கைவழியே சாரக் கருதுவர்; இன்பம் இனிது நடத்துவார் பிறர் ஏவல் செய்யாதாராவர். எனவே, இவர் புறப் பொருட்கு உரியர் ஆவரே அன்றி, அன்பின் ஐந்திணைக்கு உரியர் ஆகார் என்பர் உரையாசிரியர்.

கைக்கிளை பெருந்திணைகள் கீழ்மக்களது ஒழுகலாறு எனினும், அவரை ஏவல் கொள்ளும் உயர் மக்களும் ஒரு சில இடத்துத் தாழ்ந்து கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் உரியராகி விடுகின்றனர். அறம் பொருள் இன்பம் வழுவ மகளிரைக் காதலித்தல் உயர்ந்தோர் மாட்டும் காணப்படும் இயல்பாகும் என்பதாம்.[26]

பாலைக்கு உரிய ஒழுகலாறுகள்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் இவை தமக்கு என நிலப்பாகுபாடு பெற்றவை. இந்நான்கு திணையும் களவு, கற்பு என்னும் இருவகைக் கைகோளினும் நிகழ்தலின் அவற்றைக் களவியல் கற்பியலில் கூறுகின்றார். அவற்றை ஒழித்து நிலம் பகுக்கப்படாத கைக்கிளை பெருந்திணையும் பாலையும் இவ் அகத்திணையியலில் இடம்பெறுகின்றன. முதற்கண் பாலைக்கு உரிய பிரிவு உணர்த்துவான் பிரிவுக்கு உரிய நிமித்தங்களை ஆசிரியர் ஈண்டுக் குறிப்பிடுகிறார் என்பர் உரையாசிரியர்.

ஓதல், பகை, தூது இவைபற்றிப் பிரிவு நிகழ்ந்தது.[27] பிற நாடு சென்று புதியன கற்றல் ஓதல்; மாற்று வேந்தரோடு போர்கருதிப் பிரிதல் பகை; இருபெரு வேந்தரைச் சந்து செய்வித்தற் பொருட்டுப் பிரிதல் தூது எனப்படும்.

"ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும் அன்னர்" —சூ. 26

"ஓதல் பகையே தூதிவை பிரிவே." —சூ. 27

அவற்றுள் ஓதலும் தூதும் உயர்மக்களுக்கு உரிய. அவ் உயர் மக்களாக அரசரையும் அந்தணரையும் உரையாசிரியர் குறிப்பிடுவர்.[28]

போர்க்கண் அரசன் தானே செல்லுதலும் தன்னொடு பொருந்தி ஏனையோர் செல்லுதலும் போர்க் காரணமாக நிகழும் பிரிவுகளாம்.[29]

தெய்வ வழிபாட்டுக்கும், மக்கள் முறை தவறி அறம் வழுவின் அவர்களை அறவழிக்கண் நிறுத்தற்கும், பொருட் காரணமாகவும் பிரிவு நிகழும் என்பர். எனவே அறம் பொருள் இவை காரணமாகப் பிரிவு அரசர்க்கும் ஏனையோர்க்கும் நிகழும் என்றவாறும்.[30]

சேரன் செங்குட்டுவன் கண்ணகியைக் கடவுள் மங்கலம் செய்தற்குப் பிரிந்த பிரிவு சிலப்பதிகாரத்தில் வந்துள்ளது என்பர். எனவே பிரிவு ஓதல், பகை, தூது, தெய்வ வழிபாடு, அறம், பொருள் என ஆறுபற்றி நிகழும் என்பதாயிற்று. இவை நிலம் பெயர்ந்து அமைவனவாம். பரத்தையிற் பிரிவு நிலம் பெயர்ந்து உறையாமையான் அது கற்பியலுள் கூறப்பட்டது என்பர்.

தெய்வ வழிபாட்டுப் பிரிவு உயர்குடி மக்களாகிய அரசர் அந்தணர் வணிகர் வேளாளர் ஆகும் நால்வருக்கும் உரித்து.[31] காவல் பிரிவுக்கு அரசரேயன்றி அவன் ஏவல்

"அவற்றுள்
ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன." —சூ. 28.

"தானே சேறலும் தன்னொடு சிவணி
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே." —சூ. 29.

"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையாது ஆகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே." —சூ. 30.

"மேலோர் முறைமை நால்வர்க்கும்
உரித்தே" —சூ. 31.

வழி நின்று பணியாற்றும் வணிகரும் வேளாளரும் உரியர்;[32]

ஓதுதல் நிமித்தமாகப் பிரிதல் உயர்ந்தோர்க்கு உரிய.[33] அவ் உயர்ந்தோர் வணிகர் என்பர் உரையாசிரியர். தூதுப் பிரிவு அரசர்க்கே யன்றி அமைச்சராகப் பணியாற்றும் வணிகர் வேளாளர்க்கும் உரியது என்பர்.[34]

பொருள் வயிற் பிரிதலும் வணிகர் வேளாளர்க்கு உரியது என்பர்.[35] அந்தணர் பொருள்வயிற் பிரிதல் என்பது ஆசாரமும் கல்வி பற்றிபம் அமையும் என்பதாம்.[36] கலத்தில் செல்லுங்கால் தலைவியை உடன்கொண்டு செல்லும் வழக்கு இல்லை. எனவே நிலப்பிரிவு தலைமகளோடும் அமை யும் என்பதாம்.[37]

கைக்கிளை பெருந்திணைக்குரிய இயல்பு

எல்லாக் குலத்தினிடத்தும் மகளிர் மடலேறுதல் இல்லை. கற்புடை மகளிர்க்கு அது பொற்புடை நெறி ஆகாது.[38] எனவே, மடலேறுதல் என்பது ஆடவர்க்கு உரிய செய்தி யாகும் என்பதாம்.

நற்றாய் புலம்பல்

உடன் போக்கின்கண் தலைமகளின் பிரிவுக்கு ஆற்றாது நற்றாய் புலம்பலுக்கு உரியள். செவிலியும் இப் புலம்பலுக்கு உரியள் என்பர் உரையாசிரியர்.

"மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப." —சூ. 32.

"உயர்ந்தோர்க்கு உரிய ஓத்தினான்." —சூ. 33.

"வேந்துவினை இயற்கை வேந்தன் ஒரீஇய
ஏனோர் மருங்கினும் எய்திடன் உடைத்தே" —சூ. 34.

"பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே"—சூ. 35.

"உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத் தான." —சூ. 36.

"முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை." —சூ. 37.

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான" —சூ. 38.

தலைமகள் உடன் போகியவழி நற்றாய் தன்னையும் அவளையும் சுட்டி நிமித்தம், மொழிப்பொருள், தெய்வம் என்பனவற்றோடு தனக்கும் அவர்க்கும் உளவாகிய நன்மை, தீமை, அச்சம், சார்தல் என்பனவற்றையும், அன்ன பிறவற்றையும், குறித்த காலம் மூன்றும் ஒருங்கு தோற்று வித்துத் தோழி மாட்டும் கண்டோர் மாட்டும் புலம்பலும், அவ்வழி நிகழும் கூற்றும் உரிய என்பர்.[39]

குறித்த காலம் மூன்றுடன் விளக்குதலாவது முன்பு இத் தன்மையளாயினாள், இப்பொழுது இத் தன்மையளாகா நின்றாள்; மேல் இன்னள் ஆகுவள் என மூன்று காலமும் ஒருங்கு தோற்றுவித்துப் புலம்புதல்.

செவிலித் தாயின் செலவு

ஊர்ச்சேரியின் கண்ணும், ஊரினின்றும் நீங்கிய சுரத்தின் கண்ணும் தாமே செல்லும் தாயரும் உளர்.[40] தாமே செல் லும் தாயர் என்பதனால் செவிலி என்பது பெற்றாம்.

சேரியினும் சுரத்தினும் பிரிதலின்றித் தமது மனையயற் கண் பிரிந்தாராயினும் அதுவும் பிரிவின் கண்ணதாகும்.[41]

எனவே, ஓர் ஊரகத்து மனையயற்கண்ணும் பரத்தையிற் பிரிவு பாலையாம் என்பதும் பெறப்படுகிறது.

"தன்னும் அவனும் அவளும் சுட்டி
மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சம் சார்தல் என்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ
முன்னிய காலம் மூன்றொடு விளக்கித்
தோழி தேஎத்துங் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியும் அவ்வழி உரிய." —சூ. 39.

"ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்
தாமே செல்லும் தாயரும் உளரே." —சூ. 40.

"அயலோர் ஆயினும் அகற்சி மேற்றே." —சூ. 41.

பிரிவின்கண் தோழிக்குக் கூற்று நிகழும் இடங்கள்

பின்பு வரும் நோய்நிலையை எடுத்துக் கூறுதற்கண்ணும், உடன்கொண்டுபெயர்க என்று கூறுதற்கண்ணும், தலைமகன் உடன்போக்கு ஒருப்பட்டமை தலைமகளுக்குக் கூறி அவளை விடுத்தற்கண்ணும், தமரை நீக்குதலால் தமக்குற்ற நோயின் கண்ணும், மெய்ம்மையும் பொய்ம்மையும் காணப்பட்ட அவனைச் சுட்டித் தாய்நிலை நோக்கி மீட்டுக்கொள்ளுதற் கண்ணும், தலைமகன் பிரிதலால் வந்துற்ற நோய் மிகவும் பெருகித் தன் நெஞ்சு கலங்கியோளை அழிந்தது களைதல் வேண்டுமெனத் தலைமகன் சொன்ன மாற்றத்தைக் கூறி, வன்புறையின் பொருட்டு நெருங்கி வருமிடத்தும் தோழியின் பால் கூற்றுகள் நிகழும் என்பர்.[42]

கண்டோர் கூற்று நிகழும் இடம்

காலமும் நெறியும் அச்சம் வருமாறு தோன்றி வழுவுதலினாகிய குற்றம் காட்டலும், ஊரது அணிமையும் செல்லும் தேயத்தின் சேய்மையும் ஆர்வ நெஞ்சமொடு செப்பிய திறத்தினும், புணர்ந்து செல்கின்றோர் மாட்டு விரும்பின நெஞ்சத்தோடு மனம் அழிந்து எதிர்மொழி கூறி விடுத்தற்கண்ணும், ஆண்டுப் பின்சென்ற அச் செவிலித்

"தலைவரும் விழும நிலைஎடுத் துரைப்பினும்
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்
வாய்மையும் பொய்மையும் கண்டோர்ச் சுட்டித்
தாய்நிலை நோக்கித் தலைபெயர்த்துக் கொளினும்
நோய்மிகப் பொருந்தித்தன் நெஞ்சுகலிழ்ந் தோளை
அழிந்தது களையென மொழிந்தது கூறி
வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தொடு
என்றிவை எல்லாம் இயல்புற நாடின்
ஒன்றித் தோன்றும் தோழி மேன" —சூ. 42

தாயது நிலைமையைக் கண்டு போகாமல் தடுத்தற் கண்ணும், போக விடுத்தற் கண்ணும், சேய்மைக்கண் அகன்றோர் செல்லுதற்கண்ணும், வரவின்கண்ணும், இவ்விடங்களில் எல்லாம் கண்டோர் சொல்லுதல் வழக்கிற் காணப்பட்டது என்பர்.[48]

பிரிவின்கண் தலைமகனுக்குக் கூற்று நிகழும் இடம்

வரைவு உடன்படாத தமர்க்கண்ணும், பருவத்தின் கண்ணும், சுரத்தின்கண்ணும், பொருந்திய சொல்லொடு தலைமகளைத் தலைமகன் உடன்கொண்டுபோகத் துணியினும் விடுத்துப் போகினும் தலைவனுக்குக் கூற்று நிகழும்[1]

தலைமகன் செல்கின்ற இடைச்சுரத்திடைத் தலைமகளின் தமர் எய்தி மீட்டுக்கொண்டு பெயர்தல் மரபாதலின் அங்ஙனம் பெயர்வார் எனக் கலங்கி வருத்தமுற்றுக் கற்பொடு புணர்ந்த அலர் உளப்பட அப்பகுதிப்பட்ட உடன் போக்கின்கண்ணும் அவனுக்குக் கூற்று நிகழும்.[2]

"பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி
வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்
ஊரது சார்பும் செல்லுந் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்
புணர்ந்தோர் பாங்கில் புணர்ந்த நெஞ்சமொடு
அழிந்து எதிர்கூறி விடுப்பினும் ஆங்கத்
தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்
சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்டது என்ப" —சூ. 43.

"ஒன்றாத் தமரினும் பருவத்தும் சுரத்தும்
ஒன்றிய மொழியொடு வலிப்பினும் விடுப்பினும்" —1.

"இடைச்சுர மருங்கில் அவள்தமர் எய்திக்
கடைக்கொண்டு பெயர்தலிற் கலங்கஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட
அப்பாற் பட்ட ஒருதிறத் தானும்" —2.

நாளது சின்மை முதலாகச் சொல்லப்பட்ட எட்டினையும் பொருந்தாத பொருள்களை ஊக்கிய பக்கத்தினும் அவனுக்குக் கூற்று நிகழும்.'

நாளது சின்மையை ஒன்றுமை:—யாக்கை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை.

இளமையது அருமையை ஒன்றுமை:—இளமை நிலையாது என்னும் உணர்ச்சியைப் பொருந்தாமை.

தாளாண் பக்கத்தை ஒன்றுமை:—முயற்சியால் வரும் வருத்தத்தைச் சிந்தியாமை.

தகுதியது காதலை ஒன்றுமை:—காதல் மிக்கவர்க்குப் பொருள்மேல் விருப்புத் தராது என்பதில் பொருந்தாமை

இன்மையது இளிவை ஒன்றுமை:—இன்மையால் வரும் இளிவரவைப் பொருந்தாமை.

உடைமையது உயர்ச்சியை ஒன்றுமை:—பொருள் உடையர்க்கு அமைவு வேண்டுமன்றே; அவ் வமைவினைப் பொருந்தாமை; அஃதாவது மேன்மேலும் ஆசை செலுத்துதல்.

அன்பினது அகலத்தை ஒன்றுமை: சிறந்தார் மாட்டுச் செல்லும் அன்பினைப் பொருந்தாமை.

அகற்சியது அருமையை ஒன்றுமை: பிரிவருமையைப் பொருந்தாமை.'

பொருள் தேடுவார் இத் தன்மையராதல் வேண்டுமென ஒருவாற்றான் அதற்கு இலக்கணம் கூறியவாறு.

"நாளது சின்மையும் இளமையது அருமையும்
தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும்
இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்
அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்
ஒன்றாப் பொருள் வயின் ஊக்கிய பாலினும்" —3.

ஓதுதல், படைக்கலம் பயிறல், சிற்பங் கற்றல், அறப் பயன் இவை கருதிப் பிரிதற்கண்ணும் தலைமகனுக்குக் கூற்று நிகழும்.[4]

பிரிந்ததனால் வரும் புகழும், பிரியாமையால் வரும் குற்றமும் குறித்துத் தலைமகளை யான் வருந்துணையும் ஆற்றி யிருத்தல் வேண்டும் எனக் கூறுதற்கண்ணும் அவனுக்குக் கூற்று நிகழும்.[5]

இருபெரு வேந்தர் இகலியவழிச் சந்து செய்தற்குத் தூதாகிச் செல்லும் வகையின்கண்ணும்,[6] தம் வேந்தனுக்கு உற்றுழிப் பிரியும் பிரிவின்கண்ணும், பகைதணி வினையினும் பாசறைக்கண் தலைவன் புலம்புதல் பெறுமிடத்துத் தனி மொழி இறப்பான்.[7]

வினை முடிந்த காலத்துப் பாகனொடு வினைத்திறத்தினது வகையை விளம்புவான். அது பாசறைக்கட் கூறலும் மீண்டு இடைச்சுரத்துக்[7] கூறலும் என இருவகைப்படும். நெஞ்சிற் குக் கூறியனவும் கொள்க என்பர் உரையாசிரியர்.

காவற் பக்கத்தின்கண் ஒரு பிரிவினும் கூற்று நிகழும். அறங்காவல் செய்தற்குத் தலைமகன் பிரிவான் என்பதாம்.[8]

பரத்தையரிற் பிரியும் பிரிவின்கண்ணும் கூற்று நிகழும்; பிரியப்பட்ட தலைமகளைக் குறுகி இரத்தலும் தெளித்தலும் ஆகிய இரண்டு வகையொடு அவன் கூற்று நிகழும். இது

"வாயினும் கையினும் வகுத்த பக்கமோடு
ஊதியம் கருதிய ஒருதிறத் தானும்" —4.

"புகழும் மானமும் எடுத்துவற் புறுத்தலும்" —5.

"தூதிடை யிட்ட வகையி னானும்" ...6.

"ஆகத் தோன்றும் பாங்கோர் பாங்கினும்
மூன்றன் பகுதியும் மண்டிலத் தருமையும்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலும்" —7.

பரத்தை காரணமாகப் பிரிந்தபின் தலைவியைச் சந்தித்துக் கூறும் கூற்றுகும்.

தலைமகளும், பாங்கனும், பார்ப்பாரும், பாணரும், கூத்தரும் உழையோரும் கூற்று நிகழ்த்தற்கு உரியர்.[45] இவற்றை ஆசிரியர் தொல்காப்பியனார் விரித்துக் கூறிற்றிலர்.

நிகழ்ந்தது நினைத்தலும், நிகழ்ந்தது கூறிப் போகாது ஒழிதலும் பாலைத்திணையேயாம். மரபுநிலை திரியாத மாட்சிமை யுடையவாகி விரவும் பொருளும் விரவும் என்பர்.[48]

அஃதாவது, பாலைக்கு ஓதிய பாசறைப் புலம்பற்கண்ணும் தேர்ப்பாகனுக்குக் கூறுதற்கண்ணும், முல்லைக்கு உரிய முதற்பொருளும் கருப்பொருளும் விரவுதலாம். இந் நிகர பிறவும் கொள்க. மரபுநிலை திரியாமையாவது பாசறைக் கண் வினைமுடிக்காவழிக் கார்காலம் வந்ததாயின் ஆண்டுக் கூறும் கூற்று.

கைக்கிளைக் குறிப்பு

காமம் நிரம்பாத இளையாளிடம் இடும்பை எய்திப் புகழ்தலும் பழித்தலும் ஆகிய இருதிறத்தால் தனக்கும்

மூன்றன் பகுதி என்றது தன்வலியும் துணைவலியும் வினை வலியும் என்பர். மண்டிலத்து அருமை என்றது பகைவர் சூழ்ந்து கொண்ட அருமை. மாற்றோர் மேன்மை—மாற்றோர் உயர்ச்சியானும் வலிமையும் ஆற்றலும் மிக்க பகைவரின் பகைதணி வினையின்கண் என்றவாறும். —8.

"எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே" —சூ. 45.
"நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்" —சூ. 46.
"நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே" —சூ. 47.
"மரபுநிலை திரியா மாட்சிய ஆகி
விரவும் பொருளும் விரவும் என்ப" —சூ. 48

அவளுக்கும் ஒத்தன புணர்த்துச் சொல் எதிர் பெறுனுய்த் தானே சொல்லி இன்புறுதல் கைக்கிளைக் குறிப்பு ஆகும்.[53]

பெருந்திணைக் குறிப்பு

ஏறிய மடல்திறமும், இளமைதீர் திறமும், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறமும், மிக்க காமத்து மாறுய திற னெடும் கூட்டிச் சொல்லப்பட்ட நான்கு திறமும் பெருந் திணைக் குறிப்பு ஆகும்.

மடல் திறம் என்பது தலைவன் மடலேறுவதாகக் கூறும் கூற்று. இளமைதீர்திறமாவது இருவரில் ஒருவர் முதியராதல். முதியராகியும் அறத்தின் மேல் மனம் நிகழ்தலன்றிக் காமத் தின்மேல் மனம் நிகழ்தல். தேறுதல் ஒழிந்த காமத்து மிகு திறமாவது தெளிவுறுத்த இயலாத மிக்க காமம் என்பதாம். மிக்க காமத்து மிடலாவது ஐந்திணை அன்புக்கு மாறுபட்ட நிகழ்ச்சிகள்.

இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழ்ந்த காட்சியும், ஐய மும், தெரிதலும், தேறலும் என்ற குறிப்பு நான்கும் கைக் கிளைக்காம். கைக்கிளை இன்பம்பயப்ப வருவதாம்; பெருந் திணை துன்பம் பயப்ப வருவதாம். புணர்வு இன்றி நிகழ்வது கைக்கிளை; புணர்வுக்குப் பின் நிகழ்வது பெருந்திணை என்பர்.

புலனெறி வழக்கம்

நாடகவழக்காகவும் உலகியல்வழக்காகவும் கற்பனைநயம் தோன்றப் புலவர்புனையும் பாடல்களே அகப்பாடல்கள்

"காமம் சாலா இளமை யோள்வயின்
ஏமம் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னெடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல் எதிர் பெறுஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே." —சூ. 53.

என்பர். இதில் எந்த ஒரு தனிப்பட்ட மனிதரின் உண்மை வரலாறும் இடம் பெறுவது இல்லை. அவ்வாறு இடம் பெற்றாலும் உவமைகளில் புறப்பொருள் செய்திகள் அமைய அதில் மட்டும் சுட்டி ஒருவர் பெயர் கிளக்கப்படும். கலிப்பாட்டும் பரிபாட்டும் அகப்பொருளுக்கே உரிய சிறப்புப் பாடல்களாம். இவை புறத்திற்கு வாரா ஏனைய பாடல்கள் அகத்துக்கும் புறத்துக்கும் பொருந்தி வரும்.[56],[57],[58]

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர். —சூ. 56.

"மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்,
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்' —சூ. 57.

"புறத்திணை மருங்கின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே." —சூ. 58.

9. புறத்திணையியல்

1. வெட்சித் திணை

அகத்திணை ஏழு என்பதற்கு ஏற்பப் புறத்திணை ஏழு என்று கூறுவர். அவற்றுள் வெட்சி என்பது குறிஞ்சித் திணைக்குப் புறனாகும். இது பிறநாட்டுமீது தொடரும் போருக்கு முன் நிகழ்ச்சியாகும். நிரை கவர்ந்து கொண்டு வந்து காத்தல் வெட்சி எனப்படும்.

நிரைகவர்தலும் மலைநாட்டு ஒழுக்கம். வீரர் மலை நாட்டுப் பூக்களை மலைவர். களவு பூண்டு நிரை கவர்வர். எனவே வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயிற்று என்பர்.

ஆதந்து நிறுத்துவது முதற் செய்கை. வீரர்கள் ஆரவாரித்துக் கொற்றவையை வழிபடல் இரண்டாவது செய்கை. பூவும் கழலும் சூடிப் போர்செய்து புகழ் அடைதலும், அவ்வீரர்களைப் பாராட்டுதலும் இத் திணையின் மூன்றாவது நிகழ்ச்சியாகும்.

ஆதந்து நிறுத்துதல்

ஆரவாரத்தோடு பகைவர் படை நிரைகவரச் செல்கிறது. நற்சொல் கேட்டே பயணம் தொடங்குகின்றனர்

"அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே." —சூ. 59

"வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்" —சூ. 60

ஒற்றர்கள் அறியாவண்ணம் பகைவர் நாடு சென்று தங்கி ஊரை முற்றுகையிட்டு நெருப்பிட்டு அழித்துப் பசுநிரையைக் கைக்கொள்கின்றனர். எதிர்ப்பவரைத் தாக்கி வெற்றிகொண்டு பசுநிரையைக் கைப்பற்றி அவை வருந்தாமல் கொண்டுவருவர். தமர் கவலைதீரத் தந்து நிறுத்திப் பகிர்ந்து கொடுப்பர், மறவர் குடித்து மகிழ்ந்து மன நிறைவு பெற்று, பெற்ற வளனை மற்றவர்க்குக் கொடுத்து மகிழ்வர்.

மறவர் வெற்றி

இவ் வரிய செயலை மறம் மிக்க வீரர்களே ஆற்றுவர். அவர்களுக்கு வெற்றி தந்த கொற்றவையைப் பரவிப் பாராட்டி வழிபடுவர்.

வெற்றி விழா

வேலன் வெறியாட்டு நிகழ்த்திக் காந்தள் பூ மலைவான்; வீரர்கள் மூவேந்தர்க்கு உரிய போந்தை, வேம்பு, ஆத்தி சூடி விழாக் கொண்டாடுவர். வள்ளிக் கூத்து நிகழ்த்தி மகிழ்வர்.

வீரக்கழல் அணிந்த நிலை பாராட்டப் பெறுகிறது. உன்ன மரத்து நிலை கொண்டு மன்னனின் நிலை அறிவர். பூவை மலர் நிறம் திருமாலை நினைவுக்குக் கொண்டுவர அதனைப் புகழ்வர்.

"படை இயங்கு அரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே புடைகெட
ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்துஇறை முற்றிய
ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே
நோயின்றி உய்த்தல் நுவல்வழித் தோற்றம்
தந்துநிறை பாதீடு உண்டாட்டுக் கொடை என
வந்த ஈரேழ் வகையிற்று ஆகும். —சூ. 61.

போர் செய்து ஆபெயர்த்துத் தருவர்; அரசன் சிறப்பு எடுத்துப் பேசுவர்; நெடு மொழி பேசித் தம் முயற்சிப் பெருமையைக் கிளப்பர். கரந்தைப்பூச் சூடுவர். எதிர் வரும் தார்ப்படையைத் தடுத்தும் வாள்வடுப்பட்டு மாய்ந்து வீர மரணம் அடைவர். அவனைப் பாராட்டிச் சிறப்புச் செய்வர். கல்லைக்கண்டு கொணர்ந்து நீர்ப்படை செய்து கல் நாட்டி வாழ்த்தி வழிபட்டுப் பாராட்டுவர்.

"மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே. —சூ. 62.
"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும் உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்
வாடா வள்ளி வயவர் ஏத்திய
ஓடாக் கழல்நிலை உளப்பட ஓடா
உடல்வேந்து அடுக்கிய உன்ன நிலையும்
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்
ஆரமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தலும்
தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்
மனைக்குரி மரபினது கரந்தை அன்றியும்
வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தல் என்று
இருவகைப் பட்ட பிள்ளை நிலையும்
வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
நாடவற்கு அருளிய பிள்ளை யாட்டும்
காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று மரபிற் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட எழுமூன்று துறைத்தே."

2. வஞ்சித் திணை

வஞ்சி முல்லையது புறனாகும்; மண் நசையால் வேந்தனை தாக்கிக் கொல்வது வஞ்சித்திணையாகும்.[64]

பகைவனைச் சேரலாகிய வஞ்சிக்கு நிழலும் நீரும் உள்ள காலம் கார்காலமாதலாலும், காடு போர்செய்யும் இடமாதலாலும் வஞ்சித்திணை முல்லையின் புறனாயிற்று.

போர் தொடங்கும்பொழுது ஆரவாரம் மிகுகிறது. பகைவரது நாடு எரிபரந்து ஒளி விளக்கம் பெறுகிறது. தானை விரிவும் பரப்பும் கொண்டதாக விளங்குகிறது. அச் சேனை வீரர்க்குப் பொருளும் உண்டியும் கொடுத்துப் பெருமை படுத்துவான். பாணர் தாமரை மலைகின்றனர்; புலவர் யானையும் தேரும் பெறுகின்றனர்.

பகைவர் பலரையும் அடுத்து மேலிட்டுக் கொன்று வெற்றி பெறுவர். பாராட்டும் பரிசும் பெற்ற வீரர்கள் பெருமைமிக்க சொற்களைப் பேசுவர். பகைவரைப் பொருளாக மதியாது பொரும் ஆண்மைத் திறமும் புனலைத் தடுக்கும் கற்போன்று பகைவர் படைகளை ஒருவனே தாங்கிப் பெருமை பெறுவான். அரசன் பெருஞ்சோறு உண்பிப்பான்.

வென்றவர் விளக்கமும் தோற்றவர் துளக்கமும் பெறுவர். தோற்றோன் திறை அளித்துப் பணிவான். இதனைக் கொற்ற வள்ளை என்பர். தோற்றோர்மீது படை தொடுக்

---

[64] "வஞ்சி தானே முல்லையது புறனே
எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே"— சூ. 64.

காத பெருமை வீரர்களுக்கு உண்டு. இதனைத் தழிஞ்சி என்பர். இப் பதின்மூன்று துறைகளும் வஞ்சித் திணைக்கு உரியன ஆகும்.[65]

3. உழிஞைத் திணை

உழிஞை மருதத்தின் புறனாகும். அரணை முற்றலும் கொள்ளலும் உழிஞைத் திணையாகும். வஞ்சியிற் சென்ற வேந்தனோடு போர் செய்தல் ஆற்றாது உடைந்து மாற்று வேந்தன் அரண் வலியாகப் போர் செய்யுமாகலானும், அவ் வழிப் பொருவார்க்கு விடியற்பொழுது காலமாகலானும் மருதத்திற்கு இது புறனாயிற்று.[66-67]

உழிஞையர் மனநிலை

பகைவரது நாட்டைக் கொள்ளக் குறித்த கொற்றமும், நினைத்ததை முடிக்கலாகும் வேந்தனது சிறப்பும், தொல்

"இயங்குபடை அரவம் எரிபரந்து எடுத்தல்
வயங்கல் எய்திய பெருமை யானும்
கொடுத்தல் எய்திய கொடைமை யானும்
அடுத்தூர்ந்து அட்ட கொற்றத் தானும்
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்
பொருள் இன்று உய்த்த பேராண் பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும்
பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்
வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்
குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்
அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பின் துறைபதின் மூன்றே! —சூ.65.

"உழிஞை தானே மருதத்துப் புறனே
முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற்று ஆகும் என்ப" —சூ. 66.

"அதுவே தானும் இருநால் வகைத்தே" —சூ. 67.

லெயிற்கண் பரத்தலும், தோற்படையினது பெருமையும், அகத்தரசனது செல்வமும், அன்றியும் பகைத்த புறத்தரசன் வருந்திய பகுதியும், வலிபட ஒரு தானாகிச் சென்ற குற்றுழிஞையும், வெகுண்டு வருகின்ற படையைப் பேணார் ஆரெயில் உழிஞையும் ஆகிய இவை உழிஞைத் திணையின் பகுதிகளாம்.[68]

உழிஞையர் போர் முறைகள்

போர் தொடங்குமுன் குடையும் வாளும் நாள் பார்த்து அவற்றை முன்போக விடுவர். அவ்விழாக்களை குடைநாட் கோள், வாள் நாட்கோள் என்பர். மதிலிடத்து ஏணியைச் சார்த்தி அதன்மேல் போர் செய்வர். முற்றுகையிட்டுப் போர் மூளச் செய்வர். அகத்தில் உள்ளவரின் வீழ்ச்சி நொச்சி எனப்படும். புறத்தோனும் வீழ்ச்சி அடைதல் உண்டு. நீர்க் கிடங்கில் போர் செய்து அதில் வீழவும் செய்வர். அதனைப் பாசிப் போர் என்பர். அதனோடன்றி ஊர்ச்செருவின்கண்ணும் வீழ்ச்சியுறுவர். அதனைப்பாசி மறன் என்பர். மதில்மேல் ஏறிப்போரிடும் அதனைக்கொள்ளப் போர் செய்வர். மதில்மேல் நின்றவனை அட்டு அவன் முடிக் கலங் கொள்ளும் நிகழ்ச்சியை மண்ணுமங்கலம் என்பர். வென்றவாளினை நீராட்டுவர். அதனை வாள் மண்ணு

"கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்
தொல்லெயிற் றிவர்தலும் தோலது பெருக்கமும்
அகத்தோன் செல்வமும் அன்றி முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும் திறம்பட
ஒருதான் மண்டிய குறுமையும் உடன்றோர்
வருபகை பேணார் ஆரெயில் உளப்படச்
சொல்லப் பட்ட நாலிரு வகைத்தே"

—சூ. 68.

மங்கலம் என்பர். அம்மதிலழிவு பெறுவதால் ஏனைய மதிலகத்தாரும் முரண் அவிந்து சரண் அடைவர் என்பதாம்.[69]

4. தும்பைத் திணை

இது நெய்தல் என்னும் அகத்திணைக்குப் புறனும்.[70] மைந்து பொருளாக வந்த வேந்தனைச் சென்று தாக்குதல் இத் திணையாகும். இருபெரு வேந்தரும் பொருதற்குரிய களம் நெய்தல் நிலமாகலானும், நெய்தற்கு ஓதிய எற்பாடு போர்த்தொழிலுக்கு முடிவு ஆதலானும், தும்பைத் திணை நெய்தலுக்குப் புறனுயிற்று என்பர்.

போர்ச் சிறப்பு

கணையும் வேலும் அவன் உடலின் மொய்க்க, நிலத்தில் படியாமல் குறையுயிரோடு துடிதுடிக்க, இரு துண்டம்

"குடையும் வாளும் நாள்கோள் அன்றி
மடையமை ஏணிமிசை மயக்கமும் கடைஇச்
சுற்றமர் ஒழிய வென்றுகைக் கொண்டு
முற்றிய முதிர்வும் அன்றி முற்றிய
அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்
நீர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்
மதில்மிசைக் கிவர்ந்த மேலோர் பக்கமும்
இகல்மதில் குடுமிகொண்ட மண்ணுமங் கலமும்
வென்ற வாளின் மண்ணோடு ஒன்றத்
தொகைநிலை என்னும் துறையொடு தொகைஇ
வகைநான் மூன்றே துறையென மொழிப." —சூ. 69.

"தும்பை தானே நெய்தலது புறனே
மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை அழிக்கும் சிறப்பிற்று என்ப" —சூ. 70.

ஒன்ருக இணைத்து வைத்தது போலக் காட்சி அளிக்க, உயிர் விடுவர் என்பதாம்.[71]

போர் நிகழ்ச்சிகள்

தானையையும் யானையையும் குதிரையையும் கண்டு பகைவர் அஞ்சுவர். பகைவர் கையகப்பட்ட வேந்தனை வீரன் ஒருவன் துணிந்து சென்று காத்தல் செய்வான். அஃதல்லாமல் படை நின்று பொரும் இருவரும் தம்முள் பொருது படுவர். கெடுபடையின்கண் புகுந்து ஒருவனை ஒருவன் கூழை தாங்குவன். அவன்மீது அடிபடாமல் முன்நின்று தடுத்தல் கூழை தாங்குதல் எனப்படும். வீரன் தன் கைவேலை யானையின்மீதும் பகைவர்மீதும் செலுத்திவிட்டு வெறும் கையனுய் மற்போர் செய்வான். களிறு எறிந்து எதிர்த்தவன் உயிர் துறத்தலும் உண்டு. களிற்ருேடு மலைந்துபட்ட வேந்தனை வென்ற வேந்தனின் படையாளர் நெருங்கி அவ் வெற்றி வேந்தனின் சிறப்பைப் பாடுவர். வாள் தொழில் முற்றிய இருபெரு வேந்தரும் அவர் சுற்றத்தவரும் ஒருவர்கூட மிஞ்சாமல் இறத்தலும் உண்டு. போர்க்களத்துத் தன் வேந்தன் இறந்துபட, அதுகண்டு சினந்து படைத்தலைவன் ஒருவனே நின்று பகைவரை நெருங்கிப் பொருது புகழ் பெறுவான். ஒருவனே பல படை தோற்க வாளை நாற்புறமும் சுழற்றிப் பலரும் தோற்று ஓடும்படி பொருவான். பல உயிரை ஒருவன் கொன்றதனை நூழிலாட்டு என்பர்.

இப் பன்னிரு துறைகளும் தும்பைத் திணையைச் சாரும் என்பர்.[72]

'கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்
சென்ற உயிரின் நின்ற யாக்கைக்
கிருநிலந் தீண்டா அருநிலை வகையொடு
இருபாற்பட்ட ஒருசிறப் பின்றே' —சூ. 71.

"தானை யானை குதிரை என்ற
நோனுர் உட்கும் மூவகை நிலையும்
வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன்

5. வாகைத் திணை

வாகைத்திணை பாலையது புறனாகும். அவரவர் தம் கோட்பாட்டை மிகுதிப்படுத்திக் கூறல். பாலையாவது தனக்கென ஒரு நிலம் அற்றது; எல்லா நிலத்தினும் காலம் பற்றிப் பிறப்பது. அதுபோல வாகைத் திணையும் எல்லா நிலத்தினும் எல்லாக் குலத்தினும் காலம்பற்றி நிகழ்வது. மேலும் புகழ் காரணமாகப் பாலையில் அன்புடையார் மாட்டுப் பிரிவு நிகழ்கிறது. தன்னோடு ஒத்தவரினும் நீங்கிப் புகழப்படுகின்றனர். அதனாலும் இது பாலைக்குப் புறனாயிற்று என்பர். அந்தணர் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஒழுக்கத்தால் சிறப்புப் பெறுவர். அரசர்கள் ஓதல், வேட்டல், ஈதல், படை வழங்குதல், குடியோம்புதல் முதலிய தொழில்களை நடத்திச் சிறப்பு எய்துவர். வணிகர் ஓதல், வேட்டல், ஈதல், உழவு. வாணிகம், நிரையோம்பல் முதலிய தொழில் நடத்துவர். வேளாளர் உழவும் ஏனைய தொழிலும் செய்வர். விருந்

தான்மீண்டு எறிந்த தார்நிலை அன்றியும்
இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்
ஒருவன் ஒருவனை உடைபடை புக்குக்
கூழை தாங்கிய பெருமையும் படையறுத்துப்
பாழி கொள்ளும் ஏமத் தானும்
களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடும் களிற்றொடு
பட்ட வேந்தனை அட்ட வேந்தன்
வாளோர் ஆடும் அமலையும் வாள்வாய்த்து
இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்
செருவகத்து இறைவன் வீழ்வுறச் சினைஇ
ஒருவனை மண்டிய நல்லிசை நிலையும்
பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன்
ஒள்வாள் வீசிய நூழிலும் உளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே —சூ. 72.

தோம்பல், பகடு புறந்தருதல், வழிபாடு, வேதம் ஒழிந்த ஏனைய கல்வி கற்றல் என்பனவும் இவர்க்கு உரியன. மூவகைக் காலமும் கணித்து அறிபவர்அறிவர் எனப்படுவர். பகலும் இரவும் இடைவிடாமல் விண்ணைப் பார்த்து வில்லும் மின்னும் ஊர்கோளும் தூமமும் மீன்வீழ்வும் கோள்நிலையும் மழைநிலையும் பிறவும் பார்த்துப் பயன் கூறுவர்.

"விண் இவ் உலகம் விளைக்கும் விளை
வெல்லாம் கண்ணி உரைப்பான் கண்டு."

என்பர் புறப்பொருள் ஆசிரியர்.

தவசிகள் எண்வகை ஒழுக்கத்தை மேற்கொள்வர். நீராடல், நிலத்திடைக் கிடத்தல், தோலுடுத்தல், சடை புனைதல், எரியோம்புதல், ஊரடையாமை, காட்டில் உள்ள உணவு கொள்ளுதல், தெய்வ வழிபாடு, அடியவர் வழிபாடு முதலியன இவர்கள் தொழில்களாம்.

வீரர் வாளாலும் தோளாலும் பொருதல் செய்து வெற்றி கொள்வர். ஏனைய துறைகளிலும் வாகை நிலைகள் உள்ளன. அவை சொல் வென்றி, பாடல் வென்றி, ஆடல் வென்றி, சூது வென்றி முதலியன. இவ்வாறு வாகை எழுவகைப்படும் என்பர்.[73,74]

"வாகைதானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப. —சூ. 73.

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்
பாலறு மரபில் பொருநர்க் கண்ணும்
அறநிலை வகையொடு ஆங்குஎழு வகையாத்
தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்" —சூ. 74.

வாகைத்திணை நிகழ்ச்சிகள்

கூதிர்ப் பாசறையிலும் வேனிற் பாசறையிலும் போரின் மீது கொண்ட வேட்கையால் பொருந்தி இருந்து கடமையை முடிப்பர். போர்க்களத்தில் நிகழும் செய்திகளை நெற்களத்து நிகழ்ச்சிகளாக உருவகித்துப் பாடுதல். இதனைக் களம் பாடுதல் என்பர்.

தேரோரைப் போரில் வென்ற அரசன் முன்னும் பின்னும் குரவை பாடிப் புகழ்வர். அவன் வெற்றி வேலைக் கற்றறிந்தோர் புகழ்ந்து பாடுவர். பகைவரைத் தாக்கு தலைப் பொறுக்கும் ஆற்றலையும் புகழ்வர். ஏழ்மை நிலை யுடைய வாழ்க்கையிலும் வாளாண்மை மிக்கவராகவே திகழ்வர். தலைவருக்காக வீரர்தம் உயிரையும் அளித்துப் புகழ் பெறுவர். வெற்றிகொண்ட நாட்டின் ஆநிரையைக் கைப்பற்றி அகமகிழ்ந்து இருப்பர். செல்வம் மிக்கவர் தமக் கென வாழாமல் பிறர்க்கென முயலும் கொள்கை உடைய வராய் வாழ்வர். இல்லற வாழ்வில் செம்மையுற வாழ்த லும் ஒரு பெரிய வெற்றியே யாகும். பிறர் மனை நயவாத பேராண்மை சான்றோர்க்கு அறமும் ஆன்ற ஒழுக்கமும் ஆகும். புலனடக்கமும், நடுவுநிலைமையும், பிறர் பொருளை விரும்பாமையும் புறங்கூறாமையும் தீவினையைப் பிறர்க்குச் செய்தலை அஞ்சுதலும், பொறாமை கொள்ளாமையும், பொறையுடைமையும், கொடைச் சிறப்பும் இல்லறத்தார் மேற்கொள்ளும் நல்லொழுக்க நெறிகளாம்.

பிறர் தமக்குப் பிழை செய்தாலும் பொறுத்துக் கொள்ளுதல் சால்புடைமை ஆகும். மெய்ப்பொருளும் அறம் பொருள் இன்பம் ஆகிய முப்பொருளும் உடைமையும் மக்கள் செல்வமும் அருளொடு பொருந்தின துறவும்

"கூதிர் வேனில் என்றிரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய வகையினும்
ஏரோர் களவழி அன்றிக் களவழித் தேரோர்
வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்

பொருந்திய வாழ்வு வெற்றி மிக்க வாழ்வாகும். இவை பதினெட்டுத் துறைகளைக் கொண்டதாகும்.[75]

6. காஞ்சித் திணை

தமிழகத்தில் போர்கள் நிகழ்த்திய வீரர்கள் நிலையாமையை உணரும்பொழுதே புகழ்தரும் செயல்களைச் செய்ய முற்படுவர். அதனால், நிலையாமையைப் பற்றி வற்புறுத்தினர். இளமை, செல்வம், யாக்கை இவை நிலைத்த புகழை நோக்க நில்லா எனக் கூறியவாறும்.

காஞ்சி பெருந்திணையின் புறனாகும். அது பல்வகை நிலையாமையை உணர்த்தும் என்பர். ஒருவர்க்கு ஒருவர் துணையாக அமையாமையும் யாக்கை செல்வம் இளமை இம்

ஒன்றிய மரபின் பின்தேர்க் குரவையும்
பெரும்பகை தாங்கும் வேலி னானும்
அரும்பகை தாங்கும் ஆற்ற லானும்
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும்
ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்த்துத்
தொல்லுயிர் வழங்கிய அவிப்பலி யானும்
ஒல்லார் இடவயிற் புல்லிய பாங்கினும்
பகட்டி னானும் மாவி னானும்
துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கமும்
கடிமனை நீத்த பாலின் கண்ணும்
எட்டுவகை நுதலிய அவையகத் தானும்
கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்
இடையில் வண்புகழ் கொடையி னானும்
பிழைத்தோர்த் தாங்கும் காவ லானும்
பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்
அருளொடு புணர்ந்த அகற்சி யானும்
காமம் நீத்த பாலி னானுமென்று
இருபாற் பட்ட ஒன்பதின் துறைத்தே." —சூ. 75.

மூன்றும் நிலையாமையும் உணர்ந்து அறமும் புகழும் தரும் செயல்களில் மாந்தர் ஈடுபடுவர் என்பதாம்.[76]

ஏறிய மடல் திறம் முதலாகிய துன்ப நிகழ்ச்சிகளாகிய காமப் பகுதி அகத்திணைக்குப் புறனாய நிகழ்ச்சியாகும். இதுவும் புறத்திணை ஐந்திற்கும் புறனாகியது. பெருந்திணையும் நிலைத்த ஒழுக்கமன்று. எனவே, காஞ்சி பெருந்திணைக்குப் புறனாயிற்று என்பர்.

காஞ்சித்திணை நிகழ்ச்சிகள்

மண்ணாண்ட மன்னர் எல்லாம் மண்மூடப் போயினர்; கூற்றுவனை யாரும் தடுக்க இயலாது; அதனால் சாவதற்கு முன் புகழ்மிக்க செயல்களைச் செய்வது நல்லது. அறிவின் மிக்க சான்றோர் மற்றோர்க்கு நிலையாமையை உணர்த்துவர். நல்லது செய்தல் இயலாவிட்டாலும், அல்லது செய்தல் தவிர்க என அறிவுறுத்துவர்.

உற்றார் உறவினர் நடுங்கவும், தான் நடுங்காநகித் தன் கூரிய வேலினால் புண்ணுண்டாக்கி உயிர் துறப்பான். புண் பட்ட அவன் மேனியைக் காக்கும் சுற்றம் இன்மையின் அவனைப் பேய் ஓம்பிக் காத்தலைச் செய்யும். இத் தன்மையன் என இறந்துபட்டவனைப் பாராட்டி இரங்கிக் கூறுதல் மன்னைக் காஞ்சி எனப்படும். அதிகமானின் அரிய செயலை அவ்வை எடுத்துக் கூறி இரங்கிப் பாடும் பாட்டு இதற்கு எடுத்துக் காட்டாகும்.

இன்னது செய்யாவிட்டால் இன்ன தன்மை அடைவதாக வஞ்சினம் கூறுதலும் உண்டு. பேய் தொடுதலைப் புண் பட்டவன் மனைவி கடிந்து ஓட்டி அகற்றுவள். கணவனின்

"காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பின் பன்னெறி யானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே." —சூ. 76,

உயிர்போக்கிய வேலைக் கொண்டே தன் உயிரையும் மடித்துக் கொள்ளும் நிலை ஆஞ்சிக் காஞ்சி எனப்படும். மகட்கொடை கேட்டுப் பகையொடுவந்தபெருவேந்தனைக் குறுநில மன்னன் எதிர்த்து மறுத்தல் மகட்பால் காஞ்சி எனப்படும். கொண்ட கணவனின் தலையைத் தன் மார்பில் சார்த்தியும் முகத்தோடு முகம் வைத்துத் தழுவியும் வருந்தி அழுது உயிர் விடுதலும் உண்டு. "முலையால் முயங்கினாள், வாள்முகம் சேர்த்தினாள்; ஆங்கே உயங்கினாள் உயிர் ஓங்கிற்று" என்னும் புறப்பொருள் வெண்பாமாலை.

புகழ் மிக்க மகன் மாய்ந்த நிலையில் அவனைச் சுற்றிய சுற்றத்தார் அழுது மயங்கிய மயக்கமும் நிகழும். வால் நரைக் கூந்தல் முதியோள் சிறுவன் களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை ஈன்ற ஞான்றினும் பெரிதாகும்.

கேளல் கேளிர் தரும் உணவை உண்டு அவர்தம் சிறையில் கிடக்கும் இழி நிலைக்கு வருந்துவர்! கணவன் இறந்த செய்தி கேட்டு உயிர்விடும் மகளிர் நிலை மூதானந்தம் எனப்படும். ஆற்று வழியில் போற்றிய கணவனை இழந்து தமியளாய்த் தலைமகள் படும் துயரம் முதுபாலை எனப்படும். இறந்தவரை நோக்கிச் சிறந்தார்கள் கையற்றுப் புலம்புதல் கையறு நிலை எனப்படும். காதலியை இழந்த கணவனது நிலை தபுதார நிலை எனப்படும். கணவனை இழந்த விதவைக் கோலம் தாபத நிலை எனப்படும். அழல் புகுந்து உடன் கட்டை ஏறச் செல்லும் மகளிரைத் தடுத்துக் கூற முற்படுவோருக்குத் தன் மன உறுதியை எடுத்துக் கூறித் தன் மன நிலையை விளக்குவாள். கணவன் மாய அவள் உயிரும் சாய்கிறது. அவளுக்குப் பொய்கையும் தீயும் சமமாகவே காணப் படுகின்றன. பிறரைப் புறங்கண்டு தான் மட்டும் அழியாமல்

"மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமையும்
கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்
பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து முடியும் மறத்தி னானும்

நிலைத்து நிற்பது இடுகாடு. நெஞ்சமர் காதலர் அழுத கண்ணீர் சுடலையையும் அழிக்கும் தன்மையது. பிறர் முதுகைத் தாம் கண்ட சுடுகாடு எப்பொழுதும் புறமுதுகு இட்டு மறைந்தது இல்லை.[77]

ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணேன்
பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்
இன்னன்என்று இரங்கிய மன்னை யானும்
இன்னது பிழைப்பின் இதுவா கியர்எனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்
இன்னகை மனைவி பேஎய் புண்ணோன்
துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்
நீத்த கணவன் தீர்த்த வேலின்
பெயர்த்த மனைவி வஞ்சி யானும்
நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும்
முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
ஈரைந் தாகும் என்ப பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
மாய்ந்த பூசல் மயக்கத் தானும்
தாமே எய்திய தாங்கரும் பையுளும்
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமும்
நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபா லையும்
கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்
காதலி இழந்த தபுதார நிலையும்
காதலன் இழந்த தாபத நிலையும்
நல்லோள் கணவனொடு நனியழல் புகீஇச்
சொல்லிடை இட்ட பாலை நிலையும்
அரும்பெருஞ் சிறப்பின் புதல்வற் பயந்த
தாய்தப வரூஉந் தலைப்பெயல் நிலையும்
மலர்தலை உலகத்து மரபுநன்கு அறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு
நிறையருஞ் சிறப்பின் துறையிரண்டு உடைத்தே"

—சூ. 77,

7. பாடாண் திணை

பாடாண்திணை கைக்கிளையின் புறனாகும் அது, 'கடவுள் வாழ்த்து, வாழ்த்தியல், மங்கலம், செவியறிவுறுத்தல், ஆற்றுப்படை, பரிசில்துறை, கைக்கிளை, வசை' என எட்டு வகைப்படும்.

கைக்கிளை ஒரு நிலத்திற்கு என உரிமை பெற்றது; ஒரு தலைக் காமமாகி வரும். அதுபோல இதுவும் ஒருபாற்கு உரித் தன்றி, ஒருவனை ஒருவன் யாதாயினும் ஒரு பயன் கருதி வழி மொழிந்து நிற்பது ஆகலானும், கைக்கிளையாகிய காமப் பகுதிக்கண் மெய்ப்பெயர்பற்றிக் கூறுதலானும், கைக்கிளை போலச் செந்திறத்தாற் கூறுதலானும், அதற்கு இது புறனா யிற்று. நோந்திரமாவது கழிபேரிரக்கம்; செந்திறமாவன அஃது அல்லாதன.

பாடாண்திணை என்பது புகழ்ச்சிபற்றி அமைவது. கடவுளரைப்பற்றிப் பாடினாலும் காமப்பகுதியின்கண் பாடினாலும் பாட்டுடைத் தலைவனைச் சார்ந்து புகழ்ச்சி அமைதலான் அவையும் பாடாண்திணை எனப்படும். கடவுள் வாழ்த்தாக அமையும் கொடிநிலை, கந்தழி, வள்ளி, புலவராற்றுப்படை, புகழ்தல், பரவல் என்னும் தெய்வப்பாடல்களிலும், குற்றம் தீர்ந்த காமத்தைப் பொருந்திய காதற் பாடல்களிலும் பாட்டுடைத் தலைவனின் புகழ்ச்சியும், கிளவித்தலைவனின் புகழ்ச்சியும் அமையும் பகுதிகள் எல்லாம் பாடாண்திணை எனப்படும்.[78 72]

"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண்டு உடைத்தே" —சூ. 78.

"அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப" — சூ. 79

பாடாண்பகுதிப் பாடல்கள் செந்துறைப் பாட்டிலேயே பாடப்பட வேண்டும் என்ற வரையறை இல்லை. எல்லாச் செய்யுளானும் இவை பாடப்பெறும் என்பர்.[80]

கடவுள்மாட்டுத் தெய்வப் பெண்டிர் நயந்த பக்கமும் மானிடப் பெண்டிர் நயந்த பக்கமும் பாடப்பெறும். அவையும் பாடாண்திணைப் பாடல்களேயாம். பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாக உள்ளபருவப்பெண்டிரை வருணித்துப் பாடும் உலாச் செய்யுள் முதலியனவும், குழவிப் பருவத்து நிகழ்ச்சிகளைப் பாராட்டிப் பேசும் பிள்ளைத்தமிழ்ப் பாடல்களும் புகழ்ச்சி அமைந்தனவாகும். இவையும் இதுபற்றிப் பாடாண்திணைப் பாடல்களேயாம்.[82-83]

இவற்றில் பாடப்பெறும் தலைவர்களின் இயற்பெயர்களும் குறிக்கப்பெறும்.[84]

கடவுள் வாழ்த்தாகக் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்னும் மூன்றும் வரும். பாட்டுடைத் தலைமகனைச் சார்த்தி இவை பாடப்பெறும் என்பர்.[85]

'மன்னனின் கொடி பூவைப்பூ வண்ணனாகிய திருமாலின் கொடிபோல ஓங்குக' என்பது கொடிநிலை. அரசனைக் கடவு

"வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்
முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின்று ஆங்கே" —சூ. 80

"காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்" —சூ. 81.

"குழவி மருங்கினும் கிழவ தாகும்." —சூ. 82.

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
வழக்கொடு சிவணிய வகைமை யான" —சூ. 83.

"மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே" —சூ. 84.

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" —சூ. 85.

ளாக உருவகித்தல் கந்தழி யாகும். வள்ளி என்பது விண்ணிடை விளங்கும் மீனின் கூட்டம் என்பர் நச்சினார்க்கினியர்.

'மாயோன் அன்ன உரைசால் சிறப்பின் புகழ்சால் மாற' என்பன போல, அரசனின் புகழைக் கடவுளின் புகழோடு சார்த்திக்கூறுதல் கொற்றவள்ளை என்பர். இதுவும் பாடாண்திணையின்பாற் படும். கொற்றவள்ளை என்னும் துறை வஞ்சித்திணையிலும் வந்துள்ளது. ஆண்டு வெற்றிச் சிறப்பைக் குறிக்கும்; ஈண்டுப் புகழ்நிலையை உணர்த்தும்.

பாடாண்திணைத் துறைகளும் நிகழ்ச்சிகளும்:

ஈவோரைப் புகழ்தலும் ஈயாரைப்பழித்தலும், வெற்றியும் குணமும் சிறப்பித்துப் பாடிய இயல்மொழி வாழ்த்தும், வாயிலரிடம் தாம் வந்த செய்தியை அரசர்க்கு உணர்த்துமாறு கூறலும், அரசனின் அமைதியான துயில்நிலையைப் பாராட்டிக் கூறுதலும், பார்ப்பனருக்குக் கபிலநிறப் பசுவைத் தானமாக அளிக்கும் உயர்வும் பாடாண் திணையன.

விளக்கு நிலையைக் கொண்டு அரசனின் வேலின் வெற்றித் திறத்தைப் பாடுதலும், வாயுறை வாழ்த்தும், செவியறிவுறாவும், புறநிலை வாழ்த்தும், கைக்கிளைக்கூற்றுகளும், முற்கூறப்பட்ட துறைகளும் பாடாண்திணைக்கு உரியனவாகும். [37]

"கொற்ற வள்ளை ஓரிடத் தான" —சூ. 86.

"கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்
அடுத்தூர்ந் தேத்திய இயல்மொழி வாழ்த்தும்
சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலை யானும்
கண்படை கண்ணிய கண்படை நிலையும்
கபிலை கண்ணிய வேள்வி நிலையும்
வேலை நோக்கிய விளக்கு நிலையும்
வாயுறை வாழ்த்தும் செவியறி வுறூஉம்
ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்
கைக்கிளை வகையோடு உளப்படத் தொகைத்
தொக்க நான்கும் உளவென மொழிப" —சூ

பாவலரும் காவலரும்

சூதர் அரசனின் துயில்நிலையை ஏத்திப் புகழ்வர்; கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் நெறியிடைக் காணப்பெறும் ஏனையோர்க்குப் பெற்ற பெருவளத்தை அவரும் பெறுவர் என்று ஆற்றுப்படுத்துவர். அவை முறையே கூத்தராற்றுப்படை, பாணராற்றுப்படை, பொருநராற்றுப் படை, விறலியாற்றுப்படை எனப் பெயர் பெறும்.

அரசனின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுவர். அதனைப் பெருமங்கலம் என்பர். முடிசூட்டுவிழாவை ஆண்டு தோறும் கொண்டாடுவர். அரசன் நீராடிப் பெருமகிழ்வு கொள்ளும் இந்நிலையை மண்ணுமங்கலம் என்பர். அவன் குடைச்சிறப்புப் பாராட்டப்பெறும். சோழனின் குளிர் வெண்குடை போன்று உலகை அளித்தலால் திங்களைப் போற்றுதும் என்பர் இளங்கோவடிகள்.

அரசனுடைய படைக் கருவிகளின் பெருமையைப் புலவர் பாடிச் சிறப்பிப்பர். இதனை வாள்மங்கலம் என்பர். பகைவர் எயிலை அழித்த வெற்றிச்சிறப்பைப் பாடுதல் எயில் அழித்த மண்ணுமங்கலம் என்பர்.

புலவர் பரிசிலைப் பெறும் குறிப்பினால் அரசனிடம் தம் மனக்கருத்தை வெளிப்படுத்துவர். இதனைப் பரிசில் கடை இய கடைக்கூட்டுநிலை என்பர். பரிசில் பெற்ற பின்னரும் அவன் தந்த பெருவளனை ஏத்தி விடைபெற்றுச் செல்வர். தான் போதல் வேண்டும் எனக் கூறிப் பிரிதலும், அரசனே விடை தந்து அனுப்பப் பிரிதலும் என விடைபெறல் இருவகைப்படும்.

நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும் கொண்டு முக்காலத்தும் வரும் நன்மையையும் தீமையையும் அறி விப்பர். அவனுக்குப் பாதுகாவலான நல்லுரைகளையும் அறிவிப்பர். அவற்றை ஓம்படைக் கிளவிகள் எனக் கூறுவர்.

'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின் என்று கூறுதல் ஓம்படைக் கிளவியாகும்.[88]

"தாவில் நல்லிசை கருதிய இடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயில்எடை நிலையும்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்
சிறந்த நாளினில் செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயின் பெருமங் கலமும்
சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி
நடைவயின் தோன்றிய இருவகை விடையும்
அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலங் கண்ணிய ஓம்படை உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே"

—சூ. 88

10. களவியல்

காதல் திருமணம் நிகழுமுன்னர் தலைவனும் தலைவியும் தாமே சந்தித்து ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொண்டு பிறர் அறியாமல் பழகுதலும் இன்ப வாழ்வை நடத்துதலும் **களவு** எனப்படும். **கற்பு** எனப்படுவது பெற்றோர் முன்னின்று திருமணம் செய்து வைப்பது என்பர். களவின் வழி அமையும் கற்பும் உள; களவின் வழி வாராக் கற்பும் உள.

அன்பின் ஐந்திணைக்குக் களவு ஒழுக்கம் உரித்து; அன்புடை நெஞ்சம் கலந்து ஒருவரை ஒருவர் உணர்ந்து காதலால் கட்டுண்டு உள்ளப் புணர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியும் பெறுவர். இதுவே களவு ஒழுக்கம் எனப்படும்

காந்தருவ மணமும் காமக் கூட்டமும்

அன்பொடு புணர்ந்த ஐந்திணை இன்பமும் பொருளும் அறனும் நிரம்பியது. அவற்றுள் காமக் கூட்டமாகிய தாமே எதிர்ப்பட்டுப் புணர்தல் எட்டுவகை மணங்களுள் காந்தருவத்தை நிகர்த்தது என்பர்.[89]

எட்டு வகை மணமாவன பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இரக்கதம், பைசாசம் என்பர். பிரமமாவது பிரமசாரியன் ஒருவனுக்குக்

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமை
யோர் இயல்பே"—சூ. 89

கன்னியைத் தானமாகக் கொடுப்பது; பிரசாபத்தியமாவது இருமுது குரவரும் இயைந்து மணம் முடிப்பது; ஆரிடமாவது பரிசப் பொருளாக ஆனும் ஆனேறும் பெற்றுக்கொண்டு மகளைத் தருவது, தெய்வமாவது, வேள்வி ஆசிரியன் ஒருவனுக்கு வேள்வித் தீ முன்னர்க் கொடுப்பது. காந்தருவமாவது ஒத்த இருவர் தாமே கூடுங் கூட்டம். அசுரமாவது வில்லேற்றம் திரிபன்றி எய்தல் முதலிய ஆற்றல் மிக்க செயல்களைச்செய்து வெற்றிபெறுபவனுக்கு மகளைத் தருதல். இராக்கதமாவது வலிதிற் கொள்வது. பைசாசமாவது களித்தார் மாட்டும் துயின்றார் மாட்டும் கூடுதல்.

பால் கூட்டுவிக்க தலைவனும் தலைவியும் முதற்சந்திப்பைப் பெறுகின்றனர். ஊழ் ஆக்கலும் அழித்தலும் வல்லது. ஒன்று படுத்துவதும் வேறுபடுத்துவதும் ஊழே. அவற்றுள் உள்ளம் ஒன்றுபட்டு வாழ வழிசெய்யும் ஊழின் ஆணையால் கிழவனும் கிழவியும் ஒருவரை ஒருவர் காண்பர். அவர்கள் ஒத்த பண்பும் நலனும் வயதும் உள்ளவர்களாக இருப்பவராதல் வேண்டும்.[90]

செல்வமும் குலமும் வடிவும் மிக்க தலைமகனும் தலைமகளும் சந்திக்குமிடத்து அவள் உயர்வு பற்றி அவள் தெய்வமகளோ எனத் தலைவன் ஐயம் கொள்ளுவான். இழிந்த மக்களிடத்து இத்தகைய ஐயம் நிகழாது என்பர்.[91]

வண்டும், அணியிழையும், தொய்யில் கொடியும், பூவும், கண்ணிமைப்பும், தடுமாற்றமும் அச்ச உணர்வும், கால்

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினும் கடிவரை இன்றே." —சூ. 90.

"சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப
இழிந்துழி இழிவே சுட்ட லான" —சூ. 91.

நிலம் தோய்தல், வியர்த்தல், நிழலாடுதல் முதலிய நிகழ்ச்சிகளும் அவள் மானுட மகளே என்ற உணர்வைத் தரும் என்பர்.[92]

கண்கள் காமக்குறிப்பைக் குறிப்பாக அறிவுறுத்த வல்லனவாம்.[93] குறிப்பை ஒருவரை ஒருவர் கொள்ளும் நிலையிருந்தால்தான், இத்தகைய குறிப்புகள் நிகழும் என்பர்.[94] பழி பாவங்களுக்கு அஞ்சும் பெருமையும் அறிவும் ஆண் மகனுக்கு இயல்பாக அமைந்துள்ளன.[95] பெருமையும் உரனும் மிக்க தலைமகன் புணர்வு வேண்டாது அவளை வரைந்து எய்த முயல்வான் என்பதாம். அவ்வாறே தலைமகளும் அச்சமும் நாணும் மடனும் முந்துறுவதால் புணர்வுக்கு இசையாது நின்று வரைந்து எய்த முயல்வாள்.[96]

துன்ப நிலைகள்

ஒருவரை ஒருவர் அடைய வேண்டும் என்னும் வேட்கை மிகுதியால் இடைவிடாது நினைப்பர். மெலிவு, ஊணும் உறக்கமும் ஒழிந்து இருத்தல், நாண் நீங்குதல், காண்பவை எல்லாம் அதே நினைவோடு இருத்தல்; மறதி, மயக்கம்

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப." —சூ. 92

நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை யாகும். —சூ. 93

"குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்
ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்." —சூ. 94

"பெருமையும் உரனும் ஆடூஉ மேன" —சூ. 95

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்தல்
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப" —சூ. 96

சார்தல் முதலியன களவு ஒழுக்கத்தின் துன்ப வேதனைகளாம்.[97]

இயற்கைப் புணர்ச்சி முன்னிகழ்ச்சிகள்

தலைவியை முன்னிலைப்படுத்திச் சில கூறுதல், தான் சொல்லுகின்ற சொல்லின்வழி அவள் நிற்குமாறு எடுத்துக் கூறுதல், தலைமகளினது நலத்தினை உரைத்தல், நகை வெளிப்படுத்தல், நல் நயம் அறிதல், தன் மெலிவை அறிவுறுத்தல், தன்னிலை உரைத்தல், உள்ளம் ஒத்த நிலையைத் தெளிதல் ஆகிய இவை இயற்கைப் புணர்ச்சியது முன்னிகழ்ச்சிகளாம்.[98]

தலைவனின் காதல் வினைகள் (புணர்வுக்கு முன்)

தலைவியின் மெய்யைத் தீண்டிப் பயிறல், புனைந்துரைத்தல், பாராட்டுதல், இடம் பெற்றுத்தழுவுதல். தழுவுதற்கு இடையூறுக நின்றது யாது எனக் கிளத்தல், கலக்க எண்ணி நீடு நினைந்து இரங்குதல், பின்னர்ப் புணர்ச்சி எய்துதல் ஆகிய இவை புணர்வு நிகழ்ச்சிகளாம்.

புணர்வுக்குப் பின்

புணர்வு நுகர்ச்சி பெற்ற வழியும் அவன் மனம் தெளிவு பெற்றிலது; மேலும் அவள் மாட்டு வேட்கைத் தொடர்பு

"வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கஞ் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்காடு என்றிச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப" —சூ. 97.

"முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுத்தல்
நன்னயம் உரைத்தல் நகைநனி உறுஅ
அந்நிலை யறுதல் மெலிவுவிளக் குறுத்தல்
தன்னிலை யுரைத்தல் தெளிவகப் படுத்தலென்று
இன்னவை நிகழும் என்மனுர் புலவர்." —சூ. 98.

பெறுகிறது. இதனைத் தீராத் தேற்றம் என்பர். அவளைத் தான் அடைந்தவழி மகிழ்ச்சியும், பிரிந்தவழிக் கலக்கமும், இல்லறவினையை நினைந்து இனிது நடக்கும் என்று உட்கோடலும் அவன் மாட்டு நிகழ்வனவாம்.

வாயில் சார்தல்

பாங்கன் தலைவன் மாட்டுச் சோர்வானும் காதல் மிகுதியானும் நேர்வுற்ற பழிபாவங்களை எடுத்துக் காட்டுவான். இதனைக் குற்றம் காட்டிய வாயில் என்பர். பாங்கன் மாட்டுத் தன் காதல் வேட்கையைத் தலைவன் எடுத்து உரைத்து, அவன் துணைகொண்டு தலைவியை அடைவான். பின்னும் வரைந்து எய்தல் ஆற்ருது களவிற் புணர்ச்சி வேண்டித் தோழியைச் சார்ந்து அவளை இரந்து வேண்டி நிற்பான்.

தலைவியின் ஊரும் பேரும் விஞவியும், தான் தேடி வந்த யானையும் மானும் பற்றி நீர்மையால் எடுத்துக் கூறியும்

"மெய்தொட்டுப் பயிறல் பொய்பா ராட்டல்
இடம்பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்
நீடுநினைந்து இரங்கல் கூடுதல் உறுதல்
சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்
தீராத் தேற்றம் உளப்படத் தொகைஇப்
பேராச் சிறப்பின் இருநான்கு கிளவியும்
பெற்றவழி மகிழ்ச்சியும் பிரிந்தவழிக் கலங்கலும்
நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்
குற்றம் காட்டிய வாயில் பெட்பினும்
பெட்ட வாயில் பெற்று இரவுவலி யுறுப்பினும்
ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்
நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித்
தோழியைக் குறையுறும் பகுதியும் தோழி
குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்
தண்டாது இரப்பினும் மற்றைய வழியும்
சொல்லவட் சார்த்தலின் புல்லிய வகையினும்
அறிந்தோள் அயர்ப்பின் அவ்வழி மருங்கில்
கேடும் பீடும் கூறலும் தோழி
நீக்கலின் ஆகிய நிலைமையும் நோக்கி
மடல்மா கூறும் இடனுமார் உண்டே." —சூ 99.

பிறவாறு பேசியும் தன் மனக்குறிப்பைத் தோழிக்குக் கூறிக் குறையுறுவான். தோழி தலைவன் குறையைத் தலைவியிடம் எடுத்துக் கூறுவாள். தலைமகன் பலகாலும் சென்று இரத்தல் செய்வான். மற்றைய வழி தொடர்ந்து பின்நிற்பான். முன் உற்ற புணர்ச்சியை முறையாக எடுத்துக் கூறியும் தலைவி அயர்ந்து அறியாள் போல் நடந்து கொள்வாள், தொடர்ந்து அவளை நாடுவதால் உண்டாகும் கெடுதியைத் தோழி எடுத்துக் கூறுவாள்; அவன் பெருமைக்கு இழுக்கு என உரைப்பாள். அஞ்சி அச்சுறுத்தி அவளை நீங்குக என்று அறிவிப்பாள். இச் சூழ் நிலைகளில் தலைவன் மடல்மா ஏறுவ தாகக் கூறுதலும் உண்டு.[99]

மடற் கூற்று விலக்குதல்

பண்பில் அவன் செயல்களைப் பெயர்ப்பினும், அவளுக் காகத் தோழி பரிவுற்று மெலியினும், அன்புற்று நகினும், அவள் உதவிபெற்று மகிழினும் மடல்மாகூறுதல் இடையூறு படும் என்பர்.[100]

பாங்காயினர் துணை நிற்றல்

பாங்காயினர் துணையாகக் கூடும் கூட்டம் பன்னிரண்டு என்பர்.[101]

அவையாவன பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் இந்நான்கும், கந்தருவப் பகுதியாகிய களவும் உடன்போக்கும், அதன்கண் கற்பின் பகுதியாகிய இற் கிழத்தியும் காமக் கிழத்தியும் காதற்பரத்தையும், அசுரம் இராக்கதம் பைசாசம் முதலிய மூன்றும் என்பர்.

"பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினும்
அன்புற்று நகினும் அவட்பெற்று மலியினும்
ஆற்றிடை யுறுதலும் அவ்வினைக்கு இயல்பே" —சூ. 100

"பாங்கர் நிமித்தம் பன்னிரண் டென்ப" —சூ. 101

அவற்றுள் அசுரம் இராக்கதம் பைசாசம் ஆகிய மூன்றும் கைக்கிளைப்பாற்படும்.[102] பிரமம், பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் இவை நான்கும் பெருந்திணைப்பாற் படும்.[103]

முதலொடு புணர்ந்த காந்தருவக்கூட்டமாகிய அன்பின் ஐந்திணை ஐந்நிலத்தைப் பெறும். ஐந்நிலம் என்பதற்கு, களவு, உடன்போக்கு, இற்கிழத்தி, காமக்கிழத்தி, காதற் பரத்தை என்பர் இளம்பூரணர். ஐந்நிலம் என்பதற்கு முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் எனக் கொள் வாரும் உளர் என்பர்.[104]

வரைந்து எய்துங்காறும் தலைவன் கூற்று

பகற்குறியும் இரவுக்குறியும் பிழைத்த இடத்தும், தலை மகளைக் காணுவகையில் பொழுது நீட்டித்த வழியும், அவளைக் காணுதவிடத்து பொழுது மிகக்கழிந்திடக் காட்சி யாசையினுல் குறியிடத்துச் சென்று ஆண்டுக் காணுது கலங்கி வேட்கையால் மயக்கமுற்றுச் செயலற்று நிற்கும் காலத்தும், தலைவியின் அகத்துப்புக அவரால் நீக்கப் படாது விருந்தினன் ஆகிய வழியும், தலைவி உபகாரம் எதிர்ப் பட்ட விருப்பின் கண்ணும், அணிமைக்கண் பிரியும் பிரிவின் கண்ணும், நாணம் தலைவி நெஞ்சினை வருத்துத லானே நீக்கி நிறுத்தற்கண்ணும், வரைந்து கொள்ளல் வேண்டித் தோழியால் சொல்லப்பட்ட குற்றம் தீர்ந்த கிளவி பொருந்திய சந்திப்பின் கண்ணும், தோழி கூறிய சொற்கேட்டு வரைவு உடம்படுதற் கண்ணும், அவ் வரைவு

"முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே" —சூ. 102

"பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே" —சூ. 103

"முதலொடு புணர்ந்த யாழோர் மேன
தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே" —சூ. 104

நிகழ்ச்சிக் கண்ணும்-அதனை அவர் மறுத்தற் கண்ணும் தலைமகன் மாட்டுக் கூற்று நிகழும்.[105]

தலைவிக்குரிய கிளவி

தலைவிக்கு நாணமும் மடனும் இயல்பாய குணங்கள். பெண்மைக்கு இவை அங்கங்கள். ஆகலின், காமஒழுக்கத்தின் கண் குறிப்பினாலும் இடத்தினாலுமல்லாது தலைவிக்கு வேட்கை புலப்பட நிகழாது.[106]

கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் பயன் இல்லை என்பர் வள்ளுவர். காமம் சொல்

"இருவகைக் குறிபிழைப் பாகிய இடத்தும்
காணா வகையில் பொழுதுநனி இகப்பினும்
தானகம் புகாஅன் பெயர்தல் இன்மையின்
காட்சி ஆசையில் களம்புக்குக் கலங்கி
வேட்கையின் மயங்கிக் கையறு பொழுதினும்
புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்
வேளாண் எதிரும் விருப்பின் கண்ணும்
தாளாண் எதிரும் பிரிவி னானும்
நாணுநெஞ் சலைப்ப விடுத்தற் கண்ணும்
வரைதல் வேண்டித் தோழி செப்பிய
புரைதீர் கிளவி புல்லிய எதிரும்
வரைவுடம் படுதலும் ஆங்கதன் புறத்தும்
புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇக்
கிழவோன் மேன என்மனார் புலவர்." —சூ. 105

"காமத் திணையிற் கண்நின்று வருஉம்
நாணும் மடனும் பெண்மைய ஆகலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயின் ஆன." —சூ. 106

லாத பார்வை உலகில் இல்லையாதலால், நாணமும் மடனும் நீங்கத் தலைவி வாய்விட்டுப் பேசமாட்டாள்.[107]

சொல்லெதிர் மொழிதல் அரியது ஆதலின், இசைவில்லாதாரைப்போல அவள் கூற்று அமையும்.[108]

கூற்று நிகழும் இடங்கள்

மறைந்து அவனைக் காணுமிடத்தும், தன்னை அவன் காணுமாறு நிற்குமிடத்தும், நிரம்பிய வேட்கையால் தலைவன் கூறிய சொற்கேட்டுத் தான் எதிர்மொழி கூறாது சோம்பி நிற்குமிடத்தும் கூற்று நிகழாது.

அதன்பின், இவள் வேட்கைக் குறிப்புக்கண்டு சாரலுற்ற வழி அதற்கு உடம்படாது மறுப்பாள். மறுத்துப்பின் ஏற்றுக் கொள்வாள். முறுவல் சிறிது தோற்றுவிப்பாள். அவன் கைப்பட்டுக்கலங்கியவிடத்தும், நாணம்மிகஉரினும், விட்டுப் பிரிவான் என இரங்கினும், தலைவன் வருவான் என்று எதிர் பார்த்து நிற்கஅவன் வாராமல் தவிர்த்தவிடத்தும், வந்தவழி அலராகும் என்று இகழ்ந்த வழியும், மறையாது சொல்லி இரங்கினும், தலைவன் தெரிவித்த தெளிவை நொந்து அதனை ஒழிப்பினும், தலைவன் வருகின்றது இடையீடாக அச்சம் மிக்குழியும், தலைவன் பிரிந்தவழிக் கலக்கமுறினும், தலைவனோடு கூட்டம் பெற்றவழி மகிழினும், தலைவன் வருதற்கு இடையீடாகக் காவலர் கடுகுதலான் ஈண்டு வருதல் அரிது எனத் தோழி தலைவிக்குச் சொல்லினும், தோழி இல்லாது கூறியதனை மனங்கொள்ளாத காலத்தினும், புறத்து விளையாடுதல் நீங்கி மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்த வழித் தோழிக்கு அரிய மறைப்பொருளைச் சொல்லவும்

"காமஞ் சொல்லா நாட்டம் இன்மையின்
ஏமுற இரண்டும் உளவென மொழிவர்" —சூ. 107

"சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்
அல்ல வேற்றுமொழி அவள்வயி னான" —சூ. 108

நிகழும். இவை எல்லாம் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தபின் நிகழ்வன.

இவ்வாறு கூறுக்காலத்து அவள் தன் உயிர் செல்லும் எனச் சொல்லுவாள்.

பிறன் ஒருவன் வரையவரின் அதனை மாற்றுவதற்காவும், தலைவனுக்கு வரைவு நோக்கத்தை உண்டாக்குவதற்காகவும் அவள் குறி தப்புவாள். அதாவது, தலைவனைச் சந்திப்பதைத் தவிர்ப்பாள் என்பதாம்.

உலக வழக்கை ஒட்டித் தலைவிக்குக் கூட்டம் இருக்கலாம் என ஓர்ந்து தெரிந்துகொள்ள முற்படும் இடத்துத் தலைவி தோழி அறியாமலும் செவிலி அறியாமலும் மறைப்பாள். மற்றும், தலைவனோடு புணர்வினால் உள்ளம் ஒன்றிய தலைவன் வரைதற்குத் தயங்கினால் எண் வகையால் தன் பெருமை தோன்ற நடந்து கொள்வாள். அவ்வெண்வகை நிலை பின் வருமாறு:

"முட்டுவயிற் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்
அச்சத்தின் அகறல் அவன்புணர்வு மறுத்தல்
தூதுமுனி வின்மை துஞ்சிச் சேர்தல்
காதல் கைம்மிகல் கட்டுரை இன்மை"

என்பர் தொல்காப்பியனார், தம் மெய்ப்பாட்டியலுள்.

தலைவன் மடலேறுவதாகக் கூறி அச்சுறுத்தினாலும், செயலற்ற நிலையில் தோழி தலைவியின் கண்ணீரைத் துடைத்தாலும், செவிலி வெறியாட்டு நிகழ்த்துவாள் என்ற அச்சத்தினாலும், தலைவன் செய்த குறியை ஒப்புக் கொண்ட போதும், தவறான குறியால் மருட்சி அடைந்த போதும், தலைவன் வரையவருகின்ற நாள் அணித்தாக வரினும், களவினைப் பிறர் அறியினும், தமர் தன்னை ஐயமுற்றுக் காத்தற்கண்ணும் அவள் குறிவழிச் செல்லாள்,

புறக்கணிப்பும் அன்பும்

தலைவன் புறக்கணித்தாலும் தலைவி அவனிடம் இடையறு உரிமை கொள்ளுவாள்.

"தண்ணந் துறைவன் கொடியன் ஆயினும்
அவனே தோழிஎன் னுயிர்காவ லனே"

என்று தலைவி கூறுகிருள். தலைவனின் புறக்கணிப்பைப் பரத்தமை என்பர் தொல்காப்பியனுர்.

தலைவனை இயற்பழித்த வழி இயல்பட மொழிந்த பொருண்மைக்கண்ணும், தலைவன் வருங்காலமும் இடமும் குற்றமுள வாதலான் ஆண்டு அழிவுவந்த சிந்தைக் கண்ணும், தலைவன் மாட்டு வேட்கை மிகினும், தலைவன் தலையளி மிக்க வழியும், அவன் வரைந்தல்லது நீங்கான் என ஏமம் பொருந்திய மகிழ்ச்சி வந்துழியும், தன்வயின் உரிமையும் அவன் வயின் பரத்தைமையும் தோன்றத் தலைவி கூறும் என்பர்.[109]

"மறைந்தவற் காண்டல் தற்காட் டுறுதல்
நிறைந்த காதலில் சொல்லெதிர் மழுங்கல்
வழிபாடு மறுத்தல் மறுத்தெதிர் கோடல்
பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்
கைப்பட்டுக் கலங்கினும் நாணுமிக வரினும்
இட்டுப்பிரிவு இரங்கினும் அருமைசெய்து அயர்ப்பினும்
வந்தவழி எள்ளினும் விட்டுயிர்த்து அழுங்கினும்
நொந்துதெளி வொழிப்பினும் அச்சம் நீடினும்
பிரிந்தவழிக் கலங்கினும் பெற்றவழி மலியினும்
வருந்தொழிற்கு அருமை வாயில் கூறினும்
கூறிய வாயில் கொள்ளாக் காலையும்
மனப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு
நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும்
உயிராக் காலத்து உயிர்த்தலும் உயிர்செல
வேற்றுவரைவு வரின்அது மாற்றுதற் கண்ணும்

தலைவன் இயற்கைப் புணர்ச்சி புணர்வது நீங்கி ஒரு வழித் தணக்கின்முன். அப்பொழுது தலைவி வருந்தி ஒரு சில கூறுவாள். வரையாமல் களவு ஒழுக்கத்தை நீட்டித்துச் செவிலி முதலானயினவரோடு தலைப்பட்ட வழியும், தோழி மூலம் தலைவன் செய்தி அறிவுறுத்தத் தொடங்கினும், தலைவி தானே கூறும் காலமும் உள என்பர்.[110]

நெறிப்படு நாட்டத்து நிகழ்ந்தவை மறைப்பினும்
பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி
ஒருமைக் கேண்மையன் உறுகுறை தெளிந்தோள்
அருமை சான்ற நாலிரண்டு வகையில்
பெருமை சான்ற இயல்பின் கண்ணும்
பொய்தலை அடுத்த மடலின் கண்ணும்
கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்
வெறியாட் டிடத்து வெருவின் கண்ணும்
குறியின் ஒப்புமை மருடற் கண்ணும்
வரைவுதலை வரினும் கனவுஅறி வறினும்
தமர்தற் காத்த காரண மருங்கினும்
தன்குறி தள்ளிய தெருளாக் காலை
வந்தவன் பெயர்த்த வறுங்களம் நோக்கித்
தன்பிழைப் பாகத் தழீஇத் தேறலும்
வழுவின்றி நிலைஇய இயற்படு பொருளினும்
பொழுதும் ஆறும் புரைவது அன்மையின்
அழிவுதலை வந்த சிந்தைக் கண்ணும்
காமஞ் சிறப்பினும் அவனளி சிறப்பினும்
ஏமம் சான்ற உவகைக் கண்ணும்
தன்வயின் உரிமையும் அவன்வயின் பரத்தையும்
அன்னவும் உளவே ஓரிடத் தான" —சூ. 109.

"வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
உரையெனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும்
தானே கூறும் காலமும் உளவே" —சூ. 110.

உயிரினும் நாண் சிறந்தது. அதனினும் குற்றம் தீர்ந்த காட்சியினையுடைய கற்புச் சிறந்தது. முன்னோர் கூறிய இக் கூற்றை உட்கொண்டு தலைவன் உள்ள இடத்துச் செல்லவும், குற்றமற்ற நன்மொழி தலைவி சொல்லவும் நிகழும் என்பர்.[111]

களவு ஒழுக்கத்தில் தோழியின் இடம்

தோழி தலைவியின் களவொழுக்கத்தை அவள் செய்கையால் உணர்வாள், நாற்றமும், தோற்றமும், ஒழுக்கமும், உணவு கொள்ளுதல், செய்வினை மறைப்பு, செலவு, பயில்வு, புணர்வு விரும்பிய மனநிலை ஆகியவற்றைக் கொண்டு, அவள்காதல் உணர்வினை அறிவாள். அவள் போக்கிலேயே அவளைப் போகவிட்டு, மெய்யாகவும் பொய்யாகவும் இருபொருள் பயக்கும் சொற்களால் பேசி அவள் உள்ளக் கிடக்கையை அறிவாள்.

தலைவன் தோழியைச் சார்ந்து தன் மனக்குறையை எடுத்துக் கூறுவான். அவள் அவனைத் திருத்த முயல்வாள். அவன் பெருமையைச் சுட்டிக் காட்டியும், மணவழியில் அவளை அடைவது தக்கது என்று அறிவுறுத்தியும் திருத்த முயல்வாள். தலைவியின் அருமையையும் எடுத்துக் கூறுவாள். தலைவிக்கு நேரே தன் கருத்தைச் சொல்லிவிட்டுத் தன்மாட்டு வருக என்று கூறுவாள். தலைவி களவு ஒழுக்கத்துக்கு உரிய அறிவினைப் பெற்றிலள்; அவள் ஒன்றும் அறியாதவள் என்று அவள் பேதைமையைச் சுட்டிக் காட்டுவாள். அவன் தன்னோடு தலைவி சேர்ந்த முன்னைய நிகழ்ச்சியை

"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவன் உள்வழிப் படினும்
தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்
ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே" —சூ. 111.

எடுத்துக் கூறுவான். அத்தகைய புணர்ச்சியை அவனே முயன்று பின்னும் பெறலாம் என்று அதற்கு விடை தருவாள். தாயும் தமரும் அவளைக் காய்வர் என்று எடுத்துக் கூறி அவனை அச்சுறுத்துவாள். அவளோடு அவன் நெருங்கிய உறவு பெற்றிருக்கத் தன்னை நாடவேண்டியதில்லை என்று சொல்லிப் பார்ப்பாள். இவை எல்லாம் குறையுற உணர்தலின் பகுதியாகும்.

தலைவன் யானை போந்ததோ மான் போந்ததோ என மாயச்சொல் கூறி அவளிடம் பேச்சுக் கொடுப்பான். அதிலிருந்து அவள் அவன் மனக்கருத்தை உணர்வாள். இருவர்க்கும் நெருங்கிய உறவும் புணர்ச்சி ஒழுக்கமும் உள்ளன என்று அறிந்தபின், அவனிடம் பணிந்து பேசுவாள். உள்ளத்தால் ஒன்றுபட்ட தலைவன் மெய்யுறு புணர்ச்சி வேண்டி நிற்க அச் செய்தியைத் தலைவியிடம் கூறுவாள். அவன் தழையையும் கண்ணியையும் கொண்டுவந்து தந்த செய்தியையும் அவன் குறையை மறுத்தால் மடலேறுவான் என்றும் கூறிக் குறைநயப்பிப்பாள். பகற்குறிக்கண் தலைவன் வந்து நீங்கிய செய்தியையும் அறிவிப்பாள். தலைவனிடம் நகைச் சுவைபடப் பேசி அலராகும் என்றும் அவ்வழி பலரும் சிரிக்க ஏதுவாகும் என்றும் எடுத்துக் காட்டுவாள்.

இவையேயன்றித் தலைவி வரைவுக்குந் துணை செய்வாள். தலைவன் தலைவியை அடைய வேண்டும் என்றும், பிரிந்து இருக்க வேண்டிய சூழ்நிலை உளது என்றும் கூறுமிடத்தும் அவளிடம் தக்கபடி உரையாடுவாள். இல்லறம் ஏற்பதே தக்கது என்று அறிவுறுத்துவாள். தலைவி குறியிடத்துச் சேர்ந்து அவனைக் காணுதவிடத்து மனம் சோர்வாள். அப்பொழுதெல்லாம் அவள் ஆறுதல் மொழி கூறுவாள். அவன் ஒருவழித்தணந்து பிரிந்து இருப்பான். அவனைத் தவிர அவளுக்குப் பாதுகாவல் இல்லை என்று ஓம்படைக் கிளவி கூறுவாள்.

தலைவனை அன்பு உள்ளத்தோடு கடுஞ்சொல் சொல்லித் திருத்த முற்படுவாள். அதே சமயத்தில் தலைவியிடம் அவன்

அன்பினை எடுத்துக் கூறி உறுதி தந்து ஆற்றியிருக்குமாறு வற்புறுத்துவாள்.

தலைவனிடம் அவன் வரும் வழியில் ஏதம் உள்ளது என்று எடுத்துக் காட்டியும், வரும் வழியில் காவலர் மிகுதியுண்மையையும் தலைவி அவனுக்காகக் காத்துக் கிடக்கும் காதல் மன நிலையையும் எடுத்துக் கூறுவாள். புனக்காவல் இனி இல்லை என்றும், குறவர் இயல்புப்படி அவளை வரைந்து எய்துதல் தக்கது என்றும், வெறியாட்டி அவளுக்குப் பெற்றோர் வேதனை தருவர் என்று விளக்கியும், வரைவின் இன்றியமையாமையை எடுத்துக் காட்டுவாள். தலைவன் நாடும் ஊரும் இயல்பும் குடியும் பிறப்பும் உயர்ந்தவை என்று எடுத்துக்கூறி அவ்வுயர்வுக்கு ஏற்ப, அவளை மணம் செய்தலேதக்கது என்று சுட்டிக் கூறுவாள்.

தோழிக்குத் தலைவியின் பெற்றோரிடத்துப் பேச வேண்டிய சூழ்நிலை அமைகிறது; தாய் தன் மகளின் செயலில் மாற்றம் இருத்தலைக் கொண்டு ஐயம் கொள்வாள். அவருக்கு புதிய உறவு இணைந்திருக்கிறது என்று அறிவிப்பாள். அதனைத் தோழி பொய் என மறுத்துக் கூறுவாள். பின்னர்த் தக்க சமயம் வாய்க்கும் பொழுது மெய்யைக் குறிப்பாக உணர்த்துவாள். இவ்வாறே செவிலியும் மணம் பேதலித்துக் குறியாக்குமிடத்தும் வெறியாட்டு நிகழ்த்த முனையும்போதும் பிறர் வரைவு நேர இருப்பினும் களவு ஒழுக்கத்தைத் தாய்க்கு அறிவுறுத்துவாள். இவ்வாறு தோழி தாய்க்கு அறத்தொடு நிற்பாள்.

தலைவியின் பெற்றோர்கள் அவள் மணத்துக்கு உடம்பட்ட நற்செய்தியைத் தலைவனுக்கு உணர்த்துவாள். அவ்வாறே

"நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்
புணர்ச்சி எதிர்ப்பாடு உள்ளுறுத்து வரூஉம்
உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது

அச்செய்தியைத் தலைவிக்கு உணர்த்தி அவளை மன ஆறுதல் கொள்ளச் செய்வாள்.[112]

பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானும்
குறையுறற்கு எதிரிய கிழவன் மறையுறப்
பெருமையிற் பெயர்ப்பினும் உலகுரைத்து ஒழிப்பினும்
அருமையின் அகற்சியும் அவளறி வுறுத்துப்
பின்வா என்றலும் பேதைமை யூட்டலும்
முன்னுறு புணர்ச்சி முறைநிறுத்து உரைத்தலும்
அஞ்சியச் சுறுத்தலும் உரைத்துழிக் கூட்டமொடு
எஞ்சாது சிறந்த இருநான்கு கிளவியும்
வந்த கிழவனை மாயஞ் செப்பிப்
பொறுத்த காரணம் குறித்த காலையும்
புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற் கண்ணும்
குறைந்தவட் படரினும் மறைந்தவள் அருகத்
தன்னொடும் அவளொடும் முன்னமுன் தலைஇப்
பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கினும்
நன்னயம் பெற்றுளி நயம்புரி இடத்தினும்
எண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும்
புணர்ச்சி வேண்டினும் வேண்டாப் பிரிவினும்
வேளாண் பெருநெறி வேண்டிய இடத்தினும்
புணர்ந்துழி உணர்ந்த அறிமடச் சிறப்பினும்
ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்
செங்கடு மொழியால் சிதைவுடைத் தாயினும்
என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ
அன்புதலை அடுத்த வன்புறைக் கண்ணும்
ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்
காப்பின் கடுமை கையற வரினும்
களனும் பொழுதும் காதல் மிகுதி
உளப்படப் பிறவும் வரைநிலை விலக்கிக்
காதல் மிகுதி-உளப்படப் பிறவும்
நாடும் ஊரும் இல்லும் குடியும்
பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி

களவு ஒழுக்கத்தில் செவிலியின் இடம்

களவு ஒழுக்கத்தில் செவிலிக்கும் தக்க இடம் உளது; தலைவன் ஒழுகலாறு அலராக வெளிப்பட்ட இடத்துச் செவிலி அறிவதற்கு வாய்ப்பு நேர்கிறது. மற்றும் காம உணர்வாலும் காதலனின் புணர்வாலும் பெண்மை பொலிவு பெற்று விளங்கும் கவினைக் கண்டும் அவள் ஐயம் கொள்வாள். தலைவனும் தலைவியும் சந்தித்தலையும் ஒரோவழி காண நேரிடும். கட்டினும், கழங்கினும், வெறியாட்டு நிகழ்வினும், அந்நிகழ்வின்கண் தோழி அதனை விலக்குதற்கண்ணும், காதல் மிகுதியால் தலைவனை உள்ளிக் கன்வின் கண் தலைவி அரற்றுதற்கண்ணும் தோழியை வினவி அறிவாள்.

தோழியின் வாயிலாகத் தலைவியின் களவொழுக்கத்தை அறிந்த செவிலி, செயலற்று இன்னது செய்வது என்று அறியாதவளாய் அவளுக்கு நன்மை உண்டாக என்று தெய்வத்தை வாழ்த்துவாள். தலைவனுடன் தலைவி உடன்போக்கிற் சென்றுவிட்டாள் என அறிந்த வழித் தானும் தோழியோடு சேர்ந்து அவளைத் தேடிக் கொணர்ந்து இல்லத்தின்கண் நிறுத்துவாள். தலைவன்

அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ
அனைநிலை வகையான் வரைதல் வேண்டினும்
ஐயச் செல்கை தாய்க்கு எதிர் மறுத்துப்
பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்
அவள்விலங் குறினும் களம்பெறக் காட்டினும்
பிறன்வரை வாயினும் அவன்வரைவு மறுப்பினும்
முன்னிலை அறனெனப் படுதல் என்று இருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்
வரைவுடன் பட்டோர்க் கடாவல் வேண்டினும்
ஆங்கதன் தன்மையின் வன்புறை உளப்படப்
பாங்குற வந்த நாலெட்டு வகையினும்
தாங்கருஞ் சிறப்பின் தோழி மேன" —சூ. 112.

வரையாது பிரித்தவழி, தலைமகள் அலராகுதலும் இன்றி வேறுபாடும் இன்றி மனையின்கண்பட்டு வேதனையுறும் மனநிலையை அறிவாள். தலைவன் குடிமையைத் தன் குடிமையோடு ஒப்பிட்டு ஆராய்வாள். அவன் குடிவளனும் குணவளனும் ஆராயப்பெறும் என்பதாம். இவையும் தோழியை வினுதற்கு ஏதுவாக அமையும்.[113]

செவிலியுணர்வோடு உடம்பட்ட உள்ளத்தளாயின் நற்றாய்க்கும் மேற்சொல்லப்பட்டவை எல்லாம் வரையப் படா.[114] தலைவனைச் சரியாகத் தெரிந்துகொள்ளாமல் தலைவி மயங்கிவிட்டாளோ என ஐயுற்று வினவியும், புணர்வு ஒழுக்கம் செவிலித்தாயும் நற்றாயும் உணர்வர். அவள் எத்துணையும் மயக்கமிலள் என்றும், அவன் பொருட்டு மயங்கினாள் என்றும் கொண்டு இவ் ஐய வினாக்களை எழுப்புவர்.[115]

"களவுஅல ராயினும் காமமேற் படுப்பினும்
அளவுமிகத் தோன்றினும் தலைப்பெய்து காணினும்
கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்
ஆடிய சென்றுழி அழிவுதலை வரினும்
காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்
தோழியை வினாதலும் தெய்வம் வாழ்த்தலும்
போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக்
கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்
பிரிவின் எச்சத்து மகள்நெஞ்சு வலிப்பினும்
இருபாற் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்
இன்ன வகையில் பதின்மூன்று கிளவியொடு
அன்னவை பிறவும் செவிலி மேன" —சூ. 113.

"தாய்க்கும் வரையார் உணர்வுஉடம் படினே"—சூ. 114.

"கிழவோன் அறியா அறிவினள் இருளென
மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்
ஐயக் கிளவியின் அறிதலும் உரித்தே" —சூ. 115.

தலைவிக்கும் தலைவனுக்கும் உரிய இயல்புகள்

தலைவி தனது வேட்கையைத் தலைவனிடம் வெளிப்படக் கூறாள். அங்ஙனம் சொல்லாதவிடத்தும் அவ்வேட்கை புதுக்கலத்தின்கண் பெய்த நீர்போலப் புறம்பொசிந்து காட்டும். குறிப்பாகவே அவள் அதனை வெளிப்படுத்துவாள்.[116]

தலைவி தலைவனோடு சேர்வதற்குத் தோழியிற்கூட்டம் பாங்கற்கூட்டம் என்பன நியமமில்லை. தாமே பிறர் துணையின்றிச் சந்தித்துக் கூடுதலும் உண்டு.[117] தலைவன் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தபின்பு தலைவன் எல்லையை மறத்தல் தலைவிக்கு அறமன்று. அவளே அவ்வெல்லைக்குட்பட்ட குறியிடத்தைக் கூறுதல் தவறு இல்லை. அதுதானே செல்லுதற்கு உரிய இடம்.[118] ஆதலால், அந்த உரிமை அவளுக்கு உள்ளது. தோழியின் துணைகொண்டும் தலைவி தலைவனை அடைவாள்.[119] தலைவன் இயற்கைப் புணர்ச்சி புணர்வதன் முன் பாங்கனின் துணையை நாடுதலும் உண்டு.[120] [121]

"தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை
பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும் உணர்விற்று என்ப. —சூ. 116.

"காமக் கூட்டம் தனிமையிற் பொலிதலின்
தாமே தூதுவர் ஆகலும் உரித்தே." —சூ. 117.

"அவன் வரம்பு இறத்தல் அறந்தனக் கின்மையின்
களஞ்சுட்டுக் கிளவி கிழவியது ஆகும்
தான்செலற்கு உரியவழி ஆகலான." —சூ. 118.

"தோழியின் முடியும் இடனுமார் உண்டே" —சூ. 119.

"முந்நா ளல்லது துணையின்று கழியாது
அந்நாள் அகத்தும் அதுவரை வின்றே" —சூ. 120.

"பன்னூறு வகையினும் தன்வயின் வருஉம்
நன்னய மருங்கின் நாட்டம் வேண்டலில்
துணைச்சுட்டுக் கிளவி கிழவிய தாகும்
துணையோர் கருமம் ஆதலான" —சூ. 121.

ஒரு சில விளக்கங்கள்

செவிலி மறைப்பொருள் யாவற்றையும் அறியும் வாய்ப்பினை உடையவள். அவளைத் தாயென்றே குறிப்பிடுவர்.[122] தோழி அச் செவிலியின் மகளாவாள்.[123] செவிலி அவளோடு சூழ்ந்து வினையாற்றுவாள். தலைவிக்கு அவள் உசாவும் துணையாகவும் விளங்குவாள்.[124] தலைவன் தன் மனக்குறையை எடுத்துச் சொல்ல அவள் உணர்வாள். தலைவியின் குறிப்பறிந்தும் உணர்வாள். இருவரும் உள்வழி அவன் வர அதனால் அவர்களுக்குக் களவொழுக்கம் உளது என்று அறிவாள். இம் மூவகை நெறியால் அவள் தலைவியின் ஒழுக்கத்தை உய்த்து அறிவாள்.[125] இவ்வாறு அறிந்து இருவரும் அன்புடையார் என்று தெரிந்து தெளிந்தபிறகே பின்னிலை முயற்சிக்கு அவள் உடன்படுவாள். அவள் மனநிலை அறிந்தே அவர்களைக் கூட்டுவிக்கப் பலவாறும் முயல்வாள்.[127]

பகற்குறி இரவுக்குறி என அவர்கள் சந்திக்கும் இடம் இரண்டுவகைப்படும்.[128] மனைக்கும் மதிலுக்கும் நடுவணது

"ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாயெனப் படுவாள் செவிலி யாகும்." —சூ. 122.

"தோழி தானே செவிலி மகளே" —சூ. 123.

"சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே" —சூ. 124.

"குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்
இருவரும் உள்வழி அவன்வர உணர்தலென
மதியுடம் படுதல் ஒருமூ வகைத்தே." —சூ. 125.

"அன்ன வகையான் உணர்ந்தபின் அல்லது
பின்னிலை முயற்சி பெருள்என மொழிப." —சூ. 126.

"முயற்சிக் காலத்து அதற்பட நாடிப்
புணர்த்தல் ஆற்றலும் அவள்வயி னான." —சூ. 127.

"குறியெனப் படுவது இரவினும் பகலினும்
அறியச் சிறந்த ஆற்றது என்ப." —சூ. 128.

ஓரிடமே இரவுக்குறியிடமாகும்.[129] பகற்குறியாக அமையும் இடம் எயிற்புறன் என்று சொல்லுவர்.[130] தலைவி சிலசமயம் அல்லகுறிப்படுதலும் உண்டு.[131] 'கற்புடை மகளிர் மன நிலையைத் தலைவி களவு ஒழுக்கத்திலும் பெறுவாள்.[132] மறைந்த களவொழுக்கத்தும் ஓரையும் நாளும் துறந்து ஒழுகும் ஒழுக்கம் தலைமகனுக்கு இல்லை.[133] நெறியினது அருமையும், மனன் அழிவும், அஞ்சுதலும், இடையூறும் தலைவன் மாட்டு நிகழா.[134]

தந்தையும் தன்னையரும் களவு ஒழுக்கத்தைக் குறிப்பால் உணர்வர்.[135] தாய் வெகுளாமல் செவிலித்தாயோடு சேர்ந்து கவலை கொள்ளுவாள். [136]

அம்பலும் அலரும் களவு ஒழுக்கத்தில் தோன்றும். அதற்குக் காரணமாக விளங்குபவன் தலைவனேயாவான் அம்பல் என்பது முகிழ்த்தல்; அலராவது வாய்விட்டுச் சொல்லுதல்.[137]

"இரவுக் குறியே இல்லகத் துள்ளும்
மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே.
மனையகம் புகாஅக் காலை யான" —சூ. 129.
"பகற்புணர் களனே புறனென மொழிப
அவளறி உணர வருவழி யான" —சூ. 130.
"அல்லகுறிப் படுதலும் அவள்வயின் உரித்தே
அவன்குறி மயங்கிய அமைவொடு வரினே" —சூ. 131.
"ஆங்காங் கொழுகும் ஒழுக்கமும் உண்டே
ஓங்கிய சிறப்பின் ஒருசிறை யான" —சூ. 132.
"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவற்கு இல்லை" —சூ. 133.
"ஆறினது அருமையும் அழிவும் அச்சமும்
ஊறும் உளப்பட அதனோர் அற்றே" —சூ. 134.
"தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப"—சூ. 135.
"தாய் அறிவுறுதல் செவிலியோடு ஒக்கும்" —சூ. 136.
"அம்பலும் அலரும் களவுவெளிப் படுத்தலின்
அங்கதன் முதல்வன் கிழவ னாகும்" —சூ. 137

களவு வெளிப்பட்டபின் வரைதலும், களவு வெளிப் படாமை வரைதலும் என வரையும் நெறி இரண்டென்று சொல்லுவர்.[138] களவு ஒழுக்கத்தின்கண் கற்பு ஒழுக்கம் போலத் தலைவனின் பிரிவு அமைவதில்லை. எனினும் பொருள் வயிற் பிரிதலும், வேந்தர்க்கு உதவவேண்டிப் பிரிதலும், காவற் பிரிதலும் நிகழும் என்பர்.[139]

"வெளிப்பட வரைதல் படாமைவரைதல் என்று
ஆயிரண்டென்ப வரைதல் ஆறே" —சூ. 138.

"வெளிப்படை தானே கற்பினொடு ஒப்பினும்
ஞாங்கர்க் கிளந்த மூன்றுபொரு ளாக
வரையாது பிரிதல் கிழவோற்கு இல்லை" — சூ. 139.

11. கற்பியல்

கற்பு எனப்படுவது, திருமணச் சடங்கோடு பொருந்திக் கொள்ளுதற்கு உரிய மரபினையுடைய தலைவன் கொடுத்தற்கு உரிய மரபினை உடையவர் தலைவியைக் கொடுப்பக் கொள்வது.[140] மணம் செய்துகொண்டு வாழும் இல்லற வாழ்வு கற்புவாழ்க்கை எனப்படும். கொடுப்போர் இன்றியும் தாமே மணம் முடித்துக் கொள்ளுதலும் உண்டு. உடன் போக்கு நிகழ்ந்தவழிச் செல்லும் இடத்தில் மணம் முடித்துக் கொள்வர்.[141] இத்தகைய சடங்கு நால்வகை வருணத்தார்க்கும் உரியது.[142] பொய் கூறலும் பிழைபட ஒழுகலும் தோன்றிய பின்னரே இத்தகைய திருமணச் சடங்கினைப் பெரியோர்கள் ஏற்படுத்தினர் என்பர்.[143]

கற்பியலில் தலைவன் கூற்று

திருமண நிகழ்ச்சி முடிந்த பின் கட்டுப்பட்டிருந்த நெஞ்சு நெகிழ்ந்து அன்பு தோன்ற உரையாடுவர். முயங்கல்

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்
வதுவே" —சூ. 140

"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான" —சூ. 141

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே" —சூ. 14

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப" —சூ. 143

விருப்பம் அவளுக்குத் தோன்றிய போதும் நாணத்தால் தலைகவிழ்த்துக் கொள்வாள். அவர்கள் இருவரும் உள்ளப் புணர்ச்சியால் உணர்வு ஒன்றுபட மகிழ்வர்: இல்லற வாழ்வு இடையறு இன்பத்தை நல்கும். அம்மகிழ்ச்சியில் தலைவன் தலைவியோடு உரையாடி மகிழ்வான். தலைவனோடு உடன் வாழும் உரிமை கற்பு ஒழுக்கத்தில் அவளுக்குக் கிடைக் கிறது. அவனுக்கும் அவளிடம் மனைவி என்ற உரிமைபற்றிப் பேச வாய்ப்பு மிகுகிறது.

அறம் பொருள் இன்பங்களை வழுவாமல், தன் குலத் திற்கு ஏற்ற மனைவாழ்க்கையைத் தலைமகள் நடத்தற் கண்ணும் தலைவன்கண் கூற்று நிகழும். கற்பொழுக்கத்தில் நின்று களவு ஒழுக்க வாழ்க்கையின் குறைகளை எடுத்துப் பேசுவான். அச்சமுற்ற காலத்தெல்லாம் தெய்வம் துணை செய்தது எனக்கூறித் தோழி தெய்வம் ஏத்துதற் கண்ணும் தலைவன் கூற்று நிகழும். செம்புலப் பெயல்நீர் போல அன்புடைய நெஞ்சம் கலந்த நிலையில், தனது காதலின் மிகுதி தோன்ற வெளிப்படுத்துவான். வேம்பின் பைங்காயும் தலைவி தந்தால் அது தேம்பூங்கட்டி எனப் பாராட்டிக் கூறுவான். அந்தணர் திறத்தும் சான்றோரிடத்தும் நடந்து கொள்ள வேண்டிய முறைமைகளைக் குறிப்பினுல் காட்டிய விடத்து அவன் உணர்ந்து மாற்றம் தருவான். களவுக் காலத்து நிகழ்ந்த அருமையைத் தனித்துச் சிந்தித்து வாய் விட்டுக் கூறுவான். களவுக் காலத்து நிகழ்ந்த குற்றத்தை ஆய்ந்து விண்ணில் எழுதிய எழுத்தைப் போல மறந்து ஒழுகுவர்.

"அழியல்", "அஞ்சல்" என இயற்கைப் புணர்ச்சிக்கண் கூறிய அவ்விரு செய்தியை அவன் மறந்து பிற பெண்டிர் மாட்டு நயந்த விடத்தும் அவன் கூற்று நிகழும். தலைவியின் ஊடலைத் தக்க சொல்லால் ஆற்ற முற்படுவான். புலவி நுணுக்கம் அமையத் தலைவியின் சொற்கள் அமையும். அவன் தன் பொறுமையும் பெருமையும் தோன்றத் தக்க உரை சொல்லி ஆற்ற முனைவான், புதல்வனைப் பயந்த ஈன்றதன்

அணிமை நீங்கின பொழுதின்கண் அவளுக்காக முனிவர் மாட்டும் அமரரைக் குறித்தும் சிறப்புச் செய்வான்.

தலைவன் பரத்தையின் காரணமாகத் தலைவியைப் பிரிவான். அவள் அவனைப் புல்ல மறுத்து வருந்திக் கிடப்பாள். அவள் மெல்லடி வருடிப் பின்னின்று அவளை அடைவான். ஊடல் மிக்கவளை உறுவதற்கு இயலாமற் போகும் பொழுது பிறபிற பெண்டிரைச் சுட்டி அவர்கள் ஊடல் தீர்ந்து மகிழும் செய்தியைக்கூறி அவள் மனத்தை மாற்றுவான். பிரிவு நிமித்தமாக வருந்திய மனைவியையும் காமக் கிழத்தியையும் பிரியேன் என்றுகூறி அவர்கள் வருத்தத்தை நீக்குவான்.

'காதல் கடலினும் பெரிது' என்று கூறி, அவர்களை விட்டுப் பிரிய மாட்டாமையை உணர்த்துவான். பிரிவுக்கு அஞ்சி வருந்தும் தலைவியை ஆற்ற அவன் உரை நிகழ்த்துவான். ஒரு முறை பிரிந்து மறுமுறையும் அந்நெறியே செல்ல நினைந்தவழியும் கூற்று நிகழும். பொருளினும் காமம் வலியுடைத்து என உட்கொண்ட வழியும் கூற்று நிகழும். பிரிந்தால் அவள் உயிர் தரியாள் என்ற நினைவு தோன்று தற்கண்ணும் கூற்று நிகழும்.

வேறு வழியின்றிப் பிரிய நேரின், அதனை அவன் வெளிப் படுத்தியே தீர்வான். அவள் உடன் போக வேண்டும் எனச் சொல்லியவழியும் அவளைத் தடுத்து நிறுத்துவான்.

தோழி, பொருளைக்கருதிப் பிரிவது தக்கதுஅன்று என்று கூறிய வழி, அதனை மறுத்துப் பொருளீட்ட வேண்டிய இன்றியமையாமையை எடுத்து இயம்புவான். வேற்று நாட்டுக்குப் பிரிவது உறுதி என முடிவுக்கு வந்தபிறகும் போதலும் தவிர்தலும் குறித்துச் சிந்திப்பான். அவன் மனம் நெகிழ்வு பெறும். பிரிந்த தலைவன் மீட்டுத் திரும்பிய போதும் கூற்று நிகழும். பிரிந்து அவளை நினைந்து அவள் சிறப்பைப் பாராட்டிப் பேசுவான். தானுற்ற இன்பத்தினைப் பாகனுக்கு எடுத்து உரைப்பான்,

காமக்கிழத்தியும் மனைவியும் கிளக்கும் ஏமம் மிக்க சொற்களுக்கு விடையாக அவன் விடையிறுப்பான்; சென்ற இடத்து உழந்த வருத்தத்தைக் கிளப்பான். அரிய வினையை முடித்துவந்த தலைமைக் காலத்து விருந்தினரோடு நல்லவற்றைக் கிளத்தி இன்னுரை பேசுவான். மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும் வரவேற்றுப் பிரிந்தது குறித்து வினவியவிடத்துத் தலைவன் அளவளாவி விரும்பி உரையாடுவான். பெண்டிரும் அல்லாத ஏனை வாயிலோரும் அவனோடு உரையாட அவன் மாற்றம் தருவான்.[144]

"கரணத்தின் அமைந்து முடிந்த காலை
நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்
எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவத்தும்
அஞ்ச வந்த உரிமைக் கண்ணும்
நன்னெறிப் படருந் தொன்னலப் பொருளினும்
பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக்
குற்றம் சான்ற பொருள்எடுத் துரைப்பினும்
நாமக் காலத் துண்டெனத் தோழி
ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்
அல்லல் தீர ஆர்வமொ டளைஇச்
சொல்லுறு பொருளின் கண்ணும் சொல்லென
ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென
அடிசிலும் பூவும் தொடுத்தற் கண்ணும்
அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பில் பிறர்பிறர் திறத்தினும்
ஒழுக்கங் காட்டிய குறிப்பினும் ஒழுக்கத்துக்
களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி
அலமரல் உள்ளமொடு அளவிய இடத்தும்
அந்தரத்து எழுதிய எழுத்தின் மான
வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்
அழியல் அஞ்சல் என்று ஆயிரு பொருளினும்

கற்பியலில் தலைவியின் கூற்று

தலைவனது உயர் பண்புகள் அவனை நினைக்கச்செய்கிறது. அப் பண்புகளை அவள் வாய் விட்டுக் கூறுவாள். அவன் பண்பு உயர்வுகளைத் தோழி கூறினும், தலைவி அவளோடு சேர்ந்து அவன் இனிமையை எடுத்துக் கூறுவாள்.

நிலத்தினும் பெரிது வானினும் உயர்ந்தது நீரினும் நிறைந்தது தலைவனின் நட்பு என மிக உயர்த்திப் பேசும் இயல்பு அவளிடம் காணப்படும். தலைவிக்கு உரிமையைக் கொடுத்த தலைவன் மாட்டுப் பெருமையில் திரியா அன்பின் கண் இக்கூற்று நிகழும்.

தலைவன் நீங்கி அவள் தனிமை உறுங்காலத்துக் காமத்து மிகுதிக்கண் அலமரல் உற்று அலந்து பேசுவாள். 'அன்னை போல இனிய கூறியும் கள்வர் போலக் கொடியன்' என்பது போல அவள் கூற்று அமையும். 'நல்லன் என்னும் யாமே அல்லன் என்னும் என் தடமென் தோளே' என்று ஐங்குறு நூற்றுப் பாடல் பேசும்.

இன்பமும் துன்பமும் நடுக்கும் நிகழும் வழியும் அவள் கூற்று நிகழும். தோள் தோய் காதலனைப் பிரிக்கும் வாள்

தான்அவள் பிழைத்த பருவத் தானும்
நோன்மையும் பெருமையும் மெய்கொள அருளிப்
பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித்
தன்னி ளுகிய தகுதிக் கண்ணும்
புதல்வற் பயந்த புனிறுதீர் பொழுதின்
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்
பயங்கெழு துணையணைப் புல்லிப் புல்லாது
உயங்குவனள் கிடந்த கிழத்தியைக் குறுகி
அல்கல் முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லென் சீறடி புல்லிய இரவினும்

போல் வைகறை வந்தது என்று அவள் நெஞ்சு துணுக்குறும்.

'புதல்வனை ஈன்ற எம்மேனி முயங்காதே அது உன் மார்பு எழில் சிதைக்கும்' என அவனைக் கடிந்தும் பேசுவாள். அவன் தன்னை அவமதித்தான் என்னும் குறிப்பு நிகழுமாயின் இவ்வாறு தலைவி பேசுவாள். அவன் விரும்பிய புதியாளின் நலத்தின் பொருட்டு அகன்ற தலைவனைத் தனது தனிமையைப் புலப்படுத்தி அவன் மாட்டுச் செல்லும் நெஞ்சத்தை மீட்டு அருளப் பண்ணி அவன் காதலித்த புதியவளை எதிர் பெய்து கொண்டு, புணர்ச்சியை மறுத்து ஈர நெஞ்சோடு புலந்து பேசுவாள். 'நின் மார்பு நயந்த நன்னுதல் அரிவை வேண்டிய குறிப்பின்படி அங்கேயே தங்குவது தக்கது' என்று பிறர் மாட்டுத் தங்கிய ஒழுக்கத்தை உடைய தலைவனிடம் பேசுவாள். தலைவன் போகாத காலத்துப் போவெனக் கூறுதலும் உண்டு. 'பூங்கண் புதல்வனைப் பொய் பல பாராட்டி இங்கேயே சுற்றிச் சுழல்கிறாய்; அவன் உன் அணி சிதைப்பான்; நீ அங்கேயேசெல்.' என்று நயம்பட அவனிடம் பேசுவாள்.

உறலருங் குரைமையின் ஊடன் மிகுத் தோளை
பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும்
பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப்
பரிவு நீக்கிய பகுதிக் கண்ணும்
நின்றுநனி பிரிவின் அஞ்சிய பையுளும்
சென்றுகை இகந்துபெயர்த்து உள்ளிய வழியும்
காமத்தின் வலியும் கைவிடின் அச்சமும்
தான்அவள் பிழைத்த நிலையின் கண்ணும்
உடன்சேறற் செய்கையொடு அன்னவை பிறவும்
மடம்பட வந்த தோழிக் கண்ணும்
வேற்றுநாட்டு அகல்வயின் விழுமத் தானும்
மீட்டுவர் வாய்ந்த வகையின் கண்ணும்
அல்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும்

காமக் கிழத்தி தலைவியின் மகவைத் தழுவிக்கொண்டு விளையாடும் நிலையின் இறுதியில், 'நீயும் தாய் அவனுக்கு' என அவள் நாணும்படி நயம் மிக்க உரை நிகழ்த்துவாள்.

தலைமகள் மகனொடு விளையாடி மகிழுமிடத்துத் தலைவன் தோன்றி, அவள் புறம் நின்று மழலை மொழி கேட்டுத் தானும் இன்புற விரும்புவதாகக் கூறி ஊடல் பெயர்ப்பான். தந்தையை ஒப்பர் மக்கள் என்பதால், 'மகளிரை நுந்தை போல் நோய்கூர விடாதே' என்று கூறி மகனைப் பழித்தும் உரையாடுவள். கொடியாரது கொடுமை சுடும் இயல்பினது என்று கூறிப் புணர்ச்சியை விரும்பாது புகழை விரும்பி நீங்குதலும் உண்டு. காமம் விரும்பும் பரத்தையரைப் போலாது அறத்தை விரும்புதல் தலைவியரது இயல்பாகும்.

தலைவனது கொடிய ஒழுக்கத்தைத் தலைவி பொறுக்க வேண்டி அவளடிமேல் விழுவான். அவனை நெருக்கி 'எங்கையர் காணின் இவ்வாறு பணிதல் நகை விளைவிக்கும்' எனக் கூறித் தடுப்பாள். தலைவன் புறப்பெண்டிர் மாட்டுப் போகிறவழி வெகுளுமாறு போலப் புதல்வனையும் அவரிடைச் சென்ற வழிவெகுண்டு உரைப்பாள்.

பேரிசை யூர்திப் பாகர் பாங்கினும்
காமக் கிழத்தி மனையோள் என்றிவர்
ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்
சென்ற தேஎத் துழப்புநனி விளக்கி
இன்றுச் சென்ற தன்னிலை கிளப்பினும்
அருந் தொழில் முடித்த செம்மற் காலை
விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்
மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும்
கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்
ஏனைய வாயிலோர் எதிரொடு தொகைஇப்
பண்ணமை பகுதிமுப் பதினொரு மூன்றும்
எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன'' —சூ. 144

தலைவி தலைவனிடத்து ஒரோவழித் தன் மிகுதி தோன்றவும் அவன் வேறுபாடு புலப்படவும் சூளுறவு உரைத்தலும் உண்டு. காமக் கிழத்தியின் நலம் பாராட்டி அதன் வாயிலாகத் தலைவனைக் கடிந்து உரைத்தலும் உண்டு. அவள் மிக்க இளமையைக் கூறித் தலைவனைப் பழிப்பாள் என்பதாம். காய்தல் உவத்தல் நீக்கி அகலல், விரும்பி ஏற்றல் ஆகிய நிலைகளில் தலைவனின் கொடுமையைத் தோழிக்கு எடுத்து உரைப்பாள். பார்ப்பார், பாங்கன், தோழி, செவிலி, பாணன், விறலி, இளையர், விருந்தினர், கூத்தர், அறிவர், கண்டோர் முதலியோரிடத்தும் தலைவி பேசுவாள். அவர்களை ஊடல் தீர்க்கும் வாயில்களாகக் கொள்வாள். ஆற்றுமை வாயில்களாகவும் புதல்வன் வாயிலாகவும் ஊடல் தீர்ந்து மகிழ்வாள்.[145]

"அவனறிவு ஆற்ற அறியும் ஆதலின்
ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்
உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின்
பெருமையில் திரியா வன்பின் கண்ணும்
கிழவனை மகடூஉப் புலம்புபெரி தாகலின்
அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்
இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும்
கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி
நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ
நளியின் நீக்கிய விளிவரு நிலையும்
புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு
அகன்ற கிழவனைப் புலம்புநனி காட்டி
இயன்ற நெஞ்சம் தலைப்பெயர்த்துத் தருக்கி
எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கினும்
தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி
எங்கையர்க்கு உரையென இரத்தற் கண்ணும்
செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும்
காமக் கிழத்தி தன்மகத் தழீஇ
ஏமுறு விளையாட்டு இறுதிக் கண்ணும்

களவிற் புணர்ந்து உடன்போகிய தலைமகள் கற்புக் கடன் பூண்டு ஒழுகும் காலத்து மனைக்கண் இருந்து தான் முன்னர் இடைச்சுரத்தில் தலைவனுடன் கண்ட கருப் பொருள் முதலியவற்றையும், அவற்றின் தொழிலையும் குறித் துத் தலைவன் அன்புறுதற்குத் தக்கவற்றைக் கூறுவாள். அக் கூற்று அவன் மேற்கொள்ளும் புதிய முயற்சிகளில் உள்ள இடுக்கண்களையும் இடையூறுகளையும் வழிக்கொடுமைகளை

சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி
அறம்புரி நெஞ்சமொடு தன்வரவு அறியாமைப்
புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானும்
தந்தையர் ஒப்பர் மக்கள்என் பதனால்
அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கினும்
கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது
நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப்
பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணும்
கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி
அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்
காதல் எங்கையர் காணின் நன்றென
மாதர் சான்ற வகையின் கண்ணும்
தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை
மாயப் பரத்தை உள்ளிய வழியும்
தன்வயின் சிறப்பினும் அவன்வயின் பிரிப்பினும்
இன்னாத் தொல்சூள் எடுத்தற் கண்ணும்
காமக் கிழத்தி நலம் பாராட்டிய
தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்
கொடுமை ஒழுக்கத்துத் தோழிக்கு உரியவை
வடுவறு சிறப்பில் கற்பில் திரியாமைக்
காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்
ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்
வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇக்
கிழவோள் செப்பல் கிழவது என்ப" —சூ. 145

யும் சுட்டி அவன் செயலுக்கு அச்சம் ஊட்டுவன வாகும்.[146]

தோழியுள்ளிட்ட வாயில்களைத் தலைவன் மாட்டுப் போக விட்ட காலத்தும் முற்கூறிய கூற்றுகள் நிகழும் என்பர்.[147]

கற்பியலில் தோழி கூற்று

பெறற்கரிய பெரும்பொருள் முடித்த பின்னர்த் தோழி தலைவனைச் சிறப்பித்துப் பாராட்டுவாள். அவளை அடையப் பெற்றும் அவன் வருந்துவது தேவையற்றது என்று கூறு வாள். கனவில் உற்ற வருத்தம் மறைந்தது என்றும், மலர் அணிந்து அவளை வதுவை அயர்வது இனிது என்றும் கூறுவாள்.

தலைவன் தலைவியை வரைக எனத் தெய்வத்திடம் முறை யிட்டுக் கடன் செலுத்துவாள். அறம் பொருள் இசை கூத்து முதலியவற்றால் தலைவியை மறந்து தலைவன் ஒழுகுதற்கண் ணும் தோழி எடுத்துக் கூறுவாள். அடங்கா ஒழுக்கத்துத் தலைவன்மாட்டு மனன் அழிந்தோளை அடங்கக் காட்டுவ தற்கு ஏதுவானசெய்திகளையும் தோழி கூறுவாள். திருமனைப் பல கடமைபூண்ட மனைக்குரிய மகளிர் இன்னர் என்றும், இன்னாக் கிளவி ஏற்றல் தக்கது அன்று என்றும் கூறுவாள். பிழை செய்து வந்திருந்த தலைமகனை நெருங்கித் தலையளி செய்யுமாறு தலைமகளைத் தோழி வேண்டுவாள். பணிந்த மொழியினால் வணங்கி இவ்வாறு கூறுவாள். புறம் சென்று ஏனைய மகளிரோடு ஆடி மகிழ்தற்கண் தலைவன் விரும்பிச்

"புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து
இடைச்சுரத் திறைச்சியும் வினையும் சுட்டி
அன்புறு தக்க கிளத்தல் தானே
கிழவோன் செய்வினைக்கு அச்ச மாகும்" —சூ. 146

"தோழியுள் உறுத்த வாயில் புகுப்பினும்
ஆவயின் நிகழும் என்மனார் புலவர்." —சூ. 147

செல்லுமிடத்தும் தோழி தலைவியின் மனச்சுழற்சியை எடுத்து உரைப்பாள். இருவருக்கும் சிறந்த புதல்வனை நினையாமல், தலைமகன் கள்வன்போல வந்து பெயர்தலைக் கண்டித்து, அவன் தனிமைப் போக்கை அறிவுறுப்பாள், தாயும் மகனும் துயிலும் இடத்தில் அவனும் தங்கி இருக்க வேண்டும் என்பது அறிவுறுத்தும் கருத்தாகும். 'நீ தலைவி மாட்டுக் கொண்ட நலத்தினைத் தந்து போ' எனத் தோழி தலைவனிடம் உரைப்பாள். தலைமகனைப் பேணாத ஒழுக்கத்தினால் தலைமகள் நாணிய பொருண்மைக் கண்ணும் கூற்று நிகழும். தலைமகன் சூள்உற்ற சூளுறவில் சோர்வு கண்டு அழிந்து கூறினும் கூற்று நிகழும். தலைவன் தலைவியை வந்து அடைவதாகச் சூள்உரை கூறி அவ்விதம் மறந்து ஒழுகிய வழி தலைவி வருந்துவாள். அப்பொழுது தோழி அவளைத் தேற்றுவாள் என்பதாம். நும்மைப் போன்றவரிடத்துப் பொய்யொடு மிடைந்தவை தோன்றின் மெய் யாண்டு உளதோ என்று கூறிப் பெரியோர் ஒழுக்கம் அறனும் பொருளும் வழுவாமல் நடந்துகொள்வதே எனத் தோழி தலைவனிடம் கூறுவாள். மேற் சொல்லியவாற்றான் தலைவன் பிழை செய்த வழி புலவியில் மூழ்குவாள் தலைவி. தோழி அவள் பக்கத்து இருந்து அதனைக் கெடுத்து ஊடாமல் இருக்கச் சொல்வாள். 'நீயழ நீத்தவன் நாணிலன், அவன்மாட்டு நீ ஊடுவது தக்கது அன்று' என்று தோழி கூறுவாள்.

'உப்பமைந்தற்றால் புலவி அது சிறிது மிக்கற்றால் நீள விடல்' எனத் தலைவனிடம் கூறி, ஊடல் நீடல் கூடாது என அறிவிப்பாள். உணவுக்கு உப்புச் சிறிதே சுவை தரும்; மிகுந்தால் அது உணவையே சுவையற்றதாக ஆக்கிவிடும். அதனால் அதனை நீட்டிக்க விடக்கூடாது என அறிவிப்பாள். தலைவியை மாற்ற முடியாது என அறிந்த பின்னரே, அவள் தலைவன் பக்கம் சென்று இவ்வாறு கூறுவாள். "வேம்பின் பைங்காயைத் தோழி தந்தால் தேம் பூங்கட்டி" என்று சொன்ன காலமும் உள்ளது. "பாரி பனிச்சுனைத் தெண்ணீரைப் பருகத் தந்தாலும் இப்பொழுது உவர்க்கிறது" என்று

கூறுகிறாள். அன்பு இவ்வாறு மாற்றமடைந்தது வியப்பாக உள்ளது என்று தலைவனிடம் அவன் முன்னைய மனநிலையையும் பின்னைய ஒழுகலாற்றையும் சுட்டிக் காட்டுவாள்.

பாணர் கூத்தர் விறலியர் முதலாயினோர் தலைவனின் முறையீட்டை எடுத்துக்கூற அவருக்கு எதிராகத் தோழி உரை நிகழ்த்துவாள். தலைவியை நீத்த தலைவனை மறுபடியும் சேர்ப்பிப்பதற்குக் கண்ணோட்டமின்றிக் கண்டித்துப் பேசுவாள். 'இன்னது இசைக்கும் அம்பலொடு வாரல் ஐய எம் தெருவே' என்று கூறி, அங்கு வராதே என்று உரிமை பற்றிப் பேசுவாள். தலைமகன் சேணிடைப் பிரியும் காலத்து முன்னின்று கூறுதல் மரபுகெடாமல் அமைய வேண்டும் என்பர். மரபினிற் கூறுதலாவது குற்றேவல் முறைமையாற் கூறுதல் என்பர்.

பிரிந்த தலைமகன் வருவான் எனக்கூறலும், பருவம் கண்டு கூறலும், வற்புறுத்தலும், நிமித்தம்கண்டு கூறலும், வந்தான் எனக் கூறலும், இந்நிகரனவும் தோழிபால்நிகழும் கூற்றுகள் என்பர்.[148]

காமக்கிழத்தியர் கூற்று நிகழும் இடம்

காமக் கிழத்தியர் என்பார் தலைவன் விரும்பி உறவு கொள்ளும் காதல் மகளிர். அவர்கள் தலைவனை மணந்தவர். அவனோடு வாழ்பவர். அவர்கள் காதற்பரத்தையரினும் முற்றிலும் வேறுபட்டவர்கள். காதற்பரத்தையர் என்பார்

"பெறற்கரும் பெரும்பொருள் முடித்தபின் வந்த
தெறற்கரு மரபின் சிறப்பின் கண்ணும்
அற்றமழி வுரைப்பினும் அற்றம் இல்லாக்
கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினும்
சீருடைப் பெரும்பொருள் வைத்தவன் மறப்பினும்
அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை
அடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்
பிழைத்துவந் திருந்த கிழவனை நெருங்கி

ஆடலிலும் பாடலிலும் வல்லாராகித் தம் அழகும் இளமையும் காட்டி இன்பமும் பொருளும் விரும்பி ஒருவர் மாட்டுத் தங்காதார்.

தலைவனைப் புல்லும் காமக்கிழத்தி புலவி கொள்ளுதலும் உண்டு. புலவியை நீடவிடாமல் அவனை நாடிப் புணர்ச்சியை விரும்பும் நிலையில் நெஞ்சொடு கிளப்பாள்.

மனைக் கிழத்தியை இகழ்ந்தும் தலைவனை இகழ்ந்தும் பேசுவது உண்டு. மழலை மொழி பேசும் எல்லாச் சிறுவர்களையும் கண்டுமகிழ்ந்து உரையாடுவர். மனையோள்இயற்றும் வினைபற்றித் தாங்கரும் துன்பம் தலைக்கொள்ளுமிடத்து அவள்கூற்று நிகழும், காதற் சோர்விலும் ஒப்புரவு உள்ளத்தாலும் மனைவியைக் காய்தல் இன்றித் தலைமகன் மாட்டுப் பொருத்தற் கண்ணும் கூற்று நிகழும். இது தலைமகன்மாட்டுத் துனியுளவழி நிகழும். 'அவனே தண்கமழ் புதுமலர் ஊதும் வண்டு என மொழிப மகன் என்னுரே' எனத் துனிவு கொண்டு கூறுவாள்.

இன்னகைப் புதல்வனைத் தழுவிக் கொண்டு இழையணிந்து மகிழ்வாள். தலைவனிடம் ஊடல் கொண்டு மகனைப் புல்லாதே என்று கூறுவாள். அவனைத் தழுவினல் அவன் மார்பகம் அவன் சிவந்த வாய் நீரால் நனைப்புறும்; அணியாரம் பற்றியிழுப்பான்; சென்னியில் உள்ள பூங்கொத்தை இழுத்துப் பறிப்பான்; அதனுல் பரத்தையர் அவனிடம் புலவி கொள்ளுவர் என்று கூறுவாள்.

தான் மனையாளை ஒத்தலால் தன் போல்வார் தலைவனுக்கு மிக்கு உளர் எனக் குறிப்பிட்டும் பேசுவாள். தலைவனேடு ஆறும் குளனும் காவும் சென்று ஆடுவாள்.[148]

இழைத்தாங் காக்கிக் கொடுத்தற் கண்ணும்
வணங்கியல் மொழியான் வணங்கற் கண்ணும்
புறம்படு விளையாட்டுப் புல்லிய புகர்ச்சியுஞ்
சிறந்த புதல்வனைத் தேராது புலம்பினும்

வாயில்கட்கு உரிய ஒழுகலாறுகள்

தலைவியின் கற்பும், காமமும், நற்பால் ஒழுக்கமும், மெல்லியலும், பொறையும், நிறையும், விருந்து புறந்தரும் சிறப்பும், சுற்றம் ஓம்பலும், மற்றுமுள்ள மாண்புகளும் முகம்புகு முறைமையில் தலைவனுக்கு அகம் புகு மரபினை யுடைய வாயில்கள் உணர்த்துவர். 'தான் துழந்தட்ட தீம்புளிப் பாகர் இனிதெனக் கணவன் உண்டலின் நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே' என்று பாராட்டிக் கூறுவர்.[150]

மாணலந் தாவென வகுத்தற் கண்ணும்
பேணா ஒழுக்கம் நாணிய பொருளினுஞ்
சூள்வயின் திறத்தால் சோர்வுகண் டழியினும்
பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து
பெறுதகை யில்லாப் பிழைப்பினும் அவ்வழி
உறுதகை யில்லாப் புலவியின் மூழ்கிய
கிழவோள் பால்நின்று கெடுத்தற் கண்ணும்
உணர்ப்புவயின் வாரா ஊடலுற் றோள்வயின்
உணர்த்தல் வேண்டிய கிழவோன் பால்நின்று
தான்வெகுண் டாக்கிய தகுதிக் கண்ணும்
அருமைக் காலத்துப் பெருமை காட்டிய
எளிமைக் காலத் திரக்கத் தானும்
பாணர் கூத்தர் விறலியர் என்றிவர்
பேணிச் சொல்லிய குறைவினை எதிரும்
நீத்த கிழவனை நிகழுமாறு படீஇயர்
காத்த தன்மையிற் கண்ணின்று பெயர்ப்பினும்
பிரியுங் காலத் தெதிர் நின்று சாற்றிய
மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்
வகைபட வந்த கிளவி யெல்லாந்
தோழிக் குரிய என்மனார் புலவர். —சூ. 148

"புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்
இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்

செவிலியின் கூற்று

முக்காலத்தும் பொருந்தும் நற்செய்தி உரைத்தலும் அல்லவை கடிதலும் செவிலிக்கு உரிய.[150]

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'

என்பது அத்தகைய நல்லறிவுரையாம்.[151]

அறிவர்க்குரிய கூற்று

மேற் செவிலித் தாய்க்கு உரிய கிளவி அறிவர்க்கும் உரிய.[152] தலைவனும் தலைவியும் அவர் ஏவல்வழி நிற்றலின்

பல்வேறு புதல்வர்க் கண்டுநனி உவப்பினும்
மறையின் வந்த மனையோள் செய்வினை
பொறையின்று பெருகிய பருவரற் கண்ணும்
காதற் சோர்விற் களப்பாட் டாண்மையில்
தாய்போற் கழறித் தழீஇய மனைவியைக்
காய்வின் றவன்வயிற் பொருத்தற் கண்ணும்
இன்னகைப் புதல்வனைத் தழீஇ இழையணிந்து
பின்னை வந்த வாயிற் கண்ணும்
மனையோ ளொத்தலின் தன்னோர் அன்னோர்
மிகையெனக் குறித்த கொள்கைக் கண்ணும்
எண்ணிய பண்ணையென் றிவற்றொடு பிறவும்
கண்ணிய காமக் கிழத்தியர் மேன." —சூ. 149

"கற்புங் காமமும் நற்பா லொழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்
பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்
முகம்புகல் முறைமையிற் கிழவோற் குரைத்தல்
அகம்புகல் மரபின் வாயில்கட் குரிய." —சூ. 150

"கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும் வழிகொள
நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்
செவிலிக் குரிய ஆகும் என்ப." —சூ. 151

அவர்கள் கேட்ப இடித்து உரைத்தலும் அவர்மாட்டு உள.[153]

ஒரு சில மரபுகள்

புலத்தலும் ஊடலும் தலைவனுக்கும் உரிய. உணர்ப்பு எல்லை கடப்பினும், செய்குறி பிழைப்பினும், அவன் புலவியும் ஊடலும் கொள்வான் என்பர்.[154] புலவி சிறிது நேரம் நீட்டிக்கும். ஊடல் அதனினும் மிக்கது. புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும் தோழி இடையிட்டுப் பேசுதற்கும் உரியள்.[155] பரத்தைமை ஒழுக்கத்தைக் கண்டிக்கவேண்டியும் அவனிடம் உரிமையோடு பேசும் வாய்ப்புப் பெற்றுள்ளமையாலும், தோழி அவனை அன்பிலை, கொடியை என்று கூறவும் செய்வாள்.[156]

தலைவன் குறிப்பறிதல் வேண்டியும், கிழவி அகமலிந்த ஊடல் நீங்கும் இடத்தினும், வேற்றுமை தோன்ற அமையும் கிளவி தலைவியிடத்துத் தோன்றவும் பெறும்.

'யாரிவன் என் கூந்தல் கொள்வான்' எனவும், 'யாரையோ எம்மில் புகுதருவாய்' எனவும் வேற்றுமை தோன்றக் கூறியவாறு காண்க.[157]

"சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய." —சூ. 158
"இடித்துவரை நிறுத்தலும் அவர தாகுங்
கிழவனுங் கிழத்தியும் அவர்வரை நிற்றலின்." —சூ. 153
"உணர்ப்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்
புலத்தலும் ஊடலும் கிழவோற் குரிய." —சூ. 154
"புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்துஞ்
சொலத்தகு கிளவி தோழிக் குரிய." —சூ. 155
"பரத்தை மறுத்தல் வேண்டியுங் கிளவி
மடத்தகு கிழமை உடைமை யானும்
அன்பிலை கொடியை என்றலும் உரியள்." —சூ. 156
"அவன்குறிப் பறிதல் வேண்டியுங் கிளவி
அகமலி யூடல் அகற்சிக் கண்ணும்
வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே." —சூ. 157

காமக் கடப்பில் தலைவன் ஊடல் மிகாமல் அவளிடம் பணிந்து பேசுதலும் உண்டு. தவறு சிறிதாயின் அவளோடு புலப்பான்; தன் தவறு பெரிதாகிய இடத்து அவன் பணிதல் செய்வான்.[158]

அருள் முந்துறுத்த அன்பு மொழி சொற்களை மெய்ப் பொருள்படக் கூறல் தலைவிமாட்டுக் காணப்படும்.[159]

களவினும் கற்பினும் அலராகும் என்று கூறுதல் நீக்கப் படாது[160]. இவ் அலரில் காமத்து மிகுதி தோன்றும்.[161]

"ஊரலர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும் இந்நோய்"

என்பது இதற்கு எடுத்துக் காட்டாகும். தலைவனின் விளையாட்டும் காமத்து மிகுதியைக் காட்டும்.[162]

மனைவியிடத்துத் தலைவனின் கொடுமையைக் கொண்டு சொல்லுதல் வாயில்களிடத்து இல்லை.[163] அவளிடம் கையறு கிளவி கூறுதலும் உண்டு.[164] இவ்வாறு இவர்கள்கூறு வது பெரும்பாலும் முன்னிலைப் புறமொழியாக அமையும்.[165]

"காமக் கடப்பினுட் பணிந்த கிளவி
காணுங் காலைக் கிழவோற் குரித்தே
வழிபடு கிழமை அவட்கிய லான." —சூ. 158
"அருண்முந் துறுத்த அன்புபொதி கிளவி
பொருள்பட மொழிதல் கிழவோட் குறித்தே." -சூ. 159
"களவுங் கற்பும் அலர்வரை வின்றே." —சூ. 160
"அலரில் தோன்றுங் காமத்து மிகுதி." —சூ. 161
"கிழவோன் விளையாட் டாங்கும் அற்றே." —சூ. 162
"மனைவி தலைத்தாட் கிழவோன் கொடுமை
தம்முள வாதல் வாயில்கட் கில்லை." —சூ. 163
"மனைவி முன்னர்க் கையறு கிளவி
மனைவிக் குறுதி உள்வழி உண்டே." —சூ. 164
"முன்னிலைப் புறமொழி எல்லா வாயிற்கும்
பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர்." —சூ. 165

கூத்தருக்கு உரிய திறம்

தொல்லோர் கூறிய நல்லுரை கூறலும், நுகர்ச்சி இவ்வாறு இனியது எனப் புகழ்தலும், பல நெறியாலும் ஊடலினின்றும் தலைமகளை மீட்டலும், ஊடல் தணிவால் அமையும் நன்மையைக் கூறலும், தலைமகளுக்குத் தக்க மெய்யறிவு உணர்த்தலும், ஏதுகாட்டித் தீது உரைத்தலும், அவள் துணியுமாறு தக்க காரணம் காட்டலும், அணிவகைகளை எடுத்துக் கூறலும், கூத்தர் மாட்டு நிகழும் கூற்றுகளாம்.[166]

பாணர்க்கு உரிய கிளவிகள்

தலைவன் பிரிந்த விடத்து அவள் இருக்கும் இடம் தேடிச்சென்று தலைவியின் நிலையை அவனுக்கு உரைப்பர்.[167]

இளையோர்க்கு உரிய கிளவிகள்

வழியது பண்பும், கட்டளையிடப்பட்ட தொழிலின் தன்மையும், இட்ட ஏவலின் முடிவும், கேட்ட வினாவுக்கு விடையும், வழியிடைக் கண்ட பொருளும் மரனும் புள்ளும் சுட்டிக் காட்டலும் இன்ன பிறவும் இளையோர்க்குரிய கூற்றுகள் என்பர். [168] இடத்தினின்று குற்றேவல் செய்தலும்

"தொல்லவை உரைத்தலும் நுகர்ச்சி ஏத்தலும்
பல்லாற் றுனும் ஊடலில் தகைத்தலும்
உறுதி காட்டலும் அறிவுமெய்ந் நிறுத்தலும்
ஏதுவின் உரைத்தலும் துணியக் காட்டலும்
அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன." —சூ. 166

"நிலம்பெயர்ந் துரைத்தல் அவள்நிலை உரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய. —சூ. 167

"ஆற்றது பண்பும் கருமத்து வினையும்
ஏவன் முடிபும் வினவுஞ் செப்பும்
ஆற்றிடைக்கண்ட பொருளும் இறைச்சியுந்
தோற்றஞ் சான்ற அன்னவை பிறவும்
இளையோர்க் குரிய கிளவி யென்ப." —சூ. 168

மெய்காத்தலும் உயர்ந்தோர்க்கு உளதாகிய நடைமுறைகளும் இளையோர்கள் மேற்கொள்வர்.[169]

தலைமகனுக்கு உரிய மரபு

பின்முறையாக மற்றொருத்தியை வதுவை முடிக்க வேண்டிச் செல்பவன், தன் தொல்முறைப்பட்ட மனைவி எதிர்ப்பட்டாலும், தன் புதல்வனை வழியிடத்துக் கண்டாலும் கலங்கி மணத்தைக் கைவிடுதலும் உண்டு.[170]

தலைமகளுக்குரிய மரபு

தலைமகன் காமக்கிழத்தி மாட்டுக் காதல் முற்றி உறவு கொள்ள முற்படும் பொழுது, அவள் மாட்டுத் தலைவி தாயைப்போல முதலிற் கழறித் தழுவிக் கொள்ளுதல் உண்டு. அவன் அவளைப் பற்றிய கவலையால் விடுதல் அறியா விருப்பினன் ஆகும்பொழுது, வேறுவழியில்லாமல் அவளை ஏற்றுக் கொள்வாள்.[171] அவன் சோர்வைக் காத்தல் தலைமகளுக்குக் கடனுதலால், தன் மகனுக்குத் தாயாகிய காமக்கிழத்தியின் உயர்வும் தன் உயர்வாகக் கொண்டு அவளைத் தழுவிக் கொண்டு நல்லுணர்வோடும் வாழ்வாள். தலைமகன் இட்ட பணியை இருவரும் கேட்டு நடப்பர்.[172]

"உழைக்குறுந் தொழிலுங் காப்பும் உயர்ந்தோர்
நடக்கை யெல்லா மவர்கட் படுமே." —சூ. 169

"பின்முறை ஆகிய பெரும்பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி எதிர்ப்பா டாயினும்
மின்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும்
இறந்த துணைய கிழவோன் ஆங்கட்
கலங்கலு முரியன் என்மனார் புலவர்." —சூ. 170

"தாய்போற் கழறித் தழீஇக் கோடல்
ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப
கவவொடு மயங்கிய காலை யான." —சூ. 171

"அவன்சோர்வு காத்தல் கடனெனப் படுதலின்
மகன்தா யுயர்புந் தன்னுயர் பாகுஞ்
செல்வன் பணிமொழி இயல்பாக லான," —சூ. 172

தலைமகனும் பாசறையும்

போர் நிகழ்ச்சிக்காகச் செல்லும் பாசறைக் கண் தலைமக்கள் தலைமகளிரோடு செல்லார்.[173] அங்குப் புறப் பெண்டிர் புணர்ச்சி அமைதலும் உண்டு.[174]

பார்ப்பார்க்கு உரிய கிளவி

தலைவன் பிரிந்தால் தலைவியின் காமநிலைக்கு ஏமம் இன்று எனக் கூறுவர். "இவள் உயிர் வாழாள் நீ நீப்பின்" என்று கூறுவர். ஆராய்ச்சி நிலையாலும் காரண காரியங்களைச் சொல்லி அவன் பிரிவைத் தடுப்பர். தலைவன் குறிப்பினைத் தலைவிக்கு விளங்கக் கூறுவர். ஆவொடுபட்ட நிமித்தம் கூறுவர். தலைமகன் போயினுன் என்று தலைவியிடத்துக் கூறுவர் தலைவனிடம் அவன் செலவழுங்குதல் வேண்டும் எனக் கூறுவர்.[175]

வாயில்கட்குரிய மரபு

தலைவன் தலைவியர் மாட்டு நீங்காப் பற்றுடையவராக வாயில்கள் நடந்து கொள்வர்.[176] அன்புநீங்கிய கிளவியை முன்னிலையில் கூறுர். தலைவன் சிறைப்புறத்தாகை இருக்க அப்பொழுதே இத்தகைய கிளவியை முன்னிலைப் புறமொழி யால் கூறுவர்.[177]

''எண்ணரும்பாசறைப்பெண்ணொடும்புணரார்.—சூ173
"புறத்தோ ராங்கண் புணர்வ தாகும்." —சூ. 174
காமநிலை யுரைத்தலும் தேர்நிலை யுரைத்தலுங்
கிழவோன் குறிப்பினை எடுத்துக் கூறலும்
ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்
செலவுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்
அன்னவை பிறவும் பார்ப்பார்க் குரிய." —சூ. 175
''எல்லா வாயிலும் இருவர் தேஎத்தும்
புல்லிய மகிழ்ச்சிப் பொருள என்ப." —சூ. 176
''அன்புதலைப்பிரிந்த கிளவி தோன்றின்
சிறைப்புறங் குறித்தன் றென்மனுர் புலவர்." —சூ. 177

தற்புகழ்ச்சி

தலைவன் முன் தன்னைப் புகழ்ந்து தலைவி பேசாள். தலைவன் பரத்தையிற் பிரிந்தவழி அவனைத் தெளிவுறுத்தவும், இரந்து வழிப்படுத்துமிடத்தும் தன்பெருமை தோன்ற அவன் குறையைச் சுட்டிக் காட்டுவாள்.[178]

தலைவி முன்னர் தலைவன் தன்னைப் புகழும் கூற்று வினைவயிற்பிரியும் வழி நிகழும். 'இல்லிருந்து மகிழ்வோர்க்கு இல்லையால் புகழ்' எனத் தன் ஆள்வினைத் திறனை எடுத்துக் கூறுவான்.[179]

பாங்கனுக்கு உரிய மரபு

தலைவன் கூறியதற்கு எதிர் கூறுதல் பாங்கனுக்கு உரியது. களவுக் காலத்துக் கழறலும் கற்புக் காலத்துப் பரத்தையிற் பிரிவிற்கு உடம்படாது மறுத்துக் கடிதலும் அவன் மறுத்து உரைத்தலாம்.[180] எனினும், இவ்வாறு மறுத்துக் கூறுதல் அருகிய நிகழ்ச்சியாகும்.[181]

தலைவனுக்கு உரிய மரபு

துன்புற்ற பொழுதெல்லாம் தலைவன் அவளை வற்புறுத்து ஆற்றியே செல்வான்[182] தலைவன் போகக் கருதித்

"தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்
எத்திறத் தானும் கிழத்திக் கில்லை
முற்பட வகுத்த இரண்டலங் கடையே." —சூ. 178

"கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி
கிழவோன் வினைவயின் உரிய என்ப." —சூ. 179

"மொழிஎதிர் மொழிதல் பாங்கற் குரித்தே." —சூ. 180

"குறித்தெதிர் மொழிதல் அஃகித் தோன்றும்."—சூ. 181

"துன்புறு பொழுதினும் எல்லாங் கிழவன்
வன்புறுத் தல்லது சேறல் இல்லை," —சூ. 182

தவிர்தல் போகாமை யன்று; தலைவியை வற்புறுத்துதலைக் குறித்துத் தவிர்ந்த தவிர்ச்சியே தவிர போகாமலேயே நின்றுவிட மாட்டான்.[183]

போர் வினையின்கண் தலைவியைப்பற்றிய நினைவும் உருவெளிப்பாடும் வாய்விட்டு மற்றவர்களிடம் சொல்லான். வினை முடிந்த பிறகு தன் நினைவுகளை மற்றவர்களிடம் எடுத்து உரைப்பான்.[184]

பிரிவுக்குரிய காலங்கள்

தலைவியின் பூப்பு நிகழ்ந்த மூன்றுநாள் கழிந்த பின்பு பன்னிரண்டு நாளும் தலைவன் அவளை விட்டு நீங்கான். பரத்தையிற் பிரிவு அக்காலங்களில் நிகழாது.[185]

கல்விப் பிரிவு மூன்று ஆண்டுகளுக்குமேல் இகவாது.[186] வேந்தனுக்குக் கடமையாற்ற காவற் பிரிவும் தூதுப்பிரிவும் ஓராண்டு எல்லையதாகும்.[187] ஒழிந்த பொருள்வயிற் பிரிவும் ஓர் ஆண்டே யாகும்.[188]

"செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே
வன்புறை குறித்தல் தவிர்ச்சி யாகும்." —சூ. 183

"கிழவி நிலையே வினையிடத் துரையார்
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும். —சூ. 184

"பூப்பின் புறப்பா டீரறு நாளும்
நீத்தகன் றுரையார் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான." —சூ. 185

"வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது." —சூ. 186

"வேந்துறு தொழிலே யாண்டின தகமே." —சூ. 187

"ஏனைப் பிரிவும் அவ்வியல் நிலையும்," —சூ. 188

பதியிகத்தல்

யாறும் குளனும் சோலையும் மகளிரோடு சென்று விளையாடி இன்புற்று வருதற்கு ஊரைவிட்டுச் செல்லுதலும் உண்டு.[189]

"துயிலின்று யாம் நீந்தத் தொழுநையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னே"

என்று தலைவன் பதியிகந்து நுகர்ந்தமை தலைவி கூறினாள்.

இடைச்சுரத்தில்

வினைவயின் பிரிந்தவன் மீண்டு வரும்பொழுது இடைச் சுரத்தில் தங்குவது இல்லை. மாவும் புள்ளும் காட்டும் அன்புறு செயல்கள் தலைவியை நினைவுபடுத்தி வீடு நோக்கிச் செல்ல உந்தும். இடையில் தங்காமல் இரவும் பகலுமாக வந்து சேர்வான். தங்குவானாயின் மனையாள் மாட்டு விருப்பு அற்றவன் என்பது பொருளாகிவிடும்.[190]

அறத்தின்மேல் பற்று

காமம் நிரம்பிக் காதல் வாழ்வு நடத்திய பின்றை மக்களுடன் நிறைந்து அறம் விரும்பும் சுற்றமொடு தலைவ

"யாறுங் குளனுங் காவும் ஆடிப்
பதிஇகந்து நுகர்தலும் உரிய என்ப." —சூ. 189

"வினைவயின் பிரிந்தோன் மீண்டுவரு காலை
இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை
உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியற் கலிமா உடைமை யான." —சூ. 190

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி

னும் தலைவியும் அறச்செயல்களை ஏற்று நடத்துதல் கடமை யாகும். எனவே துறவு தமிழர் நெறியன்று என்பதாகும். இல்லிலிருந்தே அறக்கடமைகளை ஆற்றுவர் என்பதாம்.[191]

வாயில்கள் இன்னார்

தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் முதலியோர் வாயில்கள் எனப்படுவர்.[192]

அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே." —சூ. 191

"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப, —சூ. 192

12. பொருளியல்

பொருளியல் என்பது ஏனைய அகத்திணை புறத்திணை களவு கற்புகளுக்குப் பொதுவான செய்திகளைக் கூறுவதாகும். இதில் சிறப்பாகச் சொல்லுவோரின் மனநிலைகளும், சொற்பொருள் தொடர்பும், சொல் வழக்காறுகளும், பொருளை உணர்த்தும்பொழுது அமையும் உத்திகளும், வழுஅமைதிகளும் கூறப்படுகின்றன. கவிதையின் பல்வேறு இயல்புகளை ஆய்ந்துகாட்டும் நுட்பம் பாராட்டற்குரியதாகும். தொல்காப்பியர் ஓர் சிறந்த திறனாய்வாளர் என்பதை அவர் இதில் புகுத்தும் திறனாய்வுக் கொள்கைகள் காட்டுகின்றன.

பொருள் கொள்ளுமாறு

சொல்லுக்குப் பொருள்கொள்ளுமிடத்து ஏனையவற்றோடு இணைக்கும்பொழுது தக்க சொல் உடன்பெய்தும் விரித்தும் திரித்தும் பொருள் கொள்வர். இவ்வாறு சொல்லுக்குப் பொருள்கொள்ளுங்கால் சொல்லைத் திரிக்கலாமே தவிர, சொல்லின் உறுப்புகளாக அமையும் அசைகளைத் திரிக்க இயலாது.

'தாமரை புரையும் காமர் சேவடி' என்ற தொடருக்குச் செந்தாமரைமலரின் இதழ்களைஒத்த அழகிய செம்மையான திருவடி' என்று பொருள்கொள்ள அமையும். 'தாமரை, என்பதில் 'தா' என்ற அசையையோ மரை என்ற அசையையோ பிரித்துப் பொருள் கொள்ள இயலாது. அவற்

ஞேடு வேறு சொற்களைச் சேர்த்தோ கூட்டியோ பொருள் கொள்ள இயலாது என்பதாம்.[193]

தலைவன் தலைவியர் சொல் வெளிப்பாடு—

தலைவன் தலைவியர் கூற்றுகளில் உணர்வும் கற்பனையும் வெளிப்படுதல் உண்டு. காதல் கவிதைக்கு வித்து எனில் மிகையாகாது. நோயும் இன்பமும் மாறி மாறி அமையும் காதல் உணர்வும் எட்டு வகை மெய்ப்பாடுகள் தோன்ற நெஞ்சொடு கிளப்பர். அதில் நெஞ்சினை உறுப்புடையது போலவும், உணர்வு உடையது போலவும், அது தன்னிடம் மறுத்துரைப்பது போலவும் அமைத்துப் பேசுவர். இவை தனி மொழியில் நிகழும் கூற்றுகள் எனலாம்.

ஆற்ருமை மீதூர உரையாற்றும் பொழுது கானலும் கழியும் தலைவன் தலைவியரிடம் பேசா; இவர்கள் பேசும் சொற்களைக் கேட்டும் அவை செயல்படா. என் செய்வது! அவற்ருேடு பேசித் தம் துன்பத்தை ஆற்றிக் கொள்வர். சொல்லா மரபினையுடைய அவற்ருேடு பொருந்திச் செய்யா மரபின் தொழிலை அவற்றைச் செய்யுமாறு இரப்பர். 'தூது' இலக்கியங்கள் இத்தகைய கற்பனை நயம் மிக்கவை எனலாம். மேகத்தைப் பார்த்துத் தலைவி தூது செல்லுமாறு ஏவுகிருள். மேகம் அவள் சொல்லைக் கேட்குமா? கேட்டாலும் போய்ச்சொல்லுமா? உணர்வு வேகத்தில் பகுத்தறிவுக்கு இடம் இல்லை. பகுத்தறியும் உணர்வு இல்லை. அவற்றைப் பார்த்துப் பேசுவது கவிமரபு ஆகி விட்டது.

பிறர் படும் துன்பமும் தம்முடைய துன்பத்தைப் போன்றதாகத்தான் இருக்கும் என்றும் தலைவன் தலைவியரை எண்ணச் செய்கின்றது.

"இசைதிரிந் திசைப்பினும் இயையுமன் பொருளே
அசைதிரிந் திசையா என்மனுர் புலவர்." —சூ. 193

காதலியைக் காரிருளில் கானகத்தே கைவிட்ட கயவனாக விளங்கிய நளன் கடலை நோக்கிப் பாடுகின்றான். கடல் அலைகள் அவன் நெஞ்சு அலைகளாகக் காட்சி அளிக்கின்றன. 'நாவாய் குழற நடுங்குவதாக' அவன் கற்பனை அமைகிறது. 'நாவாய்' என்பதற்கு 'நாவும் வாயும்' என்ற பொருளும், மரக்கலம் என்ற பொருளும் அமைந்திருப்பது நயம் மிக்க பகுதியாகும்.

"போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவாய்
அரவகற்றும் என்போல் ஆர்கலியே! மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று"—

என்பதே அத்தகைய கற்பனைமிக்க பாடலாகும். இதனை 'அவரவரவர் உறுபிணி தம் போற் சேர்த்தல்' என்பர் தொல்காப்பியனார்.

செய்திகளை வெளிப்படையாகக் கிளக்காமல் உவமை நயந்தோன்றச் சொல்லுதலும் கற்பனைமிக்க உரையாடலாகும். அவ் உவமைகளில் அவரவர் அனுபவ அறிவும் சொல்ல நினைக்கும் பொருளும் உவமை என்ற வடிவில் வெளிப்படுகின்றன. உவமை பொருள் என்ற இருவகை அமைப்பும், தொழில், பண்பு, பயன் என்ற அடிப்படையும் அவை பெற்று இயங்கும். இவ்வாறு கற்பனை நயம் மிக்க கிளவிகள் தலைவன் தலைவியர் மாட்டும் நிகழும் என்பர்.[194]

"நோயும் இன்பமும் இருவகை நிலையிற்
காமம் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்துஞ்-

கனவுக் கூற்றுகள்

தலைவனும் தலைவியரும் இன்பக் கனவுகள் காண்பர். தலைவியின் கூந்தலைத் தடவும் கனுக்காட்சியின் முடிவில் விழித்தெழுந்து தன் வெறுங்கையையே காண்கிருன் தலைவன். 'வறுங்கை காட்டிய வாயல் கனவு' தலைவனை வாட்டுகிறது. தலைவன் தன் மேனியைத் துன்னுவது போன்ற பொய்க்கனு கண்டு மருண்டு எழுகின்ருள் தலைவி. இத்தகைய செய்திகள் அகப்பாடல்களில் இடம் பெறுகின்றன.[195]

தலைவி உடன் போக்கின்கண் சென்றுழி ஆற்ருமை மீதூர அவள் சென்றமைக்கு வருந்துகிருள் நற்ருய். புலம்பி அழிகிருள். அதே நினைவில் துயிலச்செல்கிருள். துயில் அவளைத் தழுவவில்லை. கனவு அவளைக் கலக்குகிறது. மகளைப்பற்றிய கனவு அவளை வாட்டுகிறது. கனவு காண்பதால் அவள் கண்படை பெறுவதில்லை.[196]

சிதறிய கூற்றுகள்

களவிலும் கற்பிலும் எதிர்பார்க்கும் இடத்தில்தான் கூற்றுகள் நிகழும் என்றுகூறுவதற்கு இல்லை. தலைவி, தோழி, நற்ருய், செவிலி ஆகிய நால்வரும் வழக்கமாகக் கூடும் இடங்கள் தவிர, ஏனைய ஒரு சில இடங்களில் பேசுவதும் உண்டு.

சொல்லா மரபி னவற்ருெடு கெழீஇச்
செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கியும்
அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்
அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
இருபெயர் மூன்றும் உரிய வாக
உவம வாயிற் படுத்தலும் உவமம்
ஒன்றிடத் திருவர்க்கும் உரியபாற் கிளவி." —சூ. 194
"கனவும் உரித்தால் அவ்விடத் தான." —சூ. 195
"தாய்க்கும் உரித்தாற் போக்குடன் கிளப்பின்" சூ.196

தலைவி விட்டுச்சென்ற பாவை கருமணலில் கிடக்கிறது. தாய் தன் பாவையை இழந்தாள். பாவை தன் தாயை இழக்கும் அவலக் காட்சியை அழகாக வடித்துத் தருகிறது இக்காட்சி.

"கருமணற் கிடந்த பாவை என்
அருமகளே என்று முயங்கினள் அழுமே."

என அகநானூற்றுப் பாடல் சான்று தருகிறது.[197]

தலைவியும் தோழியும் செவிலியும் நற்றாயும் ஒருயிராக இயங்குவர். இந் நால்வரும் ஆக்கமும் கேடும் ஒருவர் மாட்டு வந்துழித் தமக்குற்றது போல் நினைப்பவர் ஆதலான், ஒருவரை ஒருவர் இன்றியமையாது ஒருயிர் போல் வாழ்வர். நாணமும் மடனும் நால்வர்க்கும் நிரம்பிய பண்பு ஆதலின், அவலமும் கவலையும் இந் நால்வர்க்கும் உரியன ஆகின்றன.[198]

"இவளே நின்னலது இலளே யாயும்
குவளை உண்கண் இவளலது இலளே
யானும் ஆயிடை யேனே
மாமலை நாட மறவா தீமே"

இவர்கள் எவ்வாறு உறவும் பிணைப்பும் கொண்டவர்கள் என்பதை இப்பாடல் நன்கு காட்டுகிறது.

"இவளுக்கு நின்னைத் தவிர வேறு யாரும் துணை இல்லை. அவள் தாய்க்கும் தலைவியைத் தவிர வேறு யாரும் துணை இல்லை. எனக்கும் அதே நிலைதான். அதனால் தலைவனே அவளை மறவாது போற்றுக" என்று தோழி ஒருத்தி கூறுகிறாள்.

"பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே
நட்பின் நடக்கை யாங்கலங் கடையே." —சூ. 197

"உயிரும் நாணும் மடனும் என்றிவை
செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய." — சூ. 198

தலைமகள் வண்ணம் வேறுபட்டுத் தனிமையுறுங் காலைத் தலைமகன் பிரிவைத் தன் உறுப்புகள் உணர்ந்தன போலப் பொருந்தும் வகையால் கூறவும் பெறும்.

'தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை' (குறள்)

வளையல் நெகிழ்வு காட்டிற்று என்பதாம்.[199]

உடம்பும் உயிரும் வாடிய இடத்து என்னுற்றது என்று தலைவன் வினவுமிடத்தே அவளாக அவனிடம் படர்வாள். அவள் உள்ளத்தில் அவனைப்பற்றிய நினைவுகள் இடம் பெற்றுப் பரிவும் அன்பும் காட்டிய வழியே அவள் அவனிடம் நெருங்கிப்படர்வாள்.[200] தன் நாணமும் பெருமையும்விட்டு அவளாக அவனிடம் சென்று படரமாட்டாள் என்பதாம்.

தனித்து நெஞ்சோடு உசாவுங் காலத்துத் தலைவனைச் சேர்தலும் உண்டு [201]. நெஞ்சோடு மட்டுமன்றித் தோழி யொடு உசாவுதலும் உண்டு என்பர்.

"பகலே பலருங் காண வாய்விட்டு
அகல்வயற் படப்பை அவனூர் வினவிச்
சென்மோ வாழி தோழி" —

என்று தோழியோடு உசாவி அவன் ஊர் செல்லத் துணி கிருள் தலைவி. [201]

"வண்ணந் திரிந்து புலம்புங் காலை
உணர்ந்தது போல உறுப்பினைக் கிழவி
புணர்ந்த வகையாற் புணர்க்கவும் பெறுமே." —சூ. 199

"உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்
என்னுற் றனகொல் இவையெனின் அல்லதைக்
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை." —சூ. 200

"ஒருசிறை நெஞ்சோ டுசாவுங் காலை
உரிய தாகலும் உண்டென மொழிப." —சூ. 201

மடன் அழியும் இடங்கள்

மடன் என்பது வாய்விட்டுப் பேசாத நிலை; தன் உள்ளத்தின் உணர்வை வெளிப்படுத்தாத நிலை. பொதுவாகத் தலைவி மடனொடு நிற்றலே அவளுக்கு உரிய பண்பு. தலைமகன் தனது ஒழுக்கத்தைத் தலைவியிடம் கரந்து உணர்த்தும் வழியும், தலைமகள் மாட்டுப் புணர்ச்சி வேட்கை தோற்றிய வழியும், அவள் பேசாமல் இருக்கமாட்டாள். மடன் அழிய அவள் விடை இறுப்பாள்.

தலைவன், "முத்தேர் முறுவலாய், நம் வலையில் யானை ஒன்று பட்டுள்ளது. அதனைக் காண்பதற்காகத் தங்கிவிட்டேன்" என்று கூறுகிறான். அவன் கூறியது பொய் என்று உணர்ந்தவளாகி,

"அவ்வியானை வனப்புடைத்து
என்பதையும் கேட்டிருக்கின்றேன்"

என்று தன் மடன்அழிய விடை தருகிறாள். அவன் கூறியது பொய் என உரைக்கின்றாள்.

தலைவன் தலைவியைத் தழுவுகின்றான். அவன் அவளைத் தழுவிய கைகள் நெகிழ்கின்றன. அந்நெகிழ்ச்சியில் அவனிடம் இவ்வாறு கூறுகிறாள். "நல்ல அழகிய மகளிர்க்கு நீர் தக்கவர், நான் என் செல்வனுக்கு ஏற்றவள்" என்று கூறிப் பெயர்கிறாள். இங்கும் தன் மடன்அழிய உரையாற்றுகிறாள். புணர்வு வேட்கை தோற்றுவித்து அவளைத் தழுவிய காலத்து இவள் மடன் அழிய உரையாற்றுகிறாள்.

இவ்விரண்டு இடங்கள் தவிர அவள் தன் நிலை விட்டு மடன்அழிய உரையாற்றாள் என்பதாம்.[202]

"தன்வயிற் கரத்தலும் அவள்வயின் வேட்டலும்
அன்ன இடங்கள் அல்வழி யெல்லாம்
மடனொடு நிற்றல் கடனென மொழிப." — சூ. 202

அறத்தொடு நிற்கும் நிலை மரபு

தலைவி அறத்தொடு நிற்கும் காலத்தன்றித் தோழி தானே அறத்தோடு நிற்கும் மரபு இலள்.[203]

அவ்வாறு தோழி அறத்தொடு நிற்குமிடத்து (1) தலைவன் தம்மாட்டு எளியன் எனவும், (2) மகளுடைய தாய் மகிழ அவன் உயர்ந்தவன் எனவும், (3) தலைவன் மாட்டுத் தலைவி வேட்கையள் எனவும், அவ்வாறே அவனும் அவள் மாட்டு வேட்கையன் எனவும், (4) தலைவியைத் தலைவனுக்குக் கொடுக்க வேண்டும் எனவும் கூறுவள். (5) வெறியாட்டும் கழங்கும் இட்டுரைத்துழி வேலனோடும் பிறரோடும் உசாவுவள். (6) புனலிடை உதவினன் எனவும், களிற்றிடை உதவினன் எனவும், தழையும் கண்ணியும் தந்தான் எனவும் கூறி அவன் தொடர்பை உணர்த்துவாள். (7) நடந்ததை உள்ளவாறும் உரைப்பாள். இவ் எழுவகை நிலையால் தோழி அறத்தொடு நிற்பாள்.[204]

செவிலியும் நற்றாயும் அறிதல்

அறத்தொடு நிற்பதன் முன்னம் செவிலியும் நற்றாயும் குறிப்பினால் உணர்வர்.

"அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனள்என வினவுதி'

என்பது தோழி கூற்று. தலைவி பாலும் உண்ணாமல் வருந்திப் பசப்புற்றனள் என்று செவிலி கூறியதாகத் தோழி உரைக்

"அறத்தொடு நிற்குங் காலத் தன்றி
அறத்தியல் மரபிலள் தோழி என்ப." —சூ. 203

"எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇய
ஏழு வகைய என்மனார் புலவர்." —சூ. 204

கின்றாள். அதனால், அவள் நிலையை இக் குறிப்புகளால் செவிலி அறிந்தவள் என்பது புலனாகின்றது.[205]

பெண்டிற்கு உரியதோர் இயல்பு

மகளிர் இவ்வாறு நுட்பமும் செப்பமும் அமைய அறத்தொடு நிற்பர். அவ்வாறு நிற்பதற்கு வேண்டிய தகுதி அவர்கள்பால் இயல்பாக உள்ளது. மகளிர்க்கே உரிய சிறந்த பண்புகள் சில உள. செறிவும் நிறைவும் செம்மையும் சொல்வன்மையும் அறிவும் அருமையும் அவர்கள்பால் அமைந்துள்ள இயல்புகள் ஆகும். செறிவு என்பது அடக்கம்; நிறைவு என்பது அமைதி; செம்மை என்பது மனங் கோடாமை; செப்பு என்பது சொல்லுதல்; அறிவு என்பது நன்மை தீமை அறிதல்; அருமை என்பது உள்ளக்கருத்தைப் பிறர் அறிதல் அருமை.[206]

வரைதல் வேட்கைப் பொருள

தோழி கூற்றில் கூறப்பட்ட சில கிளவிகளுக்குப் பயன் உள்ளது. அவை அவளை அவன் வரைந்து கொள்ளத் தூண்டுவனவாகும். மேல் நோக்கோடு பார்த்தால் அவர்கள் களவொழுக்கத்துக்கு இடையீடுபோலக் காணப்பட்டாலும் அவர்கள் அன்பு வாழ்க்கைக்குத் துணை செய்வனவேயாகும்.

(1) தலைமகன் வருகின்ற வழியும், பொழுதும், ஊர்க்காவலும் கடுமையானவை என்று சுட்டிக் காட்டுவாள்; (2) தான் மனம் அழிந்து வேதனையோடு ஒரு சில கூறுவாள்; (3) தலைமகளுக்கு வரும் இடையூறுகளைக் கிளப்பாள்; (4) தலைமகனைப்

"உற்றுழி யல்லது சொல்ல லின்மையின்
அப்பொருள் வேட்கைக் கிளவியி னுணர்ப." —சூ. 205

"செறிவும் நிறைவும் செம்மையுஞ் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான." —சூ. 206

பகற்குறி விலக்கி இரவுக்குறிக்கண் அவனை வரச்சொல்வாள்; (5) இரவுக்குறி விலக்கிப் பகற்குறிக்குண் அவளை வரச்சொல்லுவாள்; (6) தலைவனை வராது நீங்குக என்றும் உரைப்பாள்; (7) நன்மையாகவும் தீமையாகவும் பிற பொருளை எடுத்துக் கூறுவாள். இத்தன்மையைவாகிக் குற்றம் பயப்ப வந்த அத்தன்மைய பிறவும் அவர்கள் சேர்ந்து மகிழக் கூடாது என்றும் கருத்திஞல் கூறப்பட்டவை அல்ல; வரைதல் வேண்டும் என்னும் கருத்தோடு அவை உரைக்கப் பட்டனவாகும்.[208]

வரைதல் வேட்கைப் பொருளாலேயே இவ்வாறு கிளக்க வேண்டும் என்பதில்லை. பட்டாங்கு கூறுதலும் களவொழுக்கம் நீடித்த இடத்து உண்டு.

'தலைவியின் குரலைத் தன் இனமெனக் கருதி மலைச் சாரலில் தினைக்கதிர்களை நாடிக் கிளிகள் படரும் எனக் காவலும் நீக்குவர்போல் தோன்றுகின்றது. அதனுல் மலை நாடனே வரைந்து அவளைக் கொள்ளுவாய்" என்று தோழி

"பொழுதும் ஆறுங் காப்புமென் றிவற்றின்
வழுவி ஞகிய குற்றங் காட்டலும்
தன்னை யழிதலும் அவணூ றஞ்சலும்
இரவினும் பகலினும் நீவா என்றலும்
கிழவோன் தன்னை வாரல் என்றலும்
நன்மையுந் தீமையும் பிறிதினைக் கூறலும்
புரைபட வந்த அன்னவை பிறவும்
வரைதல் வேட்கைப் பொருள என்ப." —சூ. 207
"வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தல்
மரீஇய மருங்கின் உரித்தென மொழிப." —சூ. 208
"தேரும் யானையுங் குதிரையும் பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப." —சூ. 209

கூறுகிறாள். இவ்வாறு கூறுவது வரைதல் வேட்கையால் அன்று என்பதாம்.[208]

தலைவனின் ஊர்திகள்

தேரும் யானையும் குதிரையும் பிறவும் ஊர்ந்து செல்லுதலும் உண்டு களவுக்காலத்து என்பர்.[209]

உண்டல் என்னும் சொல்வழக்காறு

உண்டல் தொழிலுக்கு உரிய அல்லாத பொருளை உண்டனவாகக் கூறலும் மரபு ஆகும்.

'பசலை உண்ணுதல், 'நீலமுண்டதுகில்' 'இவை என்னைத் தின்னும் அவர்க் காணலுற்று' என்னும் சொல் வழக்குகள் இதற்கு எடுத்துக்காட்டு ஆகும்.[210]

காப்புமிகுதிக்கண் தலைவனின் செயல்

தலைமகளைத் தமர் காக்கும் காவல் மிகுதியுள்ள வழிப் பொருள்வயிற் பிரிதல்வேண்டும் எனக் கூறுதலும் உண்டு. பொருள்வயிற் பிரிந்து பொருள் ஈட்டிவந்தாலே அவளை மணக்க இயலும் என்பதால் அவ்வாறு பிரியக் கருதுவான் என்பதாம்.

ஒருவழித் தணத்தல் பிரிவு இதனுல் நிகழும். அவ்வாறு பிரியும்பொழுது தாம் போற்றி வந்த அன்பும் அறனும் இன்பமும் கிடைக்கப் பெருமைக்கு வருந்துதல் இல்லை மற்றும் நாணம் இழந்தும் தமர் கொடுக்குமாறு முயல்வான்.[211]

"உண்டற் குரிய அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே." —சூ. 210

"பொருளென மொழிதலும் வரைநிலை யின்றே
காப்புக்கைம் மிகுதல் உண்மை யான
அன்பே யறனே யின்ப நாணொடு
துறந்த ஒழுக்கம் பழித்தன் றாகலின்
என்றும் வேண்டா காப்பி னுள்ளே." —சூ. 211

தலைமகன் பொருள்வயிற் பிரியும்வழி உடன்போக்குக் கருதிய தலைமகளுக்குத் தான் போகின்ற நெறி கல்லும் கரடுமாகிய சுரம் எனக் கூறுதலும் நீக்கப்படாது. காப்பு மிகுதிக்கண் வருத்தமுறுந் தலைமகனை உடன்கொண்டு போதல் தக்கது என்பார்க்கு நெறியருமைகூறி விலக்கவும் பெறும் என்பதாம்.[212]

உயர்ந்தோர் கூற்று வழக்கு வழிப்பட்டதாகும். அதுவே செய்யுட்கண் வரப்பெறும் செய்தியும் ஆகும். எனவே, வழக்கு அழிய வருவன செய்யுட்கண் வரப்பெரு என்பதாம். எனவே, இலக்கிய வழக்கு என்பது உயர்ந்தோர் வழக்கேயாகும்; தாழ்ந்தோர் நெறிகள் இலக்கியத்தில் இடம்பெரு என்பதாம்.[213]

அறத்தின் நீங்கிய பொருள்

அகப்பொருளும் புறப்பொருளும் அறத்தின் அடிப்படையில் அமைதல் வேண்டும். இலக்கியப் பொருளுக்கு அறம் அடிப்படை என்பதாகும்.

"பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை." (குறள்)

என்பது அறத்தின் அடிப்படையை உணர்த்துகிறது.[214]

அறத்தைப் போலவே நாணமும் அகப்பொருளுக்கு இன்றியமையாதது ஆகும்.[215]

"பிறர் நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறன் நாணத் தக்கது உடைத்து'. (குறள்)

"சுரமென மொழிதலும் வரைநிலை யின்றே. —சூ. 212
"உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்
வழக்குவழிப் படுதல் செய்யுட்குக் கடனே." —சூ. 213
"அறக்கழி வுடையன பொருட்பயன் படவரின்
வழக்கென வழங்கலும் பழித்த தென்ப." —சூ. 214
"மிக்க பொருளினுட் பொருள்வகை புணர்க்க
நாணுத்தலைப் பிரியா நல்வழிப் படுத்தே." —சூ. 215

முறைப் பெயராக இருபாலுக்கும் வழங்கும் பொதுச் சொல் 'எல்லா' என்பது. இது காமப் பொருட்கண் வழங்கப் பெறும்.[216]

தாயத்தாலோ ஈகையாலோ ஈட்டிச் சேர்த்தோ பகை வினைமுடித்தோதான் பொருள் உரிமை பெற வேண்டியதில்லை. உள்ளத்தால் ஒன்றுபட்டவர்கள் பிறர் பொருளைத் தம்போல் கொண்டு பேசுதலும் உண்டு.[217]

'என் தோள் எழுதிய தொய்யிலும்' என்பது தோழியின் கூற்றும். தலைவி தோளினைத் தோழி தன் தோளாகக் குறிப்பிடுகிறாள். இந்த உரிமை யார் கொடுத்தது? கவிதை மரபில் காணப்படும் தனிவழக்காகும்.[218], [219]

பரத்தையர் மாட்டு வாயில்கள்

பரத்தையர் மாட்டு வாயில் விடுதல் நான்கு வருணத்தார்க்கும் உரித்து; அவ்வழிப் பிரியும் பிரிவு நிலம் பெயர்தல் இல்லை என்பர்.[220]

"முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச் சொல்
நிலைக்குரி மரபின் இருவீற்றும் உரித்தே." —சூ. 216

"தாயத்தின் அடையா ஈயச் செல்லா
வினைவயின் தங்கா வீற்றுக் கொளப்படா
எம்மென வரூஉங் கிழமைத் தோற்றம்
அல்ல வாயினும் புல்லுவ உளவே." —சூ. 217

"ஒருபாற் கிளவி எனைப்பாற் கண்ணும்
வருவகை தானே வழக்கென மொழிப." —சூ. 218

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான்அமர்ந்து வரூஉம் மேவற் றாகும்." —சூ. 219

"பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே
நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர்," —சூ. 220

உடன்போக்கும் வரைவு கடாதலும்

தலைவனிடம் தலைமகள் முழு உரிமை பூண்டலை வேண்டியவிடத்தும், தன்னை விட்டுப் பிரிதற்கண் வரும் அச்சம் பெண்பாற்கு இயல்பாதலானும், களவொழுக்கத்தை வெளிப்படுத்தும் அம்பலும் அலரும் தோன்றிய விடத்தும், தலைமகன் வரும்வழியில் ஏதம் மிகுதற் கண்ணும் தலைமகனுடன் போகவும் வரைவு கடாவவும் தலைவி முற்படுவாள்![221]

"நடுநாள் வருஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினல் யானே
அலர்சுமந்து ஒழிகஇவ் அழுங்கல் ஊரே"

என்கிறுள் தலைவி.

புலவியுள் மனைவி உயர்வும் தலைவன் பணிவும்

புலவிக் காலத்துத் தலைமகள் உயர்வும் தலைமகன் தாழ்வும் உரிய. அவன் அவளை இரந்து அவள் நலம் வேண்டி நிற்பான். அவள் தன்னை அடைந்தால்தான் தான் உயிர் வாழ இயலும் என்று கூறுவான்.[223]

தலைவியின் புகழ்ச்சி

களவுக்காலத்துத் தலைவியின் எழில்நலம் பாராட்டிய தலைவன் கற்புக்காலத்தும் அவளைப் புகழாமல் இரான்.

"ஒருதலை உரிமை வேண்டினும் மகடூஉப்
பிரித லச்சம் உண்மை யானும்
அம்பலும் அலருங் களவுவெளிப் படுக்குமென்று
அஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்
நோக்கொடு வந்த இடையூறு பொருவினும்
போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும்." —சூ. 221

"வருத்த மிகுதி சுட்டுங் காலை
உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்."—சூ.222

"மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய." —சூ. 223

பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டும் இயல்பினனாக விளங்குவான்.[224]

இறைச்சிப் பொருளில் சில மரபுகள்

நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகிவரும் கருப்பொருள் அடிப்படையாகவே இறைச்சிப் பொருள் தோன்றும். அது உரிப்பொருளிலும் வேறுபட்டதாகும்.[225]

கருப்பொருளில் இறைச்சி கொள்வது என்பது அனைவர்க்கும் இயல்வது ஒன்று அன்று. அத்தகைய ஆராய்ச்சி உடையார்க்கே அது புலப்படும்.[226]

இறைச்சியில் அன்புறு கிளவிகளைச் சுட்டுதலும் வற்புறுத்தலேயாகும்,[227]

"காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும்
உரைத்தனரே"

என்பதில் வற்புறுத்தற் குறிப்பு அமைந்துள்ளது.[227] இதனாற் கூறியது காட்டுவழியில் களிறு பிடிக்குத் தண்ணீர் ஊட்டும் அன்புக்காட்சி தலைவியின் நினைவைத் தந்து வீடு நோக்கி மீளச்செய்யும் என்பதாம்.

உரைக் குறிப்புகள்

தலைவியைப் பாராட்டும் பாராட்டுரையால் அவன் பொருள்வயின் பிரியுமிடத்து ஆற்றுவழியின் ஏதத்துக்கு

"நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற்
புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே." —சூ. 224

"இறைச்சி தானே உரிப்புறத் ததுவே." —சூ. 225

"இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா றுளவே
திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே." —சூ. 226

"அன்புறு தகுவன இறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே." —சூ. 227

அஞ்சுவாள்; வினைவயிற் பிரிதலையும் அவள் உணர்வாள். இவ்விருவகை அச்சமும் அவள் மனக்கண்முன் வந்து நிற்கும் என்பதாம்.[228]

தலைவி கற்புடையவள் ஆதலின் அவள் பரத்தையை இகழாள். போற்றா ஒழுக்கத்தை மாற்றா உள்ளத்தினளாக விளங்கி அவளை வாய்விட்டுப் பாராட்டினாலும், உள்ளத்தில் ஊடல் குறிப்பு மறையாது.[229]

தலைவி மற்றொருத்தி குணம் இத்தகையது எனச் சொல்லித் தலைமகன் குறிப்பினை அறிதற்கும் உரியளாவாள்.[230]

தலைமகளுக்கு உரியதோர் மரபு

பரத்தையர் தாமுற்ற துன்பத்தினைத் தலைமகளுக்குக் கூறிய வழியும், அவரிடம் துன்பத்தை மெய்ம்மையாக உணர்ந்து வைத்தும், தலைமகன் மாட்டுக் கழறுதல் தலைவன் எதிர்ப்பட்டபொழுது இல்லை. கலவி இறுதியினும் புலவியினும் மட்டும் மெல்ல அவற்றை எடுத்துச் சொல்லுவாள்.

அவனை எதிர்ப்பட்ட பொழுதே கண்டிக்கத் தொடங்கினால் தனக்குப் புணர்ச்சியில் காதல் இல்லை என அமையும். அதனால், இறுதியில் அவளது புலவியில் மட்டும் அதனை எடுத்துப் பேசுவாள் என்பதாம்.[231]

"செய்பொரு ளச்சமும் வினைவயிற் பிரிவும்
மெய்பெற உணர்த்துங் கிழவிபா ராட்டே." —சூ. 228

"கற்புவழிப் பட்டவள் பரத்தை ஏத்தினும்
உள்ளத் தூட லுண்டென மொழிப." —சூ. 229

"கிழவோள் பிறள்குணம் இவையெனக் கூறிக்
கிழவோன் குறிப்பினை உணர்தற்கும் உரியள்."—சூ. 230

"தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்
மெய்ம்மை யாக அவர்வயி னுணர்ந்து
தலைத்தாட் கழறல்தம் எதிர்ப்பொழு தின்றே
மலிதலும் ஊடலும் அவையலங் கடையே." —சூ. 231

கால வழுவமைதி

பருவம் கண்டு கையற்றுக் கூறுங்காலை அக்காலம் தோன்றியபொழுது அது வந்து கழிந்துவிட்டது போலக் கூறுதல் அறியாமை, வருத்தம், மருட்கை, மிகுதி ஆகிய இந்நான்கு பற்றியாகும்.[232]

தலைவன் கார்காலம் திரும்பிவிடுவதாகக் கூறுகிறான். மழை பொழியும் நிலையில் அது வந்து முடிந்துவிட்டதாகவே கூறிவிடுகிறாள். அவர் இனி வரமாட்டாரோ என்று அஞ்சுகிறாள். வரமாட்டார் என்று கூறுவதால் அவளைப் பொறுத்தமட்டில் கார்காலம் முடிந்துவிட்டதாகவே கருதுகிறாள்.

தோழிக்கு உரிய திறன்

இரந்து குறையுற்ற தலைமகனைத் தோழி அவன் துன்பத்தை நீக்கி உதவுவதோடு, அவனிடம் மெய்ம்மையைக் கூறுவாள்; பொய்ம்மை பேசுவாள்; நயம்பட உரைப்பாள். பல்வகையாற் படைத்து மொழிந்து சொல்லலும் பெறுவாள்.[233]

மடலேறுவதாகக் கூறும் தலைவனிடம் அவன் அருள் உடையவன் ஆதலால் பெண்ணை மரத்தின்மீது தூக்கணாங் குருவி தம் குஞ்சுகளோடு வசிக்கும் கூட்டைத் கலைக்க

"பொழுது தலைவைத்த கையறு காலை
இறந்த போலக் கிளக்குங் கிளவி
மடனே வருத்தம் மருட்கை மிகுதியொடு
அவைநாற் பொருட்கண் நிகழும் என்ப." —சூ. 232

"இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி
நிரம்ப நீக்கி நிறுத்தல் அன்றியும்
வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும்
நல்வகை யுடைய நயத்திற் கூறியும்
புல்வகை யானும் படைக்கவும் பெறுமே." —சூ. 233

இயலாது என்று நயம்படப் பேசுகின்றாள். பனைமரத்தை அவன் தடிதல் இயலாது என்று கூறி மடலேறுதலை விலக்கு கிறாள்.

மூவகைக் கிளவிகள்

தலைவன் தலைவியை உயர்த்தும் ஒப்ப மதித்தும் ஐயக் கிளவியானும் உரையாடுவான். தலைவி மாட்டு ஐயக்கிளவி தோன்றாது என்பர்.

"மாதர் முகம் போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி" (குறள்)

என்பது தலைவன் தலைவியை உயர்த்திச் சொன்ன கிளவி யாம்.[234]

அறிவு நிரம்பியவள் தோழி

தலைமகனுக்கு உற்ற துன்பத்தைத் தோழி நீக்கும் இயல்பினள் ஆதலின் அவள் அறிவு நிரம்பியவளாக இருத்தல் வேண்டும். அறிவுரை கூறத்தக்க அனுபவமும் திறனும் உரனும் அவள்பால் உண்டு.[235]

அவள் தலைவனை உயர்த்தியும் பேசுவள்.[236]

வாயில்கள் தத்தம் கூற்றை வெளிப்படையாகவே கூறுவர். அவர்கள் குறிப்பாகப் பேசமாட்டார்கள் என்பதாம்.[237]

"உயர்மொழிக் கிளவி உறழுங் கிளவி
ஐயக் கிளவி ஆடூஉவிற் குரித்தே." —சூ. 234

"உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின்
உரிய தாகும் தோழிகண் உரனே." —சூ. 235

"உயர்மொழிக் கிளவியும் உரியவால்அவட்கே."—சூ.236

"வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்
தாவின் றுரிய தத்தங் கூற்றே." —சூ. 237

உள்ளுறை கிளக்குமாறு

உள்ளுறையாவது பிறிது ஒரு பொருள், அது கருப் பொருள்பற்றி வரும் என்பது அகத்திணையியலுள் கூறப் பட்டது. உடனுறையும், உவமும், சுட்டும், நகையும், சிறப்பும் எனக் கெடலரு மரபினை உடைய உள்ளுறை ஐந்து வகைப்படும்.[238]

உடனுறையாவது உடனுறைவது ஒன்றைச் சொல்ல அதனானே பிறிதொரு பொருள் விளங்குவது; உவமம் என்பது உவமையைச் சொல்ல உவமிக்கப்படும் பொருள் தோன்றுவது; சுட்டு என்பது ஒரு பொருளைச் சுட்டிப் பிறிதோர் பொருள் படுதல்; நகையாவது நகையினால் பிறிதொரு பொருள் உணர நிற்றல்; சிறப்பு என்பது இதற் குச் சிறந்தது இஃது எனக் கூறுவதனானே பிறிதோர் பொருள் கொளக் கிடப்பது.

உள்ளுறை வேறு; உள்ளுறை உவமம் வேறு. உள்ளுறை உவமை உள்ளுறையில் ஒரு பகுதியே யாகும் என்பது தெரி கிறது. ஏனைய நான்கு உடனுறை, சுட்டு, நகை, சிறப்பு எனத் தெரிகிறது. உவமை வகையான் அன்றி ஏனைய இவ் வகையானும் பிறிதுபொருள் கொள்வர் எனத் தெரிகிறது.

'நும்மினும் சிறந்தது நுவ்வை யாகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே'

என்பதில் உடனுறை தோன்றியது என்பர்.

உள்ளுறை உவமம் ஏற்கனவே கூறப்பட்ட ஒன்று. கருப்பொருளைக் கொண்டு உவமையாகப் பிறிதொரு பொருள் கொள்வது ஆகும்.

"உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே." —சூ. 238

'பூப்பறிப்போமாயின் வளை கழன்று தோள் மெலியும்' இக்கூற்றில் அதனால் நடத்தல் அரிதாகும் என ஒரு பொருள் சுட்டித் தந்தது. இது உள்ளுறைச் சுட்டு ஆகும்.

இவ்வாறே நகையினும் சிறப்பினும் பிறபொருள் தோன்றுதல் உண்டு என்பர்.

இவ் வைந்து பொருள்கள் காரணமாக மட்டுமன்றி எல்லையற்ற இன்பத்திடத்து உள்ளுறைப் பொருள் வருதலும் வகுத்த இயல்பு என்பர்.

"ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்
எண்ணுவது எவன்கொல் அறியேன் என்னும்"

இன்பத்தின் கண்ணும் பிறிதோர் பொருள் உண்டென்பது தோற்றுகின்றது.[239]

மங்கல மொழியும், அவையல் கிளவியும், ஆண்மையில் உருவகமாகச் சொல்லப்படும் கிளவியும் பிறிதோர் பொருள் தோற்றுவிக்கும் உள்ளுறையே யாகும்.

செத்தாரைத் துஞ்சினர் என்றல் மங்கல மொழி

'கால் கழீஇ வருதும்'—இடக்கரடக்கல்

ஒருவனைச் 'சிங்கம்' என்றல்—ஆண்மையில் சொல்லிய மொழி.[240]

மெய்ப்பாட்டியலுக்குப் புறனடை

சினன், பேதைமை, நிம்பிரி, நல்குரவு ஆகிய இவை தலைமக்கட்கு ஆகாத குணங்களாக மெய்ப்பாட்டியலுள் கூறப்படும். எனினும், அவை முற்றிலும் விலக்குவதற்கு

"அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே." —சூ. 239

"மங்கல மொழியும் அவையல் மொழியும்
மாறில் ஆண்மையில் சொல்லிய மொழியும்
கூறிய மருங்கிற் கொள்ளும் என்ப." —சூ. 240

இல்லை என்பர். அவை யாதானும் ஒரு பொருளைச் சிறப்பித்தல் காரணமாக வரும்.[241]

ஒருசில சொல் வழக்காறுகள்

'அன்னை,' 'என்னை' என்ற சொற்களுக்கு ஒரு குறிப்பிட்ட பொருள் இல்லை.

"அன்னாய்! இவனோர் இளமாணாக்கன்"—என்னும் தொடரில் அன்னை என்பது தாயை உணர்த்த வேண்டும்; அவ்வாறு உணர்த்தாமல் அது தோழியை உணர்த்தியது.

'என்னை முன் நில்லன்மின்' என்பதில் என்னை என்பது ஒரு வீரன் என்ற பொருள் உணர்த்தியது. என்னுடைய தலைவன் என்ற நேரிடையான பொருளில் அது வழங்கப்படவில்லை என்பதாம்.

அன்னை என்னை என்பன மதிப்பு உணர்த்தும் சொற்களேயன்றி, உறவு உணர்த்தும் சொற்கள் அல்ல. இக்காலத்தின் 'அண்ணே' என்ற சொல்வழக்கும் அத்தகையதாம்.[242]

காட்டலாகாப் பொருள்

இலக்கிய வழக்கில் பயின்றுவரும் சொற்கள் சில உள. அவை நாட்டில் வழங்குகின்ற மரபினானே பொருளை மனத்தினால் உணரின் அல்லது மாணக்கர்க்கு இது பொருள் என வேறுபடுத்தி ஆசிரியன் காட்டல் இயலாது என்பர். அவற்றுள் ஒருசில பின்வருமாறு.

ஒப்பு, உரு, வெறுப்பு, கற்பு, ஏர், எழில், சாயல், நாண், மடன், நோய், வேட்கை, நுகர்வு முதலியன.

ஒப்பு - ஒப்புமையை உரைக்கலாகும்; காட்டலாகாது.

"சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு
அனைநால் வகையுஞ் சிறப்பொடு வருமே." —சூ 241

"அன்னை என்னை என்றலும் உளவே
தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினும்
தோன்றா மரபின என்மனார் புலவர்." —சூ. 242

உரு - 'உரு உட்காகும்'—உரியியல் விளக்கம்; பயிலாத பொருளைக் கண்டுழி வருவதோர் மன நிகழ்ச்சி. அஞ்சி நாணுதல் என்பதாம்.

வெறுப்பு - செறிவு. மிகுதி;

கற்பு - மகளிர் மாட்டு அமையும் மன இயல்.

ஏர் - நிற வேறுபாடு; எழுச்சி.

எழில் - அழகு.

சாயல் - கட்புலனுக்கு ஆவதோர் மென்மைத்தன்மை.

நாண் - ஒழுக்கத்துக்கு மாறுய செய்யமாட்டாமை.

மடன் – பெண்டிர்க்கு உள்ளதோர் இயல்பு, கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை.

நோய் - துன்பம்; உள்ளது என்று உணர முடியுமே தவிரக் காட்டலாகாது.

வேட்கை - யாதானும் ஒன்றைப் பெறவேண்டும் எனச் செல்லும் மன நிகழ்ச்சி; பொருள்கள்மேல் தோன்றும் பற்றுள்ளம்.

நுகர்வு - இன்பதுன்பங்களை நுகரும் நுகர்ச்சி.[243]

இமையவர் தேயத்தும் மண்ணுலகத்தும் மேற்சொல்லப்பட்ட பொருள் இல்லாத காலம் இன்மையான், உள்பொருள் என்றே கொள்ளப்படும். ஒப்பு உரு வெறுப்பு முதலிய நுண்பொருள்கள் காட்டலாகாப் பொருளாயினும் உள்ள பொருளாகவே கொள்ளப்படும்.[244]

"ஒப்பும் உருவும் வெறுப்பும் என்ரு
கற்பும் ஏரும் எழிலும் என்ரு
சாயலும் நாணும் மடனும் என்ரு
நோயும் வேட்கையும் நுகர்வும் என்ருங்கு
ஆவயின் வரூஉங் கிளவி எல்லாம்
நாட்டியல் மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்ட லாகாப் பொருள என்ப." —சூ. 243

"இமையோர் தேளத்தும் எறிகடல் வரைப்பினும்
அவையில் காலம் இன்மை யான." —சூ. 244

13. மரபியல்

சொற்களை ஆளுவதில் தனிமரபு இருந்தது. பொருளுக்கு இன்ன சொல்தான் ஆள வேண்டும் என்ற மரபு இருந்தது. அது சொல்லுக்கும் பொருளுக்கும் இருந்த தொடர்பாகும். பழங்காலத்தில் ஒவ்வொரு பொருளுக்கும் சிறப்புச் சொற்கள் வழங்கின. இக்காலத்தில் பொதுச்சொற்கள் வழங்குகின்றன. அச் சிறப்புச் சொற்கள் யாவை என்பதையே மரபியல் உணர்த்துகிறது. இதில் இளமைப்பெயர்கள், ஆண்பால் பெண்பாற் பெயர்கள், ஆறறிவு விளக்கங்களும் உயிர்களும், தொழிற் சிறப்புகளும், அதனால் பெறும் சிறப்புப் பெயர்களும், மரம் செடி கொடி வகைகளுக்கு வழங்கும் தனிப் பெயர்களும், சொல்வழக்காறுகளும், நூலின் தன்மைகளும் முதலிய செய்திகள் கூறப்படுகின்றன.

இளமைப் பெயர்கள்

பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி இவ்வொன்பதும் இளமையை உணர்த்தும் சிறப்புப் பெயர்களாகும்.[546]

அவற்றுள் பார்ப்பும் பிள்ளையும் பறவையின் இளமைப் பெயர்களாம்.[548] தவழ்பவையும் இப்பெயர்களால் வழங்கப்

"மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்
பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்
கன்றும் பிள்ளையும் மகவும் மறியுமென்
றொன்பதும் குழவியொ டிளமைப் பெயரே." —சூ. 545

"அவற்றுள்,
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை." —சூ. 548

பெறும்.[549] இக்காலத்தில் பார்ப்பு என்பது 'பாப்பா' எனத் திரிந்து வழங்குகிறது. பிள்ளை என்பது உயர் திணைக்கும் வழங்குகிறது. பாப்பா என்பதும் உயர்திணையில் வழங்கும் இளமைப் பெயராகும்.

மூங்கா, வெருகு, எலி, அணில் இம்மூன்றும் குட்டி என்று சொல்லபபடும்.[550] இவற்றைப் பறழ் என்னும் பெயராலும் குறிப்பர்.[551]

நாய், பன்றி, புலி, முயல், நரி இவை நான்கும் குருளை என்னும் இளமைப் பெயரால் வழங்கப் பெறும்.[552] [553] குட்டியும் பறழும் இவற்றிற்கு வழங்கப்பெறும் [554]. நாய் ஒன்றைத் தவிர ஏனைய நான்கையும் பிள்ளை என்னும் சொல் வழக்காலும் வழங்குவர்.[555]

ஆடு, குதிரை, நவ்வி, உழை, புல்வாய் இவை மறி என வழங்கப் பெறும். [556].

"தவழ்பவை தாமும் அவற்றோர் அன்ன." —சூ. 549

"மூங்கா வெருகெலி மூவரி அணிலொடு
ஆங்கவை நான்குங் குட்டிக் குரிய." —சூ. 550

"பறழெனப் படினும் உறழாண் டில்லை." —சூ. 551

"நாயே பன்றி புலிமுயல் நான்கும்
ஆயுங் காலைக் குருளை என்ப." —சூ. 552

"நரியும் அற்றே நாடினர் கொளினே." —சூ. 553

"குட்டியும் பறழும் கூற்றவண் வரையார்." —சூ. 554

"பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை
கொள்ளுங் காலை நாயலங் கடையே." —சூ. 555

"யாடுங் குதிரையும் நவ்வியும் உழையும்
ஓடும் புல்வாய் உளப்பட மறியே." —சூ. 556

குரங்கு குட்டி என வழங்கப்பெறும்.[557] இது மகவு, பிள்ளை, பறழ், பார்ப்பு என்னும் சொற்களாலும் வழங்கப்பெறும்.[558]

யானை, குதிரை, கழுதை, கடமை, மான் இவை ஐந்தும் கன்று எனற்கு உரிய.[559] எருமை, மரை, கவரி, கராம் ஒட்டகம் இவையும் கன்றெனவே வழங்கப்படும். [560 561 562]

யானை குழவி என்னும் பெயரைப் பெறும்.[564] ஆவும் எருமையும் கடமையும் மரையும் குரங்கும் முசுவும் ஊகமும் இவையும் குழவி என்னும் பெயரைப் பெறும். [564 —66]

மக்கட்குக் குழவி, மகவு இவ்விரண்டு பெயர்களே வழங்கப்பெறும் [567].

ஓரறி உயிராகிய புல்லும் மரனும் பிள்ளை குழவி கன்று என்னும் சொல் வழக்காறுகளைப் பெறும் [568] அவற்றுள் நெல்

"கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப." —சூ. 557
"மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்
அவையும் அன்ன அப்பா லான." —சூ. 558
"யானையுங் குதிரையுங் கழுதையுங் கடமையும்
மானோ டைந்துங் கன்றெனற் குரிய." —சூ. 559
"எருமையும் மரையும் வரையார் ஆண்டே." —சூ. 560
"கவரியும் கராமும் நிகரவற் றுள்ளே." —சூ. 561
"ஒட்டகம் அவற்றோ டொருவழி நிலையும்." —சூ. 562
"குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை."
—சூ. 563
"ஆவும் எருமையும் அதுசொலப் படுமே." —சூ. 564
"கடமையும் மரையு முதனிலை ஒன்றும்." —சூ. 265
"குரங்கும் முசுவும் ஊகமும் மூன்றும்
நிரம்ப நாடின் அப்பெயர்க் குரிய." —சூ. 566
"குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை
கிழவ அல்ல மக்கட் கண்ணே." —சூ. 567
"பிள்ளை குழவி கன்றே போத்தெனக்
கொள்ளவும் அமையும் ஓரறி வுயிர்க்கே." —சூ. 568

லும் புல்லும் மட்டும் இப்பெயர்களைப் பெறு.[664] ஏனையவற்றின் இளமைப் பெயர்கள் ஈண்டுக் கூறப்படவில்லை எனினும், இவற்றுள் ஏற்பனவற்றோடு கூட்டி உரைத்துக் கொள்க என்பர்?[570]

ஆண்பாற் பெயர்கள்

எருது, ஏற்றை, ஒருத்தல், களிறு, சே, சேவல், இரலை, கலை, மோத்தை, தகர், உதள், அப்பர், போத்து, கண்டி, கடுவன் இவை ஆண்பாற்பெயர் என மொழிவர். மற்றும் ஆண், விடை, காளை என்பனவும் ஆண்பாற் பெயர்களே யாம்.[546]

களிறு என்னும் சொல் வழக்கு யானைக்கு உரித்து.[579] பன்றியின் ஆண்பாலையும் களிறு என்றல் கடியப்படாது.[580]

புல்வாய், புலி, உழை, மரை, கவ்வி, கராம் இவை ஒருத்தல், என வழங்கப் பெறும் யானையும். பன்றியும் இச் சொல்

"நெல்லும் புல்லும் நேரார் ஆண்டே." —சூ. 569

"சொல்லிய மரபின் இளமை தானே
சொல்லுங் காலை அவையல திலவே." —சூ. 570

"எருதும் ஏற்றையும் ஒருத்தலுங் களிறும்
சேவும் சேவலும் இரலையும் கலையும்
மோத்தையுந் தகரும் உதளும் அப்பரும்
போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்
யாத்த ஆண்பாற் பெயரென மொழிப." —சூ. 546

"வேழக் குரித்தே விதந்துகளி றென்றல்." —சூ. 579

"கேழற் கண்ணுங் கடிவரை இன்றே." —சூ. 580

வழக்கைப் பெறும். எருமையின் ஆணினையும் ஒருத்தல் என்பர்.[581—584]

பன்றி, புல்வாய், உழை, கவரி, எருமை, மரை, பெற்றம், கடல் வாழ் சுறு இவை ஏறு எனப்படும் [585—586]

பெற்றம், எருமை, புலி, மரை, புல்வாய், நீர்வாழ் முதலை, மயில், எழால் இவற்றின் ஆணினைப் போத்து என்னும் பெயரால் வழங்குவர்.[587—89]

புல்வாயை இரலை, கலை என்னும் சொல் வழக்குகளால் உணர்த்துவர். உழை முசு என்பனவும் கலை என்னும் சொல்லால் குறிப்பர். [591]

மோத்தை, தகர், உதள், அப்பர் என்பன யாட்டிற்கு வழங்கும் ஆண்பாற் பெயர்கள்.[592]

"புல்வாய் புலியுழை மரையே கவரி
சொல்லிய கராமோ டொருத்தல் ஒன்றும்." —சூ. 581
"வார்கோட் டியானையும் பன்றியும் அன்ன." —சூ. 582
"ஏற்புடைத் தென்ப எருமைக் கண்ணும்." —சூ. 583
"பன்றி புல்வாய் உழையே கவரி
என்றிவை நான்கும் ஏறெனற் குரிய." —சூ. 584
"எருமையும் மரையும் பெற்றமும் அன்ன." —சூ. 585
"கடல்வாழ் சுறவும் ஏறெனப் படுமே." —சூ. 586
"பெற்றம் எருமை புலிமரை புல்வாய்
மற்றிவை எல்லாம் போத்தெனப் படுமே." —சூ. 587
"நீர்வாழ் சாதியும் அதுபெறற் குரிய." —சூ. 588
"மயிலு மெழாஅலும் பயிலத் தோன்றும்." —சூ. 589
"இரலையுங் கலையும் புல்வாய்க் குரிய." —சூ. 590
"கலையென் காட்சி உழைக்கும் உரித்தே
நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்." —சூ. 591
"மோத்தையுந் தகரும் உதளும் அப்பரும்
யாத்த என்ப யாட்டின் கண்ணே." —சூ. 592

மயில் அல்லாத பறவைகளின் ஆண்பாற் பெயர் சேவல் என்பதாகும். ஆண் மயில் தோகை உடையவாகிப் பெண் பால் போலும் சாயல் ஆதலான் அதன்கண் ஆண்பால் தன்மையைக் காண்பது இல்லை. ஆண் மயிலுக்கு எனச் சிறப்புப் பெயர் வழங்கிலது. பெண் மயில் மட்டும் பெடை மயில் என்னும் சொல்லால் குறிக்கப் பெற்றது.[593]

ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற்கு எல்லாம் ஏற்றை என்னும் பெயர் உரித்து.[594]

ஆண்பால் எல்லாம் ஆண் எனற்கு உரிய; பெண்பால் எல்லாம் பெண் எனற்கு உரிய. அவ்விருவகைக்கும் அறிகுறி காணப்படுதலின்.[595]

ஈண்டு ஓதப்பட்டன பல பொருள் ஒரு சொல்லும் ஒரு பொருட் பல சொல்லும் என்று கொள்க.

பெண்பாற் கிளவிகள்

பேடை, பெடை, பெட்டை, பெண், மூடு, கடமை நாகு, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிணை, பிணவு, பிடி இவை பெண்பாற் பெயர்களாகும்.[547]

"சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்
மாயிருந் தூவி மயிலலங் கடையே." —சூ. 593

"ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற் கெல்லாம்
ஏற்றைக் கிளவி உரித்தென மொழிப." —சூ. 594

"ஆண்பால் எல்லாம் ஆணெனற் குரிய
பெண்பால் எல்லாம் பெண்ணெனற் குரிய
காண்பவை அவையவை அப்பா லான." —சூ. 595

"பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்
மூடும் நாகுங் கடமையும் அளகும்
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்
அந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே." —சூ. 547

இகரம் எகரம் மாறிவந்துள்ளமை காண்க. பிணை, பிணவு, பிடி இகரங் கொண்டவை. பெடை, பெட்டை, பேடை, பெண் எகரம் கொண்டவை. இகரம் எகரமாக மாறிய சொற்களே பெடை பெண் முதலியன.

பிடி என்பது யானையின் பெண்பாற் பெயராகும்.[596]

பெட்டை என்பது ஒட்டகம், குதிரை, கழுதை, மரை இவற்றின் பெயராகும். பறவைகளின் பெண்பாற் பெயரும் பெட்டை எனப்படும், பெடை, பெட்டை, பேடை என்பன ஒரு பொருள் கிளவிகள்.[597—599]

கோழியும் கூகையும் அளகு எனப்படும். மயிலின் பெண் பாற் பெயரும் அளகு என வழங்கப்படும்.[600—604]

புல்வாய், நவ்வி, உழை, கவரி இவை நான்கும் பிணை எனப்படும் [602]

பன்றி, புல்வாய், நாய் என இவை மூன்றும் பிணவு எனப்படும். பிணவல் எனினும் அவற்றையே குறிக்கும்.[603—604]

"பிடியென் பெண்பெயர் யானை மேற்றே." —சூ. 596
"ஒட்டகம் குதிரை கழுதை மரையிவை
பெட்டை என்னும் பெயர்க்கொடைக் குரிய."—சூ. 597
"புள்ளும் உரிய அப்பெயர்க் கென்ப." —சூ. 598
"பேடையும் பெடையும் நாடின் ஒன்றும்." —சூ. 599
"கோழி கூகை ஆயிரண் டல்லவை
சூழுங் காலை அளகெனல் அமையா." —சூ. 600
"பெண்பா லான
அப்பெயர்க் கிழமை மயிற்கு முரித்தே." —சூ. 601
"புல்வாய் நவ்வி உழையே கவரி
சொல்வாய் நாடிற் பிணையெனப் படுமே." —சூ. 602
"பன்றி புல்வாய் நாயென மூன்றும்
ஒன்றிய என்ப பிணவென் பெயர்க்கொடை."—சூ. 603
"பிணவல் எனினும் அவற்றின் மேற்றே." —சூ. 604

ஆ என்னும் பெண் பெயர் பெற்றம், எருமை மரை இவற்றை உணர்த்தும்—[605]

பெண், பிணவு என்பன மக்களுக்கு வழங்கும் பெண்பாற் பெயர்களாகும்[606].

நாகு என்னும் பெயர் எருமை, மரை, பெற்றம் இவற்றிற்கு வழங்கப்பெறும்[607]. நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகு என வழங்கப்படும்[608].

மூடு, கடமை இவை ஆட்டின் பெண்பாற் பெயர்கள் ஆகும்[609].

பாட்டி என்பது பன்றி, நாய், நரி இவற்றின் பெண்பாற் பெயர்களாகும்[610—611].

மந்தி என்பது குரங்கு, முசு, ஊகம் இவற்றைக் குறிக்கும்[612].

கடுவன் குரங்கினுள் ஆற்றல்மிக்கதை ஏற்றை குறிக்கும், கோட்டான் கூகையையும், தத்தை கிளியையும், பூசை வெருகினையும், சேவல் குதிரை ஆணினையும், ஏனம் கருநிறப் பன்றியையும், கண்டி எருமையுள் ஆணினையும் குறிக்கும்.

"பெற்றமும் எருமையும் மரையும் ஆவே." —சூ. 605
"பெண்ணும் பிணவு மக்கட் குரிய." —சூ. 606
"எருமையும் மரையும் பெற்றமும் நாகே." —சூ. 607
"நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே." —சூ. 608
"மூடுங் கடமையும் யாடல பெறுஅ." —சூ. 609
"பாட்டி என்ப பன்றியும் நாயும்." —சூ. 610
"நரியும் அற்றே நாடினர் கொளினே." —சூ. 611
"குரங்கு முசுவும் ஊகமும் மந்தி." —சூ. 612

இவை எல்லாம் அக்கால வழக்காறுகளாகும்[613]. மேல் எடுத்து ஓதியவை குழவிப் பெயர்களும் ஆண்பாற் பெயர் களும் பெண்பாற் பெயர்களும் ஆம்[614].

ஆறறி உயிர்கள்

மெய், நா, மூக்கு, கண், செவி, மனம் என்பன முறையே ஆறறி உயிர்கள் பெற்றுள்ள அறிவுகளாம். உற்றறிய மெய்யும், சுவைத்தறிய நாவும், முகர்ந்து அறிய மூக்கும், காணும் அறிவு பெறக் கண்ணும், கேள்வியறிவு பெறச் செவியும் உதவுகின்றன; அறிவு மனம் தருகின்றது என்பர்[571].

புல், மரம் இவை ஓரறிவின. கொட்டியும் தாமரை முதலிய நீர்வாழ் செடிகளும் ஓரறிவினவே[572]. நந்தும்,

---

"குரங்கினுள் ஏற்றைக் கடுவன் என்றலும்
மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்
செவ்வாய்க் கிள்ளையைத் தத்தை என்றலும்
வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்
குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்
இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்
எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்
முடிய வந்த வழக்கின் உண்மையிற்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே." —சூ. 613

"பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே." —சூ. 614

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே."— சூ. 571

"புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே," —சூ. 572

முரளும் ஈரறிவின. சங்கு, அலகு, நொள்ளை என்பன நந்தைச் சாரும்: இப்பி, கிளிஞ்சல், ஏரல் என்பன முரளைச் சாரும்[573]. சிதல் எறும்பு மூவறிவின; அட்டை முதலாயின வும் இத்தகையனவே என்பர்[574].

நண்டு, தும்பி நான்கறிவின. அக்கிளைப் பிறப்பு ஆகிய ஞிமிறு சுரும்பு என்பனவும் அத்தகையவே[575].

மாவும் புள்ளும் ஐயறிவின. பாம்பு முதலிய ஊர்வனவும் நீர் வாழும் மீன் முதலியனவும் ஐயறிவின[576].

மக்கள்தாம் ஆறறிவு உயிரினர். தேவர் நரகர் இயக்கர் அசுரரும் இவருள் அடங்குவர்[577].

ஒருசார் விலங்கும் ஆறறிவு உடையனவாக உள்ளன. அவையாவன கிளியும் குரங்கும் யானையும் முதலாயின.[578]

தொழிற் சிறப்புகள்

அந்தணர்க்கு உரியவை நூல், கரகம், முக்கோல், மணை என்பன[615]. படை, கொடி, குடை, முரசு, புரவி, களிறு,

---

"நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே." —சூ. 573
"சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே." —சூ. 574
"நண்டுந் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே." —சூ. 575
"மாவும் புள்ளும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே." —சூ. 576
"மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே." —சூ. 577
"ஒருசார் விலங்கும் உளவென மொழிப." —சூ. 578
"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய." —சூ. 615

தேர், தார், முடி இவை போன்ற பிறவும் அரசர்க்கு உரிய.[616] ஈதல் வேட்டல் வேட்பித்தல் ஓதல் என்பன அரசர்க்கும் அந்தணர்க்கும் உரிய பொதுத் தொழில்களாம்[617].

பாடாண் திணைத்துறைக்கு உரிய கிழமைப் பெயர்கள் நெடுந்தகை செம்மல் என்பன. இவை அரசர்க்கும் அந்தணர்க்கும் உரிய[618]. ஊரும், தமது இயற்பெயரும், சிறப்புப் பெயரும், தத்தம் தொழிற்கேற்ற கருவியும், எல்லாரையும் சார்த்தி அவை வருதல் பெறும்[619]. இவை அனைவர்க்கும் உரிய என்பதாம். ஊரன் நாடன் என்பன ஊர்பற்றி வரும் பெயர்கள். பொன்னன் சாத்தன் இயற்பெயர்களாம். ஆசிரியர் புலவர் என்பன சிறப்புப் பெயர்கள். வாணிகன், தச்சன் முதலியன தொழிலைப் பற்றிய பெயர்களாகும்[619].

தலைமைக் குணச்சொல்லும் தத்தமக்கு உரியதோர் நிலைமைக்கேற்ப நிகழ்த்துவர். எனவே, இறப்ப உயர்தல் இறப்ப இழிதல் ஆகாது என்றவாறும்[620].

"படையுங் கொடியுங் குடையும் முரசும்
நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய." —சூ. 616

"அந்த ணாளர்க் குரியவும் அரசர்க்கு
ஒன்றிய வரூஉம் பொருளுமா ருளவே." —சூ. 617

"பரிசில் பாடாண் திணைத்துறைக் கிழமைப்பெயர்
நெடுந்தகை செம்மல் என்றிவை பிறவும்
பொருந்தச்சொல்லுதல் அவர்க்குரித் தன்றே."—சூ.618

"ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும்
யாரும் சார்த்தி அவையவை பெறுமே." —சூ.619

"தலைமைக் குணச்சொலுந் தத்தமக் குரியதோர்
நிலைமைக் கேற்க் நிகழ்த்துப என்ப." —சூ. 620

அரசர் வணிகர் அல்லாதார்க்குப் படைக்கல வகை கூறப்பெறார்[621]. வாணிகத்தான் வாழும் வாழ்க்கையை வைசிகன் பெறுவான்[622]. உழவுத் தொழிலும் வணிகக்கு உரியது ஆகும்[622]. அவர்கள் நெல், காணம், வரகு, இறங்கு, தினை, சாமை, புல், கோதுமை முதலிய எண்வகை உணவினைப் பயிரிடுவர்[623]. வைசிகருக்கும் கண்ணியும் தாரும் சொல்லப் பெறும்[624]. வேளாண் மாந்தர்க்கு உழுது உண்ணும் தொழில் அல்லது வேறு இல்லை[625]. வேந்துவிடு தொழிலாகிய போரின்கண் வேளாளர் செல்வர். அவர்க்குப் படையும் கண்ணியும் உளதாகும்[626]. அந்தணர் உயர் பதவி ஏற்கும் காலை அரசர்க்கு உரிய கொடியும் குடையும் கவரியும் தாரும் முதலாயின பெற்று அவரோடு ஒரு தன்மையராகி இருப்பர்[627]. ஏனோர்க்கு வில், வேல், கழல் கண்ணி, தார், ஆரம், தேர், மா முதலியன உரிய[628]. அவர்களுள்ளும் இழிந்தவர்க்கு இவை இல்லை.[629].

"இடையிரு வகையோர் அல்லது நாடிற்
படைவகை பெறுஅர் என்மனார் புலவர்." —சூ. 621

"வைசிகன் பெறுமே வாணிகவாழ்க்கை." —சூ. 622

"மெய்திரி வகையின் எண்வகை உணவின்
செய்தியும் வரையார் அப்பா லான." —சூ. 623

"கண்ணியுந் தாரும் எண்ணினர் ஆண்டே." —சூ. 624

"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி." —சூ. 625

"வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே." —சூ. 626

"அந்த ணாளர்க் கரசுவரை வின்றே." —சூ. 627

"வில்லும் வேலுங் கழலுங் கண்ணியும்
தாரும் ஆரமுந் தேரும் மாவும்
மன்பெறு மரபின் ஏனோர்க் குரிய." —சூ. 628

"அன்ன ராயினும் இழிந்தோர்க் கில்லை." —சூ. 629

மரபுச் சொற்கள் சில

புறக்காழன புல்லெனப்படும். அகக் காழன மரம் எனப் படும் [630—31].

தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை முதலியன புல்லொடு பொருந்தி அவற்றின் உறுப்பாக வரும் [632].

இலை, முறி, தளிர், தோடு, சினை, குழை, பூ, அரும்பு நனை முதலிய உறுப்புகள் மரத்தோடு பொருந்துவன வாகும் [633].

காய், பழம், தோல், செதிள், வீழ் என்பன இரண்டுக்கும் பொதுவாகும் [634].

நிலம், தீ, நீர், வளி, விசும்பு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்; இவ்வுலகப் பொருள்கள் உயர்திணை அஃறிணை என்னும் திணைப்பாகுபாடும், ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என்னும் பால் பாகுபாடும் பெற்று வகுத்து உணரப் படும். திணைபால் உணர்த்தும் சொற்களாலேயே அவை

"புறக்கா ழனவே புல்லெனப் படுமே." —சூ. 630

"அகக்கா ழனவே மரனெனப் படுமே." —சூ. 631

"தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்." —சூ. 632

"இலையே முறியே தளிரே தோடே
சினையே குழையே பூவே அரும்பே
நனையே உள்ளுறுத் தனையவை யெல்லாம்
மரனொடு வருஉங் கிளவி என்ப." —சூ. 633

"காயே பழமே தோலே செதிளே
வீழோ டென்றாங் கவையும் அன்ன." —சூ. 634

உணர்த்தப்படும் என்பர்[635]. தமிழ்ச் சொல்லிலக்கணமும் இவ் வடிப்படையிலேயே ஆராயப்படுவது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை. வழக்கில் ஒரு சில திரிபுகள் நிகழ்வதற்கு வாய்ப்பு உண்டு. மரபுநிலை திரிந்து வரின் பொருள் வேறுபட்டுவிடும்[636—637]. வழக்கு எனப் படுவது உயர்ந்தோர் மேலாகும். நூலின் நிகழ்ச்சி அவர் மாட்டது ஆகலின். எனவே, இலக்கிய வழக்காறுகள் உயர்ந்தோர் வாழ்வை அடியொற்று அமைப்பதாகும்[638].

நூல் வழக்குகள்

மரபினின்று வழுவாமல் நூல் வழங்கும். அத்தகைய நூல்தாம் முதல் நூல் சார்பு நூல் என இருவகைப்படும்[639].

வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூலாகும். வினை என்பது இருவினை. நல்வினை தீவினை களின் சார்பால் அவன் அறிவு கட்டுப்படாது என்பதாம். விளங்கிய அறிவு என்பது முழுதும் உணரும் உணர்ச்சி. முன்னோனை முனைவன் என்பர். முழுவதும் அறிந்து பிற சார்பு கொண்டு எழுதாமல் எழுதுபவன் முதல் நூல்

"நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயனெறி வழாமைத்
திரிவில் சொல்லோடு தழாஅல் வேண்டும்." —சூ. 635

"மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபு வழிப்பட்ட சொல்லி னான." —சூ. 636

"மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்." —சூ. 637

"வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான." —சூ. 638

"மரபுநிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூல்தாம் இருவகை நிலைய
முதலும் வழியுமென நுதலிய நெறியின." —சூ. 639

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்." —சூ. 640

ஆசிரியன் ஆவான் [640]. வழி எனப்படுவது அதன் வழித்தாகும் [641]. வழிநூல் எனப்படுவது தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்ப்பு என நான்கு வகைப்படும் [642—43].

நூல் எனப்படுவது சூத்திரத்தாலும் காண்டிகையாலும் இயங்குவது; சொல்லவரும் பொருளை இனிது உரைப்பது; பத்துவகைக் குற்றமும் நீங்கி விளங்குவது; முப்பத்திரண்டு உத்திகளுள் ஒரு சிலவற்றோடு புணரும் தன்மையது என்று கூறுவர் [644].

சூத்திரத்தின் முன்னால் உரையை விரித்து உரைக்குமிடத்தும், சூத்திரப் பொருள் விளங்கக் காண்டிகை புணர்க்குமிடத்தும், ஆசிரியன் இவ்வாறு கூறல்வேண்டும் என விதித்தலும், இப் பொருள் இவ்வாறு கூறக்கூடாது என விலக்கலும் ஆகிய இருவகையோடு பொருந்தினவை ஆராய்ந்து புணர்க்கப்பெறும். சொல்ல வேண்டுவனவற்றை முழுவதும் சொல்லியும் விலக்க வேண்டுவனவற்றை முழுவதும் விலக்கியும் சூத்திரமும் காண்டிகையும் அமைக்க வேண்டும் என்பர் [645].

"வழியெனப் படுவ ததன்வழித் தாகும்." —சூ. 641
"வழியின் நெறியே நால்வகைத் தாகும்." —சூ. 642
"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்
ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே." —சூ. 643
"ஒத்த சூத்திரம் உரைப்பிற் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்
முப்பத் திருவகை உத்தியொடு புணரின்
நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்."—சூ. 644
"உரையெடுத் ததன்முன் யாப்பினுஞ் சூத்திரம்
புரைதப உடன்படக் காண்டிகை புணர்ப்பினும்
விதித்தலும் விலக்கலும் எனவிரு வகையொடு
புணர்ந்தவை நாடிப் புணர்க்கவும் பெறுமே." —சூ. 645

"நூல் எனப்படுவது நுவலுங் காலை
முதலும் முடிவும் மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின்று அகன்ற உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே"

என்பதும் நூலின் இலக்கணமாகும்.

சூத்திரமும் காண்டிகையும்

தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழி பெயர்ப்பு என்னும் நால்வகை அமைப்பைக் கொண்டும், சில்வகை எழுத்தால் பல்வகைப் பொருளை நுட்பமும் திட்பமும் பொருந்திய வகையில் விளக்கமும் செறிவும் கொண்டதாகி அரிய பொருளையும் தெரிய விளக்குவது சூத்திரமாகும்.

"சூத்திரந்தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்கி
யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே"

என்பதுவும் இதற்கு இலக்கணமாகும்.

சூத்திரப் பொருளைத் தெளிவுபட விளக்குவது காண்டிகையாகும். 646—647

"மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை எழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை உரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகித்
துளக்கல் ஆகாத் துணைமை யெய்தி
அளக்கல் ஆகா அரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன்தெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்." —சூ. 646

"பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்
கழிப்பின்றி முடிவது காண்டிகை யாகும்." —சூ. 647

மேலும் சூத்திரப் பொருளைக் காரண காரியத்தோடும் தக்க எடுத்துக் காட்டுகளைத் தந்தும் காண்டிகை விளக்கும்,[648]

உரை

சூத்திரத்துட் பொருள் அன்றியும் அந் நூலகத்து யாப்பிற்கும் பொருந்த இன்றியமையாத எல்லாம் கொணர்ந்து உரைப்பது உரையாகும். வினவும் விடையும் உடைத்தாய், ஐயமும் மருட்சியும் நீக்கித் தன்னூலானும் பிற நூலானும் அந் நூற்பொருளைத் தெளிவுபடுத்த வேண்டும். இதுவே பொருள் எனத் துணிந்து உரைப்பது உரை எனப்படும்.[651]

நூல் குற்றங்கள்

மேல் நூலிற்கு உரிய மரபுகள் இவை எனக் கூறப் பட்டது. நூலுக்கு என வகுத்த மாண்புகள் மாறுபட்டு வருமாயின் அது சிதைவு எனப்படும். நூலில் குற்றம்

"விட்டகல் வின்றி விரிவொடுபொருந்திச்
சுட்டிய சூத்திரம் முடித்தற் பொருட்டா
ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
மேவாங் கமைந்த மெய்ந்நெறித் ததுவே." —சூ. 648

"சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற
இன்றி யமையா திையைபவை எல்லாம்
ஒன்ற உரைப்ப துரையெனப் படுமே." —சூ. 649

"மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமு மருட்கையுஞ் செவ்விதின் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்," —சூ. 650

நிகழ்தல் இல்லை. வல்லவன் புனையாத பூமாலை போல வழி நூலில் சிதைவுகள் அமைதலும் உண்டு[652, 653]

(1) கூறியது கூறல்; (2) மாறுகொளக் கூறல்; (3) குன்றக் கூறல்; (4) மிகைபடக் கூறல்; (5) பொருளில கூறல்; (6) மயங்கக் கூறல்; (7) கேட்போர்க்கு இன்னா யாப்பிற்று ஆதல்; (8) திரிபுபட்ட வாய்பட்டால் கூறல்; (9) தானே ஒரு பொருளைக் கருதிக் கூறல்; (10) மனங் கொள்ளத்தக்க வகையில் கூறாமை. இவை பத்தும் குற்றங் கள் எனக் கருதப்படும்.[654] எதிர்மறுத்துப் பொருளை உணரச் செய்யின் அதுவும் குற்றமே யாகும். பாவம் செய்வான் நிரையம் புகும் எனக் கருதிக் கூறுவான், தவம் செய்வான் சுவர்க்கம் புகும் என்றல் எதிர்மறுத்து உரைத்தல்.[655]

நூல் உத்திகள்

நுலின் உத்திகள் முப்பத்திரண்டு என்பர். உக்தி என்பதன் சிதைவு உத்தி என்பதாகும் என்பர்.

"சொல்லப் பட்டன இல்லா மாண்பும்
மறுதலை யாயின் மற்றது சிதைவே." —சூ. 651

"சிதைவில என்ப முதல்வன் கண்ணே." —சூ. 652

"முதல்வழி யாயினும் யாப்பினுட் சிதையும்
வல்லோன் புனையா வாரம் போன்றே." —சூ. 653

"சிதைவெனப் படுபவை வசையற நாடிற்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
பொருளில கூறல் மயங்கக் கூறல்
கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்
பழித்த மொழியான் இழுக்கக் கூறல்
தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்
என்ன வகையினும் மனங்கோள் இன்மை
அன்ன பிறவும் அவற்றுவிரி யாகும்." —சூ. 654

(1) நூதலியது அறிதல், (2) அதிகார முறை, (3) தொகுத்துக் கூறல், (4) வகுத்துக் கூறல், (5) மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்தல், (6) மொழியாததனை முட்டின்று முடித்தல், (4) வராததனுல் வந்தது முடித்தல், (8) வந்தது கொண்டு வராதது முடித்தல், (9) முந்து மொழிந் ததன் தலைதடுமாற்றம் (முறை பிறழக்கூறல்), (10) ஒப்பக் கூறல், (11) ஒருதலைமொழி, (12) தன்கோள் கூறல், (13) உடம்பொடு புணர்த்தல் (உடன்புணர்க்கும் சொல்லால் கருத்தைத் தெரிவித்தல்), (14) பிறன் உடம்பட்டது தான் உடம்படுதல், (15) இறந்தது காத்தல் (முன் சொன்னதை நிலைநாட்டல், (16) எதிரது போற்றல் (வருகின்ற செய்தியை முன்கூறிப் பாதுகாத்தல்), (17) மொழிவாம் என்றல், (18) கூறிற்று என்றல், (19) தான் குறியிடுதல், (20) ஒருதலையன்மை முடிந்தது காட்டல், (21) ஆணை கூறல் (ஏதுவால் கூறலின்றி ஆணையாற் கூறுதல்) (22) பலபொருட்கு ஏற்பின் நல்லது கோடல், (29) தொகுத்த மொழியால் வகுத்தனர் கோடல், (24) மறுதலை சிதைத்துத் தன் துணிபு உரைத்தல், (25) பிறன்கோட் கூறல், (26) அறியாது உடம்படல், (27) பொருள்இடை இடுதல், (28) எதிர்பொருள் உணர்த்தல், (29) சொல்லின் எச்சம் சொல்லியாங்கு உணர்த்தல், (30) தந்து புணர்த்து உரைத் தல், (31) ஞாபகம் கூறல் (இரட்டுற மொழிதல்), (32) உய்த்

ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்
நுதலிய தறிதல் அதிகார முறையே
தொகுத்துக் கூறல் வகுத்துமெய்ந் நிறுத்தல்
மொழிந்த பொருளோ டொன்ற வைத்தல்
மொழியா ததனை முட்டின்றி முடித்தல்
வாரா ததனன் வந்தது முடித்தல்
வந்தது கொண்டு வாராதது முடித்தல்
முந்து மொழிந்ததன் தலைதடு மாற்றே
ஒப்பக் கூறல் ஒருதலை மொழியே
தன்கோட் கூறல் உடம்பொடு புணர்த்தல்

துக்கொண்டு உணர்த்தல் இவை முப்பத்திரண்டும் நூல் உத்திகளாம். பிற என்பதால் (1) சொற்பொருள் விரித்தல் (2) ஒன்றெனமுடித்தல், (3) தன்னினம் முடித்தல் முதலியனவும், (4) ஆற்றொழுக்கு, சிங்கநோக்கு, தவளைப் பாய்த்து, பருந்து விழுக்காடு என்னும் சூத்திரக்கிடக்கையும், (5) முதல்நிலை விளக்கு, இடைநிலை விளக்கு, ஈற்று நிலை விளக்கு என்னும் பொருள்கோளையும் பிற உத்திகளாகக் கொள்வர்.[56]

பிறனுடம் பட்டது தானுடம் படுதல்
இறந்தது காத்தல் எதிரது போற்றல்
மொழிவாம் என்றல் கூறிற் றென்றல்
தான்குறி யிடுதல் ஒருதலை யன்மை
முடிந்தது காட்டல் ஆணை கூறல்
பலபொருட் கேற்பின் நல்லது கோடல்
தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்
மறுதலை சிதைத்துத் தன்துணி புரைத்தல்
பிறன்கோட் கூறல் அறியா துடம்படல்
பொருளிடை யிடுதல் எதிர்பொருள் உணர்த்தல்
சொல்லின் எச்சம் சொல்லியாங் குணர்த்தல்
தந்துபுணர்ந் துரைத்தல் ஞாபகம் கூறல்
உய்த்துக்கொண் டுணர்த்தலொடு மெய்ப்பட நாடிச்
சொல்லிய அல்ல பிறவவண் வரினும்
சொல்லிய வகையாற் சுருங்க நாடி
மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்டு
"இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்
நுனித்தகு புலவர் கூறிய நூலே." —சூ. 655
"எதிர்மறுத் துணரினத் திறத்தவும் அவையே." -சூ. 65,

மேற்கோள் நூல்கள்

(1) தொல்காப்பியம் பொருளதிகாரம் — இளம்பூரணர் உரை.

(2) மெய்ப்பாட்டியல் உவமவியல் — பேராசிரியர் உரை.

(3) யாப்பருங்கலம்— கழகஉரைப் பதிப்பு.

(4) தண்டியலங்காரம்

(5) சங்க இலக்கியத்தில் உவமைகள் —டாக்டர் ரா. சீனிவாசன்

6. தொல்காப்பியம் பொருளதிகாரம்— நச்சினார்க்கினியர் உரை